ருஷ்யா: தேசியவாதம் மீண்டும் உதயம்

# உலக உலா

பெப்ரவரி 1994

## தகவல் தொடர்பு பெருஞ்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக விவகாரங்கள்

### ஆசியா

திபெத்தியர்களின் பிரச்சாரம் 07
தளபதியின் புதிய வேடம் 08
மனநிறைவின் வரட்சி 09
ருஷ்யாவிற்குப் பிரியாவிடை 12
வியற்நாம் அமெரிக்க உறவு நிலை 14
அணுவாயுத அச்சுறுத்தல் 20
ஈரானின் பயங்கரவாதம் 26
அயலவனை வெறுப்பாயாக 29
உஸ்பெக்கிஸ்தானின் புதிய வாழ்வு 32

### ஐரோப்பா

ஐரோப்பாவுடன் இணைப்பு 36
யூரோஸ்ரார் கடுகதிப் புகையிரதம் 39
மதக்குழுவின் மிரட்டல் 41
ருஷ்யத் தேசியவாதம் உதயம் 43

### அமெரிக்கா

பொறிக்குள் போதைவஸ்து உற்பத்தியாளர்கள் 47

### ஆபிரிக்கா

சோமாலியா கற்பிக்கும் பாடங்கள் 49
பெரும்பான்மை அரசாள்கிறது 51

### வாணிகம்

ஜப்பானால் தொடர முடியுமா? 56

### முகாமைத்துவம்

வேலைப்பளு அதிகரித்து விட்டதா? 60

### உயிரியல் வரலாறு

தென்துருவ டைனோசர்கள் 63

### மனிதவியல் வரலாறு

கிழக்குப் பேர்லின் புதையல்கள் 69

### குற்றவியல்

சீனப் பெண்களின் நிலை 73

### விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்

தகவல் தொடர்புப் பெருஞ்சாலை 76
இறுதி வெற்றி 79

### ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும்

கிருமிநாசினிகளைத் தூர எறியுங்கள் 80

### விண்வெளி ஆய்வு

விதியுடன் சந்திப்பு 83
பூமியைப் பாருங்கள் 85

### பல்திணைப் பகுதி

செய்திச் சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06
நேசப்பூக்கள் 87

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

விலை:- ரூ. 100/-

உலக உலா
பல்துறைசார் மாத இதழ்

உலா:- 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா

### விமானச் சேவை ஆபத்துப் பிரச்சினை

ஒரு வருடகாலமாகப் பல விபத்தான விமானத் தரை இறங்கல்களும் நடு வழியில் அச்சுறுத்திக் கட்டாயமாக விமானத்தைத் திசை திருப்பும் சம்பவங்களும் நடந்த பின்பு சீன விமானப் போக்குவரத்துச் சேவை கடும் பிரச்சினைக்குள் உட்பட்டிருப்பதாக அதன் அதிகாரிகள் ஒப்புக் கொண்டு உள்ளனர். அதனால் பொதுப் போக்கு வரத்து விமானிகளின் திறமைகளும், விமான நிலையப் பராமரிப்பு முறைகளும் மீளாயப்பட்டுப் பாதுகாப்புக் குறைபாடுகளும், ஒழுங்காற்றுக் கட்டுப்பாடுகளும் கடுமையாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஊழலுக்கு மரண தண்டனை

பீகிங்கில் விமான நிலைய உத்தியோகத்தர்கள் 3 பேருக்கு அவர்கள் சட்டவிரோதமான முறையில் 120 சீனர்களைப் பொய்யான ஆவணங்களைப் பயன்படுத்தி நாட்டை விட்டுத் தப்பி ஓட உதவியதன் மூலம் 28,000 டொலர் இலஞ்சமாகப் பெற்ற குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## பிலிப்பீன்ஸ்

### மரண தண்டனை மீண்டும் சட்டமாகிறது

ஜனாதிபதி பிடெல் ரமோஸ் சென்ற டிசெம்பர் 13 ஆம் திகதி பிலிப்பைன்ஸில் 13 வகையான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கும் சட்டமொன்றில் கையொப்பம் இட்டார். 1987 இல் அந்த நாட்டில் மரண தண்டனை விதிப்பதை இரத்துச் செய்த அந்த நாட்டுச்சபை, ''கட்டாயமான காரணங்களுக்காகத் தேவைப்படின்'' மீண்டும் அந்தச்சட்டம் பின்பு அமுல் நடத்தப்படலாம் என்று சட்டமியற்றியது. அதன் கீழ் ஆட்கொலை, வழிப்பறிக் கொள்ளை, ஆட்கடத்தல், 150 மில்லியன் பெசே நாணயத்திற்கு மேற்பட்ட தொகைக்கு அரச அலுவலர்கள், பொருளாதார மோசடிகள் செய்தல் என்பன அடங்கும்.

## வியட்நாம்

### மாற்றம் வேண்டிக் கோரிக்கை

வியட்நாமில் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காகச் சட்ட விரோதமாக்கப்பட்ட பௌத்த மத பீடம் ஒன்றின் தலைவரான தீச் ஹூயேன் குவாங் 1981 முதல் ஆலயத்துள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் பரந்த அளவிலான சனநாயகச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்துமாறும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அரசியல் அதிகாரத்தை முடிவிற்குக் கொண்டு வருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார் என்று பரீசில் உள்ள அவருடைய ஆதரவாளர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## தாய்லாந்து

### போதைப் பொருள் கடத்தல் குர்பல் முறியடிக்கப்பட்டது

சென்ற டிசம்பர் 9 ஆம் திகதி போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கைப் பணியகத்தால் போதைப் பொருள் கடத்தல் கும்பல் ஒன்றின் செயற்பாடுகள் முறியடிக்கப்பட்டுள்ளன. அந்தக் கும்பலின் தலைவர்கள் மூவரில் தாய்லாந்தின் உச்ச இராணுவ ஆணை அகத்தினைச் சேர்ந்த மேஜர் – ஜெனரல் தாணாட் பக்ரிபாட்டும் ஒருவராவார். அவர் சர்வதேசப் பிடி ஆணை ஒன்றின் மூலம் ஹொங்கொங்கில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அமெரிக்க போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பணியகம் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அமெரிக்காவிற்குக் கொண்டு செல்வதற்கான சட்ட மூலமான நாடு கடத்தல் நடவடிக்கை எடுத்துள்ளது.

### காட்டுக் கூத்தை அடக்கல்

ஒரு மில்லியன் துருப்புக்கள் கொண்ட படையாலும் அணு ஆயுதத் திட்டம் ஒன்றைக் கொண்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தாலும் கவசமிடப்பட்டுள்ள வடகொரியாவிற்குள் இன்னும் ஆசிய அமெரிக்கா என்ற கருத்து உட்புகவில்லை. அந்த நாடு, ஐக்கியநாடுகளின் சோதனைக் குழு ஒன்று அந்த நாட்டின் அணு நிலையங்களைப் பார்வையிட மறுப்பது ஆசியாவில் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலை சென்ற ஆண்டில் ஏற்படுத்தியிருப்பதுடன் அந்த நிலையைச் சமனுறுத்தத் தொடர்ந்தும் அமெரிக்க இராணுவம் அந்தப்பிராந்தியத்தில்தரித்திருப்பதைத் தேவைப் படுத்தியுமுள்ளது. அதனால் வோஷிங்ரன் அந்த நிலைப்பாட்டை ஏற்பதுடன் பிராந்தியப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் இணக்கம் காட்டியுள்ளது. இது நேசநாடுகளின் மேல் பாதுகாப்புக் குடையை விரித்துப் பிடிப்பதிலும் பார்க்கப் பயன் உள்ளதாகும். அதற்காக அந்தப் பிராந்தியத்தின் பெரும் அதிகாரம் கொண்ட நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று 1994 இல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியன அறிமுகம்

## உடன் உணவு

ஒல்லாந்தின் ஜெல்டர்மல்சன் நகரில் உள்ள அல்பர்ட் ஹெஜின் சிறப்பு அங்காடியில் உடன் பாவனைக்கான தயார் செய்த உணவுகளைக் கொள்வனவு செய்வது மிக இலகுவானதாகும். அங்கே பொருள்களைத் தெரிவு செய்த பின்பு விலையைச் செலுத்தி அவற்றை வெளியே கொண்டு வருவதற்காகக் கரும பீடத்தில் காத்து நிற்கத் தேவையில்லை. உணவுப் பொருள்களை அடுக்கியுள்ள மாடத் தட்டுகளில் இருந்து தமக்கு வேண்டியவற்றை எடுப்பதற்கு முன்பு, வாடிக்கையாளர்கள் கையடக்கமான ஒரு லேசர் நோக்கியைக் கையில் எடுத்துச் செல்ல வேண்டியதுதான். அவர் தான் விரும்பிய பொருளை எடுத்ததும் அதன் விலைக் குறியீட்டை



லேசர் கருவிக்குக் காட்டினால் போதும். அப்பொழுது அப் பொருளின் விலையை உடனே தன்னுள் குறித்துக்கொண்டு விடும். அதே போன்று ஏதாவது பொருளைத் தேர்ந்தெடுத்த பின்பு, அதனைத் தனக்குத் தேவையில்லை என்று வாடிக்கையாளர் எண்ணினால், அதன் உரிய விலையைக் கருவியின் பதிவில் இருந்து கழித்து விடலாம். அப்படியாகத் தனக்குத் தேவையான பொருள்களை, எல்லாம் தெரிவு செய்து கைத் தள்ளு வண்டியின் கூடையில் போட்ட பின்பு, அந்தக் கணனிக் கருவியைச் சுவரில் அதற்கென்று உள்ள இடத்தில் மாட்டி விட்டால் அது தானியங்கி முறையில் பில் தயாரித்துவிடும். அதன் பின்பு உணவு கொள்வனவு செய்தவர் காசுக் கரும பீடத்தில் பில்லைக் கொடுத்துக் காசைக்கட்டிவிட்டுத் தாமதம் இன்றி வெளியேறலாம். இந்த முறை வாடிக்கையாளர்களை வெகுவாகக் கவர்ந்து உள்ளது. அந்தக் கருவி ஒரு தொலைபேசி ஒலிவாங்கியின் அளவினதாகும். அது நியூயோர்க்கில் உள்ள தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இப்படியான 96 விலைப் பதிவுக் கருவிகளைக் கொண்ட ஓர் அமைப்புக்கு 300000 அமெரிக்க டொலர் செலவாகும். களவாக விலைப் பதிவு செய்யாமல் பொருள்களை எடுப்பவர்கள் உள்ளனரா என்று பார்க்க அடிக்கடி சோதனைகள் செய்யப்படுவதாக அந்த நிறுவனத்தினர் கூறினர்.

நியூஸ்வீக், நவம்பர் 29, 1993

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

## உங்கள் உலோகத்தின் உறுதியைபரிசோதியுங்கள்

காலப் போக்கில் உலோகம் உறுதி இழப்பது (Fatigue) வானூர்திச் சொந்தக் காரர்களுக்கு ஒரு பெரும் பிர்ச்சனையாகும். உலோகத்தில் கண்ணுக்குத் தெரியாத வெடிப்புகளும், அரிப்புகளும் ஏற்டுவதால் இவ்வுறுதி இழப்பு ஏற்படுகிறது. இது கண்டு பிடிக்கப்பட்டுத் திருத்தப்படாவிட்டால் விமானங்களின் இறக்கைகளும், ஏனைய பகுதிகளும் உறுதியற்றுப் போய் சிலவேளை பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடும் இவ் உலோக



உறுதியிழப்பைச் சோதிக்க வர்த்தக விமானப் போக்குவரத்து நிறுவனங்களும், அமெரிக்க இராணுவமும் இதுவரையில் கையில் பிடித்து இயக்கப்படும் கழியொலி (Ultrasonic) சாதனங்களையும் சுழிம்பு ஓட்டச் (Eddy Current) சாத...ங்களையும் பயன்படுத்தி வந்தன. இனிமேல் கவலைப்படத் தேவையில்லை. தற்போது கலிபோர்னியாவிலுள்ள லொக்ஹீட் ஆய்வுகூடங்களிலுள்ள விஞ்ஞானிகள் முன்னைவிட உயர்ந்த தொழில் நுட்பம் கூடிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது ஓர் எக்ஸ் கமரா சாதனமாகும் ஒரு சின்டிலேற்றர் (Scintillator Plate) தகடும், ஓர் ஏற்ற இணை சாதனமும் (Charge Couple Device) (CCD) உருப்பெருத்த உருவங்களைத் தருவிக்க இக் கமராவில் பயன்படுத்தப்படுகின்றன. லொச்ஹீட் ஆய்வு கூடங்களின் செயற்றிட்ட இயக்குனராகிய சிளிவ் புவனோவின் கூற்றுப்படி இந்த சீசீடீ கமரா ஏனைய ஊடறுத்துச் செல்லாத தொழில் நுட்பங்களை விடக் கூடிய தரமும், உருப் பெருக்கமும் உடைய படங்களைத் தருகின்றன. இந்த எக்ஸ் கதிர் சாதனத்தின் சின்டிலேட்டர் (Scintillator) தகடானது பிரதானமாக ஒரு புளோரசன்ட் கண்ணாடியாகும். இது எக்ஸ் கதிரை உறிஞ்சி அதிலிருந்து கட்புலனாகும் ஒளியைத் தோற்றுவிக்கிறது. இவ்வொளி, ஒளியியல் நார்களினூடு ஏற்ற இணை சாதனத்திற்குக் கடத்தப்படும். ஏற்ற இணைச் சாதனம் என்பது பில்லியன் கணக்கில் பிக்சல்களைக் (Pixels) கொண்ட ஒரு சிலிக்கன் துண்டாகும். இது ஒளியைப் பெற்று அதனைப் மின்னேற்றமாக மாற்றி அதனை ஒரு சிலிக்கன் கிறபிக்ஸ் கணனிக்குக் கடத்தும். கணனித் திரையில் படம் பெறப்படும்.

அமெரிக்க விமானப்படை தற்போது இச் சாதனம் ஒன்றைச் செய்முறையில் பரிசோதித்து வருகிறது எனப் புவனோ தெரிவிக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். இதனைக் காலப் போக்கில் வர்த்தக விமானப் போக்குவரத்து நிறுவனங்களுக்கும் விற்பனை செய்ய லொக்ஹீட் திட்டமிடுகிறது. விலை 100,000 டொலருக்கும் 200,000 டொலருக்கும் இடையில் இருக்கும்.

நியூஸ்வீக், நவம்பர் 1, 1993.

## ஒரு விரைவான வாசிப்பு

தகவல் சேகரிக்கும் கைத் தொழிலில் சலாகைக்குறி வாசித்தறிதல் (Bar Code Scanning)



ஒரு புரட்சிகர முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. சலாகைக் குறி ஸ்கானர்கள் எனப்படுபவை உற்பத்திப் பொருள்களில் இடப்பட்டிருக்கும் சலாகைக் குறிகளை வாசித்து அறிபவையாகும். பெரும்பாலான ஸ்கானர்கள் நிலையாகப் பொருத்தப்பட்டவையாகும். ஆனால், தற்போது காவிச் செல்லக்கூடிய ஸ்கானர்கள் பாவனைக்கு வந்து விட்டன. பொதியாக்குதலிலும், சரக்குக் கட்டுப்பாட்டிலும், வேறு துறைகளிலும் தற்போது இவற்றின் பாவனை அதிகரித்து வருகிறது. வட கரோலினாவிலுள்ள ஹொன்ட் ஹொல்ட் எனும் நிறுவனம் கையடக்கமான ஸ்கானர்களான மைக்றோவாண்ட்— 32—ஈ எஸ் விற்பனை செய்து வருகிறது. இது மிகச் சக்தி வாய்ந்த 32 இலக்க கணிக்கும் திறன் கொண்டதுடன் 3.25 மெகாபைற் வரை சேமிக்கும் பகுதி (RAM) கொண்டது. இக் கம்பனியின் கூற்றுப்படி மைக்றோவாண்ட் ஆனது அதைப் போன்ற வேறு உற்பத்திப் பொருள்களை விடக் கூடிய தகவல்களைச் சேகரிக்கக் கூடியது. மைக்றோவாண்ட் எல்லா எழுதுத்துக்களையும், இலக்கங்களையும் கொண்ட விசைத்தட்டு (KEYPAD) ஒன்றுடன் 20 எழுத்து அகலமான, 4 வரிகளைக் கொண்ட ஒரு திரையையும் கொண்டது. ஹொன்ட் ஹெல்ட் கம்பனியின் அதிகாரி ஒருவர் கூறுகையில், விசேட சக்தி சேமிப்பு ஒழுங்கினால் மைக்றோ வாண்ட் இரு வாரங்களுக்கு மின் கலம் மாற்றாமல் பாவிக்கக் கூடியது என்கிறார். விலை டொலர் 3,200 - 3.25 சேமிப்புக் கொண்ட (RAM) தொகுதிக்கு.

நியூஸ் வீக், நவம்பர் 8, 1993.

## உலகை அறிந்து கொள்ளுங்கள

எங்களில் பலருக்குப் பூகோளவியல் என்றாலே வேப்பங்காய் மாதிரி. மொங்கோலியா எங்கிருக்கிறது என்று கேட்டால் பூமி உருண்டையை வைத்து யோசித்துக் கொண்டிருப்பார்கள். அது போகட்டும், அவுஸ்திரேலியா எங்கிருக்கிறது என்று கேட்டாலே தடுமாறுபவர்கள் நிறையப்பேர் எம்மத்தியிலே உளர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. நீங்களும் இப்படியான ரகத்தைச்! சேர்ந்தவர்களா?



இனிக் கவலையை விடுங்கள்! இதோ! பூகோளவியல் கற்பிக்கும் புதிய உலக உருண்டையொன்று தற்போது வெளிவந்துள்ளது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்களுக்குத் தேவையான நாட்டினை, உலக உருண்டையில் தொடுவது மட்டும் தான். அவ் உலக உருண்டை, நாட்டின் விபரங்களை உடனடியாகச் சொல்லத் தொடங்கும். அமெரிக்காவிலுள்ள மகலன் நிறுவனம் பூகோளவியல் கற்பிக்கக் கூடிய கணனியை அடிப்படையாகக் கொண்ட, புதிய பூமி உருண்டையொன்றைச் செய்துள்ளது. பார்ப்பதற்குச் சாதாரண உலக உருண்டை போலவே காட்சியளிக்கும் இவ்உருண்டை பிளாஸ்ரிக்கால் ஆனது. இதன் அடியில் வீடியோ காட்ரிச்சுகளைப் (Video Cartridges) போல காட்ரிச்சுகள் போட்டு இயக்கக்கூடிய சாதனம் ஒன்று உள்ளது. நீங்கள் ஒரு நாட்டைப் பூமி உருண்டையில் தொட்டவுடன், அந்த நாட்டின் விபரங்கள் – தலைநகர், சனத்தொகை நீள - அகலக் கோடுகள், உள்ளூர் நேரம் போன்றவற்றைச் சொல்லக்கூடியது. அந்தக் காட்ரிச்சில் 210 நாடுகளின் பூகோள விபரங்கள் பதியப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு ஒருவர் தனது பூலோகவியல் அறிவினையும் சோதித்துப் பார்க்கலாம்.

உதாரணமாக:

மகலன்; ''மொங்கோலியாவைக் காட்டுங்கள்'' என்றதும்,

தொடுபவர்; மொங்கோலியா உள்ள இடத்தைத் தொடுகிறார்.

மகலன்: ''மிகவும் நல்லது; இதனைக் காட்ட உங்களுக்கு 5 விநாடிகள் நேரமெடுக்கின்றது. சரி, இனி மேல் இந்தோனேஷியாவைக் காட்டுங்கள்'' என்று கேட்கிறது.

தொடுபவர்: ''எனக்குத் தெரியாது'' என்று கூறி அதற்குரிய பட்டனை அழுத்தினால்,

மகலன்: ''ஆசியாவில் தேடுங்கள்'' என்று பதிலளிக்கும்.

இதுவரை காலமும் இருந்த பாரம் பரிய உலகஉருண்டைகளைத் தூக்கி வீசி விடலாம். இதோ மகலன் நிறுவனம் தயாரித்து வெளியிடும் புதிய பூமி உருண்டை தான் இனி சந்தையினை ஆக்கிரமிக்க உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1000 வருடங்களுக்கு முந்தைய எல்லைகளைக் காட்டக்கூடியவாறு மகலன் அமைந்துள்ளது. தற்போது பிறமொழிகளிலும் கதைக்கக்கூடியவாறு காட்சிச்சுகளை தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். இதன் விலை 350 டொலர் மட்டுமே.

*நியூஸ்வீக், நவம்பர் 22, 1993.*

## உயர் தொழில் நுட்பக் கிறுக்கு வரைதல்

### (HI - TECH DOODLER)

நீங்கள் வேறு ஒரு வேலை செய்துகொண்டிருக்கும் போது, உங்களை மறந்து ஏதாவது கிறுக்கிக் கொண்டிருப்பவரா? கவலையை விடுங்கள், கிறுக்கு வரைஞர்களை திருப்தி செய்வதற்



கென்றே புதிய தொழில்நுட்ப சாதனமொன்று அறிமுகமாகியுள்ளது சான்பிரான்சிஸ்கோவிலுள்ள ஸ்கிறீன் மஜிக் நிறுவனம், புதிய இலத்திரனியல் சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளது. இது நூற்றுக்கணக்கான உருவில் மாதிரிகளை, வேகமாக உருவாக்க வல்லது. இவ் இலத்திரனியல் சாதனத்தில் திரைக்கு அருகிலுள்ள பல வகையான பட்டன்களை அழுத்துவதன் மூலம், எமக்குத் தேவையான உருவங்களைத் திரையில் ஏற்படுத்தலாம். இந்த வரைபடங்களில் வட்டமான அல்லது சுழல் வட்டமான குதித்தோடும் அல்லது பாய்ந்தோடும் உருவத் தோற்றங்களை உருவாக்கலாம். இந்த உருவத் தோற்றங்களை அதன் திரையிலோ அல்லது கணனித் திரையிலோ ஒளிரவைத்து விரும்பிய போது மாற்றிப்பார்க்கலாம். பணிமனைகளிலோ, அல்லது வீடுகளிலோ ஓய்வு நேரத்தில் பயன்படுத்தக்கூடிய சாதனம் இது. கணனிகளை உபயோகிப்போர் கூட ஓய்வெடுக்கும் போது இதனைப் பயன்படுத்தி விளையாடித் தமது அழுத்தத்தைக் குறைக்கலாம். இதன் விலை 30 அமெரிக்க டொலர் மட்டுமே.

*நியூஸ் வீக் டிசம்பர், 31, 1993*

## ஈர உடற் பயிற்சிகள்

நீங்கள் உங்கள் உடம்பை ஆரோக்கியமாகவும், கட்டாகவும் வைத்திருக்க விரும்புகின்றீர்களா? ஆம் என்றால் தொடர்ந்து வாசியுங்கள். முன்பெல்லாம் உடற்பயிற்சி செய்பவர்களின் தாரக மந்திரம் ''நோவு இல்லாமல் நன்மை இல்லை'' என்பதாகும். இதனால் வயது போனவர்களும், குழந்தைகளைப் பெற்று உடல் தொய்ந்து போன பெண்களும் தம்மை வருத்தி உடற்பயிற்சி செய்தார்கள். நல்ல உடற்கட்டையும், தேகாரோக்கியத்தையும் பெற்றனர். ஆனால் சிறிது காலத்தின் பின்பு முழங்கால் வலியும், கணுக்காலில் சுளுக்கும் ஏற்படத் தொடங்கி உபத்திரவம் கொடுத்தன. இதனையடுத்து, குறைந்ததாக்கமுடைய உடற்பயிற்சிகள் பிரபல்யம் அடைந்தன. இப்போதெல்லாம் உடல் ஆரோக்கியத்தையும், கட்டான உடலையும் கொண்டிருக்க விரும்புகிறவர்கள், நீச்சல் குளத்தையே நாடுகிறார்கள். இந்த முறை மழை பெய்த புண்ணியத்தால் எம்மூர்களில் எக்கச்சக்கமான நீச்சல் குளங்கள் உள்ளன. இனியென்ன இறங்கி விளையாட வேட்டியது தான்.

பல நிறுவனங்கள் போட்டி போட்டு, நீருனுள் உடற்பயிற்சி செய்யும் சாதனங்களைச்சந்தைக்கு விட்டுள்ளன .(இதற்காகத்திருநெல் வேலிச் சந்தையில் போய்த்தேட வேண்டாம். இது அமெரிக்காவில்) இவை வெயிலில் காய வைத்து ஈரம் போக்கக் கூடியவை. எக்சஸ் ஸ்போட்ஸ் லயன்ஸ் எனும் நிறுவனமொன்று, நீரினுள் ஜோகிங் செய்வதற்கு, ஓடுவதற்கு, பாரம் தூக்குவதற்குரிய சாதனங்களைத் தயாரித்துள்ளது. அக்குவா ஜோகர் (Aqua Jogger) அக்குவா றன்னர் (Aqua Runner) டெல்ரா பெல்ஸ் (Delta Bells)போன்றவையே இவை



யாகும். இச்சாதனங்களெல்லாம். நுரையுள்ள றபரினால் தயாரிக்கப்பட்டவையாகும். இவற்றைப் பயன்படுத்திப் பயிற்சிகளைச் செய்யும் போது தாக்கங்களை ஏற்படுத்தாது பல தசைக் கூட்டங்களுக்கு வேலைகொடுக்கக்கூடியது. அக்குவா ஜோகர் என்பது மிதக்கக்கூடிய இடுப்புப்பட்டியாகும். இது பயிற்சியாளர்களுக்கு நின்ற இடத்திலே ஜொகிங் செய்வதற்கும், இதயம் சம்பந்தமான உடற்பயிற்சிகள் செய்யவும் உதவும். இனிமேல் தெருவோர ஓட்டங்கள் இருக்காது. அக்குவா றன்னர்கள் என்பது தடித்த நுரை றப்பர் காலணிகளாகும். இவை கால்தசைகளை வலுப்படுத்த உதவி செய்கின்றன. டெல்ரா பெல்ஸ் ஆனது, கைத்தசைநார்களையும், வயிற்றுப்பகுதித் தசை நார்களையும் வலுப்படுத்தக் கூடியது. இந்த மூன்று சாதனங்களையும் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் நீருக்குள்ளேயே உடல் வலிமையைப் பெற்றுக் கொள்ளலாம். இன்றே நீங்களும் ஆரம்பியுங்கள். இல்லாவிட்டால் எங்கள் நீச்சற் குளங்களிலுள்ள தண்ணீர் வற்ற ஆரம்பித்து விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காதில் விழுந்தவை

★ மாபெரும் புரட்சியின் காரண மாக இருந்தவர் இவரேதான். இவர் கால்மாக்ஸின் கொள்கை வழி நடந்த ஒரு பெரியார். இதுவே அவர் செய்த தவறு.

*சீன ஜனாதிபதி செயின், தலைவர் மா. வோ. சேதுங் கின் 100 ஆவது பிறந்த நாளின் போது ஆற்றிய உரையின் போது சிறிது மாறுபட்ட கருத்தை வெளி யிட்டார்.*

★ அமெரிக்கர்களாகிய நாம் ஒரு பணியில் இறங்கும் போது உண்மையாகவே நாங்கள் இப்பணியைச் சரிவரச் செய்து முடிப்போம் என்பது, எங்கள் மூதாதையினர் மூலம் நாம் அறிந்த உண்மை என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவோம்.

*சோமாலியாவில் ஐ. நா. படைகளை இரு மடங்காக்க வேண்டும் என்று பில் கிளின்ரன் கூறியபோது, இக்கருத்தை வெளியிட்டார்.*

★ ''30 நாட்களுக்குள் 25,000 அமைதிப்படையி னர் தேவை என்று அவர்கள் கேட்பார்கள். அப்போது நாங்கள் சிரிக்க வேண்டியது தான்.''

*மிகப்பெரும் எண்ணிக்கையிலான படையினர் தேவை என்று ஐ. நா. அமைதிப்படைத் தலைமைச் செயலகம் அறிவித்த போது பிர தம இராணுவ ஆலோசகர் ''மொறிஸ் பாறிஸ்'' கூறியது.*

★ சோமாலியாவின் புகழ் மிக்க தலைவர் மொகமட் பாறா அயிட்டிடைக் கைது செய்யும் முயற்சி பலனளிக்காது போகும் வேளையில் ஐ. நா. இரா ணுவ உயர் அதிகாரி ''மைக்கேல் டியூறண்ட்'' சுடப்பட்டார். இதில் 18 அமெரிக்கர்கள் உயிரிழந்தனர்.

*''அமெரிக்கர்கள் என்றால் திறமை சாலிகள், நாங்கள் இயன்றளவு முயற்சித்தோம் — ஆனால் விஷயம் பிழைத்து விட்டது'' என்று ''மைக் கேல் டியூறண்ட்'' கூறினார்.*

★ இங்கே பட்டினிச்சாவு தொடர்கிறது, இதைத்தவிர இங்கு வேறெதுவுமில்லை.

*''போனோடேமிக்'' என்னுமொரு வர் சாறாஜேவோ என்னுமிடத்தில் தனது வீட்டிற்குப் போகும் வேளை யில் கூறியது.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபெத்

# கடித்தவர் கடிபடுகிறார்

**நாட்டை விட்டு வெளியேறியவர்கள், சீனாவின் பிரச்சார உத்திகளை அம்பலப் படுத்துகின்றனர்.**

சியாற்ரல் நகரில் நிகழ்ந்த ஆசிய-பசுபிக் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மகாநாடு, அரசியல் அரங்கேற்றத்திற்கு ஏற்ற ஓர் இடமாகி விட்டது. எந்த ஓர் அழுத்தக் குழுவும் அறிந்திருப்பது போல், அமெரிக்காவில் உள்ள திபெத்திய இடம் பெயர்ந்தோர்களும் எப்படிப் பொதுசனத் தொடர்புச் சாதனங்களின் கவனத்தை ஈர்ப்பதென அறிந்தவர்களாக இருந்து, சென்ற நவம்பர் 15 ஆந் திகதி சீனாவின் பிரச்சார உத்திகளை வெளிப்படுத்தும் இரகசிய ஆவணங்களை விநியோகித்தனர். இது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனும், சீன ஜனாதிபதி ஜியாங் செமினும் சந்திக்க ஏற்பாடாகி இருந்த தினத்திற்கு 4 நாட்களுக்கு முன் செய்யப்பட்டது.

அந்த இரகசிய ஆவணங்கள் சென்ற மார்ச் மாதத்தில் திபெத் பற்றி நடத்தப்பட்ட உயர் மட்டச் சீன ஆலோசனைக் கூட்டம் பற்றியவையாகும். அந்தக் கூட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் திபெத்தியக் கிளையின் பிரதிச் செயலர் டென்சின், "பிரிவினைச் சக்திகளை ஒழிக்க முடியாது விட்டாலும், அவற்றைப் பிரித்துப் பலவேறு பகுதிகளாக ஆக்க முடியும்" என்று விவாதித்துள்ளார். அனைத்துலகப் பார்வையாளர் முன்னால் நிகழ்த்தும் பிரச்சாரங்கள் மூலம் இதைச் செய்யலாம் என்று அவர் கூறியுள்ளார்.

குறிப்பாகச் சீனப் பிரச்சார உத்தியோகத்தர்கள் தமக்குச் சார்பும், அனுதாபமும் உள்ள பிற நாட்டுச் செய்தியாளர்களைத் திபெத்திற்கு அழைப்பதாலும், திபெத்திலிருந்து கலாசாரத் தூதுக் குழுக்களை வெளிநாடுகளிற் கலை நிகழ்ச்சி நடத்த அனுப்புவதாலும், நிபுணர்களையும், அறிஞர்களையும் ஒழுங்குபடுத்தி திபெத் சீனாவிலிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியென்று அழுத்திக் கூற வைப்பதாலும், பீகிங்கில் தயாரிக்கப்பட்ட திபெத்திய வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நேரடியாக அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவிற்கும் ஒலி—ஒளி பரப்புவதாலும், முக்கியமான திபெத்திய மத நிகழ்ச்சிகளை உலக நாடுகளிற் காட்டிப் பிரச்சாரம் செய்வதாலும், தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியுமெனக் கூறியுள்ளார்.

திபெத்திய விடுதலைக்கான அனைத்துலக இயக்கத்தின் தலைவர் லோடி கயாரி இந்த ஆவணங்களை வெளியிட்டுச் செய்த விமர்சனத்தில் சீனர்கள் ஏற்கனவே இது விடயமாகக் ஹொங்கொங்கில் உள்ள மக்கட் தொடர்புச் சாதனங்களைத் தமது பக்கம் ஈர்ப்பதில் வெற்றி கண்டு உள்ளனர் என்று கூறினார். அத்துடன் "சீன ஆவணங்களில் இருந்து பீகிங்கிற்குத் திபெத்தியர்களுடன் தீர்வுப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் எவ்வித விருப்பமும் இல்லாதிருப்பது தெரிகிறது" என்று கயாரி கூறினார்.

அதனால் சியாற்ரல் மகாநாட்டில், அமெரிக்கா சீனாவுக்கு வழங்கியுள்ள வியாபாரச் சலுகைகளை மீட்டுக் கொள்ளுவதல்லால், வேறு எதுவும் செய்ய முடியாது இருக்கும் என்று ஜனாதிபதி கிளின்ரன் ஜியாங்கை எச்சரிக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் 1993 இன் நடுப்பகுதியில் அமெரிக்கா சீனாவிற்கு விதித்த மனித உரிமை பேணல் நிபந்தனைகளைச் சீனா மதிக்க மறுப்பதாகும். அந்த நிபந்தனைகளில் ஒன்று, "திபெத்தின் தனித்துவமான மதக் கலாசாரப் பாரம்பரியங்கள்" காப்பாற்றப்பட வேண்டும் என்பதாகும்.

அமெரிக்க ஆட்சிமன்றமான கொங்கிரஸின் சுமார் 200 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்றில் சீனாவிலும், திபெத்திலும் மனித உரிமை பேணலில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லையென ஜனாதிபதி கிளின்ரனுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். அத்தகைய இன்னுமொரு கடிதத்தில் சீனர்களையும், திபெத்தியர்களையும் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்த ஆக்கபூர்வமான செயற்பாடு நடத்தும்படி அமெரிக்க ஜனாதிபதியைக் கொங்கிரஸ் தூண்டியுள்ளது.

சுசுமு அவோநோகரா

(F) வார் ஈஸ்ரேன் எக்கனமிக் றிவியூ 25 நவம்பர், 1993.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மா

# தளபதியின் புதிய வேடம்

பாங்கொக்கிலிருந்து
— பாடில் லின்ற்னர் —

1989 செப்ரெம்பரில் பர்மாவின் இராணுவ ஆட்சி பீடத்தின் பேச்சாளர் ஒருவரான கியாவ் சான், ரங்கூன் நகரில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியபோது இராணுவம் அதற்கு முந்திய ஆண்டில் சனநாயகம் வேண்டி எதிர்ப்பு இயக்கம் நடத்திய பல ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றொழித்ததை நியாயப் படுத்தும் விதமாக, '' உண்மை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் தான் உண்மையாக இருக்கும் '' என்று கூறினார். அவர் மேலும், '' ஒருகால் உண்மையாக இருந்தது பல மாதங்களுக்கு அல்லது ஆண்டுகளுக்குப் பின்பு மேலும் உண்மையாக இருக்காது '' என்றார்.

அதற்குப் பிந்திய ஆண்டுகளாகப் பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் அந்தக் கூற்றைச் செயற்படுத்த முயன்று வந்துள்ளனர். இன்று அந்த 1988–89 இன் சனநாயக நடவடிக்கை இயக்கம் பற்றி எதுவும் கூற நேர்ந்தால் அதனைப் புறந்தள்ளி வெறுமனே '' குழப்பங்கள் '' என்று மட்டுமே கூறுகின்றனர்.

பர்மாவை விட்டு வெளியேறிப் பிறநாடுகளில் வாழ்வோர் கூற்றுப் படி, 1988, 1989, 1990 ஆம் ஆண்டுகளில் எதுவுமே நடக்காதது போன்று இன்று இராணுவம் அதிகாரத்தில் மிக உறுதியாக வேரூன்றி 1962இல் அதிகாரத்தை முதன் முதலாகக் கைப்பற்றிய காலத்திலும் பார்க்கப் பலம் கொண்டதாக உள்ளது. ''

1988 இன் எதிர்ப்பு இயக்க நினைவைப் புதைப்பதற்கும், பின்பு 1990 இல் தேர்தலில் அடைந்த அவமானத்தைத் துடைப்பதற்கும், இராணுவ ஆட்சியை நியாய பூர்வமானது என்று ஆக்குவதற்குமாக சென்ற செப்ரெம்பர் 15 ஆம் திகதி இராணுவ ஆட்சி அடிக்குரலில் அறிக்கை ஒன்று செய்துள்ளது. ஒற்றுமைப்பாட்டைக் கட்டி எழுப்பவும் அபிவிருத்தி ஏற்படுத்துவதற்குமான சங்கம் என்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் அறிவித்தன. ஆளும் இராணுவ பீடத்தின் இலட்சியங்கள் போலவே அந்தச் சங்கத்தின் இலட்சியங்களும் '' கூட்டரசைச் சிதறவிடாமற் காப்பாற்றுவது, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைய விடாமற் காப்பது, நாட்டின் இறைமையைப் பேணுவது, தேசிய மகிமையை வளர்ப்பது '' என்பனவாக உள்ளன.

**இராணுவ ஆட்சிப்பீடம், புதிய குடியியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.**

'மியான்மார் புதிய ஒளி' என்ற செய்தித்தாளில் செப்ரெம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்தச் சங்கத்தின் செயற்றிட்டம் 1968 முதல் 1988 வரை பர்மாவை ஆண்ட பர்மிய சோஷலிச செயற்றிட்டக் கட்சியின் கொள்கை விளக்கத்தையே முழுக்க முழுக்க ஒத்ததாக, ஆனால் அதில் சோஷலிசம் மட்டும் குறைந்ததாக இருக்கிறது.

குடியியல் இயக்கம் ஒன்றின் மூலம் மக்கள் பங்குபற்ற வைத்து இராணுவம் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தவே இந்தச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த இராணுவ அரசின் அத்தகைய முதன் முயற்சியான தேசிய ஒற்றுமைக் கட்சி 1990 இல் நடந்த பொதுத் தேர்தலில் சனநாயகத்திற்கான தேசிய இயக்கத்தால் தோற்கடிக்கப்பட்டது. அந்த இயக்கம் ஆங்சாங் சூகியால் தலைமை தாங்கப்பட்டுத் தேசிய அரசுப் பேரவையில் 485 இடங்களில் போட்டியிட்டு 392 இடங்களை வென்றது. தேசிய ஒற்றுமைக் கட்சி ஆகப் 10 இடங்களைத் தான் வென்றது. அந்தத் தேசிய அரசப் பேரவை ஒரு பொழுதுமே கூட்டப்படாததுடன் ஆங்சாங் சூகி வீட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளார். ஆனால் குடியியல் போர்வை கொண்டு, தான் இயங்க இராணுவ அரசாங்கம் முயல்கின்றது.

தற்போதைய இராணுவ ஆட்சியாளர்களுக்கு, முந்திய இராணுவ ஆட்சியாளரின் போர்வையைத் தேசிய ஒற்றுமைக் கட்சி தரித்துக் கொண்டு இயங்க முடியாமல் போனதால் தான்; இராணுவம் இப்பொழுது ஒரு குடியியல் அமைப்பான போர்வையை அணிந்து கொள்ள முயல்வதாகும் என்று ரங்கூனின் சில வட்டாரங்கள் கூறுகின்றன. 1988 இல் பார்க்கக் கூடுதலான கவனமான திட்டமிடல் நடத்தப்பட்ட பின்பு தான் ஒற்றுமைப்பாட்டைக் கட்டி எழுப்புவதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கான இயக்கத்தின் இதயமையம் நொருக்கப்பட்டு, அதன் எஞ்சியுள்ள தலைவர்கள் அடிபணிய வைக்கப்பட்டு உள்ள நிலையில் புதிய அரசியல் சங்கத்திற்கு எதிர்ப்பு எதுவும் எழாது. தேசிய ஒற்றுமைக் கட்சியைப் போல் அல்லாது இந்தப் புதிய அமைப்பு ஓர் அரசியற் கட்சியாகப் பதிவு செய்யப்படாமல் '' சங்கம் '' ஒன்றாகவே உள்ளது. அதனால் அரசாங்க அலுவலர்கள் அரசியற் கட்சிகளில் சேரக் கூடாது என்ற சட்டம் இதற்குப் பொருந்தமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர் என்று தீர்மானிக்க முடியாமல் உள்ள துடன், அதில் நாடெங்கும் பலரும் சேர்ந்து கொண்டு இருப்பதாக அறியக் கிடைத்துள்ளது. அவர்களுக்கு அதனால் சிறப்பு வசதிகள் வாய்ப்பது காரணமாகலாம். '' ஒருவர் அந்தச் சங்கத்தில் உறுப்பினரானால் இலகுவிற் கடவுச் சீட்டுப் பெறவும், பிரச்சனையின்றி விமானப் பயணப் பத்திரம் எடுக்கவும், அரசாங்கத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதில் சலுகை அடையவும் முடியும்'' என்று ரங்கூனில் பேசிக் கொள்ளப் படுகிறது.

விமர்சகர்கள் இத்தகைய செயற்பாடுகளால் தான், முன்பு இருந்த சோஷலிஸ்ட் கட்சி, '' பெரும் மக்கள் இயக்கம்'' என்று இலட்சக் கணக்கான உறுப்பினர்கள் கொண்டதாக இருந்தும் கூட 1985 இல் ஒரே இரவில் வீழ்ச்சி அடைந்தது என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். 1988 இல் நிகழ்ந்த எழுச்சியில் பங்கு பற்றிய முன்னாள் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர் '' எவருமே இலட்சியத்துடன் சேரவில்லை என்றும் அது வெறும் பெரும் மண்குதிரை தான்'' என்றும் கூறினார்.

சில அவதானிகளின் கருத்துப்படி, இந்தப் புதிய சங்கம் பர்மாவில் ஏதும் ஒரு புதுமையையும் படைக்கப் போவதில்லை என்றும், இந்தோனேசியாவில் உள்ள ஆளும் மக்கள் கட்சியான கொல்கார் என்பதனைப் போல மக்களை ஆளும் இராணுவத்திற்குச் சார்பாக அணி திரட்டுவதாகவே இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

(F)வார் ஈஸ்ரேன் எக்கனமிக்ரிவியூ,
25 நவம்பர், 1993

# மனநிறைவின் வரட்சிக் காலம்

## பயனற்ற வெற்றுச் சண்டையில் மும்முரமாக ஈடுபட்டுவரும் மாணவர் விடுதலை இயக்கப் (எஸ். எல், ஓ. ஆர். ஸி.) படையினர்



1991 இல் பிராங் செங்கும் (இடது) போமியாவும். இவர்களின் புன்முறுவல் நீடிக்கப் போவதில்லை.

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNGKULI BRANCH LIBRARY

போம்யா இன்று மகிழ்ச்சியுடன் இல்லை. பர்மாவின் சக்திவாய்ந்த கரன் ( Karen ) கெரில்லாப் படைத் தலைவர், போம்யா, கச்சின் ( Kachin ) கிளர்ச்சியாளர்களின் தலைவரான பிராங் செங்குடன் தொடர்பு வைத்துள்ளதாகச் சந்தேகங் கொண்டதே அவரின் மகிழ்ச்சியின்மைக்குக் காரணம். ரங்கூன் படையணியில் நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து இவ்விருவரும் போராடியவர்கள். ரங்கூன் கூட்டிணைப்புக்கு ஒரு வேவை எதிரான பர்மிய ஜனநாயக நேசக் குழுவின் முக்கியஸ்தர்களாய் விளங்கியவர்கள். 'டி. ஏ. பி' பரஸ்பர வெறுப்பின் மத்தியில் பர்மிய மேலாண்மையோடு கூடிய இராணுவ அரசோடு ஒன்றிணைக்கப் பட்டு விட்டதாகக் காணப்பட்டது.

பிராங் செங்கினின், கச்சின் சுதந்திர அமைப்பு ஒரு பக்கச் சார்பாக நாட்டின் சட்டம், ஒழுங்குகளுக்குப் பொறுப்பான ஆலோசனைச் சபையோடு ஓர் இணக்கத்திற்கு வந்து போர் நிறுத்தத்தினை ஏற்றுக் கொண்டதால் ஒற்றுமை குலைந்து விட்டது. எதிரணிகளிடையே பிரிவினைகள் ஏற்படப் போவதற்கான அறிகுறிதான் இது. மாணவர்கள் தமது இயக்கத்திலிருந்து ( எஸ். எல். ஓ. ஆர். ஸி. ) கரன்கள் வெட்டிக் கொண்டு விட்டதாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள். 1992 இல் இராணுவப் புரட்சியாளரான ஜூண்டாக்களுக்கு உளவு சொன்னதற்காக மாணவர் இயக்கத்தினர் தமது தோழர்களான ஐவருக்கு மரணதண்டனை நிறைவேற்றியது இங்கு நினைவு கூரத் தக்கது. டி. ஏ. பி. யினர் பிராங் செங் குழுவினரை வெளியேற்றுவதாகச் சூளுரை மேற்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்வில்லாச் சண்டைகள்:-

# எல்லைப் பகுதியில் மூண்டெழும் துவேஷ உணர்வு

1988 ஒகஸ்ற் 8 ஆந் தேதியைப் பர்மியர் தமது நினைவில் மிக அழுத்தமாகப் பதித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்று இராணுவம், ஆயிரக்கணக்கான மாணவக் கிளர்ச்சியாளர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கொன்றது. பெரும்பாலான மாணவர் தலை நகரிலிருந்து தப்பி ஓடினர். பர்மா, தாய்லாந்து எல்லையிலிருந்த கெரில்லாப் படையினரிடம் சிலர் புகலிடம் பெற்றனர். நூற்றுக்கணக்கான மாணவர் ஆயுத பாணிகளாய் மாறினர். கரன்கள் இவர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள்.

கடந்த ஐந்தாண்டுகளிற் பெரும்பாலான மாணவருக்கும், அவர்களை உபசரித்து வியந்தயர்ந்த கரன்களுக்குமிடையே பாரதூரமான கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. '' 8—8—88 பரம்பரை '' (மாணவர்) '' எல்லைப் பிரதேசத்தில் கரன்கள், மாணவரைப் பூண்டோடு ஒழித்துக் கட்டுகிறார்கள் '' என்று குற்றம் சாட்டுகிறது. ஜூண்டாக்கள் (இராணுவப் புரட்சியாளர்) கச்சின் கிளர்ச்சியாளர்களோடு யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்தபின்பு, கரன்கள் எஸ். எல் ஓ. ஆர். ஸி. யினரோடு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்கிறது. இந்தக் கருத்துப் போரானது தாய்லாந்தின் ஆங்கிலப் பத்திரிகையொன்றில், 8—8—88 பரம்பரைக்கும், கல்விமானும், போராளியுமான டேவிட் தாக்க போவிற்கும் (கரன்) இடையே காரசாரமாகத் தொடர்கிறது. ரங்கூன் படையாட்சியோடு போர், நடத்தும் எதிரணிகளிடையே ஒற்றுமை குலைந்து விட்டதை இந்தக் கருத்துப்போர் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

சட்டம் செத்துவிட்டது. பர்மா — தாய்லாந்து எல்லைப் பகுதியில் யாரை யார் கொல்கின்றனர் என்று சொல்வது கடினம். ஒவ்வோராண்டும் பலர் காணாமற் போகின்றனர். '' பர்மிய அரசியலானது எப்பொழுதும் எதிர்ப்புக்களும், குழுப் பிரிவினைகளும் நிறைந்ததாகவே இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் தலைவர்கள் பலவந்தமாக நீக்கப்படுகிறார்கள். இரத்தம் சிந்தாத அரசியல் நிகழ்வுகள் மிகவும் அரிதாகவே உள்ளன. மாணவர்கள் நகரங்களுக்கும், பட்டினங்களுக்கும் சென்று பொதுப் போராட்டங்களிலே ஈடுபடுவதே வேண்டப்படுவது. அதை விடுத்து அநாவசியமான குத்தலான விமர்சனங்களிலும், கண்டனங்களிலும் ஈடுபடுதல் முறையற்றதாகும்'' என்று தாக்போ எழுதியுள்ளார். மாணவரின் வாதத்துக்கு அவரளித்த இந்தப் பதிலில் மேலும் கூறுகிறார்: ''இன்று இடம்பெறும் போராட்டங்களும், கிளர்ச்சிகளும் கடற்கரையில் தோன்றும் குமிழிகள் அல்ல; 8-8-88 பரம்பரையின் ஆயிரக்கணக்கானோர் ஜனநாயகத்திற்கும், மனித உரிமைக்குமாகச் செய்த தற்கொடைகளின் வெளிப்பாடுகளே. புனிதமற்ற நேச உடன்படிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் இதனைக் கருத்திற் கொள்ளவேண்டும்.'' உண்மையில், இந்த ஓய்வில்லாச் சண்டைகளால் நயத்தை அடைவது, ரங்கூன் இராணுவப் புரட்சி நிர்வாகமே என்பது கவலை தருவதாகும்.

'' டி. ஏ. பி. யின் தாபக உறுப்பினரான கச்சின்கள் எஸ். எல். ஓ. ஆர். ஸியினருடன் இணைந்து, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிலைப்பாட்டினை ஏற்படுக்த முன்வந்து, இப்பொழுது அதனை மீறி விட்டார்கள் '' என்று ' ஏசியா விக் ' பத்திரிகைக்குப் போம்யா அறிக்கை விடுத்தார். ஆனால், டி. ஏ. பி. யினரோ எல்லா எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கிய குழுவோடு பேச்சுவார்த்தை நடத்தப்படல் வேண்டும் என்றும், அந்தப் பேச்சுவார்த்தை ஐ. நா. வின் மேற்பார்வையில், நடுநிலை வகிக்கும் ஒரு நாட்டில் இடம்பெற வேண்டும் என்றும் தாம் வகுத்த நிபந்தனையைப் போம்யா மீறிவிட்டதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள். '' கச்சின்கள் இரட்டை விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். டி. ஏ. பி. யின் அங்கத்தவராக உள்ள எஸ். எல். ஓ. ஆர். ஸி. யினர் அதனோடு இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதிற் பயனில்லை. அவர்கள் தங்கள் கோரிக்கையைச் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது முன் வைக்கலாம். தங்கள் துரும்பை மேசையிற் போடலாமே! '' என்று வாதாடுகிறார் போம்யா.

கச்சின்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சிறந்த போர் வீரர்கள். நேபாளத்துக் கூர்க்காக்கள் போல, இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது, தமது போராற்றலைத் திறம்பட வெளிப்படுத்திப் புகழுக்கு உரித்தானவர்கள். இவர்கள் பர்மாவிலே மிகுந்த பொருளாதார வளங் கொண்ட கச்சின் மாகாணத்தினர். கேந்திரநோக்கில் கச்சின் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் அமைந்துள்ளது.

எஸ். எல். ஓ. ஆர். ஸி. யைப் பொறுத்தவரை கச்சின்களுடைய சதி உளவியல் சம்பந்தமானதாகவும், விரைவில் மற்ற இயக்கங்களைச் சுரண்டக் கூடியதாகவும் உள்ளது. ஐக்கிய அமெரிக்கத்து நரகத்திற் கூட்டப்பட்ட மாநாட்டிலே பர்மியரல்லாத குழுக்கள் மேற்குறித்த சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு வேறான வகையிற் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

தாகக்கூறுவது உறுதியான உண்மையல்ல. எஸ். எல். ஓ. ஆர். ஸி.யினர் படைத்தலைவர்களூடாக டி.ஏ.பி.யினரின் மனப்பான்மையை அறிய மேற்கொண்ட முயற்சிகளும் இடம்பெற்றன. ஆனால், எந்த முயற்சியும் உருப்படியான தீர்வை அளிக்கவில்லை.

கடந்த ஆண்டு இராணுவப் புரட்சிப் படை (ஜூண்டா) கரன்களுக்கு மட்டுமே உரிய, யுத்தநிறுத்த அறிவிப்பு,மூலம் கரன்கள் தமது வட்டத்தினுள்ளே சமாதானத்தை நிலைநிறுத்திக் கொண்டு, டி. ஏ. பி.யினரைப் பாதிக்கக்கூடிய வகையில் எஸ். எல். ஓ. ஆர். ஸி. யினரைச் சமாதானத்துக்குத் தூண்டினர். ரங்கூன், தேசம் அளாவிய யுத்த நிறுத்தத்தை அவாவிய போதிலும், பேச்சுவார்த்தைகள் பர்மாவிலேயே இடம்பெற வேண்டும் என்று வற்புறுத்தியது. இராணுவப் பலம் வாய்ந்த குழுக்களுடன் மட்டுமே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்றே புரட்சி இராணுவப்படை எதிர்பார்த்தது. '' எஸ். எல். ஓ. ஆர். ஸி. பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் மிகப் பெரும்பான்மையான குழுக்களை வெற்றிகொள்ள முயல்கிறது'' என்றார் கரன் அதிகாரி ஒருவர்.

கச்சின்களின் சமாதானப்பேச்சு விருப்பத்தின் பின்னணித் தூண்டு தலைப் பெய்ஜிங் (சீனா) மேற்கொண்டது என்பது ஒரு சாராரின் கருத்து. கச்சின்களுடன் இணங்கிச் செல்வதனால் கச்சின் பிரதேசத்து, யுனான் நகரம் வியாபாரத்திற்குத் திறந்து விடப்படலாம் என்று சீனா எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், வேறு சிலரின் கருத்தோ, சீனாவின் விருப்பம் பர்மா பிரிவுண்டிருப்பதே என்பதாகும். வேறொரு சாரார் நீண்ட கால யுத்தத்தால் கச்சின்களுக்கு ஏற்பட்ட அலுப்பும், தளர்ச்சியுமே பேச்சுவார்த்தைக்கு அடிப்படை என்கிறார்கள். எவ்வாறாயினும், கச்சின் மாகாணம் உறுதிப் பாட்டுடன் தலைநிமிர யுத்த நிறுத்தம் உதவும் என்பதும், இது அதற்கு அருமையான வாய்ப்பு என்றும் கச்சின் தலைவர்கள் கருதினார்கள். எனவே, இதற்காக அவர்கள் இன்னமும் கடுமையாக முயன்று வருகிறார்கள். சில எதிரணிகள் போல, இவர்கள் எல்லைப் பிரதேச வளர்ச்சியைக் குறியாகக் கொண்ட எஸ். எல். ஓ. ஆர். ஸி யுடன் எக்காலத்திலும் தொடர்பு வைத்திருக்கவில்லை. அது போன்றே புரட்சி இராணுவப்படையின் பாசிச அரசு யாப்புக் கூட்டத்துடனும் இணையவில்லை. '' அவர்கள் மீண்டும் போரைத் தொடங்கலாம்; ஆனால், டி. ஏ. பி. யினருடன் தமது காலத்தை விரயம் செய்து கொண்டிருக்காது, தம்மால் செய்யக் கூடியதைச் செய்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம்'' என்று பாங்கொக்கில் உள்ள பர்மிய அவதானி ஒருவர் தெரிவித்தார்.

கச்சின்களோடு தொடர்பை அறுத்துக்கொண்டாலும் எஸ்.எல். ஓ. ஆர். ஸி. மாணவர், மதகுருமார் (பிக்குகள்) ஆகியோர் மீது தனது கவனத்தைக் குவித்த வண்ணமே இருந்து வருகிறது. ''1988 இல் நாங்கள் கண்ட ஜனநாயக எழுச்சியை மீண்டும் தூண்டக்கூடிய ஒரே குழு இது தான்'' என்று அரகன் மாகாண அரசைச் சேர்ந்த போராளி ஒருவர் குறிப்பிட்டார். அரகன் மாகாணத்திலே தான் இராணுவம் அங்குள்ள முஸ்லிம்களைப் பங்களாதேசம் செல்லுமாறு பலவந்தம் செய்து வருகிறது. போம்யா எதிர்த் தாக்குதலுக்கு உகந்த பருவம் இதுவல்ல என்று நம்புகிறார். '' எஸ். எல். ஓ. ஆர். ஸி. எங்கள் தளங்களை இதுவரை தாக்க வில்லை. ஆனால், சண்டை தவிர்க்க முடியாததே'' என்றார் கரன் மேஜர் றொபட் பாசான். ரங்கூன் படையை அனுப்பி வலுப்படுத்தும் நிலையில் அழுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. போம்யா தமது நிலைப்பாட்டினை பர்மாவின் முன்னைய குடியேற்ற ஆட்சியாளருக்கு எடுத்து விளக்குவதற்கு லண்டன் சென்றிருக்கிறார்.

*ஏசியா வீக், நவம்பர் 24, 1993.*

## சால்மன் ருஷ்டிக்கு ஆதரவுக் குரல் எழுப்புகிறார்கள் அவரது நேயம்மிக்க கருத்துத் தோழர்கள்

**''நம்பிக்கை மிக்க நண்பரும், நலன் மிகு நூலும் அருகிலிருந்தால் வாழ்வுக்கு இன்பமளிப்பன வேறும் உண்டோ?''**

*சல்மன் ருஷ்டியைக் கேட்டுப் பாருங்கள்: பாவம், அவர் ''சாத்தானின் கவிதைகள்'' என்ற நாவலை எழுதிய பொல்லாத குற்றத்துக்காகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக, (காலஞ்சென்ற அயதுல்லா று ஹோல்லா கோமேய்னி) விதித்த மரணதண்டனைக்குப் பயந்து. மறைந்து ஓடிக் கொண்டிருக்கிறார். ''ருஷ்டிக்காக'' என்றொரு தொகுப்பு நூல் வெளிவந்திருப்பது, ''வேட்டையாடப்பட்டு'' அலையும் அந்த நாவலாசிரியருக்கு மகிழ்ச்சி தரும். அதில் அராபிய முஸ்லிம் எழுத்தாளர்களும், சிந்தனையாளரும் ருஷ்டியின் பேச்சுச் சுதந்திரத்தை வற்புறுத்தி எழுதியிருக்கிறார்கள். பிரான்சில் ''திறந்த பதிப்பு வரிசை'' என்ற சிந்தனைச் சுதந்திரத்தை வற்புறுத்தும் வரிசையில் (எடிஷன்ஸ் லாடாகூவே (ர்)) வெளிவந்துள்ளது. 1994 இல் அதன் அராபிய மொழிப்பதிப்பு வெளிவர, அவரது தோழர்கள் முயற்சி எடுத்துள்ளார்கள்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போறிஸ் யெல்சினுக்குப் பிரியாவிடை

## வியட்நாமுக்கு ருஷ்யக் கடற் படைத்தளம் தேவையில்லை.



வியட்நாமின் தலைநகரம், கோ-சி. மின் நகருக்கு 320 கிலோ மீற்றர் தூரம் வடக்கில் உள்ள காம்-ரான்-பே கடற் படைத்தளத்தைத் தாங்கள் தொடர்ந்தும் வைத்திருக்கப் போவதாக ருஷ்யா, வியட்நாமுக்குக் கூறிவர். வியட்நாமியர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. ''ருஷ்யக் கப்பல்களைப் பழுது பார்க்கும் தளம் ஒன்றை வியட்நாமில் வைத்திருக்க, நாங்கள் சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளோம். அந்த ஒப்பந்தத்தை, நாங்கள் தொடாந்து கடைப்பிடிக்க விரும்புகிறோம்'' என்று வியட்நாம் பிரதமமந்திரி வோவான் கியற் ஜப்பானுக்கு விஜயம் செய்தபோது கூறினார். ருஷ்யக் கப்பல்களெல்லாம் ருஷ்யர்களுக்கே திரும்பிப் போய்விட்டன என்று நினைத்தவர்கள் எல்லாம் ஏமாற்றம் அடைந்தனர்.

ருஷ்யா, தொடர்ந்தும் தனது இராணுவ பலத்தைத் தென் கிழக்கு ஆசியாவில் வைத்திநக்கிறது என்பதைப் பலரும் மறந்திருக்க மாட்டார்கள். ஐக்கிய அமெரிக்கக் கடற்படையைப் போல, ருஷ்யக் கப்பல்கள் அடிக்கடி தென் கிழக்கு ஆசிய நகரங்களுக்குச் செல்வதில்லை. (வழக்கமான விசிற் செய்வதில்லை.)

காம்-ரான்-பே கடற்படைத் தளம் அமெரிக்கராற் கட்டப்பட்டது. அதை வியட்நாமியர் பொறுப்பேற்ற பிறகும் கூட, ருஷ்யக் கடற்படை அங்கிருப்பது பலருக்குத் தெரியாமல் இருந்தது. உயர் ராணுவ அரசியற் பிரமுகர்கள் கூட, பாஸ் எடுத்தே அங்கு செல்லலாம்.

எந்த நேரமும் போருக்குப் புறப்படக்கூடிய ஆயத்த நிலையில் ஒரு பெரிய கடற்படைத் தளத்தில் இருந்தாற் போதும் என்பது ருஷ்யர்களுடைய கொள்கை. அது ருஷ்யாவின் பலத்தையும், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தையும் உணர்த்தப் போதுமானது.

தளத்தில் தரித்து நிற்கும் கப்பல்கள் பிரயோசனமற்றவை. அவை எந்த நேரமும் தாக்கப்படக்கூடும் என்பது அமெரிக்கரது கருத்து. (அவர்கள் இன்றும், 1941ஆம் ஆண்டு பேள் துறைமுகத்தை ஜப்பானியர் திடீரென்று தாக்கியதை மறந்துவிடவில்லை.) அதனால், அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் எப்பொழுதும், துறைமுகத்திற்குத் துறைமுகம் போய்க் கொண்டிருக்கும்.

காம்- ரான்- பே, ருஷ்யாவின் பெரிய கடற்படைத் தளம். 1990 ஆம் ஆண்டில் 20 இல் இருந்து 30 வரையிலான ருஷ்ய போர்க் கப்பல்கள், விமானந் தாங்கிக் கப்பல்கள், நீர் மூழ்கிகள் என்பன அங்கு தரித்து நின்றன. அந்த விமானத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தவை 40 கடல் விமானங்கள், கடலில் வேவு பார்க்கும் ரீயூ–95 என்ற விமானங்கள், ஒரு தொகுதி மிக் 23 போர் விமானங்கள் முதலியன. 7,000 ருஷ்யக் கடற்படை வீரர்களும், அவர்களது உதவியாளர்களும் அங்கிருந்தனர். அது, அவர்களது நிரந்தரக் கடற்படைத் தளம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியா

1989 ஆம் ஆண்டு ருஷ்யர்கள், வியட்நாமியருக்கு ஆயுத உதவி வழங்குவதைக் குறைக்கத் துவங்கியதுடன், காம்-ரான்-பே இலிருந்து மெல்ல, மெல்ல வெளியேறத் தொடங்கினர். அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் தீவுகளில் இருந்து வெளியேறினால், ருஷ்யாவும், வியட்நாமில் இருந்து வெளியேறத் தயார் என்று 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதி கொபச்சேவ் அறிவித்தார். அமெரிக்கர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று, ஒரு பெரிய கிளர்ச்சி பிலிப்பைன்ஸ் தீவுகளில் எழுந்திருந்த போதிலும், அமெரிககா, சூபிக்பே உட்பட அந்த நாட்டில் உள்ள ஐந்து ராணுவ தளங்களில் இருந்து வெளியேறியது. அதை தொடர்ந்து, ருஷ்யாவும் வியட்நாமில் தனது படைப் பலத்தைக் குறைத்துக் கொள்ள, தென் சீனக் கடற்பிராந்தியத்தில் எந்த வல்லரசிற்கும் ஓர் ராணுவத்தளம் இல்லை என்ற நிலை உருவாகும் போலத் தெரிந்தது.

ருஷ்யா உண்மையாகவே வியட்நாமில் தனது இராணுவபலத்தைக் குறைத்தது. பெரிய யுத்த விமானங்கள் எல்லாம் ருஷ்யாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டன. வியட்நாமில் இருந்த மிகப் பெரிய நாசகாரியான அட்மிரல் ஸ்பிரிடொனொவ் ருஷ்யாவிற்குத் திருப்பி அழைக்கப்பட்டு விட்டதாக, ருஷ்ய செய்தித்தாபனமாகிய இஸ்ரஃப்பாக்ஸ் 1992 ஆம் ஆண்டு அறிவித்தது. அந்த நேரத்தில் வியட்நாமில் ருஷ்ய ஸ்தானிகராகக் கடமையாற்றிய விற்றாலே கௌசக், 1995 ஆம் ஆண்டளவில் ருஷ்யா வியட்நாமில் இருந்து முற்றாகவே வெளியேறத்திட்டமிட்டுள்ளது என்று கூறினார்.

இப்பொழுது கடைசிப் போர்க் கப்பல் காம்-ரான்-பேயில் இருந்து போன பின்பு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை கொண்ட ருஷ்யப் போர்க் கப்பலாகிய பெற்றிறோ பல்லொஸ்க் காம்-ரான்-பேயில் தரித்து நின்று, தென் சீனக் கடற்பரப்பிற் பயிற்சிகளும் செய்கின்றது. ஜப்பானியத் தற்காப்புக் கடற்படைப் பிரிவின் தலைவர் இந்தத் தகவலைத் தந்துள்ளார். தென் சீனக் கடற் பிராந்தியத்தில் தங்கள் வியாபாரக் கப்பல்களைக் கடற் கொள்ளைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றவே, தாம் அங்கு நிற்பதாக ருஷ்யர்கள் கூறுகின்றனர். ஆனால், கடற் கொள்ளைக்காரர்களைத் தாக்குவதற்குக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் பொருத்தமான ஆயுதங்கள் அல்ல என்று, அவர் ஒரு செய்தியாளர் மகாநாட்டில் கூறியுள்ளார்.

ருஷ்யா, தனது ஆயுத பலத்தை வியற்நாமில் வைத்திருக்கவே விரும்புகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஏன்? வியட்நாமின் ஓரப் பகுதிகளில் தான் நடத்தும் எண்ணெய்- நிலவாயு ஆராய்ச்சிகளை, அது பாதுகாக்க விரும்புவது ஒரு காரணமாக இருக்கலாம். உளவுச் செய்திகளை அறியும் ஒரு திறமான நிலையத்தை ருஷ்யா காம்-ரான் - பேயில் அமைத்துள்ளது. அதில் இருந்து, சீனாவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளின் அமைப்புப் பற்றியும், சீனாவின் தெற்குக் கடற்படையின் நகர்வுகள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். சீனக்கடற்படை ஸ்பிறாட்லித் தீவுகள் பக்கம் நகர்ந்தால், அது பற்றியஇரகசியச் செய்தியை ருஷ்யா வியட்நாமுக்கு வழங்கும்.

இந்த ஸ்பிறாட்லித் தீவுகளுக்குச் சீனா, வியட்நாம் உட்பட ஆறு நாடுகள் சொந்தம் கொண்டாடுகின்றன. சீனாவின் எல்லை விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு, ருஷ்யர்கள் இருப்பது ஒரு தடையாக இருக்கும் என்று வியட்நாம் நம்புகின்றது. உண்மையில், தனது ஆதிக்கத்தைத் தனது எல்லைகளுக்கு வெளியே பரப்பும் வலிமையைச் சீனா பெற்று வருகின்றது. சீனா, தனது ஆயுத பலத்தைப் பெருக்க, அதிக பணம் செலவிடுவது பற்றித் தங்களுக்கு அக்கறை இல்லை என்று, வியட்நாம் பிரதமர் 'கீற்' அண்மையிற் கூறியிருந்தார். பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, போரை ஒரு வழியாகக் கைக்கொள்ளப் போவதில்லை என்று, இரு நாடுகளும் இணங்கியுள்ளன என்பதை அவர் வலியுறுத்திக் கூறினார். அப்படியானால், வியட்நாமுக்கு ருஷ்யத் தளம் எதற்கு?

இன்று, எந்த வல்லரசின் தளத்தையும் தென் கிழக்கு ஆசியா விரும்பவில்லை. அவை, அந்த வல்லரசின் நலன்களைக் காக்க உதவுகின்றனவே தவிர, இந்தப் பிராந்தியத்தின் நலனையல்ல. அண்மையில் மலேசியாவின் நிதி மந்திரி அன்வர் இப்ராஹீம், அமெரிக்கா, ருஷ்யா, பிரான்ஸ், ஜப்பான் என, எந்த வல்லரசாலும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடம் ஒன்று தென் கிழக்கு ஆசியாவில் இல்லை என்று ''ஏசியா வீக்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிற் கூறியிருந்தார். அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இடையிடையே வந்து போவது, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பாதுகாப்பாகவும், இதமாகவும் இருக்குமென்றால், ''அமலஷ்விசிற்'' பண்ணுவதற்கு ஆட்சேபனை இல்லை என்றார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூழ்கியிருக்கும் ருஷ்யா, வெளி உலகில் இருந்து சிறிது. சிறிதாகப் பின் வாங்குகின்றது என்பது உண்மை தான். ஆனால், நிலைமை மாறக் கூடும். காம் ரான் உடன்படிக்கை 2,000 ஆம் ஆண்டு வரை செல்லுபடியாகும். அடுத்த ஏழு ஆண்டுகளில் எதுவும் நடக்கலாம்.

ருஷ்யாவில் அடுத்த 24 மணித்தியாலங்களில் எதுவும் நடக்கலாம். ஜனாதிபதி யெல்சின் அடுத்த ஜார் மன்னனாகவோ, ருஷ்யாவின் மாபெரும் மன்னன் பீற்றராகவோ மாறலாம். யெல்சின் ராணுவத்தின் உதவியுடன் தான், பாராளுமன்றத்தின் எதிர்ப்பை அடக்கினார். அயல் நாடுகளுடன் நட்புறவாக இருக்க அவர் விரும்பினாலும், இராணுவம் ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்டால், அதற்குக் கடமைப்பட்டுள்ள யெல்சின் மறுப்புக் கூறமுடியாது.

வியட்நாம், எதிர்காலத்தில் ஆசியானிற் சேர விரும்பினால், தனது அண்டை அயல் நாடுகளின் உணர்வுகளை மதிப்பதா? வெகு தூரத்தில் உள்ள நம்பகத் தன்மை அற்ற நாட்டை நம்புவதா? என்று தீர்மானிக்க வேண்டும்.

பிலிப்பைன்ஸ் தீவு, சூபிக், கிளாக் தளங்களில் இருந்து அமெரிக்கப் படைகளை அனுப்பியது போல, வியட்நாமும் காம் ரானில் இருந்து ருஷ்யரை அனுப்பிவிட்டு, அந்த இடத்தைத் தீர்வை அற்ற வர்த்தகத் தலமாகவும், அந்தப் பிரதேசத்தை ஒரு தொழில் வலயமாகவும் ஆக்குவது புத்திசாலித்தனமானதும், இலாபகரமானதும்ஆகும்.

*ஏசியாவீக், நவம்பர் 24, 1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இனத்தின் புண்களைக் கட்டுதல்

— எழுதியவர் —
டேவிட் எச் ஹக்வேர்த்



3 மில்லியன் இறந்தோர். என் கண்கள் குளமாயின. அவ்வனுபவம் நெஞ்சைப் பிளந்தது. இவ்வளவு பேர் மரணம், இவ்வளவு விரயம் எதற்காக?

## வியட்நாம்:

## முன்னை நாள் அமெரிக்க அதிகாரி: "பொருளாதாரத் தடை, துன்பங்களை நீடிக்கச் செய்கிறது"

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன், நான் மீக்கொங் நதிக் கழிமுக நடு அரங்கத்தில் உள்ள வயலைக் கண்டேன். ஒரு நாளும் அதைவிட்டு விலகாதது போன்ற பயங்கர உணர்வு என் உள்ளத்தைக் கௌவியது. 1969, மார்ச் 25 இறப்பும் தோல்வியும் கண்ட தினம் ஆகும். அமெரிக்க ஒன்பதாம் படைப் பிரிவின் 4/39-ம் காலாட் படையின் வீரக்குழுவினர் மைஹி யெப் என்ற கிராமத்துக்கு அயலில் 300 மீற்றர் நெல் வயலில் பாதுகாப்பு அரணோ, தடையோ எதுவுமின்றி அகப்பட்டுக் கொண்டார்கள். தேய்ந்து கொண்டு போன துப்பாக்கிச் சூட்டுப் பரிமாற்றம் அவர்கள் தொகையைக் குறைத்துக் கொண்டிருந்தது. வியற்கொங் போராளிகள் இவ்வகைப் போருக்கு ''இடுப்புப் பட்டியைக் கட்டிப்பிடித்தல்'' என்ற பெயரிட்டிருந்தனர். அமெரிக்க தொலைவில் சுடும் சக்தியைவைத்து சமாளிப்பதற்தாக, மிக நெருங்கி நின்று போரிட்டனர், மத்தியானம் நெல் வயலுக்குச் சென்ற போது ட்றான் டோய், ஏர்ள் ஹேய்ஸ் என்னும் இரு சாரணரும் (உளவு பார்ப்போர்) கைகால் பரப்பிக் கிடந்தனர். அவர்கள் இறந்து விட்டார்கள் என உணர்ந்தேன். காயமடைந்தவன் இயல்பாக முகம் குப்புறக் கிடப்பான். வயிற்றைப் பாதுகாக்க முயல்வான். ஜிம்ஃப்றிளியோ, டொன் ஹலஸ் என்னும் இருவரும் வியற்கொங் துப்பாக்கிகளுக்குச் சில யார் தள்ளி அசையாது ஓரிடத்தில் நிற்க வேண்டியவராயினர். நெருப்பு அணைக்கும் ஒரு படைத் தலைவன், எரியும் வீட்டுக் கூரை உள்ளே விழுந்து பின் அங்கு வந்த போது பெறும் உணர்ச்சி என்னைக் கௌவிக் கொண்டது.

24 ஆண்டுகளுக்குப் பின் அவ்வரங்குக்கு வந்து நிற்கின்ற எனக்கு வெடிச் சத்தங்களும், விழுந்த போர் விரர் மருத்துவ உதவிகோரி அவலக் குரல் எழுப்புவதும் இப்போது நடப்பவை போலக் கேட்கின்றன. ஏவுகணைகளிலிருந்து கயிறு வடிவான புகையற்ற வெடிப் பொருளான 'கோடைற்' றின் மணம் மூக்கைத் துளைக்கின்றது. பீரங்கி 'ஷெல்கள்' வியற்கொங் அரண்களை இடிபோலத் தாக்குகின்றன. லெப். உவில்லியம் தோர்ப் பீ, பகைவரது சூட்டுக்கு இலக்காகி விழுகிறான். எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட தனது படையணியை ஒன்றுதிரட்ட முயன்ற அவனுக்கு இக்கதி ஏற்படுகிறதைக் கண் முன் காண்கிறேன். ஆயுதம் வெடி மருந்து ஏற்றிய வாகனம் நொருங்கிப் பிளப்பதையும், அதன் போர்க் குழுத் தலைவன் சுவாலிக்கும் உலோக 'நரகக் குழியினிடையே அகப்பட்டுச் சத்தமிடுவதையும், மரணம் அவன் குரலை இறுதியில் மௌனமாக்குவதையும் காண்கின்றேன். மருத்துவ சேவையாளரான டான் இவான்ஸ், றிக் ஹட்சன் என் போர் காயமுற்ற போர் வீரரைச் சன்னம் துளைக்கின்ற போர்க் களத்தினூடாக அங்குலம் அங்குலமாக இரத்தம் தோய இழுத்துக் கொண்டு போவதைப் பார்க்கிறேன். ஒரு போர்க்குழுவின் தலைவன் உண்மையாகவே பைத்தியம் பிடிப்பதையும், கைஒலிபெருக்கியில் அவன் பிதற்றல், பிற கட்டளைகளைக் கேட்க முடியாது அலறுவதையும் கண்டு அவனை அவ்விடத்தை விட்டு அகற்றியதையும் நினைக்கிறேன், கைவசமுள்ள அத்தனையையும் பகைவர் மீது செலுத்துகிறேன். விமானத் தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

குதல். பீரங்கித் தாக்கு, பயங்கர நேபாம் குண்டு, வெண் ஏரியம் (பொசுபொரசு) ஆனால் அவை ஒன்றும் பகைவனது பீரங்கி ஒலியை நிறுத்தவில்லை, இரவு சூழும் வேளையில் 60 பேர் கொண்ட அதிமிக்க போர்க் குழுவில் 5 பேர் இறந்தனர். 18 பேர் காயமுற்றனர்.

1969 இல் நிகழ்ந்த (போர்த்) தொடர்புகளில் ஆயிரத்தில் ஒன்று தான் மைஹியப் போர். 1955 விருந்து வியட்நாம் போர் என்ற துன்பியல் நாடகத்தில் நிகழ்ந்த பதினாயிரக் கணக்கான நிகழ்ச்சிகளில் ஒன்றே அது. வியட்நாம் அனைத்துப் படைத் தலைமைப் பதவியிலிருந்த ஜெனரல் கிறெய்ற்றனின் கவனத்துக்குக் கொண்டு வரத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாக அப்போது அது கருதப்படவில்லை. எனது படைவீரர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப் பரப்பைப் பிடிக்கப் போரிடவில்லை. ஏதோ பகடைக்காயை உருட்டுவது போல 'கொங்' கலகக்காரனைத் தேடிப் பார்த்தல் என்ற பணியில் வேறு நூற்றுக் கணக்கான போர் வீரக் குழுக்களைப் போல எனது கம்பனியும் ஈடுபட்டிருந்தது. ''தேடி அழித்தல்'' என்ற பிழையான போர் உத்தியைக் கடைப் பிடித்து பற்றைகளைத் தட்டிப் பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்தது. இவ்வளவு கால அனுபவத்தில் (1955 — 69) போர் வீரர், இது வெல்லக்கூடிய யுத்தம் அல்ல என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். அவர்களது முக்கிய பிரச்சினை 'உடற்பை' க்கு வெளியே எப்படி இருப்பது என்ற அளவில் தான்.

இன்றோ, ஜோ. ஹோல்மனும், டெனிஸ் றிச்சாட்சும் ஷெல் துளைத்துச் செத்த இடம் செழிப்பான நெல் விளையும் வயலகத் திகழ்கிறது. றோஜர் கெப்பனின் மார்பை ஊடுருவிய சன்னம் பாய்ந்து அவனை விழுத்திய 'பங்கர்' (காப்பரண்) இன்று அழகிய வாழைத் தோட்டமாக நிற்கிறது. கண்ணி வெடிகள், போரிடத் தயார் நிலையில் இருந்த இடங்கள் எல்லாம் மறைந்துவிட்டன.



24 வருடங்களின் பின்
அங்கு சென்றேன்,
வீழ்ந்தோர் ''மருத்துவர்,
மருத்துவர்'' எனக்கதறினர்.

வியற்கொங் போராளிகள் எம்மில் நூறு பேர் வரையில் இறந்த அந்த மண்ணில் புதிய ஒரு சிறு கிராமத்தை அமைத்துள்ளனர்.

சமீபத்தில் மைஹியப் என்ற அந்தப் போர்வரலாற்று முக்கியமான ஊருக்கு, போர் முடிந்த பின் சென்ற முதல் அமெரிக்கன் என்ற பெருமை எனக்குக் கிடைத்தது. (முன்பு சைகோன் ஆட்சியில் அதற்குப் பெயர் லோங் ஹியப்) நான் வியட்நாமுக்குப் போனது பழைய நினைவுகளைக் குழிதோண்டிப் புதைக்க. வியட்நாம் போர் அங்கு கடமையில் ஈடுபட்ட அத்தனை போர் வீரர் மீதும் போரின் சின்னங்களை (விழுப்புண்களை) க் குறி சுட்டுச் சென்றுள்ளது. நான் இதற்குப் புறம்பானவனல்லன். ஆனால் நான் வியட்நாமியரை வெறுக்கவில்லை. அமெரிக்கா உத்தியோக பூர்வமாக வியட்நாமின் மீது பகைமை பாராட்டுவதை ஆதரிக்கவில்லை. அதன் குறியீடாக, வியட்நாமுக்கு ஏற்றுமதித் தடையே இன்னும் வைத்துக் கொண்டிருப்பது பொருளற்ற கொள்கை என்பது என் முடிவு, எனவே நான் மையிஹியப்பைத் தரிசிக்க வந்ததன் நோக்கம் ஒரு வகையான சமரசப் போக்குக்கு வழி வகுப்பதே.

அது எனக்குக் கிடைத்தது. கிராமத் தலைவன் வோவான் தூத், என்னை இரு கரங்களும் நீட்டி அன்புடன் வரவேற்றான். முன்னாள் பகைவர், படைத் தளபதி இன்று வருகைதந்த முதல்அமெரிக்கனைக் காண்பது ஒரு நற் சகுனம் என்பது அவனது நம்பிக்கை. எனது படையணிக்கு மாறாகப் போராடிய வீரர்களுள் பன்னிருவரைத் தேடி அழைத்து வந்தான். நாம் அனைவரும் ஒன்றாக அந்த நெல்வயற் பகுதிக்குச் சென்றோம். பழைய போர்க்கால சிந்தனையில் திளைத்தோம். போர்க்களத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தோம். அமெரிக்க 4/39 இலக்கப் படையணிக்கு எதிராக அன்று போராடிய வியற்கொங் படையணி 261 ஏ பிரதான படையின் அணி, அதன் தளபதி கேணல் லேலாம் அத்துடன் உதவியாக நின்ற 502 படைக்குத் தளபதி கேணல் டாங் வியற்மாய் நாங்கள் மூவரும் விசாலமான கால்வாய் வழியே பிரயாணம் செய்து போர் நிகழ்ந்த இடத்தைப் பார்க்கச் சென்றபோது பழைய போர்க் கதைகளைச் சொன்னோம். முன் நான் வேட்டையாடிய (அவர்கள் என்னை வேட்டையாடிய) மனிதர்கள் செலுத்திய சம்பன் நீள் படகு ஒன்றில் கால்வாய்களூடாகப் பிரயாணம் செய்வது சுவையான நிகழ்ச்சி தானே. இத்தகைய கால்வாய்கள் முன்னர் மறைந்து இருந்து தாக்கும் பாதைகளாயிருந்தன.

இப்போர்த் தலைவர்கள் எல்லாம் இப்போது ஓய்வு பெற்றுவிட்டனர். தமது அறுபதுகளின் முடிவு வயதினர். ஆனால் சிலர் உடையுடன் போரிடக்கூடிய உடற்கட்டுடன் விளங்கினர். அவர்கள் பால் பகைமை, வெறுப்புக் காணப்படவில்லை. அக்காலத்தில் நாம் எல்லோரும் அரசியல்வாதிகளின் கட்டளையைப் பின்பற்றிய போர் வீரர் தாமே. இப்பொழுது நாம் கிழப் போர்ப்புலிகள். ஏதோ ஞாயிறு ஓய்வில் சுற்றுலாப் போகும் மனோபாவத்தில், இளநீர் குடித்தும், பப்பாப்பழம் சாப்பிட்டும் மகிழ்ச்சியாகப் பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினோம். காலாட் படைப் பயிற்சிக் கல்லூரியில் இளம் லெப் ரினன்ற்மார் போர் உத்திகளை உற்சாகமாக விவாதிப்பது போல போர்த் தந்திரங்களையும், நடவடிக்கை (ஒபரேசன்) களையும் பற்றிப் பேசினோம். கிராமத் தலை வன்தூத்தின்கையில்எமது படையலகின் மார்ச் 25 ஆம் திகதியிட்ட சஞ்சிகையைக் கொடுத்தேன். ''இது இரகசிய ஆய்வு அல்லவா?'' என்றான். (ஏனெனில் அதில் தனி வகுப்புக்குரிய (கிளாசிஃபைட்) என்ற தலைப்புக் காணப்பட்டது.) ஆனால் அதில் போரின் மிக வரண்ட வருணனை மட்டுமே இருந்தது. நான் இப்போது போர் ஓய்ந்துவிட்டதே என்றேன். அவன் புன்முறுவல் பூத்தான். ''ஆம், நாம் இப்போது நண்பர், நல்ல நண்பர்'' என்று (வினைச் சொல் இல்லாத வாக்கியத்தில்) பதில் கூறினான்.

எம் இரு பக்கத்தின் செயற்பாடுகளுக்குச் சாதக, பாதகமான அம்சங்களைப் பற்றி உரையாடினோம். அந்த நதிக் கழிமுக வண்டற் பிரதேசத்தில் மட்டுமன்றி, வியட்நாம் முழுவதிலும் அமெரிக்கருக்குப் பரிட்சயமில்லாத நில அமைப்பு இருந்தபடியால் அமெரிக்கர் கரையில் ஏற்றிவிடப்பட்ட மீன்போல அவஸ்தைப்பட்டனர் என்றேன். உள்ளூர் வாசிகளுக்கு நில அமைப்புப் போருக்குப் பழக்கமாயிருந்தது. ''ஆம், உங்கள் படை, உங்கள் சுதந்திரப் போர்க் காலத்தில் பிரித்தானியப் போர் வீரர் அமெரிக்கா மண்ணில் துள்ளிக்குதித்த மீனாக உணர்ந்ததைப் போல, உணர்ந்தனர்'' என்று சிரித்துக்கொண்டே கூறினான். ''அமெரிக்கா இங்கு தோல்வியுறக் காரணம் உங்கள் போர்த் தளபதிகள் இங்கு மக்களின் உயர்ந்த குறிக்கோளைக் குறித்துக் கொள்ளத் தவறினர். போரின் இயல்பு என்ற நில அமைப்பை உணரத் தவறினர்'' ஆம், அவன் கூறியது சரியே. அமெரிக்கர் வழமைக்கு மாறுபட்ட ஒரு பகைவனுடன் வழமையான போர் உத்திகளைக் கொண்டு போரிட்டனர். 2 ஆம் உலகப் போர் முழுவதிலும் ஜப்பானிலும், ஜேர்மனியிலும் போரிட்ட போது உபயோகித்த குண்டுகள் போல மூன்று மடங்கு அதிக நிறையுள்ள வெடி மருந்தையும், மிக அதிகமான பீரங்கி எறிகணைகளையும் உபயோகித்தும் இங்கு எமக்கு எதிரானவர்களைத் துவம்சம் செய்ய முற்பட்டோம். அடுத்தடுத்து வந்த படைத் தளபதிகள் சுடும் சக்தி வெற்றியைத் தரும் என நம்பினர். எமது போர் உத்தியான உராய்தலால் பகைவன் சென்று தேய்ந்து இறுவான் என்பது பிழைபட்டது. அரத்தால் உரோஞ்சி இரும்பைத் தூளாக்கலாம் என்று நினைத்த எங்களை ஆடவைத்து, போராளிகள் வாத்தியம் இசைத்தனர்.

''நாங்கள் பெரிய வல்லரசாயிருந்தும், வானத்தை நிறைத்து விமானங்களையனுப்பியும், நீங்கள் ஓராண்டு முழுவதும் சுடக்கூடிய பீரங்கி வெடிமருந்தை ஒரு தாக்குதலின்போது உபயோகித்தும்' நீங்கள் எவ்வாறு தாக்குப் பிடித்தீர்கள்?'' என்று கேட்டேன். மாய் பதில் கூறினான்: ''தொடக்கத்தில் உங்கள் உலங்கு வானூர்திகளும், விமானங்களும் போரிட முடியாதவை போலத் தோன்றின. வேகம் அதிகம், அளவில்லாத ஏவுகணைகள், எறிகணைகள் ரவைகள் எமது போராளிகளுக்கு அச்சத்தையளித்தன. ஆனால் நாம் பாடம் கற்றோம். பதுங்கியிருந்து தாக்கப் பயின்றோம். எமது மனத் துணிவு வற்றிப் போகும் முன் உங்கள் விமானங்களும், குண்டுகளும் முடிந்துவிடும் என்று எமக்குத் தெரியும்.''

லாம் குறுக்கே விளக்கினார்: ''ஆம் பொருளாதாரத்தில் பலவீனராயிருந்தோம். ஆனால் எமது உறுதியும், மனோதிடமும் உங்களிலும் கூடியவை. எமது போர் நீதியானது. உங்கள் போர் அப்படி அன்று. உங்கள் வீரமிக்க போர் வீரர் இதனை அறிந்திருந்தனர். அப்படியே அமெரிக்க மக்களும்'' அத்தகைய துணிவு, ஆற்றல், திடசித்தம் ஆகியவற்றுடன் மூன்று வல்லரசுகளை இச் சிறு தரைப்படை 30 ஆண்டுகள் போராடி நின்றன. முதலில் ஜப்பானியர், பின் பிரெஞ்சுக்காரர், ஈற்றில் அமெரிக்கர். ''வியட்நாமிய மக்களுக்குத் தமது சுதந்திரத்திலும் பெரிய பொருள் எதுவுமே இல்லை. அதற்காக உயிரை விடலாம்'' லாம் இவ்வாறு சொன்னார். இதனை மிகப் பிந்தித்தான் பென்ரகன் தலைவர் உணர்ந்தார். இப்போர் சாதாரண இராணுவ விடயம். தமது தொழில் நுட்ப மேல் நிலை, லாம், மாய் போன்ற மனிதரது திட சித்தத்தை உடைத்துவிடும் எனக் கருதினர். எமது தென் வியட்நாமியத் தோழர்கள் எவ்வளவு மலிந்தவர்களாயும், சீவனற்றவர்களாயும் இருந்தனர் என்பதை வோஷிங்ரன் அதிகாரிகள் கணக்கில் எடுக்கவில்லை. (நாடக) முரண் நகைச் சுவை என்னவென்றால், போர்ப் பதுங்கு குழிகளில் தங்கியிருந்த அடிமட்டப் போர் வீரர்களாகிய எமக்கு இந்த மானிட அம்சம் நன்கு தெரிந்திருந்தது. எமக்கு வியட்நாம் படையின் மீது பெரு வெறுப்பு. அவை பல்வேறு போர் வியூகங்களில் சிதறுண்டு மாறிச் சேர்ந்ததும் ''தேடுவதும், தவிர்த்து விலகுவதும்'' ஆகிய போர்முறைகளில் ஸ்திரமாக நின்று பிடித்ததை அனுபவத்தின் மூலம் உணர்ந்தோம். எம் பகைவர் மீது எமக்குப் பெருமதிப்பு இருந்தது.

எமது பயணத்தில் இப்போது மிக்கொங் நதிக்கழிமுக நடு அரங்கத்தின் இதயம் போன்ற கேய்பே மாவட்டத்துக்கு வந்து விட்டோம். வியட்நாமுக்கு வேண்டிய உணவின் அரைப் பங்கு விளையுமிடம் அதுவே. இப்போது நீர்ப்பாசனக் கால்வாய்கள் குறுக்குச் நெடுக்குமாகப் போகும் அச் செழித்த பூமியைப் பயன்படுத்தி, 16 மில்லியன் மக்கள் பாடுபடுகிறார்கள். கேய் பே பிரதேசமே புரட்சி பிறந்த மண். வியற்கொங்கின் பலமிக்க தளமாக அது 1955 முதல் திகழ்ந்தது. இப் பகுதியில் நான் இரண்டு ஆண்டுகள் அமெரிக்கப் படையின் தளபதியாயும், தென் வியட்நாமியப் படைக்கு ஆலோசகனாயும் பணி புரிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆபத்து''என்று பெயர் சூட்டிய சுடும் மத்திய நிலையத்தை நான் அமைத்திருந்தேன். அப் பெயர்க் காரணம், எனது வீரர் பெருங் குளவிக் கூட்டுக்கு நடுவே அமர்ந்திருக்கிறோம் என்பதை இடைவிடாது நினைக்கச் செய்வதே. 'ஆபத்து' நுழைவாயிலில் மணற் சாக்குகள் அடுக்கி வைத்த இடத்தில் இன்று நல்ல வியாபாரம் நடக்கும் பெற்றோல் விற்பனை நிலையம் இருக்கிறது. எனது 'பங்கர்' களும், முட்கம்பி வேலியும் இருந்த இடத்தில் மீன்பிடிக் குளங்கள் இருக்கின்றன.

ஓய்வு பெற்ற கேணல் லேங்கொக் தியப், 261 பி படையணியின் முன்னாள் தளபதி. எனது படையணியுடன் பலமுறை மோதிய வலிமைமிக்க படையணி அது. அவர் அப்பொழுது எனது தலைமை அலுவலகம் இருந்த இடத்திற்குச் சமீபத்தில் வசித்து வருகிறார். அழகான தோட்டத்தின் மத்தியில் நல்லமுறையில் கட்டப்பட்ட வீடு, போருக்கு அவர் கொடுத்த விலை முழுக்குடும்பமே அழிந்து விட்டது. அவரது கடைசி மகன் போர் முடியும் தறுவாயில் இறந்தான். தியப் கோபம், பகையுணர்ச்சி இன்றி இருக்கிறார். ஆனால் நெஞ்சம் உடைந்து காணப்படுகிறார். ''என்னைப் பாருங்கள்; 67 வயதுக் கிழவன்; தன்னந்தனியே இருக்கிறேன்.'' தமது கம்பீரமான (இறந்த) புதல்வனின் படத்தைக் காட்டினார். ''போர்க்காலத்தில் நாங்கள் அமெரிக்க மக்களை வெறுக்கவே இல்லை'' அவர் கண்களில் ஒளி பிறந்தது, கோபக் கனல் வீசியது. ''ஆனால் நாங்கள் அமெரிக்க அரசாங்கத்தை வெறுத்தோம். எமக்குத் துன்பமும், அழிவும் ஏற்படுத்தியமைக்கு வெறுப்புற்றோம். போரில் 3 மில்லியன் உயிர்கள்–1 மில்லியன் போர் வீரரும், 2 மில்லியன் (இருபது இலட்சம்) குடிமக்களும் மாய்ந்தனர். 4.4 மில்லியன் ஊனமுற்றனர். 3 இலட்சம் பேர் போன இடம் தெரியாது. இப் பேரழிவில் தியப் பெரும் வீதத்தை வழங்கியுள்ளார். (நூறுவீதக் குடும்ப இறப்பு) இப்பொழுது அவரது இழப்பு எனக்குத் துயரம் தந்தது. போர் வீரர் ஒருவரை ஒருவர் வெறுப்பது அருமை; அவர்கள், கொல்லும் விளையாட்டில் தாம் வெறும் பகடைக்காய்களே என அறிவர்.

காலாள் வீரன் ந்குயென் வான் அன் என்பவனை எனது தளகர்த்த நிலையத்துக்கு எதிர்ப்புறம் ஒரு வீதி ஓர உணவகத்திற் சந்தித்தேன். அவன் கசப்புணர்வு ஏதும் இன்றிக் கூறினான்: ''உங்கள் போர் வீரர் நன்றாகச் சுடுவார்கள்'' தான் சுடுபட்டு விழுந்த பின் சுகமாகி மரக்கால் பொருத்தி மேலும் 5 ஆண்டுகள் வீரமாகப் போர் புரிந்ததாகப் பெருமையுடன் சொன்னான். ''மார்ச் 25 இல் அவனுடைய தோழன் ஒருவனின் துப்பாக்கிச் சன்னம் என் காலுக்கு 1 மில்லி மீற்றர் விலகிச் சென்றபடியால், நானும் மரக்கால் மனிதர் கூட்டத்திற் சேராமல் மயிரிழையில் தப்பினேன்'' என்று சொன்னேன். அவன் சிரித்துக் கொண்டே, ''உங்கள் வைத்தியர் கெட்டிக்காரர் என்றான். கேய் பே மாவட்டம் காட்டுமிராண்டித்தனமாக அழிவுற்றது. 1975 இல் போர் முடிந்த மோது கேய்பேயின் குடிச்சனத்தொகை 75,000. அங்கு இறந்தோர் 30,000 பேர். அவர்களுள் 26,000 பேர் குடிமக்கள். எனது படையணி இங்கே தான் போரிட்டது. இராணுவத்தின் திறமை கொல்லப்பட்டவர்களைக் கொண்டே நிர்ணயிக்கப்பட்டது. 9 ஆம் பெரும் படையணியின் பெருந்தளகர்த்தருக்குப் பட்டப் பெயர்''கழிமுகக் கசாப்புக்காரன்.'' கொல்லப்படுவோர் கணக்கில் போர் வீரர் மட்டுமன்றி, குடிமக்களும் கணக்கில் எடுக்கப்பட்டனர்.

கேணல் பேகாயோ 1945 முதல் 1975 வரைபோரிட்டார் வெறும் கெரில்லா போராளியாய் ஆரம்பித்தவர் இறுதியில் 8 ஆம் இராணுவ பிரதேசத்தின் உபதளகர்த்தர் பதவிக்கு உயர்ந்தார். இப்பிரதேசத்தின் கழிமுகப்பரப்பில் கேய்பே மாவட்டத்தையும் உள்ளடக்கிய பெரு நிலம். மை.தோ என்ற இடத்தில் புறநகர்ப் பகுதியில் ஒரு விவசாயியின் குடிசையில் வசிக்கிறார். மிக அடக்கமானவர். 74 வயது பற்கள் தகர்கின்றன. ஆனால் போர் வீரனின் சிங்கநடை இன்னும் உளது. 1969 இல் எனது படையணியின் சுற்றிவளைப்பினின்றும் மயிரிழையில் தப்பினார். 300 யார் தூரத்தில் ஒரு நீள் படகில் வந்த அவரை மறைந்திருந்து தாக்கும் எனது ஆட்கள் பிடித்திருப்பார்கள். ''ஆனால் உள்ளூர் மக்கள் நீரில் சவளால் அடித்து ஒலி செய்து எச்சரிக்கை செய்தார்கள்'' என்கிறார் காயோ.

1967 இல் ஜெனரல் வில்லியம் வெஸ்ற்மு அர்லாந்து ''நாம் தொடர்ந்து நிலை பெறுவோம்'' என உரிமை பாராட்டினாரே, அதைப் பற்றி என்ன நினைத்தீர்கள் என்றேன். பே. காயோ, ''அது பெரும் சிரிப்புக்கு இடமான கூற்று'' எனக் கருதப்பட்டது என்றார். 1966 இறுதியில் நிகழ்ந்த ''ஒப்பரேஷன்'' அவற்றில் பரோ என்ற போர் நிகழ்ச்சியை நினைவு கூர்ந்தார். அதில் 22,000 அமெரிக்க வீரர் இடம் பெற்றனர். ''தேடி அழிக்கும்'' முயற்சியில் வியற்கொங் போராளிகளைச் சுற்றி வளைத்து ஒதுக்கி, ஒதுக்கித் திறந்த வெளியில் ஒன்று திரட்டி, வானத்தாக்குதல் மூலம் துவைத்து விடலாம் என்பது திட்டம். அமெரிக்க இராணுவம் அக்காலத்தில் அது மாபெரும் வெற்றி என வாய்ப்பறையறைந்தது. பேகாயோ இதனால் போர்க்களத்தில் தம் பக்கத்துக்கே வெற்றி எனப் பூரணமாக உணர்ந்தார். நான் அவன் சொன்னதை ஒப்புக் கொண்டேன். அவற்றில் பரோ போரில் மீண்டும், மீண்டும் நன்றாகத் திட்டமிடப் பட்ட தொலைப் பிரதேசங்களுள் அமெரிக்கப்படைகளைத் தந்திரமாக ஈர்த்து, கிட்ட நின்று சுட்டுத் தள்ளும் போர் முறையை வியற்கொங் கையாண்டது. மற்றொரு முறை நாம் கெரில்லாப் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையின் முக்கிய தத்துவம் ஒன்றை மறந்து விட்டோம். கெரில்லா வீரன் தோல்வி அடைய வில்லை என்றார். அவன் வெற்றி பெறுகிறான் என்பதே பொருள். நான் பே காயோவிடம் கேட்டேன்; முன்னை நாள் அமெரிக்க அதிகாரிகள் சொல்லித்திரிகிறார்களே; ''நாம் வியட்நாமில் அத்தனைகளங்களிலும் வெற்றி பெற்றோம்'' என்று, அது பற்றி என்ன கருத்து? ''அவரது விடை எளிமையான மறுப்பு.'' அவர்கள் எல்லாக் களங்களிலும் வெற்றி பெற்றால், ஏன் தொடர்ந்து புதிய புதிய அணிகளை வருவித்தார்கள்?

பே காயோவும் நானும் த்ருங் அன் இராணுவ நினைவாலயத்தில் துயிலும் வியற்கொங் வீரருக்கு ஊதுபத்தி கொளுத்தி மரியாதை செய்தோம். அதற்கு அருகில் தான் அமெரிக்க 9 ஆம் பெரும் பிரிவுப் படையின் தளப்பாசறையிருந்தது. 13 ஆயிரம்போர் வீரர் அங்கு துயின்றனர். என் கண்ணில் நீர் 'கனத்தது, வோஷிங்ரன் நகரில் வியட்நாம் நினைவுச் சின்னமாம் கருஞ்சுவரில் நான் அனுபவித்த நெஞ்சைப் பிளக்கும் அனுபவம் மீண்டும் எழுந்தது. இவ்வளவு பேர் இறந்தனர்; இவ்வளவு வீணாயிற்று; எதன் பொருட்டு?

போர் முடிந்து பலகாலம் கழிந்தது. சமாதானமும் செழிப்பும் இன்னும் வியட்நாமுக்குக் திரும்ப வில்லை. ஹனோய் நகரில் ஆட்சி பீடத்திலுள்ள பொதுவுடைமை அரசாங்கம் இதற்குப் பொறுப்பாளியாகும்—அமெரிக்காவின் உதவியுடன் நாம் வியட்நாமிய அரசாங்கத்துடன் முரண்பாடு நீக்கத்துக்கு ஏற்பாடு செய்யப் பின் நிற்கிறோம். (பிறபகை நாடுகளுடன் போர் முடிந்ததும் கூடிய விரைவில் இணக்கம் ஏற்படுத்திக் கொண்டோம்.) ஜப்பான், ஜேர்மனி விடயத்தில் பீரங்கிகளின் சூடு தணியுமுன் சமாதானம் செய்தோம்; நட்புரிமையை வளர்த்தோம். ருஷ்யக் குடியரசுகளுக்கு பேர்ளின் சுவர் உடைந்து விழுந்த போதே (மார்கழி, 1989) உதவி வழங்க முன்வந்தோம். ஆனால், அச்சந்தர்ப்பங்களில் நாம் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் இருந்தோம். அவர்கள் தோற்றுப் போயிருந்தனர்.

வியட்நாம் விடயத்தில் நாம் எமது பகைமையுணர்ச்சியை மறக்க விரும்பவில்லைப்போலும். எமது கூட்டுணர்வில் உதித்த கர்வம் எம் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகத் தடையை நீக்கவோ, ஸ்தானிக அங்கீகாரம் அளிக்கவோ இடம் தராது. முதலில் எமது தலைவர்கள்சொன்னார்கள், ''நாம் சமாதானம் செய்யமுடியாது. 1973 இல் எழுதப்பட்ட சமாதான உடன்படிக்கையை முறித்தவர்கள் ஹனோய் ஆட்சியாளரே'' என்று; பிறகு எமக்குக் கிடைத்த சாட்டு, கம்போடியாவின் கமரூச் ஆட்சியாளருடன் வியட்நாம் போரில் ஈடுபட்டுள்ளது என்பதாகும். பிறகு அந்நாட்டைப் பிடித்தது என்பதாம். வியட்நாம் தனது படைகளைக் கம்போடியாவிலிருந்து விலக்கி விட்ட பின்னரும், நாம் புதிய குற்றச்சாட்டு ஒன்றைக் கண்டுபிடித்தோம். எமது கொள்கை வகுப்போர் இன்னும் அப்பால் தமது குறிக்கோள் எல்லையைத் தள்ளி அமைத்தனர். ஹனோய் அரசு எமது போர்க்கைதிகளை இன்னும் வைத்திருக்கிறதா? அமெரிக்கப் பிற போர்வீரர் போர்களில் காணாமல் போனவர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா? இப்படியான பிரச்சனைகளைக் கிளப்பி வளர்த்த தடையை நீக்கவோ, தூதுவர் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு செய்யவோ இணங்காதிருக்கின்றனர்.

எல்லாப் பிரச்சனைகளிலும் கூடிய அரசியற் சிக்கல் நிறைந்தது பிற்கூறிய இணைப்புப் பிரச்சனையே.ஆனால்இதுவெறும்போலிச் சாட்டு. எமது புனர்வாழ்வுக் குழு அங்கத்தவர்கள் அற்ப கதைகளைக் கூட, விடாது தொடர்ந்து விசாரித்து விட்டனர். தென் கிழக்காசியாவில் எம்மவர் போர்க்கைதிகளாய் உயிருடன் இல்லை என்பதே நிச்சயமான முடிவு. நான் கண்டு பேசியசாட்டின் நெளிவு சுழிவுகளை விளங்கிய அமெரிக்க, வியட்நாமிய இராணுவ நிபுணர் எவராயினும் இதே கருத்தையே கொண்டுள்ளனர். 1973- க்குப் பின்னும் சில போர்க் கைதிகள் அங்கு பிடித்து வைக்கப்பட்டிருந்தனர். இதனை அமெரிக்க அதிகாரிகளும் அறிந்திருந்தனர். இது பற்றி உட்கதை தெரிந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். சில கைதிகள்—பீ. 52 செலுத்தும் திறமையாளர்,இலத்திரனியற் போர் நிபுணர்கள் போன்றோர் சோவியத் யூனியனுக்கு, அல்லது,சீனாவுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு அமெரிக்காவின் அணு ஆயுதத்திறன் பற்றிய விபரங்கள் தெரியும் என்பதே காரணம்.

இவ்வெண்ணத்தால் ஆட்டிப் படைக்கப்படும் சிலரும், இதை வியாபாரமாக்கித் தேடுதல் செய்யும் முயற்சியில் இலாபம் தேடுவோரும், காணாமற் போன போர் வீரரின் துரதிருஷ்டம் மிக்கவரும், பிறர் சொல்லுக்கு ஆடும் குடும்பங்களும் மட்டுமே இன்னும் வியட்நாமிற் போர்க்கைதிகளாக உளர் என நிச்சயிக்கின்றனர். ஆசிய நாட்டு வழக்கம் உள்ள சிறைக்கூடங்களில், இவ்வளவு காலம் உயிருடன் இருக்க எந்த அமெரிக்கராலும் இயலாது. நோய், போஷாக்கின்மை, பைத்தியம் ஏதாவது ஒரு காரணம் அவர்களைக்கொன்றிருக்கும். பேகாயோ சொன்னார்: ''நாம் ஏன் போர்க் கைதிகளை வைத்திருக்க வேண்டும்? அவர்களுக்கு உணவு கொடுப்பது பெருந்தலையிடி அல்லவா? 1970 இல் தான் மூன்று அமெரிக்கச் செய்தியாளரைக் கைப்பற்றியதாயும், ஒரு மாதம் சென்றதும் விடுவித்ததாயும் சொன்னார். ''ஓர் ஆள் மட்டும் எனது 10 போர் வீரரின் உணவை உண்டார்.'' என்றார்.

இந்த விடயம் வியட்நாமுடன் சமாதானம் செய்வதற்குத் தடையாக இருக்கக் கூடாது. எம் போர் வீரரைக் காணோம் என்ற சாட்டில் போரின் சோக நினைவை நிலைத்து இருக்கச் செய்வோர் வியட்நாம் சென்று பார்க்கட்டும். குளிரூட்டப்பட்ட அறைகளில் அமெரிக்க, வியட்நாமிய அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் அமர்ந்திருந்து, இருபகுதியினரும் சொல்லும் சாட்டுக்களைக் கேட்க அங்கு போகவேண்டாம். கிராமங்களுக்குச் செல்லட்டும், சாதாரண கிராமத்தவர் எப்படி இவர்களது தடைப்பிரயோகத்தால் வறுமையில் உழல்கிறார்கள்? போரின் கொடுரத்தை அனுபவித்த அதே குடிமக்களின் துயரத்தைப் பார்க்கட்டும்.

அமெரிக்கர் விடயத்திலும் வியட்நாம் ஒரு திறந்த புண்ணாகவே வெளியே தெரிகிறது. அமெரிக்க இராணுவத் தலைமை தோல்வியால் மானமழிந்து, வியட்நாம் அனுபவத்தைக் குழி தோண்டிப் புதைத்து விட்டன. இராணுவக் கல்லூரிகளில் வியட்நாம் போர் அனுபவங்கள் இரண்டு தசாப்தங்கள் வரை குறிப்பிடப்படவேயில்லை. ஐரோப்பியச் சமவெளியில் பெரும் போர் உத்திகள் பற்றியே போதித்தார்கள். அந்தப் பிழையான அனுபவத்திற் கற்ற போர்க் கேந்திர தவறுகளைப் பற்றி மீள நினைத்துப் பார்த்தல், செய்யப்படவேயில்லை. உண்மை காண முனைந்து கற்பதால் பால்கன் குடாநாடு, சோமாலியா போன்ற இடங்களில் இன்று நடைபெறும் போர்களிற் பல உயிர்களைக் காக்க உதவும். அதைவிடுத்து, வியட்நாம் போரின் கதையையே புதிதாகப் புனையும் பூரண முயற்சி நடைபெறுகிறது. 1981 இல் கேணல் ஹரி சம்மோர்ஸ் (மகன்) எழுதிய ''போர் உத்தி பற்றி'' என்ற நூலில் அமெரிக்கா போர்த்தந்திரத்தில் வெற்றி பெற்றது என்ற அடிப்படைச் சிந்தனையே துலங்குகிறது. அப்போர் யுத்தநுட்ப முறைகள் கேந்திரீய ரீதியில் தோல்வியே. எமக்கு ஒன்று நிச்சயமாகத் தெரிய வேண்டும். வியட்நாம் கணக்கை முடிப்பதற்கு முன் நாம் அவதானிக்க வேண்டியவை. அமெரிக்கா போர்க்களத்தில் தோல்வியுறக்காரணம், பேர்கர்ளி பல்கலைக்கழக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களாலோ கொங்கிரஸ் (பாராளுமன்றத்தில்) நரப்புப் பலவீனம் தோன்றியதாலோ அல்ல. எமது இராணுவத் தலைமை, ஓரினத்தின் சுதந்திர வேட்கையைக் குண்டுகளால் அணைத்து விடலாம் என்று நினைத்ததால் தான். அவர்கள் அரசியற் தலைமைக்கு இடித்துச் சொல்லியிருக்க வேண்டும், அது ஒரு பிழையான போர், குற்றம் மிக்க கேந்திரீய நோக்குடன் போராடப்பட்டது. அதனால் தோல்வி நிச்சயம் என்று இவ்வாறு கூறுவதற்குரிய அறவலிமை படைத்தவர்களது நெஞ்சில் இல்லாதிருந்ததே குறை. அதன் விலை? ஆயிரக்கணக்கான அமெரிக்க இளைஞர் பலியாயினர். அப்புசலால் தோன்றிய பகைமையும், பிளவும் இன்னும் எம் நாட்டில் மறைந்து விடவில்லை.

நான் வியட்நாம் சென்றபோது சைகோன் நகரில் ஒரு சின்னஞ் சிறு கடையில் ஒரு ஸிப்போ சிகரெட் மூட்டும் கருவி விற்பனைக்கு இருக்கக் கண்டேன். யாரோ ஒரு இறந்த அல்லது நாடு திரும்பிய அமெரிக்க போர் வீரனின் கையில் அது இருந்திருக்கலாம். அதில் பொறித்திருந்த சொற்கள் இப்போரை நினைவு கூரவும், அதனை மறக்கவும் உதவும் பொன் மொழியாகும்.

''வியட்நாம்-1968- அன்பின் சக்தி, அதிகார வேட்கையை வெல்லும் வேளையில், வியட்நாமிற் சமாதானம் தோன்றும்.''

*நியூஸ்வீக், நவம்பர் 22, 1993*

## பனிச் சறுக்குபவர்களுக்கு ஒரு வேகத்தடை

(SKATE BRAKE)

பனிச்சறுக்கு விளையாட்டு உடலிற்கும், உள்ளத்திற்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும் ஓர் அற்புத விளையாட்டாகும். வெப்ப வலய நாடுகளில் வாழும் நாங்கள் இதனை வெறுமனே திரைப்படங்களிலும், தொலைக்காட்சிகளிலும் பார்த்து இரசிப்பதோடு நின்று விடவேண்டியது தான். பனி அதிகமுள்ள குளிர்நாடுகளில் இந்த விளையாட்டு மிகவும் பிரசித்தமானது. வழமையாகப் பனிச்சறுக்குச் செய்யும் போது, இடையில் நிற்பாட்டுவது மிகவும் கடினமானதாகும். இதற்காக, அமெரிக்காவிலுள்ள மினன்ரொனிகா நகரிலுள்ள றோலர் பிளெட் நிறுவனம் புதியதொரு பனிச்சறுக்கியைச் சந்தைக்கு விட்டுள்ளது. இது, புதிதாகப் பழகுபவர்களுக்கு இலகுவாக வேகத்தைக் குறைப்பதற்கும், தேர்ந்த பனிச்சறுக்கற் காரர்களுக்கு மலைப்பாங்கான இடங்களில், வேகக் கட்டுப்பாட்டைப் பேணவும் உதவும் எனத் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். பனிச்சறுக்கியின் நான்கு சில்லும், பனியில் உருளும் போது வேகத்தடையினை சிறிது முன்னுக்கு நகர்த்துவதன் மூலம் இதனை இயக்கலாம். அப்போது பனிச்சறுக்கியின் அடிப்பாகத்தில் அழுத்தம் ஏற்படுவதனால், பிறேக் தானாகவே கீழிறங்கித் தரையைத் தொடச் செய்கிறது. பனிச்சறுக்கற் காரர்கள் அதனால் தங்கள் கால் விரல்களை வேகத்தைத் தணிப்பதற்காக உயர்த்த வேண்டியதில்லை. இதனால் பனிச்சறுக்கல்களுள் மேலும் தமது இயற்கையான நிலையில் நிற்க உதவும். இதன் விலை 149 - 339 அமெரிக்க டொலர் வரையாகும்.

*நியூஸ்வீக், டிசம்பர் 13, 1993.*

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNB.KULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவாயுத அச்சுறுத்தல்

எழுதியவர்:
— ரோனி எமர்சன் —

வடகொரியா, பனிப்போரில் விறைத்துப் போன நாடு போலவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1950 போலவும் காணப்படுகிறது. இந்தக் கடைசி ஸ்டாலினிச அரசும் மாற்றங்களுக்குள்ளாகியே வருகிறது. வடகொரியா தென்கொரியாவோடு ''ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு'' ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டபோது, 1991 இல் ''நம்பிக்கை'' என்ற பதம் நம்பகமான ஒன்றாக ஆனது. சியோல் புதினத்தாள் ஒன்று இந்த நிகழ்வை ஒரு ''புதிய உதயம்'' என்று வருணித்தது. பியோங்யாங், (வடகொரியாத் தலைநகர்) - அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து கொண்டே பொய் பேசி வருகிறது என்பதற்குச் சான்றுகள் கிடைத்த போது, 1992 இல் ஏமாற்றமே எஞ்சியது. 1993 இன் முடிவு நெருங்கும்போது, இந்த அணுவாயுத அபாயம் உலக அமைதியைச் சீர்குலைக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. சியோலிலுள்ள தென்கொரிய உயர் மேலாளர் ஒருவரின் வார்த்தையிலே சொல்வதானால், ''பேச்சுவார்த்தைக்கு நாம் இணங்காது போனால், இரண்டாவது கொரியப் போருக்கான பலமான சாத்தியக் கூறுகள் ஏற்படும்; கொரியத் தீபகற்பம் கொலைக்களமாக மாறும். உலகளாவிய ரீதியில் அணுவாயுதப் பெருக்கம் இடம் பெற வாய்ப்புக்கள் அதிகமாகும்.''

இந்த வாரம் ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கும், தென்கொரிய ஜனாதிபதி கிங்யங்சாமிற்குமிடையில் வோஷிங்ரனில் நடைபெறவிருக்கும் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில், வடகொரிய அணுவாயுதப் பயமுறுத்தலே முதலிடம் பெறுகிறது. சியாற்றில் நகரில் சென்ற வாரம் நடந்து முடிந்த ஏப்பெக் (ஆசிய பசுபிக் பொருளாதார சமுகம்) கூட்டத்தின் பின்கதவுப் பேச்சுக்கள் இதுவாகவேயிருந்தது. சீனா உட்பட, இந்தப் பிராந்திய இராஜதந்திரிகள் இவ்விடயத்தைப் பரகசியமாக விவாதிக்காமல் விட்டமை, சிக்கலைத் தீர்ப்பதில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துவதாகவும், தாம் அடைந்துள்ள முன்னேற்றம் எவ்வளவு மாறு நிலைக்கு வந்துள்ளது என்பதைக் காட்டுவதாகவும் இருந்தது. ஒன்று மட்டும் நிச்சயமாகியுள்ளது; இந்தப் பிராந்திய நாடுகளிடையே ஒற்றுமை வலுவடைய வேண்டும் என்ற பேரவா துலாம் பரமாகக் காட்டப்பட்டுள்ளது. 35,000 அமெரிக்கப் படையணியினரும் 65,0000 தென்கொரியப் படையணியினரும் நிலை கொண்டுள்ள தென்கொரியா எல்லையைத் தாக்கக்கூடிய தூரத்தில் நிற்கும் 700,000 வடகொரியப் படையினருக்குமிடையேயான இராணுவ சூனியப்பிரதேசத்திலிருந்து, தென்கொரியத் தலைநகர் சியோல் 65 கிலோ மீற்றர் தொலைவிலேயே உள்ளது. சியோலிலிருந்து வரும் புலனாய்வுத் தகவல்களின்படி அவர்களெல்லாம் மிகப்பெரிய ஆயத்த நிலையிலேயே உள்ளனர்.



தற்காப்பு, இரசாயனப் போர் தொடர்பான பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்க, தென்கொரிய இராணுவ வீரர்கள்.

**வடகொரியா: ஓர் அணுக்குண்டைத் தயாரிப்பதன் மூலம், கிம் இல் சுங் உலகத்தின் ஆவலைத் தூண்டித், தமது ஆவல் எந்த அளவிற்கு தம்மைத் தடுத்து நிறுத்தும் என்று சிந்திக்க வைத்திருக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெயிற்றி, சோமாலியா போலல்லாது, உலக அரங்கை விட்டு மங்கிப்போகக் கூடிய சிறிய பிரச்சினையல்ல வட கொரியச் சிக்கல். பனிப்போரின் பின்னாலான காலத்தில், உண்மையான எதிரி குண்டு தான் என்றும், பிரத்தியேக மாக, கிம் இல் சுங் போன்றவரின் கையில் அது இருப்பது தான் என்றும் வாதிடுகிறது கிளின்ரன் நிர்வாகம். எவ்வாறாயினும், அவரது அணுவாயுதப் பேராசை கலைக்கப்படவேண்டும் என்பதே அவர்தம் நோக்கமாகும். வடகொரியர்கள் எப்போதாவது அணுவாயுதத்தை உபயோகித்தால், ''அது அவர்களுடைய நாட்டின் முடிவாக இருக்கும்'' என்று, கடந்த ஜூலையில் கிளின்ரன் எச்சரிக்கை விடுத்திருந்தார். உலகத்தின் ஒரே வல்லரசான அமெரிக்கா, இரண்டு கோடியே இருபது இலட்சம் மக்களைக் கொண்ட ஒருநாட்டை மிரட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதோர் அற்புதமான காட்சி, அல்லது தோற்றம் என்றே கூறலாம். அந்த மக்கள் தொகையும் கூட, ஏழ்மையும், உணவுப் பற்றாக்குறையும் கொண்டவர்கள். அது கிம் இல் சுங்கைப் பொறுத்தமட்டில், உலக அரங்கில் தன் உடலளவிலும் பெரிய சிலை, பக்கத்துக்கொரு கால் வைத்திருப்பது போன்ற தோற்றப்பாடாகும். அவர் 45 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்துள்ளார். வடகொரியாவில் தனக்குள்ள பிடியை, மரணசாசனம் எழுதினாற் போன்று, தன் மகன் கிம் ஜொங் இல்லிற்கு மாற்றிக் கொடுத்துள்ளார்.

## போதிய அளவு புளூற்ரோனியம்:-

சென்ற மார்ச்சில், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் பரிசோதகர்களை யொங்பியான் அணு ஆராய்ச்சி மையத்திற்குச் செல்வதற்கு, பியோங்யாங் அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்ததிலிருந்தே இந்தச் சிக்கல் ஆரம்பமாயிற்று. குண்டுத் தயாரிப்புக்கான எரிபொருள் வடகொரியாவிடமுண்டு என்ற சந்தேகம், அதனாலேயே தோன்றியது. யொங்பியான் மீது வான் தாக்குதல் பற்றி பென்ரகன் முணுமுணுத்தது பல மாத வாதப் பிரதிவாதங்களின் பின், இந்தப் பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படும் சாத்தியமுண்டு என்றும், யொங்பியானுக்குப் பரிசோதகர்கள் மீளவும் செல்லும் வாய்ப்பு உண்டு என்றும் சியோலிலும், வோஷிங்ரனிலுமுள்ள தூதுவர்கள் நம்புகிறார்கள்.

தனது அணுகுண்டு தயாரிக்கும் பணியில், கிம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளார் என்பதில் அமெரிக்க, ஆசியப் புலனாய்வுத்துறையினரிடையே கருத்து வேற்றுமை நிலவுகின்ற போதும், ஒன்று, அல்லது இரண்டு குண்டுத் தயாரிப்புக்கான புளூட்டோனியம் வடகொரியாவிடம் உண்டு என்பதிற் பொதுக் கருத்து நிலவுகிறது. சுற்றிவரப் பரிசோதகர்கள் இல்லாத நிலையில், யொங்பியான், மீள்தாக்கக்கருவியின் உள்ளக எரிபொருட்கம்பங்களினிடத்திற் புதியனவற்றை வைத்துப்பழையனவற்றைஉபயோகிப்பதன் மூலம், ''பல குண்டுகளைத் தயார் செய்யவும் முடியும்'' என்று கருதுகிறார் சர்வதேச அணுசக்தி நிறுவனத்தைச் (IAEA) சேர்ந்த டேவிட் கிட். மீளவைக்கும் பணியைச் சென்ற மாதமே செய்து முடித்துவிட்டால், காரியம் முடிந்துவிடும் என்று பியோங்யாங் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தது.

(IAEA) நிறுவனத்தைப் பொறுத்தவரையில், வட கொரியாவைப் பற்றிய பொறுமை நிலை எல்லைக் கோட்டில் நிற்கிறது. 1985 இல் அணுவாயுத உபயோகத்தடை ஒப்பந்தத்தில் வடகொரியா கைச்சாத்திட்ட பின், அங்குள்ள அணுசக்தி மையங்களை ஒப்பந்தத்திற்கமையப் பார்வையிடும் வாய்ப்பை ஏழு ஆண்டுகளுக்கு வடகொரியா பின் தள்ளியது. பரிசோதகர்கள் 1992 இல் அங்கு வந்து, அன்னியோன்யமாக யொங்பியானில் சோதனை தொடங்கியபோது தான், வடகொரியர்களின் பொய் புலனாகியது. 1970 இலும், 1990 இலுமாக இரண்டுதடவைகள் யொங்பியாங் றியக்ரர் கழிவுகளிலிருந்து புளூட்டோனியத்தைப் பிரித்தெடுத்ததாக வடகொரியர் கூறியுள்ளனர். 1990 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டதன் மாதிரி என்றும் காட்டியுள்ளனர். அதன் இரசாயனச் சேர்வைகளிலிருந்து, தமக்குக் காட்டப்பட்ட மாதிரிகள் 1990-க்கு முந்தியவை என்பதைப் பரிசோதகர்கள் கண்டுள்ளனர். ''20ஆண்டுகளுக்குப் புளூட்டோனியத் தயாரிப்பில் தமக்கு அக்கறையிருக்கவில்லை'' என, எம்மை நம்பச் சொல்கிறார்கள் என்று கூறுகிறார் கிட்.

## பரீட்சை ஆரம்பம்

அமெரிக்க உளவுச் செய்மதிகளின் படங்கள், யொங்பியானிலுள்ள இரண்டு கட்டடங்கள் வெளித்தோற்றம் மாற்றப்பட்டிருப்பினும், சோவியத் அணுக்கழிவுத் தேக்க அமைப்பை ஒத்தனவே எனக் கண்டு கொண்டபின், மேலும் விஸ்தரிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளுக்குட் போய்ப் பார்த்தால் அணுக்கழிவுகளினதும், புளூட்டோனியத்தினதும் அளவுகளைக் கண்டு கொள்ள முடியும். IAEA நிறுவனம் பிரவேச அனுமதி கோரியது. ''அவர்களின் பதில் இல்லை என்பதாகவேயிருந்தது. அதுவும் போய் வேலையைப் பாருங்கள்; முடியாது என்பது போலவே இருந்தது'' என்கிறார் கிட்.

சில மாத காலத்துள் வட கொரியா, உபயோகிக்கக் கூடிய அணுக்குண்டொன்றைத் தயாரித்து விடும் என்று வோஷிங்ரனிலும், ரோக்கியோவிலுமுள்ள புலனாய்வுத் துறையினர் 1991 ஆம் ஆண்டில் ஆருடம் கூறினர். இப் பியோங்யாங் சிக்கல்களுக்குள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. 1993 இன் ஆரம்பத்தில், அதனிடம் இருக்கும் என்று கருதப்பட்ட வெடிக்க வைக்கும் பொறிகள், இப்போது இல்லை எனக்கருதப்படுகிறது. எவ்வாறாயினும், கடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாதம் ஜப்பான், ருஷ்யா, சீனா, தென்கொரியா போன்ற நாடுகளுக்கு அழிவு சாதனங்களைக் கொண்டு செல்லக் கூடிய, றோடொங் 1 என்ற 1,000 கிலோமீற்றர் செல்லக்கூடிய ஏவுகணையை வட கொரியா பரீட்சித்துப் பார்த்தது. இப்போது அங்கே அபிவிருத்தி செய்யப்படும் றோடொங் 11, தனது தாக்குதல் எல்லைக்குள் தென்சீனாவையும், தாய்வானையும் கொண்டு வரக்கூடியதாகும்,

வடகொரியா உலகத்துக்குச் சவால் விட்டு, அணுக்குண்டு ஒன்றை உருவாக்க முடியுமானால், அணுவாயுதசக்தி மிக்க இந்தியா, பாகிஸ்தான், ஈராக், லிபியா, சிரியா போன்ற நாடுகள் ஏன் இதை உருவாக்கக்கூடாது? ''ஏனைய நாடுகள் உற்றுக்கவனித்துக் கொண்டிருக்கின்றன. முழு அணுவாயுதத் தடை முறைமையுமே தள்ளாட்டம் காணப்போகிறது'' என்கிறார் மேற்குலக அணுவாயுதத் தடை அதிகாரி ஒருவர்.

செயன்முறையில் கூறுவதானால், கிம் இல் சுங் ஏன் அணுவாயுதம் உருவாக்க வேண்டும்? சில சலுகைகளை மேற்குலகிலிருந்து கறந்தெடுப்பதற்காக, அவரது பொய்மிரட்டல் இதுவென்று கருதுவோருமுளர். அவ்வாறானால், அது ஓரளவு பயனளிக்கிறது என்றே கூற வேண்டும். வடகொரியாவில் நீண்டகாலக் கோரிக்கையாகவிருந்த உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு, ஜூன் மாதம் கிளின்ரன் சம்மதமளித்தார். இந்தச் சந்தர்ப்பம், கிம்மின் கௌரவத்தை உயர்த்துவதாக அமைவதோடு, ஒரு நல்ல மேல்நாட்டுக்காரராக அவர் நடந்து கொள்ளவும் தூண்டும் என்றே கருதப்பட்டது. எதுவுமே கிம்மைத் திருப்திப்படுத்துவதாக இல்லை என்பது தெளிவாகிறது. மூன்றாவது உலக நாடுகளின் மத்தியில், அணுவாயுத நாட்டின் தலைவன் என்ற பெரும் புகழையே கிம் நாடுவதாகச் சந்தேகிக்க இடம் ஏற்பட்டுள்ளது. பியோங் யாங்கைத் தடை செய்யும் அணுகுமுறையைக் கிளின்ரன் நிருவாகம் கடைப்பிடிக்கிறது என்று பத்திரிகை உலகம் கண்டனமெழுப்புவதைத் தொடர்ந்து, இப்போது கடினவழி பின்பற்றப்படுகிறது. விளைவாக, வடகொரியாவுக்கெதிரான தடைகளை ஐ. நா. மூலம் கொண்டு வர அமெரிக்கா முயலும்.

பெரிய அரசுகளுக்கு முகம் கொடுப்பதில் நீண்டகால அனுபவமுள்ளவர் கிம். முதன் முதலாக, 1955ஆம்ஆண்டில் வடகொரியாவின் ஆளும் நியமமாகச் சுயநம்பிக்கை எனப்பொருள்படும் ஜூச்சே (Juche) என்ற சொல்லை அவர் அறிமுகப்படுத்தினார். ''ஒருவரின் தலைவிதிக்கு அவரே பிரபு'' என்ற கொள்கையையே ஜூச்சே என்ற பதம் பிரதிபலிக்கிறது 1960இன்பிற்பகுதிகளில், வடகொரிய நூலகங்களனைத்திலும் ஒரே ஜூச்சேமயம் தான். பொருளாதாரச் சுயபலம். இராணுவச் சுய பாதுகாப்பு, அரசியற் சுதந்திரம் பற்றிய நூல்கள் குவியத்தொடங்கின. ஜூச்சேயை நடைமுறைப்படுத்திய கிம், தனது முன்னாள் எஜமானர்களான ருஷ்யாவையும், சீனாவையும் ''குடியேற்ற எஜமானர்கள்'' என்று நாமம் சூட்டி, நிராகரித்துப் புறந்தள்ளி விட்டார். சோவியத்தரப்பு நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யவென ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் எல்லோரையுமே 12மணித்தியாலக் கட்டாய வேலைக்குட்படுத்தினார். தனது பொருளாதார அமைப்பிற் சேருமாறு கேட்ட ருஷ்யாவின் கோரிக்கையைப் புறந்தள்ளினார். எவ்வளவு தவறிழைப்பவராக இருந்தாலும், சுய–தியாகத்தை மதிக்கும் ஒரு நாட்டை உருவமைப்பதில் வெற்றி கண்டுள்ளார் கிம் என்பது ஹவாய் பல்கலைக்கழகத்தின் கொரிய விவகார நிபுணரான டாசூக் சுவின் கருத்தாகும். ''அவர்களுக்கெதிராகத் தடைகள் போடப்பட்டாலும், அவர்கள் வாழ்வார்கள், வாழ்வது மட்டுமல்ல, விருத்தியோடு வெற்றி நடைபோடுவார்கள்'' என்கிறார் அவர். பாரம்பரிய நோக்கு எண்ணிக்கைகளைப் பார்த்து விட்டு, வடகொரியா இலகுவாகத் தாக்கப்படக்கூடிய நிலையிலுள்ளதாக வலியுறுத்துகிறது. கடந்த மூன்று ஆண்டுகளிற் பொருளாதாரம் 13 சத வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. 1990-க்கும், 1992-க்குமிடையில் வெளிவர்த்தகம் 50 சத வீதம் குறைந்து 200 கோடி டொலராகியுள்ளது. எண்ணெய்த் தானியவகைகளின் இறக்குமதி குறைந்து, தொழிற்சாலைகள் தூங்கி வழிகின்றன. மக்கள் ஒருவேளை, அல்லது, இருவேளை உணவு மட்டுமே உட்கொள்ளுகிறார்கள். பியோங்யங்கின் இறக்குமதிகளில் 2/3 பங்கு சீனா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளிலிருந்தே பெறப்படுகிறது. ஆகவே, இந்த நாடுகள் ஐ. நா. தடைவிதிப்பிற் கையெழுத்திட்டதால், வடகொரியா அடிபணிந்தேயாக வேண்டும்.

இந்த இலக்கங்களிற் பெரும்பாலானவை. தென்கொரியாவின் கணிப்பீடுகளாகும். பியோங் யாங்குக் கெதிரான பிரச்சார உத்தியில், தென்கொரியாவுக்கென ஒரு வரலாறேயுண்டு. வடக்கின் பொருளாதாரம் புராதனக் காலத்தையதென்பது மறுக்க முடியாததாகும். அந்த நாடு மத்திய கிழக்கிற்கு விற்பனை செய்யும் திருத்தியமைக்கப்பட்ட ஸ்கட் ஏவுகணைகளை விட, அதன் அதியுயர் தொழில் நுட்ப ஏற்றுமதிகள், ஜப்பானோடு கூட்டுச் சேர்ந்து தயாரிக்கும் ஆண்களுக்கான உடைகள், பியானோக்கள், ஜின்செங் மதுபானம் என்பவை மட்டுமே. பலமிழந்த ஏற்றுமதியென்பது, இறக்குமதிக்கான மிகக் குறைந்த பணவசதி தான். வெளிக்கடன்களில் பல்லாயிரம் கோடி டொலர்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், சர்வதேச வங்கிகள் பியோங் யாங்கை புறந்தள்ளி விட்டன. இந்நாள் வரை, வடகொரியா பொருளாதாரப்புள்ளி விபரம் எதையும் வெளியிடுவதில்லை. ஆனால், ''தொழிலாளர் சொர்க்கத்தில்'' எல்லாமே சிறந்த முறையிலிருப்பதாக வலியுறுத்தி வந்துள்ளது. ஒரு முறைக்கு மேல், அங்குள்ள நிலையைக் கண்டு கொள்ளும் வாய்ப்புக் கிடையாது. அமெரிக்க வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY; JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

யுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் மட்டுமே வடகொரியாவுக்குப் போய் வந்துள்ளார்.

பியோங்யாங்கில் உணவுக் கலவரங்களும், சதிப்புரட்சிகளும் நடைபெறுவதாக அடிக்கடி கிடைக்கும் வதந்திகளை வைத்தே, தடைகளுக்கான விவாதங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுள் எவையும் உறுதிப்படுத்தப்படாதவையாகும். வர்த்தகத் தடைகள், வடகொரியாவின் ஆயுதக் கைத்தொழிலில் ஓரளவு பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தவல்லதாகும். அதற்குத் தேவையான பகுதிகளிற் பெரும்பாலானவை ஜப்பான், ஈரான், வேறுநாடுகள் என்பனவற்றிலிருந்து கடத்தி வரப்படுகின்றன.

கிம் அரசைப்பற்றி வெளி உலகம் பூரணமாக அறியாமலில்லை. 1983 இல் ஆரம்பித்துப் பிரதமர் யொன் ஹியோங் மக்கின் தலைமையிலான சீர்திருத்தக் குழு, மாபெரும் தலைவரின் அநுசரணையுடன், தென்கொரியாவோடு பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. வடகொரியாவை ஐ. நா. வுக்குட் புகுத்தியது. வெளிநாடுகளை ஈர்த்தெடுக்கச் சுதந்திர வர்த்தக வலயங்களை ஆரம்பித்தது. சென்ற ஆண்டு உள்நாட்டில் திடீர்த்திருப்பம் ஏற்பட்டது. ''அன்புக்குரிய தலைவர்'' கிம் ஜொங் கிங் இராணுவப் பிரதம தளபதியாகவும், அன்றாட அரசியற் தலைவராகவும் ஆக்கப்பட்டார். எல்லைகள் மூடப்பட்டன. வெளிநாட்டவர்கள் வெளியேற்றப்பட்டனர். இளைய கிம்மின் பின்னால் வல்லூறுகள் அணிதிரண்டன. முடிக்குரியவராக அவர் கருதப்படுகிறார். வடகொரியாவில் உடைவு ஏற்பட்டால், அது வன்முறைக்கு இட்டுச் செல்லும் என்ற அச்சம் நிலவுகிறது.

சியோலுக்குச் சமீபத்தில் விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் லே அஸ்பினின் மனத்தில் சரியான நோக்கம் ஏற்பட்டுள்ளது. எல்லையிலிருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில், வடகொரியப் படைகளில் 70 வீதத்தினர் நிலை கொண்டிருப்பதாக, அவர் பலமுறை எச்சரித்துள்ளார். வடகொரியாவின் படைபலம் கடந்த பத்தாண்டுகளில் இரட்டிப்பாகி, 10 இலட்சத்திற்கும் அதிகமாகியுள்ளதாக ஏனைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 60 களின் நடுப்பகுதியிலிருந்து, பியோங்யாங் 'ஜுச்சே' விதிகளுக்கமையக் குடிமக்களனைவரையும் ஆயுத உபயோகத்திற்குப் பயிற்றிவந்திருக்கிறது. ''ஒவ்வொரு குடிமகனும் ஒரு படையவீரன்'' என்ற தத்துவம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, மாபெரும் வடகொரியப்படையாகக் கட்டுமானம் ஒன்றும் புதிய விடயமல்ல. சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள அதீத அக்கறையும், தென்கொரியாவின் பாதுகாப்புத் தொடர்பான வோஷிங்ரனின் எச்சரிக்கையும் மட்டுமே புதியவையாகும். வடக்கிலிருந்து வரக்கூடிய ஒரு திடீர்த்தாக்குதல், தென்கொரியப் படைகளை இரண்டே வாரங்களில் நிர்மூலமாக்கிவிடும் என்பது, நில இராணுவப் பகுப்பாய்வாளர்களின் கருத்தாகும்.

பியோங்யாங் இவ்வாறானதொரு ஆக்கிரமிப்புக்குத் திட்டமிடக்கூடுமோ? சில சதிகள், பயங்கரவாதத்தாக்குதல்கள், படுகொலை முயற்சிகள் என்பனவற்றுக்குப் பின்னணியில் வட கொரியா இருந்திருக்கிறது. தென்கொரியத் தலைவர்களுக்கெதிரான இம்முயற்சிகள் சியோலில் சென்ற ஆண்டு முறியடிக்கப்பட்டன என்பது வேறுவிடயம். எல்லையை ஊடுருவுவதற்கும், ஆக்கிரமிப்பதற்கும் இடையிற் பலத்த வேறுபாடுண்டு. ''அவர்கள் விவேகம் நிறைந்த மக்கள்.'' என்கிறார், கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தின் ஆசிய விவகார நிபுணரான றொபட் ஸ்கலப்பீனோ. இவர், சென்ற ஆண்டு ஓர் ஆய்வை மேற்கொள்வதற்காகப் பியோங்யாங் சென்றிருந்த குழுவின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவு காணப்படாத சந்தேகங்கள்

இராஜதந்திரிகள் நம்புவது போல எல்லாம் நடந்தால், தற்போதைய நெருக்கடி இலகுவிற் தீர்க்கப்பட்டுவிடலாம், இப்போது பிரேரிக்கப்பட்டுள்ள 'தீர்வு'த் திட்டத்தின்படி, I. A, E. A நிறுவனத்தின் பரிசோதகர்கள் யொங்பியானுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் இதற்குப் பிரதியாக அமெரிக்காவிடமிருந்து தென்கொரிய – அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சிகளை நிறுத்துதல் போன்ற மேலதிகச் சலுகைகள் வழங்கப்படலாம். I. A. E. A நிறுவனப் பரிசோதகர்கள், தாம் முன்னர் சென்று பார்த்த கட்டடங்களுக்கே செல்வார்கள். அணுவாயுதத்தடை ஒப்பந்தத்தின்படி, வடகொரியா தனது அணுசக்தி தொடர்பான அனைத்து இடங்களையும் பரிசோதனைக்கு விடக் கடமைப்பட்டிருக்கின்றபோதும், கிம் இரகசியமாகப் பேணி வரும் கட்டடங்களைப் பார்வைக்குத் திறந்து விடப்போவதில்லை. ஆகவே, கிம்மின் அணுவாயுத நோக்கங்கள் தொடர்பான சந்தேகங்கள் தீர்வதற்கு வழி கிடையாது.

எந்த ஒப்பந்தத்தில் கிம் கையெழுத்திட்டபோதும், இரகசியமாகவோ, வேறு விதமாகவோ அவர் அணுவாயுதங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டே தீருவார் என்பதே பல அறிவாற்றல் மிக்க கொரியர்கள் கருத்தாகும். தடைகள் மூலமாவது அவரை அணுவாயுதத் தயாரிப்பிலிருந்து தடுத்து நிறுத்த முடியாது போனால், அணுவாயுத வடகொரியாவோடு வாழ முடியுமா வென்று, உலகம் தீர்மானிக்க வேண்டியிருக்கும். ''இல்லை'' என்பதே இதற்கான விடையாக இருக்குமானால், எதிர்காலம் படு பயங்கரமானதாகவே அமையும்.

வோஷிங்ரனில் ஜோன் பறி ஜேன் விற்மோருடனும்
ரோக்கியோவில் பெற்றர் மக்கி லொப்புடனும்
பாரிசில் மாக்கஸ் மாப்றியுடனும்

நியூஸ் வீக், நவம்பர் 29, 1993.

உலக உலா, பெப்ரவரி, 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய "மஜிநொட் கோடு"

எழுதியவர்:
— ஜோன் பறி —

1991 இன் இளவேனிற் காலத்தில் பென்ரகனின் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ''அழுக்காறு நிறைந்த தென்கொரியாவின் சிறிய இரகசியம்'' என்று, இந்த ஆய்வின் முடிவினை அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி விபரித்தார். ஆய்வு, இனவாரியாகப் பகுக்கப்பட்டுள்ளது. நேச நாடுகளின் பாதுகாப்புகளில் அதிபயங்கரமான குறைபாடுகள் இருப்பது ஆய்வை வாசித்தறிந்த அமெரிக்க அதிகாரிகளை, ''நியூஸ் வீக்'' செவ்விகண்டபோது தெரிய வந்துள்ளது. இதை ஒரு ''கொடுமையான அடிக்கோடு'' என்கிறார் ஓர் அதிகாரி. வடகொரியாவின் எதிர்பாராத தாக்குதல், தென்கொரியப் பாதுகாப்பு அரண்களை இரண்டு வாரங்களிலோ, அல்லது அதற்குக் குறைந்த நாட்களிலோ சிதைத்து விடும். படை நகர்வுக் கோளாறுகளால், அமெரிக்காவின் மேலதிகப் படைப்பலம் வந்து சேர, ஆறிலிருந்து எட்டு வாரங்கள் பிடிக்கும் என்பது மிகமோசமான நிலையாகும். இடைப்படும் காலத்தில் நிகழ்த்தப்படக்கூடிய விமானத் தாக்குதல்கள், வடக்கின் முன்னேற்றத்தைக் குறைக்க முடியுமேயன்றி, நிறுத்த முடியாது.

இது ஒரு மிக மிகமோசமான கட்டமாகும். இப்போதுள்ள கருத்தும், அவ்வளவு ஆறுதலளிப்பதாக இல்லை. நேசநாடுகள் வெற்றி பெறக்கூடும். ஆனால், அது பலத்த சேதத்தோடு, ஆறுமாத காலத்தின் பின்னராகவே நிகழக் கூடிய ஒன்றாகும். இராணுவப் பலத்தின் சமநிலையைப் பேணுவதற்காகத் தென்கொரியாவுக்கு அனுப்பப்படவிருந்த அமெரிக்கப் படைகளைப் பென்ரகன் நிறுத்திக் கொண்டமைக்கு, 1991 இன் ஆய்வின் முடிவும் ஒரு காரணமாகும். அந்த ஆய்வின்படி, 1980 களிற் புதிய கவச வாகனங்களுக்காகவும், பீரங்கிகளுக்காகவும் பியோங்யாங் பாரிய அளவிற் செலவு செய்துள்ளதோடு, தனது படையினரின் கணிசமான பங்கினரை எல்லைப் புறத்துக்கு நகர்த்தியுள்ளது. வடகொரியா, ஒரு ''குறுகிய கால எச்சரிக்கைத் தாக்குதல்'' திறனைப் பெற்றுள்ளது, ஆனால் அதற்கு ஈடாக நேச நாடுகள் பலம் பெறவில்லை.

1970 களின் முற்பகுதியில், அமெரிக்க ஆலோசனைகளுக்கமைய சியோல் தனது படைகளைப் போர்த்தவிர்ப்புப் பிரதேசத்தின் 240 கிலோ மீற்றர் நீளத்திற்கு, மிகவும் அடர்த்தியற்ற மூன்று கோடுகளில் நிறுத்தியது. பல ஆண்டுகளாகத் தென் கொரியாவை நம்பிய அமெரிக்க அதிகாரிகள் ஒவ்வொரு கோடும் மிகப்பலமுள்ளதாக இருப்பதாகவே எண்ணியிருந்தனர். ஒவ்வொரு ''கோடும்'' மிகவும் மெல்லியதாகச் சில பாதுகாப்புக் கிடங்குகளும், சில மீற்றர்கள் தடிப்புடைய சுவர்கள் கொண்டதாகவுமே இருப்பதாகச் சமீபத்தில் தான் அமெரிக்க அதிகாரிகள் தெரிந்து கொண்டுள்ளனர். கணனிகள் போலித்தாக்குதல் ஒன்றைச் செய்து காட்டியபோது, ''கோட்டுச் சுவர்கள் சிதறிய விதத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எமக்கு, மயிர்கள் குத்திட்டு நின்றன'' என்று பென்ரகன் தரப்பிற் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் பல சிக்கல்களுமிருந்தன. தென் கொரியப் பாசறைகளும், பீரங்கிக் கிடங்குகளும் 1950 களிற் கட்டப்பட்டவை என்பதால், வடகொரியாவின் தூரப் பாயும் நவீன பீரங்கிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையிலுள்ளன. ''வடக்கின் பீரங்கிகள் சரமாரியான தாக்குதலை ஆரம்பிக்குமாயின், சொம் ஒரு மனித சஞ்சாரமற்ற வனமாகிவிடும் என்று, இரகசியங்களை வெளியிடாமலே என்னாற் சொல்லமுடியும்'' என்று முன்னாள் அமெரிக்க வான்படை விமானியும், பென்ரகன் ஆய்வின் பிரதான ஆக்கியோனுமான றொபட் கஸ்கின் கூறியுள்ளார். ''புத்திசாதுரியமற்ற செயல் அது. கொரியா கட்டியிருப்பது புதிய மஜினொற் கோடாகும்'' என்று இரண்டாவது உலகப் போரின் போது, பிரான்சின் எல்லைகளை ஜேர்மன் படையினர் இலகுவாக ஊடுருவியதை மேற்கோள்காட்டிச் சொல்கிறார் ஓர் ஒய்வுபெற்ற



வடகொரிய ஜெனரல்கள். தெற்கின் அரணை, இவர்கள் துரிதகதியில் உடைத்தெறியக்கூடும் என்று பென்ரகன் அஞ்சுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | தென்கொரியா | வடகொரியா |
|---|---|---|
| இராணுவம் – தரைப்படை | 5, 40, 000 | 9, 00, 000 |
| கடற்படை | 60, 000 | 40, 000 |
| விமானப்படை | 55, 000 | 84, 000 |
| மொத்தம் | 6, 55, 000 | 1, 30, 0, 00 |
| தரைப்படைத் தொகுதிகள். | | |
| பட்டாளங்கள் | 11 | 17 |
| பிரிவுகள் | 50 | 53 |
| படையணிகள் | 21 | 99 |
| தரைப்படை உபகரணங்கள். | | |
| கவசவாகனங்கள் | 1, 800 | 3, 800 |
| பீரங்கிவண்டிகள் | 1, 900 | 2, 500 |
| தள ஏவுகணைகள் | 4, 500 | 10, 300 |
| கடற்படைப்பலம். | | |
| போர்க்கப்பல்கள் | 190 | 434 |
| உதவிக்கப்பல்கள் | 60 | 310 |
| நீர்மூழ்கிகள் | 1 | 26 |
| வான்பலம். | | |
| போர்விமானங்கள் | 520 | 850 |
| உதவி விமானங்கள் | 190 | 480 |
| உலங்கு வானூர்திகள் | 600 | 290 |
| வெளிநாட்டுப் படைகள். | | |
| அமெரிக்க இராணுவம் | 26, 000 | |
| அமெரிக்க வான்படை | 9, 500 | |

வான்படைத் தளபதி. ''இவ்வாறு அவர்களைச் செய்யத் தூண்டியது நாம் தான் என்பதுவே, இதிலுள்ள துன்பியல்'' என்கிறார் மேலும் அவர்.

பென்ரகன் பரிசோதகர்களின் தளபதியின்அறிக்கை, இந்த இள வேனிற் காலத்தில் அவர்கள் அறியாமல் வெளியாகியது. தென்கொரியாவின் தென்பகுதித் துறைமுகமான பசானுக்கு வந்து சேரும் அமெரிக்க இடைநிரவுப் படைகளை ஏற்பதற்கு பொருள்களைக் கையாள்வோர் ஒரு சிலரும், எல்லைப்புறத்துக்கு அவர்களை விரைவாகக் கொண்டு செல்ல, மிகக் குறைந்த போக்குவரத்துச் சாதனங்களுமே இருக்கும் என அந்த அறிக்கை தெரிவிக்கிறது. இவ்வகையான பின்னணித் தேவைகளைத் திறம்படச் செய்ய வேண்டிய கடமையுள்ள தென்கொரியாவுக்குக் கொடுக்கப்பட்ட மறைமுகமான பலத்த அடியே இதுவாகும். நேச நாடுகளின் பாதுகாப்பில் உள்ள, ''ஏதாவது பலவீனங்களைக்'' கண்டறிய, ஒரு கூட்டு ஆய்வு ஒன்றிற்கான ஆலோசனை கூறியுள்ளார் இம்மாதம் சியோலுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர், ''இந்த ஆய்வுபற்றி, உத்தியோகபூர்வமான அறிக்கையிற் பிரஸ்தாபிக்கப்படவில்லை'' என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். காரணம், ''கொரியர்கள் அதை அச்சில் ஏற்றிருக்க மாட்டார்கள்'' என்கிறார் அவர்.

1990 ஜூனிலிருந்து, இவ்வாண்டு (1993) ஜூன் வரை தென்கொரியாவிலுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதியாக இருந்த ஜெனரல் ஹொபேட் றிக்காசி. மறுசீரமைப்பை வலியுறுத்திவந்தார் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். தென்கொரியா 'எவ்வளவோ காரியங்கள்' செய்துள்ளதாகவும், குறைபாடுகளை நிவர்த்திசெய்துள்ளனரெனவும், ''அழுக்காறு மிக்க இரகசியத்'' தோற்றம் பொய்யானதென்றும் கருதுகிறார் றிக்காசி, ஒரு செவ்வியில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார். விருத்திக்கு இன்னமும் இடமுண்டு என்பதும் அவரது கருத்தாகும். தென்கொரியாவின் பாதுகாப்புக் கோடு ''1953 இன் லீனியர் செயற்பாடுகளுக்கும், ஆயுதங்களுக்குமே பொருத்தமானதாகும். இவ்வாறான பாதுகாப்பு, நவீன போர் யுக்திகளுக்கு உதவாதது'' என்கிறார் அவர். ''1993 இல், அது காலங்கடந்தது''.

நியூஸ்வீக், நவம்பர் 29, 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானின் உலகளாவிய பயங்கரவாதம்

ஈரான் ஒரு பயங்கரவாத அரசு என்பதை மேற்குலக நாடுகள் ஏற்பதற்கு, சாந்த குணமும், அமைதியாகப் பேசும் சுபாவமுமுள்ள முகம்மது ஹுசைன் நாக்டி ஓய்வின்றித் தொழிற்பட்டார். ரோமில் உள்ள ஈரானியத் தூதராலயத்தில் பொறுப்பாளராகக் கடமையாற்றும் பொழுது, அவர் அதை அறிந்திருந்தார். ஈரானியச் சர்வாதிகார அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் செயற்பட்ட ஈரானிய எதிர்ப்புத் தேசியச் சபையின் இத்தாலியப் பிரிவிற்குத் தலைமை தாங்கினார். ஈரான் மீது பெற்றோலியம், நெய், மற்றும் ஆயுதத்தடையொன்றை ஏற்படுத்த, 1992 ஜூலை மாதம் இத்தாலிய நாடாளுமன்றத்தின் 400 அங்கத்தவர்களின் ஆதரவைத் திரட்டினார். ஈரானிய அரசாங்கத்தின் கொல்லப்பட வேண்டியோரின் பட்டியலில், தான் முன்னுரிமை பெறுவதாக நாக்டிக்குத் தெரிந்திருந்தது.

சென்ற மார்ச் மாதம், நாக்டி தனது அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் சுட்டுக்கொல்லப்பட்டார். மீண்டும், மீண்டும் நடைபெறும் இவ்வாறான கொலைகளில் நாக்டியின் கொலை கடைசியானதாகும். ஈரானிய அரசை தனிமைப் படுத்தும்படி, சுவிஸ் அரசைச் செயற்பட வைத்த இவரின் சக ஊழியர் காஜெம் றஜலி, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஜெனீவாவில் வைத்துக் கொல்லப்பட்டார்.

ஈரானால் வழிநடத்தப்பட்டுப் பண உதவி கிடைத்தும், அல்லது, ஊக்கப்படுத்தப்பட்டும் இயங்கும் புரட்சிவாத அடிப்படைவாதிகள் ஐரோப்பா, ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும், தற்போது வட அமெரிக்கா ஆகியவற்றில் கொலைகளையும், குண்டு வெடிப்புகளையும் செய்திருக்கிறார்கள். முன்னாள் ஈரானியப் பிரதமர் ஹாப்பூர் பக்தியாருக்கு நடந்ததைச் சற்று எண்ணிப் பாருங்கள். 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பிரான்ஸ் நாட்டுக் காவற்றுறையினர் பாரிஸிற்கு வெளியே பக்தியாரின் வீட்டைக் காவல் புரியும் வேளையில், பொய்க்காரணங்களைக் கூறிக் கொண்டு உள்ளே புகுந்த ஈரானியக் கொலையாளிகள், அவரின் தொண்டையை வெட்டிவிட்டுத் தப்பிவிட்டார்கள். நான்கு ஈரானியர் மீது பிரான்ஸ் அதிகாரிகள் கொலைக்குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். இருவர் சுவிற்சிலாந்தில் கைப்பற்றப்பட்டு, பிரான்சிற்கு நாடு கடத்தப்பட்டு நீதி நடவடிக்கையை எதிர்பார்த்திருக்கிறார்கள். ஈரானிய அரசாங்க அதிகாரியொருவர் உட்பட, மற்றும் இருவர் தெஹரானுக்குத் தப்பி விட்டார்கள். பாரிஸில் உள்ள சில முஸ்லிம்கள் பக்தியாரின் வீட்டை அவதானித்துக் கொலைஞருக்குச் செய்திகள் கொடுத்தார்கள் எனப் பிரான்சுப் புலன் ஆய்வுத்துறையினர் கூறுகின்றார்கள்.

## கொலை நிறுவனம்

சென்ற ஜனவரி மாதம், அங்காராவில் மக்கள் நலனுக்காக உண்மைகளை எடுத்துக் கூறும் பத்திரிகையாளரான உகுர் மும்குலின், மோட்டார் வாகனக் குண்டு வெடித்துச் சிதறியபோது கொல்லப்பட்டார். இவரின் மறைவுக்குத் துக்கம் தெரிவிக்கும் முகமாக 250,000 துருக்கிய மக்கள் வீதிகளிற் குவிந்தார்கள். அவருடைய குற்றம், துருக்கியில் அடிப்படைவாதிகளால் விதிக்கப்பட்ட சமயக் கட்டுப்பாடுகளை எதிர்த்ததே. அவர் இறந்த சில மணி நேரத்தில் ஈரானால் பண உதவியும், பயிற்சியும் கொடுக்கப்பட்ட இஸ்லாமிய விடுதலை இயக்கம் கொலைக்கு உரிமை கோரியது. கடந்த மூன்று வருடங்களில் ஈரானால் ஊக்குவிக்கப்படும் குழுக்களால் துருக்கியில் நடாத்தப்பட்ட 150 இற்கு மேற்பட்ட கொலைகள், குண்டு வெடிப்புக்கள் ஆகியவற்றில் மும்குலின் கொலையும் ஒன்றாகும். தற்போது ஐரோப்பாவில் வசிக்கும் முன்னாள் ஈரானிய இராஜதந்திரி, ஈரான் ஒரு கொலை நிறுவனத்தை நடாத்துகின்றது என்று கூறுகின்றார்.

**தெஹ்ரானில் இருந்து சாந்தப்படுத்தும் வார்த்தைகள் வரினும், அரசால் ஊக்குவிக்கப்படும் வன்முறை, அராபிய இராச்சியங்களுக்கும், மேற்கு நாடுகளின் நிறுவனங்களுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரானிய அடிப்படைவாத முல்லாக்கள் ஆட்சிக்கு வந்த 14 வருடங்களில் அரச, தனியார் மற்றும் சமய மூலவளங்கள் யாவற்றையும் நாத்திகருக்கு எதிரான புனித யுத்தத்தில் ஈரான் பயன்படுத்தியுள்ளது. ''ஐரோப்பா முழுவதிலும் உள்ள ஈரானிய எதிர்ப்பாளரைக் கொலை பண்ணுதல் முன்னுரிமை பெற்றுவிட்டது'' என எழுத்தாளரும், பிரான்ஸ் நாட்டின் பயங்கரவாதத்தின் முன்னணி நிபுணருமான சேவியர் றோஃபர் கூறுகின்றார்.

ஒரு நாவல் எழுதியதற்காகச் சமயவாதக் கொலைத் தீர்ப்பின் கீழ் வாழும் பிரித்தானிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி, இவர்களின் மிகப் புகழ்பெற்ற இலக்காகும். ''சாத்தானின் வாசகங்கள்'' இஸ்லாமை நிந்தனை செய்கின்றது எனக் கூறி, அப் புத்தகம் தடை செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 24 மணியும் பாதுகாப்புடன் இருப்பதால் ருஷ்டி உயிருடன் இருக்கிறார். ஆனால் புத்தகத்துடன் தொடர்புடைய மற்றோருக்குத் தண்டத்தைக் கொடுத்துள்ளார்கள். புத்தகத்தின் இத்தாலிய மொழிப் பெயர்ப்பாளர் தனது வீட்டிற் கத்தியால் குத்தப்பட்டு அதிர்ஷ்டவசமாகத் தப்பிவிட்டார். ருஷ்டியின் ஜப்பானிய மொழிப் பெயர்ப்பாளர் தனது அலுவலகத்தில் கத்தியாற் குத்திக் கொல்லப்பட்டார்.

1979 ஆம் ஆண்டின் புரட்சிக்குப் பின்னர் முல்லாக்களால் தடைசெய்யப்பட்ட ஈரானியத் தேசியக் கட்சியில் துடிப்புடன் செயற்பட்ட பத்திரிகையாளரான ஹுமாயூன் முகாதம் என்பவரைக் கூறலாம். இவரின் சட்டத்திற்கு முரணான என்று கருதப்பட்ட செய்கைகளுக்காக மறியலில் வைக்கப்பட்டுச் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டார். 1988 ஆம் ஆண்டில் முகாதம் நாட்டைவிட்டு ஓடித் தனது நோக்கத்திற்காகச் செயற்படுகிறார். பலதரப்பட்ட கணிப்புகளின்படி 50,000 தொடக்கம் 150,000 அரசியற் கைதிகள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் ஜேர்மனியின் ஒஃபென் பெக்கில் உள்ள அவரின் தொடர் வீட்டு அறையினுள், இரு ஈரானியக் கொலைஞர்களால் முகாதம் தாக்கப்பட்டார். சத்தம் கேட்டு உதவிக்கு ஓடிய ஜேர்மன் அயலவரைக் கண்டு முகாதம்மின் கழுத்தை வெட்டுமுன் பயங்கரவாதிகள் ஓடிவிட்டனர். ஆறு மாதங்களுக்குப் பின்னர் ஈரானிய அரசாங்கத்தில் கொலைப்பட்டியலில் முகாதம்மின் பெயர் இரண்டாவதாக உள்ளது என ஜேர்மன் தொடர்புச் சாதனங்களால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தமது எதிரிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும், அப்பிரதேச முஸ்லிம்களைக் கொண்டு கொலையைச் செய்விக்கவும் கூடிய இஸ்லாமிய அடிப்படை வாதிகளின் ஆற்றலை இத்தாக்குதல்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஈரான் தனது சொந்த ஊழியரை உபயோகித்தாலும், அநேகமான பயங்கரவாத நடவடிக்கைகள், மேற்குலக நாடுகளின் கண்காணிப்பு அல்லது, சந்தேகத்துக்கு உட்படாத அதே பிரதேச இஸ்லாமியச் சமயவாதிகளாற் செயற்படுத்தப்படுகின்றன.

எஃப்.பி.ஐ. விசாரணை, மற்றும் புலனாய்வுத் துறையின் செயற்பாட்டுப் பகுதியின் முன்னால் தலைவர் ஒலிவர் றெவெலின் கூற்றை அநேக ஐரோப்பிய நாட்டுப் புலனாய்வு நிபுணர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதாவது: ''இஸ்லாமிய மற்றும் ஈரானிய ஊக்குவிப்பாலான பயங்கரவாத அச்சுறுத்தல், 70, 80 களில் நாம் சந்தித்ததைப் போலல்லாது, குறைந்தளவு கட்டமைப்பைக் கொண்டுள்ளது. எனவே, அதைக் கைப்பற்றுவது கடினமாயுள்ளது.''

## மிகப் பெரிய பயங்கரவாதத் தளம்

ஆயிரத்திற்கு அதிகமான ஈரானியப் புரட்சிகரக் காவலர்கள் நிலையாக நிறுத்தப் பட்டுள்ள ஆபிரிக்க நாடான சூடான், அண்மைக் காலங்களில் ஈரானியச் செயற்பாடுகளின் விரிவாக்கத்தினால் உலகத்தின் மிகப்பெரிய பயங்கரவாதத் தளமாக மாறியுள்ளது. சென்ற வருடத்தில் மட்டும், அமெரிக்க-எகிப்தியப் புலனாய்வுத் துறையினர் ஈரானால் நடாத்தப்படும் 30 பயிற்சி முகாம்களைக் கண்டு பிடித்துள்ளனர். அங்கிருந்து, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மத்திய கிழக்கு, ஐரோப்பா, மற்றும் அமெக்கா ஆகிய நாடுகளுக்கு ஆயிரக் கணக்கில் அனுப்பப்பட்டுள்ளனர்.

அறுபது வயதுடைய அடிப்படைவாதச் சமயப் போதகரான ஹசன் அல் துறாபி சூடானிய அரசின் பின்னால் இருக்கும் சக்தி வாய்ந்த ஒருவர். இவரின் தலைமையின் கீழ், இஸ்லாமைத் தாராளத் தன்மையுடன் விளக்கும் சபையான குடியரசுச் சகோதரர்களின் அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுச் சில சமயங்களிற் கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள். ஈரானிய உதவி கிடைப்பதனால், தென் சூடானில் கறுப்புஇனக் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் போர் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. 500,000 க்கு அதிகமான மக்கள் இப்போரிற் கொல்லப் பட்டுள்ளார்கள்.

''முழு அராபிய மத்திய கிழக்கிலும் ஓர் இஸ்லாமிய ஒழுங்கமைப்பை ஏற்படுத்தும் ஈரானிய நோக்கு, இனிமேலும் எட்ட முடியாத கனவு அல்ல'' என்று பேர்ளினில் உள்ள ஜேர்மன் சுதந்திரப் பல்கலைக்கழகத்தின் ஈரானியப் படிப்புக்கள் கல்லூரியின் பேராசிரியர் காலிக்கு துறான் கூறுகின்றார்.

அராபிய உலகத்துக்குத் தலைமை தாங்கும் சூடானில் வடக்கில் அமைந்துள்ள அயல் நாடான எகிப்து ஒரு முக்கிய இலக்காகும். உள்நாட்டு அடிப்படை வாதிகளுடன் ஈரானிய மற்றும் சூடானியக் குழுக்கள் செயற்பட்டு, அதிக எண்ணிக்கையான எகிப்திய அதிகாரிகளைக் கொலை செய்துள்ளார்கள். 1990 ஆம் ஆண்டு எகிப்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் றிஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற் அல்-மா கூப்பைக் கொலை செய்தவன், அநேகமாகச் சூடானில் பயிற்சி பெற்றிருப்பான். 1992 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அமெரிக்க நிறுவன அலுவலகங்கள், கெய்ரோவில் உள்ள இஸ்ரேலியத் தூதரகம் ஆகியவற்றின் மீது பயங்கரவாதத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்ட இரகசிய அடிப்படைவாதக் குழுக்களைச் சேர்ந்த 41 அங்கத்தவரை எகிப்தியக் காவற்றுறையினர் கைது செய்தனர். மற்றும், சென்ற நவம்பர் மாதம் கிறிஸ்தவ இலக்குகளின் மீதும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மீதும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட அடிப்படைவாதக் குழுவொன்றை எகிப்திய அதிகாரிகள் கைது செய்தனர்.

## தீயைத் தூண்டுதல்

மேற்குலக நாடுகளின் இலக்குகள் மீது ஈரானால் நெறிப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்குப் பாகிஸ்தான் ஒரு பெரிய மையமாக அமைந்துள்ளது. அமெரிக்கப் புலனாய்வுக் கருத்துப்படி, இஸ்லாமாபாத்தில் உள்ள ஈரானியத் தூதரகம், பயங்கரவாதத்தின் புற நிலையமாகச் செயற்படுகின்றது. புலனாய்வுத் தகவல்களைப் பெற்று, மேற்குலக இலக்குகள் மீதும், மேற்குலகத்தினால் ஆதரவளிக்கப்படும் அராபிய அரசுகள் மீதும் தாக்குதல்களை நெறிப்படுத்துகின்றது. ஈரான் ஆதரவு அளிக்கும் இஸ்லாமியப் புனிதப்போரை நடாத்துவோரின் குகையாக விளங்கும் லாகூரில் உள்ள ஈரானிய உபதூதரகம், பயங்கரவாதிகளுக்கு வெடிப் பொருள்களை விநியோகிப்பதாக அறியப்பட்டுள்ளது.

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர்ப் பகுதிக்குச் சுதந்திரமான முஸ்லிம் அரசை நிறுவப் போராடும் அடிப்படைவாதிகளுக்கு ஈரான் ஆயுதங்களும், பணமும் கொடுத்து வருகின்றது. காஷ்மீர் முஸ்லிம் மக்கள் அமுக்கப்படுவதாக எண்ணுவது உண்மையானாலும், வன்முறையையும், பயங்கரவாதத்தையும் ஊக்குவித்துப் புரட்சித் தீயை ஈரான் தூண்டுவதும் அதே போல் உண்மையாகும். 1991 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பாகிஸ்தானுக்கு வருகை தந்த ஈரானியப் புரட்சிவாதக் காவலர்களின் பிரதம தளபதி மோசேன் றிசாய், காஷ்மீரி முஸ்லிம் மக்களின் போராட்டத்திற்குத் தொடர்ந்தும் ஆதரவு அளிக்கப்போவதாகக் கூறினார்.

தஜிக்கிஸ்தானின் மக்களின் கூடுதலாக உள்ள சுனி முஸ்லிம்களின் நட்பைப்பெற ஈரான் முயற்சிக்கிறது. தனது நாட்டின் ஊடாக மசகெண்ணெய், மற்றும் ஏற்றுமதிப் பொருள்கள் கொண்டு செல்வதற்கு ஈரான் வர்த்தகப்பாதைகள் அமைத்துக் கொடுத்துள்ளது. ஷியா முஸ்லிம்களைக் கொண்டுள்ள ஈரான், சுனி முஸ்லிம்களைப்போல் நடிக்கும் சமயத் தலைவர்களையும், வர்த்தகர்களையும் தஜிகிஸ்தானுக்கு அனுப்புகின்றது.

ஜோர்தான், மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளில் உள்ள மிதவாத அரசுகளையும் தெஹரான் மறைமுகமாக ஆட்டம் காணச்செய்கின்றது. ஜோர்தானிய நாடாளுமன்றத்தின் மூன்றில் ஒரு பங்கைக் கட்டுப்படுத்தும் அடிப்படைவாதக் கூட்டணியின் ஓர் உறுப்பான இஸ்லாமிய மீளமைப்புக்கான இளைஞர் என்ற போரிடும் தன்மையுள்ள குழுவுக்கு, ஈரானிய உதவியுடன் பாலஸ்தீனியக் குழுவொன்று பணமும், ஆயுதங்களும் வழங்குகின்றது.

## "கெட்ட மனிதன், நல்ல மனிதன்"

அடிப்படைவாத விரிவாக்கத்தை எவ்வாறு கையாளுவதென்பதில், அநேகமான மேற்குலக அரசுகளுக்கு முரண்பாடான புத்திமதிகளே கிடைக்கின்றன. சில பகுப்பாய்வாளரின் கருத்துப்படி, ஜனாதிபதி ஹஷேமி றஃப்சஞ்ஜானி தலைமை தாங்கும் மிதவாதிகள் ஒரு புறமும், அயத்துல்லா கொமேனி தலைமை தாங்கும் தீவிரவாதிகள் மறுபுறமாகவும், ஈரான் பிரிக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு றஃப்சஞ்ஜானி பதவிக்கு வந்த பின்னர், அயத்துல்லா கொமெனியின் பத்துவருட ஆட்சியிலும் பார்க்கக் கூடிய ஈரானிய எதிர்ப்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். "இவ்வகையான நல்ல-மனிதன் கெட்ட – மனிதன் என்ற விளக்கம் தவறான வழியில் இட்டுச் செல்கின்றது; இவ்வாறான ஈரானிய உள்நாட்டுப் பிரிப்பு ஏற்றுக் கொள்ளப்படுமானால், இதுவும் மேற்குலகமக்களின் இலகுவாக எதையும் நம்பும் தன்மைக்கு, இன்னுமோர் உதாரணமாகும்" என்று காலித் துறான் கூறுகிறார்.

தெஹறானில் உள்ள மிதவாதிகள் நியாயத்தைக் கேட்பார்கள் என்ற மேற்குலகத்தின் நம்பிக்கை, ஈரானியப் பயங்கரவாதத்தை முறியடிக்க முனையும் எதிர்த்தாக்கத்தை மழுங்கடித்துவிட்டது. பிரித்தானியாவில் உள்ள சென்ற் அன்ற்றூஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேசத் தொடர்புகள் பிரிவின் தலைவரும், இலண்டனில் அமைந்துள்ள "முரண்பாடுகளும் பயங்கரவாதமும்" என்ற படிப்பின் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் போல் வில்கின்சன் கூறுகிறார்:- "ஈரானியப் பயங்கரவாதச் செயற்பாட்டிற்கு எதிரான தகுந்த பதிலடி இல்லாத பலவீனத்தால், அரசியல் விலை கொடுக்காமலே தனது பயங்கரவாத விளையாட்டைத் தொடரலாம் என்ற முடிவுக்கு ஈரான் வந்துவிட்டது."

இதே நேரத்தில், ஈரானிய எதிர்ப்பாளர்கள் சரண் அடைய மறுக்கிறார்கள். ஈரானிய மக்களின் மொஜாசிதீ இயக்கத்தின் சிரேஷ்ட அதிகாரியான முகம்மது முகாடிசீன், அமெரிக்க மக்கள் சபைப் பிரதிநிதிகளுக்குச் சென்ற ஏப்ரல் மாதம் கூறினார் "உள்நாட்டில் அரசின் அட்டூழியங்களுக்கும், வெளியே தமது செல்வாக்கை விரிவாக்குவதற்கும், மேற்கு நாடுகள் எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தடுக்கும் முகமாகவும், ஈரானின் பயங்கரவாதச் செயல்கள் பாரிஸ், ரோம், ஜெனிவா மற்றும் நியூயோர்க் ஆகிய நகரங்களிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஈரானுக்கு எதிராக ஆயுத, மற்றும் பெற்றோலிய, நெய் விற்பனைத் தடையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை ஏற்படுத்த வேண்டும்.''

பின்வருவன மேலும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளன.

✶ ஈரானுக்குள் செல்லும் உயர் தொழில் நுட்பத்தை நிறுத்த வேண்டும். உதாரணமாக, 1992 ஆம் ஆண்டில் ஈரானுக்கு உயர் ரகக் கருவிகள் விற்பதற்கு ஜேர்மன் நிறுவனங்களின் ஏற்றுமதிவிண்ணப்பங்களில் 80 சதவீதமானவை அனுமதிக்கப்பட்டன. நீர் மின் வலுத் திட்டத்திற்குப் பல நூறு மில்லியன் டொலர் உதவி ஜப்பான் வழங்குகின்றது.

பிரெஞ்சுப் பொருள்கள் வாங்குவதற்கு ஈரானுக்குக் கடனாக 360 மில்லியன் டொலர் கொடுப்பதற்குப் பிரான்ஸ் உத்தரவாதம் வழங்கியது. 460 மில்லியன் டொலர் பெறுமதிக்கு 17 வருடக் கடன் வழங்க உலக வங்கி அனுமதி அளித்தது. இது ஈரான் தனது சொந்தப் பணத்தை ஆயுத உற்பத்திக்கு உபயோகிக்க இடம் கொடுக்கின்றது எனப் பற்றிக் குளோசன் கூறுகிறார்.

ஈரானுக்கு எதிராக மேற்குலக நாடுகள் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுப்பது இலேசானதல்ல. பல காலமாக இந் நாடுகள் ஈரானைச் சாந்தப்படுத்தி, அதனுடன் வழமையான வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளன. எனினும், 1991 ஆம் ஆண்டு ஈராக்கிற்கு எதிராக அமைக்கப்பட்ட பன்னாட்டு ஒருமைப்பாடு ஒன்று சேர்ந்த முன்னணி ஒன்றை ஈரானுக்கு எதிராக அமைப்பது ஏற்புடையது எனலாம். மேற்குலகத்தின் பாதுகாப்பும், வெளிநாடுகளில் வசிக்கும் தைரியமான பல்லாயிரக்கணக்கான ஈரானிய மக்களின் உயிர்களும் பணயமாக உள்ளன.

எழுதியவர்: **ஸ்டிவ் எமேசன்**

ரீடேஸ் டைஜஸ்ட்
நவம்பர் 1993.

# உனது அயலவனை வெறுப்பாயாக

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

ஆமீனியரும், அசெர்பைஜானியரும் கடந்த ஆறு ஆண்டுகளாக ஒருவர் கழுத்தை மற்றவர் நெரிப்பதில் ஏடுபட்டு வருகிறார்கள். அவர்களின் போரானது, பொஸ்னியாவின் குரூரமான முரண்நிலையின் அளவுக்குவளர்ந்துள்ளது. இன சங்காரத்தைப் பொறுத்தவரை கங்கேரியக் குடா நாட்டினரிலும் இவர்கள் தெளிவான முடிவு கொண்டவர்களாகத் தோற்றுகிறார்கள். இருந்தபோதிலும் சர்வதேசிய கலாசாரத் தொட்டிலான தொடர்புச் சாதனங்களிலிருந்து விலகி நிற்பதால் இவர்கள் பற்றி உலகம் குறைவாகவே கேள்விப்பட்டுள்ளது.

துப்பாக்கி ரவைகளின் குழந்தைகளாய் மாறி இவர்கள் இவ்வளவு வெறுப்புணர்ச்சியைக் கொண்டிருப்பதேன்? ஆயிரமாண்டுகளின் குருதிப் போர் வரலாறு இதற்கான விடையைத் தருகிறது. ஆனால் இன்றையன போர் பற்றி விளக்கம் பெறவேண்டுமானால் 1987 ஆம் ஆண்டை நோக்கி நாம் பின் செல்லவேண்டும். 3.3 மில்லியன் சனத்தொகை கொண்ட ஆமீனியாவும் 7 மில்லியன் சனத்தொகைகொண்ட அசெர்பைஜானும் ருஷ்ய ஐக்கிய சோவியத் ஒன்றியத்தின் ஒரு கூறாக அமைந்திருந்தன. ஆமீனியரையும் குடிமக்களாக (188,000 மக்கள் மட்டும்) கொண்டதான நகர்னோ-காறாபக் பிரதேசம் அசெர்பைஜானுள் அடங்கியிருந்தது. ஆனால் மேற்குறித்த பகுதி 7 கிலோ மீற்றரே கொண்ட ஒடுங்கிய மலைமேட்டினால் ஆமீனியாவிலிருந்து பிரிவுண்டிருந்தது.

திருவாளர் கோபச்சேவ் ருஷ்ய சோவியத் ஒன்றியத்தின் தலைவராய் விளங்கிய போது, சக்தி

## காக்கேசஸ் பிரதேசத்தில் சண்டைக்கு ஒரு காரணம் தேவை

வாய்ந்த ஆமினியர் பலரையும் உள்ளடக்கிய அவரின் ஆலோசனைக் குழு, பொதுவுடைமைக் கட்சியினது மத்திய சபையை நகர்னோ- காறாபக் விடயம் பற்றி மீளாய்வு செய்யும்படி வற்புறுத்தியது. அக் காலத்தில் மட்டுமன்றி, இன்றும் பதவி வகிக்கும் இராணுவப் பொதுக்குழுவுங்கூட, அசெர்பைஜானின் வலிமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு ஆமீனியருக்கு ஆதரவாய் இருந்துவருவது தீவிரமான வல்லுணர்ச்சி. இந் நிலையிலே காக்கேசசில் குமிழியிடத் தொடங்கியது. அறிவுசார் எதிர்பார்ப்பானது ஆமீனியாவை இறுகப்பற்ற, கொடுங்கிளர்ச்சி சார் சீற்றம் அசெர்பைஜானை ஆக்கிரமித்தது. உடனடியாகவே இரு நாடுகளிடையேயும் விரோதம் வெடித்து முழு அளவுப் போராய் மூண்டது.

இப்போரில் ஆமீனியர் வெற்றி பெற்றனர். இவ் வெற்றியானது அமெரிக்க ஐக்கிய நாட்டிலும், மேற்கு ஐரோப்பாவிலும் செல்வாக்குடன் வாழ்ந்து வரும் ஆமீனியருக்கு வியப்புக் கலந்த அற்புதமாயிற்று. ஆமீனியப் படைகள் நகர்னோ-காறாபங்கைக் கைப்பற்றியதோடு, கிழக்கு அசெர்பைஜானையும் நிர்மூலமாக்கியது. அனுதாபத்தோடு கூடிய ருஷ்யத் தளபதிகளின் தர்க்கரீதியானதும், போர்த் தந்திரம் சார்ந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான ஆதரவு, லெபனானில் பெற்ற போர்ப் பயிற்சி, வெளிநாடுகளில் வாழும் ஆமீனியரின் பண உதவி என்பன ஆமீனியருக்குக் கிடைத்தன.



அதேவேளை அசெர்பைஜானைப் பொறுத்தவரை படையினரிடையே காணப்பட்ட பிளவுகளால் ஏற்பட்ட ஸ்தம்பித நிலையும், அரசியல் தலைமையிற் காணப்பட்ட குழப்ப நிலையும் அதன் தோல்விக்குக் காரணமாயின. யுத்த நிறுத்தத்துக்கான ருஷ்யாவின் சமரசமுயற்சி முடிவடைய இன்னும் ஒரு மாதம் வரைதான் உள்ளது. அண்மையில் தலைவர் பொறிஸ், ஆமீனியத் தலைவர் லெவன்ரிடர் பற்றோசியனையும், அசெர்பைஜான் தலைவர் செய்டர் அலிஜெவ்வையும், ஜோர்ஜியாவின் தலைவர் எட்வாட் செவட்சேயையும் ( ஜோஜியாவின் எல்லைக் கோட்டுப் பகுதி, மேற்குறித்த இரு நாடுகளோடும் பங்காளியாய் அமைந்ததாகும்) சந்தித்துப் பேசினார்.

நகர்னோ-காறாபக் ரோமர் காலத்திலேயே ஆமீனியர் வாழ்ந்த பிரதேசம். இங்குவாழும் மக்கள் தம்முடைய முன்னோரே முதன்முதல் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டவர்கள் என்று உரிமை பாராட்டுகிறார்கள். யூதர்களைப் போலவே ஆமீனியரும் உலகெங்கும் செறிந்து வாழ்கின்றனர். இவர்கள் தங்கள் இனத்தினுள்ளேயே மணம் புரிந்து கொள்வதன் மூலம் தங்களின் இன அடையாளத்தைப் பேணி வருகிறார்கள். இவர்களிற் பெரும்பாலானோர் இன்று தமது நாட்டுக்கு வெளியிலே வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதே. அசெர்பைஜானியர் துருக்கிய பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். இவர்கள் தங்களை ‘ அசெறிகள் ’ என்று அழைத்துக் கொள்கிறார்கள். இஸ்லாமின் கிளை மதமான ஷியாபிரிவினராய் உள்ளனர். ருஷ்யா, ‘ அசெறிகளை ’ மட்டுமன்றித் தனது நாட்டில்வாழுகின்ற உஸ்பெக்கியர், கசாக்கியர், தாத்தாரியர் ஆகிய துருக்கிய பரம்பரையினர் அனைவரையுமே வெறுக்கிறது. துருக்கியர் 900 ஆண்டுகளுக்கு முன்பு பார்சியர், அராபியர், பைசாந்தியப் பேரரசர் ஆகியோரை வென்று அந்த நாடுகளிலேயே குடியேறியவர்கள். 200 ஆண்டுகளுக்கு முன்பு ருஷ்ய சார் அரசன் இன்றுள்ள அசெர்பைஜானை ஆதிக்கம் கொண்டு தன் ஆட்சியை விரிவுபடுத்தினார். பின்பு அதன் மூன்றில் இரு பகுதி திருப்பி அளிக்கப்பட்டது; இதன் பயனாகப் பாரசீகத் (ஈரான்) திற்குச் சென்று பல ‘ அசெறிகள் ’ அங்கு வாழத் தொடங்கினார்கள். இன்று ஈரானின் 17 சதவீதம் அசெறிகளே.

1828 இல் பாரசீகத்தின் மாகாணங்களில் ஒன்றாகிய எரிவன் ருஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. அதுவே இன்றுள்ள ஆமீனியா. ஆரம்பத்தில் இங்கு துருக்கியர் பெரும்பான்மையினராய் வாழ்ந்த போதிலும் அவர்களில் பலர் ஒட்டமன் துருக்கி எல்லைக்குச் சென்று அங்கு வாழலாயினர். ஆமீனியர் மிகப் பெரும்பான்மையினராகக் கிழக்குத் துருக்கியில் வாழத் தொடங்கிய காலத்தில் மீண்டும் ருஷ்யா துருக்கியின் மீது படை எடுத்தது. 1855 இலும் பின்னர் 1877 இலும் கிரிமியப் போர் நிகழ்ந்தபோது ஆமீனியர் கிறிஸ்தவப் படையினரை வரவேற்றனர். ஆனால், ருஷ்யத் தலைமைத் துருக்கியை (கிழக்கு) இணைக்கும் முயற்சியை மேற்கொள்ளாமையால், அங்கு வாழ்ந்த ஆமீனியர் தமக்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தால் வடக்குப் பகுதிக்கு ஓடி அங்கு குடியேறினர்.

துருக்கியரும் கேட் இனத்தினரும் காலப்போக்கில் தமது தொடர்புகளை அறுத்துக் கொண்டும், பழைய மரபாசாரங்களைக் கைவிட்டும், மதப் பிரிவினைக்குள்ளாகியும் விட்டதன் பயனே இன்று எழுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது இனத்தூய்மையாக்கச் செயற்பாடுகள் தத்தம் இடங்களை மாற்றிக் கொள்ள நேர்ந்ததினால் கொடுங்கொலைகளுக்கும், அகதி வாழ்வுக்கும் இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டது. இனத்தூய்மை நடவடிக்கைகளால் கொலைக்குள்ளானவர் இஸ்லாமியத் துருக்கியர் அல்லர், கேட் இனத்தினரே என்பதும் கவனத்திற்கொள்ள வேண்டியதாகும். அந்தப் பயங்கரக் கொடுமைகளும், தீமைகளும் என்றுமே மறந்துவிடக் கூடியவையல்ல. ஆமீனியர் தங்கள் முன்னைய உரிமை கொண்டு தமக்குக் கூடுதலான பிரதேசம் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

ருஷ்ய சார்களின் ஆட்சியின் கீழ் ஐரோப்பிய பாணியிலான தேசியம் ஆமீனியரிடையே பரவியதுபோல அசெறிகளிடையே பரவவில்லை. இன்றைக்கும் ஈரானில் பார்சியருடைய மேலாதிக்கத்திற்கு எதிர்ப்பில்லை. இருப்பினும் ஈரானியத் தலைவர் றாப்சன்ஜானி அசெர்வைஜானின் தலைநகரான பாகுவிற்கு அண்மையில் விஜயம் செய்தபொழுது, அங்கு கிறிஸ்தவரிடையிலும், அசெறிகளிடையிலும் நிலவிவந்த எதிர் நிலையான உணர்வுகளினால் விளையக்கூடிய ஆபத்தை உணர்ந்து கொண்டார். ஷியா மத நம்பிக்கையினால் பிணைப்புற்றிருந்த ஈரானுக்கு இப்பிளவு தீங்கு விளைவிப்பதாகும் என்பது அவருக்குத் தெரிந்தது. ஈரானிய தேசியவாதிகள் 1890 களில் கிழக்குத் துருக்கியில் மேற்கொண்ட மிருகத்தனமான எழுச்சியின் போது அவர்கள் ஐரோப்பாவிலிருந்து தமக்கு உதவிகிட்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த உதவி கிடைக்காததால் அவர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகித் தங்களின் அழிவிற்குத் தாங்களே காரணராயினர். முதலாவது உலக யுத்தகாலத்திலும் ஒட்டமன் ஆமீனியர்கள் கிளர்ந்தெழுந்து ருஷ்யாவிற்குச் சாதகமாயும் அதற்குப் பயன்படத் தக்கதாயும் நகரங்களைக் கைப்பற்றினர். இவ்வாறு கிறிஸ்தவச் சார்பும் ருஷ்யாவோடு இணைவும் கொண்டிருந்ததாலேயே ஆமீனியா மீது ருஷ்யாவிற்குச் சார்பும், அனுதாபமும் மிகுதியாக உண்டாகின எனலாம். ஐக்கிய அமெரிக்காவும் ஆமீனியருக்கு ஆதரவு காட்டி வருகிறது. கிறிஸ்தவ ஐரோப்பாவும் அவர்களுக்குச் சார்பாகவே உள்ளது. மொழி மதம் என்ற அடிப்படையில் துருக்கியின் ஆதரவு ஓரளவு அசெர்பைஜானுக்கு உண்டு. நேட்டோவின் அங்கத்துவ நாடு (Nato) என்ற வகையில் ஆமீனியாவின் வெற்றிக்கெதிராகத் துருக்கி குரலெடுத்தாலும், ருஷ்யாவின் சாமானியமான மக்கள் இந்த முரண் நிலைகளைக் கண்டு அலுப்புக் கொண்டிருப்பதாகவே தோற்றுகிறது.

இதனை நிறுத்த வேண்டும் என்று ருஷ்ய அரசின் இரு சபைகளும் ஒருமனதாகக் கோரிய போதிலும் தலைவர் யெல்சினும், அவரின் வெளிநாட்டமைச்சினரும் நடுவு நிலையே வகித்தனர். ஆனால், மொஸ்கோவில் உள்ளவர்களோ தாங்கள் பழைய ருஷ்ய ஒன்றியம் என்றேகருதி, ஆமீனிய - அசெர்பைஜான் விவகாரத்தில் ருஷ்யாவே தலையிட்டுத் தீர்வுகாண்பதை விரும்புகிறார்கள். துருக்கியோ சர்வதேசிய அமைதிகாக்கும் படையின் தலையீட்டினை எதிர்பார்க்கின்றது.

அடுத்து என்ன நடக்கும்? சிறுபான்மையோருக்குத் தமது நாட்டில் சுயநிர்ணய உரிமை பெற வாய்ப்பு உண்டா? அல்லது, ஜனநாயகப் பெரும்பான்மையினர் ஆட்சிக்குட்பட்டு வாழும் நிலைதான் ஏற்படுமா? அயர்லாந்தும், இலங்கையும் எதிர்கொள்ளும் அதே பிரச்சினைதான் இங்கும் நிலவுகிறது. காக்கேசஸ் பிரதேசத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பகுத்தறிவுக்கு இடமில்லாது போய்விட்டதால், போரும் பிரச்சினைகளும் அங்கு தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.

ஏசியாவீக், நவம்பர் 10, 1993

## வாணிகச் சிட்டு வாசிக்கும் கருவி

வணிகச் சீட்டுக்களை (Business Cards) பரிமாறிக் கொள்ளுதல், வியாபாரப் பிரமுகர்களிடையே ஒரு பொதுவான வழக்கமாகும். ஆனால், இவர்கள் சேகரிக்கும் சீட்டுக்களில் பெரும்பாலானவை எறியப்படுகின்றன அல்லது தொலைந்து போகின்றன. இதனை ஒழுங்குபடுத்துவதற்கு, இதோ ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது காட் கிறாபர் (Card Grabber) எனப்படும் காவிச் செல்லக் கூடிய ஒரு ஸ்கானர் ஆகும். இது வர்த்தகச் சீட்டில் உள்ள தகவல்களை ஒளியியல் ரீதியாக வாசித்தறிந்து பின்னர் அத்தகவல்களை டிஜிட்டல் குறிகளுக்கு மாற்றி ஒரு தனியாட் கணனியில் (பிசி) சேமிப்பதற்காக அனுப்புகிறது. அங்கு விபரங்கள், அவர்களது தனிப்பட்ட கோப்புகளிற் சேர்க்கப்படும். இது பசுபிக் கிறேஸ் டெக்னோலாஜிஸ் எனும் நிறுவனம் ஒன்றினால் சந்தைக்கு விடப்பட்டுள்ளது. இச்சாதனம் சாளரங்களை அடிப்படையாகக் கொண்ட (Windows Based) கணனிகளில் பாவிக்கக் கூடியது. தனியாட் கணனியுடன் சமாந்தர போர்ட்டினால் தொடுக்கப்படுகிறது. இது 9 x 4 சென்ரிமீட்டர் அளவும் அரைக் கிலோ கிராமிலும் குறைவான எடையும் கொண்டது. விலை 325 அமெரிக்க டொலர் மட்டுமே.

நியூஸ்வீக், நவம்பர் 8, 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உஸ்பெகிஸ்தான்

# பேரரசு முடிவுற்றபின் புதிய வாழ்வு

— எழுதியவர் —
தாஷ்கென்ற் நகரிலிருந்து
ஜோண் கொஹன்

அன்று ஞாயிற்றுக் கிழமை; உர்குற் நகரம். மத்திய உஸ்பெகிஸ்தானில் ஒரு புகையிலை வியாபார மையம். புழுதி படிந்த வீதிகளில் சந்தைக்குப் போகும் மக்கள் நிறைந்துள்ளனர். மஞ்சள் தேன்துளி, முலாம் பழங்கள் மலை போலக் குவிந்துள்ளன. கூவி விற்போர் அருகில் அமர்ந்துள்ளனர். சிலர் உடைந்த 'ட்றக்' வண்டிகளிலிருந்து செம்மறிக் குட்டியின் விலா இறைச்சியைக் காட்டி விற்பனை செய்கின்றனர். எங்கு பார்த்தாலும் கட்டடங்கள் எழுகின்றன. புதிய வணிக நிலையங்கள் வில்வளைவு நடைவானப் பந்தலுடன் கூடியனவாய் உயர்ந்து ஓங்குகின்றன. மனங்கவர் உலோகத் தகடுகளால் அலங்கரிக்கப்பட்ட குவி மாடங்களும், செங்கட்டியாலான அராபிய வண்ணச் சித்திர வேலைப்பாடுடன் கூடிய பக்கச் சுவர்களும் உள்ள கட்டடங்கள் முன்னை நாள் சோவியத் ஆட்சி யுகச் சின்னங்களான கவர்ச்சியற்ற கடை முன்றில்களின் இடத்தைப் பிடித்து மிளிர்கின்றன. சுறுசுறுப்பாகக் காணப்படும் அப் பகுதியை உயர் தளத்திலிருந்து பார்வையிடும் மாநில ஆளுநர் புலத் அப்துரக்கமனோவ் மகிழ்ச்சிப் பெருக்குடன் ஒப்பிடுகிறார். ''ருஷ்யாவில் எல்லோரும் அரசியலில் அமோக ஈடுபாடு கொண்டிருக்கையில், இங்கு உஸ்பெகிஸ்தானில் நாம் அனைவரும் கருமமே கண்ணாயிருக்கிறோம்''.

இப்புதிய மத்திய ஆசிய தேசிய இனம் 22 மில்லியன் மக்களைக் கொண்டது. பிற முன்னைநாள் சோவியத் குடியரசுகளை விழுங்கும் அரசியல், பொருளாதாரக் குழப்பநிலை இவர்களைத் தீண்டவில்லைப் போலும், அது வெளிப்படையாகத் துலங்குகிறது. ருஷ்யாவில் 1991 ஆம் ஆண்டு மட்டத்திலிருந்து ஆள் வீத வருமானம் 59 வீத விழுக்காடு அடைந்தபோதிலும், உஸ்பெகிஸ்தானில் அதே ஆண்டு மட்டத்திலிருந்து ஆ. வீ வருமானம் 112 வீதம் உயர்ந்துள்ளது. 1992-ல் அஸர்பைஜான் மாநிலத்தில் குற்றங்கள் 44 வீதம் பெருகின, ஆனால் உஸ்பெகிஸ்தானில் அது 6 வீதம் மட்டுமே அதிகரித்தது. புதிய மத்திய ஆசிய நாடுகள் நான்குடனும் எல்லைத் தொடர்புள்ள உஸ்பெகிஸ்தான், அவைகளுக்குள் அதிக சனத்தொகையை உடையது. நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட கிழக்குத் திசை மூலையின் நவீன நுழைவாயிலாகி விட்டது. இங்கு சுரங்கம் தோண்டப்படாமல் பெருமளவு தங்கம், யுரேனியம், விலைமதிப்பற்ற பிற உலோகங்கள், எண்ணெய், எரிவாயு ஆகிய படைகள் நிலத்துக்கடியில் உள்ளன. உலகின் மூலவளங்கள் செழுமை மிக்க பகுதிகளில் ஜப்பானிய, மேற்றிசை நாடுகளின் வர்த்தக நலன்களின் கொடுங்கரங்களால் தீண்டப்படாதிருக்கும் பெருமையுடையது. மேலும் பழைய சோவியத் பேரரசின் தென் விளிம்பில், ஜோர்ஜியா முதல் தாஜிகிஸ்தான் வரை பரந்து கிடக்கும் பிறை வளைவான நெடிய பிரதேசத்தில் உள்நாட்டுப் போரும், பிரச்சனைகளும் செழித்திருக்கையில் உஸ்பெகிஸ்தான் மட்டும் அமைதி குடிகொண்ட பாலை நிலப் பசுந்தரை போல எழிலுடன் நிற்கிறது.



கைவண்ணம் மிக்க பொருள்கள் எளிதில் கிடைக்கின்றன: ஆனால் தொலைக்காட்சிப் பெட்டிகள் அரியவை.

உஸ்பெகிஸ்தானின் உறுதிநிலைக்குக் காரணம் ஒரு மனிதனின் 'இரும்புக்கர'க் கொள்கைகளாகும்; அவர்தான் பழைய பொதுவுடைமைக் கட்சித் தலைவரான இஸ்லாம் கரிமோவ்; உஸ்பெக் வரலாற்றில் முதலாவது போட்டியிட்ட தேர்தல் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்தபோது வாக்காளர்களின் அபரிமிதமான ஆதரவைப் பெற்றுத் தேர்வுற்றவர். முன்னை நாள் சோவியத் ஆசியக் குடியரசுகளில் முளை கொள்ளும் புதிய வகை சர்வாதிகாரத் தலைவரின் அவதாரம் 55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



வயதினரான கரிமோவ். பயிற்சியால் அவர் ஒரு பொருளியலறிஞர் அரசாங்கத்தில் அவருக்குக் கிடைத்த முதல் அனுபவம். நிதி அமைச்சராயும், மாநில அரசின் திட்டமிடல் குழுவின் தலைவராயும் இருந்தபோது கிடைத்தது. அவரது அரசியலில் அதிர்ஷ்டம் ஓங்கியது. மிகைல் கோர்பச்சேவ் காலத்திலாகும். ஊழல் குற்றம் அலைமோதிய போது, துட்டரைத் தொலைத்து உள்ளே தூய்மையோங்கச் செய்யும் பொறுப்பில் அக் குடியரசின் பொதுவுடைமைக் கட்சி முதற் செயலர் பதவியில் அமர்த்தப்பட்டார் கரிமோவ். 1991 இல் மொஸ்கோவில் நடந்த சதித் திட்டம் (வல்லடி) வெற்றி பெறாவிடினும் பொதுவுடைமை உள்ளே வெடிப்புற்றது. அவ்வேளையில் கரிமோவ் சாமர்த்தியமாகக் கட்சி அமைப்பை ஒரு மக்கள் ஜனநாயகக் கட்சியாக மாற்றியமைத்தார். மார்க்சீயக் கருத்தியல் கட்டுமான (ஐடியோலோஜி) த்துக்குப் பதிலாகக் கூடிய குடிசார்ந்ததும், தேசியப் பண்புடையதுமான அரயற் கோட்பாடு ஒன்றைச் சேர்த்துக் கொண்டார்.

இப்பொழுது மாநில ஜனாதிபதியாயுள்ள அவர் உஸ்பெகிஸ்தானை ஒரு நவீன மதச் சார்பற்ற அரசாக்க முனைகிறார். துருக்கியை முன் மாதிரியாகக் கொள்கிறார். இது ஒரு கடினமான (சர்க்கஸ்) கயிற்றில் நடக்கும் வித்தையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் ஐரோப்பிய வணிகர் ‘பெரிய பட்டுப்பாதை’ என வரலாற்றறிஞர் புகழும் வியாபாரப் பாதை வழியே சீனா சென்ற காலத்தில் தாம் கண்ட சமார்க்கண்ட் நகரச் சந்தைகளின் செல்வச் செழிப்பைக் கற்பனைக் கதை எனக் கருதும் அளவுக்கு வானளாவப் புகழ்ந்தார்கள். அக் காலத்தில் அது இஸ்லாமிய நாகரிகத்தின் தலையாய மையமாகத் திகழ்ந்தது. இப்போது மத்திய ஆசிய முஸ்லிம்களுக்கு ஒரு முக்கிய யாத்திரைத் தலமாயும், செழிப்பு மிக்க பிரதேசத் தலைநகராயும் இலங்குகிறது. கரிமோவ் இந்தத் தேசிய மரபுரிமையைப் பயன்படுத்த முனைந்துள்ளார். 14 ஆம் நூற்றாண்டில் திகழ்ந்த தமர் லேன் என்பானைத் தேசிய மாவீரனாக்க முற்பட்டுள்ளார். அவன் புராதன உலகின் பெரும் பகுதியை வெற்றி கொண்டவன்; அதனால் பொது உடைமைவாதிகள் அவனை இரக்கமற்ற கொடுங்கோலன் என இகழ்ச்சியுடன் வருணித்தனர். இன்றோ அவன் குதிரை மீது அமர்ந்த மாவீரானகச் சிலைவடிவில் தலைநகரான தாஷ்கென்ற் நடுச் சதுக்கத்தில் நிமிர்ந்து நிற்கிறான். அவ்விடத்தில் முன் இருந்த மார்க்ஸின் சிலை அகற்றப்பட்டு விட்டது.

**இம்மத்தியாசிய நாடு இரும்புக் கரங்களால் ஆளப் படுகின்றமையால், பிற சோவியத் குடியரசுகளின் கதியை அடையாமல் தப்பியது.**

முஸ்லிம் அடிப்படைவாதம் என்ற தொற்றுநோய் பரவாமல் தடுக்கக் கரிமோவ் பெரிதும் முயல்கிறார். மத்திய ஆசிய இஸ்லாமின் ஆன்மீக மையமாக வழிவழியாகத் திகழ்ந்த நாட்டில் இது கடினமே. பொதுவுடைமை வாதிகளால் கடுமையாக நசுக்கப்பட்டிருந்ததால் தீவிர வாதப் போக்குடைய இஸ்லாமிய வகைகள் மீண்டும் தலைதூக்குகின்றன. ஈரானிய புரட்சியும், ஆப்கானிஸ்தானத்தில் முஸ்லிம் புரட்சியாளர் ஈட்டிய வெற்றியும் அங்குள்ளாருக்கு உற்சாகமளித்துள்ளன. அரச அங்கீகாரம் பெற்ற நிறுவன அமைப்புடைய சமயத் தொடர்புகளை வளர்த்துக்கொண்டும், பள்ளிவாசல்களைத் திறந்துகொண்டும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கட்சியின் மீது தடையுத்தரவு பிறப்பித்துள்ளார் கரிமோவ். பிறதீவிர சமய அரசியற் குழுக்களும் அமைதியற்ற ஃபேர்கானா பள்ளத்தாக்கில் சுதந்திரமான இஸ்லாமிய காவற்படைக் குழுக்களை அமைக்க முயன்ற சமயம் தீவிர வாதிகளும் கடும் நடவடிக்கைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். சமார்க்கண்ட் பிரதேச ஆளுநர் அப்துரக்மனோவ் கூறுகிறார்: ‘‘பொதுவுடைமை, இஸ்லாம் அடிப்படை வாதங்கள் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே என்பது எமது கணிப்பு, ஆனால் நாம் சமயத்தலைவர்களுடன் பள்ளிவாசலுக்குப் போய்ப் பிரார்த்தனையில் கலந்து கொள்கிறோம், சமயத்தை உற்சாகப்படுத்துகிறோம். அவர்கள் எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிகிறார்கள்.

ஜனாதிபதியை விமர்சிப்போர் பலர். அவர்கள், அவர் சோவியத் முறையிலான ஓர் ஆட்சியை உஸ்பெகிஸ்தானில் புகுத்த முனைகிறார் எனப் பழி சுமத்துகின்றனர். ஒரு மேற்கத்தைய இராஜதந்திரி அதனை உண்மை என்று குறிப்பிடுகிறார். பெயர்கள் மாறியுள்ளன. பழைய ஆட்களே பொறுப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இன்று உஸ்பெக் இனத்தவருடன் பேச்சுக்கொடுத்தால் நாம் அறியவருவது, உள்ளூர்ப் பொதுவுடைமைத் தலைவர்கள் எப்பொழுதும் மொஸ்கோவிலுள்ள ருஷ்யர்களே நிறைந்த ஆட்சிபீடத்துக்கும், அதன் இலட்சியத்துக்கும் வெறும் வாய்ச் சொல்லில் மட்டும் விசுவாசமுள்ளவர்களாயிருந்தனர். இதற்குப் பதிலாக அவர்கள் ஆரவாரமின்றிக் கட்சியின் தலைமை என்ற சங்கிலித் தொடரை அடிமுதல் நுனிவரை ஒருவிதமான படிமுறையமைப்பில் வகுத்துக் கொண்டனர், இஸ்லாமிய மரபு — வழிச்சமுதாயத்திற்கு ஏற்றவாறு பிரதேச அரசியல் மரபுகளுக்கு விசுவாசமுள்ளவாறு ஸ்தானங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் படிமுறைக்கிரமமாய் இருக்கும்.

கரிமோவ் பல்கட்சி ஜனநாயகத்தை நோக்கி வேகமான மாற்றம் ஏற்படுவதைத்தடுத்து நிறுத்தியுள்ளார். ஜனநாயக எதிர்க்கட்சிக் குழுக்களுக்கும், அடிப்படை மத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகளுக்கும் எதிராகக் கடுமையான போக்கை அனுசரித்து வருகிறார். தமது சொற்கேட்டு நடக்கச் செய்த பாராளுமன்றத்துக்கு முன் உரையாற்றும் போது, ''ஓராயிரம் பேருக்கு வாழ்வு கொடுக்கும் பொருட்டு ஒரு நூறு மூளைகளை அழுத்தி நேர் செய்யச் சித்தமாயுள்ளேன்'' (சலவை செய்த ஆடையைத் தோய்த்துச் சமன் செய்வது போல) ''இப்படிக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் காரணம், சென்ற 1992 இல்தஜிகிஸ்தானில் ஜனநாயக குழுக்களும், இஸ்லாமிய அடிப்படை வாதிகளும் ஒன்று சேர்ந்து, சோவியத் உடைவுக்குப் பின் உதித்த தம் நாட்டு அரசாங்கத்தை வீழ்த்திப் புதிய அரசியல் உள்நாட்டு யுத்தம் ஒன்றை ஏற்படுத்தியமையாகும். முன்னைய சோவியத் ஒன்றியத்தில் நிகழ்ந்த வேறு எப்போராட்டமும் இவ்வளவு உயிர்களைக் குடிக்கவில்லை. மேனாட்டு மனித உரிமைக் குரலெழுப்புவோர் இதனைச் சாக்கிலிட்டுச் சின்னஞ்சிறு எதிர்க் குழுக்களை இரும்புக் கரங்களால் நசுக்கிவிடும் போக்கை கரிமோவ் அரசாங்கம் கைவிடவேண்டும் என்றும், உஸ்பெக் பாதுகாப்புப் படையினர் விதிகளில் மாறுகொள் கருத்தாளர்களை அடித்து உதைப்பதை நிறுத்தவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர். ஒருமுறை நாடகபாணியில் அயற்பிரதேசமான கைர்ஜிஸ்தானில் ஒரு மகாநாட்டில் அமர்ந்திருந்த மூன்று ஜனநாயக வாதிகள் கடத்திக் கொண்டு செல்லப்பட்டனர்.

மனித உரிமைவாதிகளின் விமர்சனங்களால் தடைப்படாமல், கரிமோவ் ஒரு கடுமையான தந்தை என்ற பிரதிமையோடு இரக்கமும் காட்டவல்லவர் என்ற படத்தையும் பிரதிபலிக்க முயல்கிறார். பெரிய அரசியல் விசாரணையில் குற்றவாளிகளாகக் கண்ட எதிர்க்கட்சியினரது பாரிய குற்றங்களை மன்னித்தருளியுள்ளார், அக்குற்ற வரிசையில் ஜனாதிபதியை நிந்தித்தமையிலிருந்து, அதிகார துஷ்பிரயோகம் வரை அடங்கும். உஸ்பெகிஸ்தான் தனது பிரஜா உரிமைச்சட்டங்கள் பால்ரிக் கடற் பிரதேச குடியரசுகளின் குடியுரிமைச் சட்டங்களிலும் தாராளமானவை என உரிமைபாராட்டுகின்றது: அச்சட்டம் காரணமாக அங்கு வதியும் சனத்தொகையில் சுமார் 8 வீத ருஷ்ய மொழி பேசும் சிறுபான்மையினர் இப்போது அமைதியுற்று இருக்கின்றனர் என்று உரிமையுடன் சுட்டிக்காட்டுகின்றனர். புதிய அரசியல் யாப்பு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கரிமோவ் விரைவில் பல்கட்சித் தேர்தல்கள் நடாத்தப்போவதாக அறிவித்துள்ளார். அவரது ''மக்கள் ஜனநாயகவாதிகள்'' கட்சி தேர்ந்தெடுத்த சில சிறு எதிர்க்கட்சிக் குழுக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கும். ஜனாதிபதி எதிர்க்கட்சிகள் முன்வைத்த பிரதான அம்சங்களைத் தனது கொள்கை வரிசையில் சேர்த்துக் கொண்டார். அதில் ஒன்று உஸ்பெக்மொழியை நாட்டின் அரச கரும மொழியாக்குவது.

உஸ்பெக் மக்களின் கருத்துப்படி ருஷ்ய மத்திய கட்டுப்பாட்டில் அமைந்த பொருளாதார முறை தமது விவசாய சமுதாயத்தில் வேர்கொள்ளவில்லை. முன் உழவர் தம்போக்கில் உழைத்துச் சேகரித்த இலாபப் பணத்தை மறைத்து வைத்திருந்தனர். இன்னும் உண்மையான அரசியல், பொருளாதார சீர்திருத்தங்கள் மிக மெல்ல மெல்லவே உள்ளே நுழைகின்றன. கரிமோவ் அதிர்ச்சி மருத்துவ மூலம் அவசரப்பட்டுச் சீர்திருத்தங்களைச் செய்ய விரும்புகின்றிலர். விலைவாசிகளை உடனடியாகக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கல், தொழிலாளர்களைப் பெருமளவில் விலக்கி விடுதல் போன்ற அவசர நடவடிக்கைகள் முன்னை நாட் சோவியத் ஒன்றியப் பிரதேசங்கள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்டுப் பெரும் அல்லல்களைத் தோற்றுவித்தன அன்றோ? ஆகவே உஸ்பெக் தலைமை அந்த ருஷ்ய அனுபவத்தின் மூலம் நல்ல பாடம் படித்துக் கொண்டது. அதில் கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம், கைத்தொழில் உற்பத்தியில் பெரு வீழ்ச்சி என்பன பிரதானமானவை, அதனால் கரிமோவ் அரசே 'முக்கியமான சீர்திருத்தவாதி'' ஆதல் வேண்டும் என நம்புகிறார். அரச உடைமையாயிருந்த கைத்தொழில்களைத் தனியுடைமையாக்கல், விலைக் கட்டுப்பாடுகளை அகற்றல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பின் நிற்கிறார். அதனால் பழைய சோவியத் பொருளாதாரத்தின் முறைகளில் பெரும் பாலானவை இப்பொழுதும் காணப்படுகின்றன. தட்டுப்பாடு, அரச அதிகாரிகளின் 'சிவப்பு நாடா' மனப்பான்மை என்பவை இன்றும் உள்ள முறைகளே. அரச அதிகாரிகள் சிலர் சொல்கிறார்கள்: ''கையிலுள்ள விரல்களிலும் கூடிய எண்ணிக்கையுள்ள கட்டுப்பாடுகள் இன்றும் இருக்கின்றன.''

பொருளாதாரம் என்ற கப்பலை இழுத்துப் பிடித்திருக்கும் மிதவை என்ன? கீழ் மட்டத்தில் வேர்விட்டுள்ள நம்பிக்கையே. உழுதுண்டு வாழ்வோர் தாம் அரிதில் உழைத்துச் சேர்த்து நீண்டகாலம் மறைத்து வைத்த பணத்தைச் செலவிடத் தொடங்கியுள்ளனர். புதிய தொழிற்றுறை உரிமையாளர் (முன்னோடிகள்) அரச கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்றுறைகளில் சிக்குண்டால் பிரச்சனைகள் உருவாகின்றன. உதாரணமாக, 37 வயதுள்ள விலாயத் என்ற பெண்மணியினை எடுத்துக் கொள்வோம். அவள் ஒரு பொருளியலர். தாஷ்கண்ட் நகரில் அவளுக்கு ஒரு (தனியார்) கடை உண்டு. அங்கு கைவண்ணமிக்க மரப்பெட்டகங்கள், தொட்டில்களை விற்கிறாள். புதிதாக ஆக்கப்பட்ட அந்த வர்த்தகம் பற்றி அவள் பெருமையுறுகிறாள். ஆனால் தனது குடும்பம் அந்த உரிமையைப் பெறப் போராட வேண்டியிருந்தது என்கிறாள். இன்னமும் அக் கைவேலைக்குரிய மரம், மைபோன்றவற்றைப் பெறுவதில் சிரமங்கள் உண்டு என்கிறாள். உர்குற் நகரின் அழகிய கடைமுகப்புகளின் பின்னே நிற்கும் கடைக்காரர் விற்பதற்குச் சில பொருள்களே உள. செருப்பு, கோலா பானங்கள், சவர்க்காரம், வாசனைப் பௌடர் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையே. உற்பத்திப் பொருள்களா கிய தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி போன்றவை கிடைப்பது அருமை.

உஸ்பெகிஸ்தான் மேற்கு நாடுகளின் உதவியைப் பெற்றுச் சந்தைப் பொருளாதாரத்துக்கு மாறுவதை விரும்புகிறது. பிரதானமாக அதன் எண்ணெய்த் தேவைகளுக்கு ருஷ்யாவை நம்பியிருப்பதை வெறுக்கிறது. வர்த்தகத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்: முதலீட்டுச் சட்டங்கள் கட்டுப்பாடுகள் குறைந்த தாராளப் போக்கில் ஆக்கப்பட்டுள்ளன. அதனால் 900 கூட்டு உற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சக்தி, சுரங்கத்தொழில், பருத்திக் கைத்தொழில் போன்றவற்றைக் குறிப்பிடலாம், விவசாயமும் இம்முயற்சியில் அடங்கும். இம்முதலீடுகளில் அமெரிக்கா, சீனா, துருக்கி ஆகியவை முன் நிற்கின்றன. ருஷ்யாவை விலக்கிச் சுதந்திரமான பொருளாதாரத் தனித்துவத்தை நிலை நிறுத்துவதில் சிக்கல் உண்டு. அந்நிய நாட்டு வர்த்தகத்துறை உதவி அமைச்சர் முரத்பெக் நஸ்ரம்பெக்கோவ் கூறுகிறார்: ''பழைய (சோவியர்) ஒன்றியம் என்ற பெருமரத்திலிருந்து உடைந்த ஒரு கட்டை என்று எம்மை உலகம் கருதக் கூடாது. நாம் முற்றிலும் புதிய ஓர் அரசு.''



தலைநகரான தாஷ்கென்ற் சந்தையில் சின்னஞ்சிறு கடைகள்.

உஸ்பெக்ஸ்தானிடம், ருஷ்யாவிடம் இல்லாத ஒரு சிறப்பு அம்சம் உளது. அமைதியும், ஒழுங்கும் ஜனநாயகம் பற்றி கருத்து வேறுபாட்டாளர் விவாதிக்கிறார்கள். இப்போதுள்ள அமைதி வெறும் போலித் தோற்றமுகப்பே, கரிமோவின் தந்திரங்கள் சிக்கல் ஒன்றைப் பின் போட்டுள்ளன. ஆனால் முற்றாக ஒழித்துவிடவில்லை. பெரிய அரசியல், பொருளாதாரப் பிரச்சனை எழுந்தே தீரும், ஒரு நாள் குண்டு வெடிக்கும். எனினும், உஸ்பெக் மக்களில் வெகு சிலரே தமது ஜனாதிபதியின் முத்திரை பதித்த தலைமைத்துவத்தை விற்றுப் பிற சோவியத் குடியரசுகளில் இடம் பெறும் நிலையற்ற தன்மையை விலைக்கு வாங்கும் மடைமைத்தனத்தில் இறங்குவார்கள். ''கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகெட்டிச் சிரியாரோ'' என்பது அவர் கருத்துப் போலும்.

உதவி: சமார்க்கண்ட் நகரிலிருந்து யூரி ரைக்கோவிச் எழுதிய அறிக்கை

டைம், நவம்பர் 15, 1993

---

கல்வி

## போரும், அமைதியும்

அமெரிக்கத் தேசியப் போர்க் கல்லூரி அமைதியைப் பற்றிப் பயில்வதற்கு ஏற்ற இடமாகத் தெரியவில்லை. ஆனால், இன்றையச் சூழ்நிலையில் அமைதியையும், போர்க்கல்விச் சாலையில் ஒரு தகுந்தபாடமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அநேக முதற்தர இராணுவ, மற்றும் குடியியல் தலைவர்கள் பலர் கற்று வெளியேறிய 47 ஆண்டு பழைமைவாய்ந்த அந்தக் கல்லூரியில், அடுத்த கல்வியாண்டில் இருந்து '''அமைதி பேணல்'', ''அமைதி காத்தல்'' 'மனிதாபிமான ரீதியில் தலையிடுதல்'' என்ற விடயங்கள் அடங்கியதாக, 385ஆவது பாடத்திட்டம் ஒன்று கற்பிக்கப்பட உள்ளது. அதில், அமைதி பேணலின் கோட்பாடுகளும், அவற்றை அமுலாக்கலும் பற்றிய நன்மை தீமைகள் யாவும் தத்துவார்த்த ரீதியாகக் கற்பிக்கப்பட உள்ளன., பொஸ்னியா, சோமாலியா நிலைமைகளை ஆய்வுக்கு உரிய விடயமாகக் கொண்டு, அமெரிக்க ஆட்சி மன்றமான கொங்கிரஸ் வெளிநாட்டு அமைதிபேணல்களில் வகிக்கும் பங்குபற்றியும், அமெரிக்கப் படைவீரர்கள் அனைத்துலகப் படை அணிகளுடன் சேர்ந்து செயலாற்றும் பொழுது பிறநாட்டுப் படைத்தளபதிகளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பது பற்றியும், இராணுவக் கல்லூரி மாணவர்களுக்குப் 12 வாரப் பாடநெறி கற்பிக்கப்படவுள்ளது. இந்தச்செய்தி பரவியதால், ஏற்கனவே 30 இராணுவத்துறை மாணவர்கள் அதனைக் கற்கப் பதிவு செய்து கொண்டு உள்ளனர். அவர்களுள் ஒரு பல்கேரிய மேஜர் ஜெனரலும், கீனியா நாட்டு கேணலும் இந்தியப் படைக் கப்ரனும் அடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்வாயின் முடிவில் ஒளி

## ஐரோப்பாவின் மிகப்பெரிய பொறியியற் செயற்திட்டம் முற்றுப்பெறுகிறது. திறப்புவிழா நான்கு மாதங்களில் நிகழும்.

எழுதியது;
பிரான்ஸின் கலே நகரிலிருந்து
— தொமஸ் ஸாங்ரன் —

ஐரோப்பியச் சுரங்க வழி உயிர்க்கிறது. கருமங்கள் ஒய்வு ஒழிவின்றி நிகழ்கின்றன. பெரிய சுரங்க வழியில் புகையிரதப் பாதை அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர், சேவை நிகழும் பொருட்டு அமைக்கப்பட்ட உபசுரங்கப் பாதை வழியே இங்கும் அங்கும் விரைந்து போய் வருகிறார்கள். மின்சாரக் கம்பி உருளைகள் விரிகின்றன. சிலர் அளவிடும் கருவிகளையும், 'சுவிச்'சுக்களையும், சரி பார்க்கிறார்கள். சிலர் கம்பி இணைப்புக்களைப் பொருத்துகிறார்கள். மேலும் சிலர் துவிச்சக்கர வண்டிகளில் ஒடித் திரிந்து, தூரத்தேயுள்ள வேலைத் தளங்களுக்கு வேண்டிய பொருள்களை வழங்கிய வண்ணம் இருக்கிறார்கள். ''சுரங்க வழி, ஏலவே முற்றுப் பெற்று விட்டது. இப்பொழுது நாங்கள் இறுதித் திருத்தங்களைச் செய்கிறோம்'' என்கிறார் ஐரோப்பியச் சுரங்கவழித் தொடர்பு இயக்குனர் ஃபிரான்ஷோ பொபொரெல். அவர், ஒரு மஞ்சள் உலோகக் கதவைத் திறந்து, வடக்கு நோக்கிய புகையிரதச் சுரங்கவழிக்குள் நுழைகிறார். அங்கே அவரது பிரித்தானிய சக பணியாளர் வில்லியம் கோல்மன், புகார் நிறமான கொங்கிறீற் குழாயின் அந்தத்தைச் சுட்டிக் காட்டுகிறார். அங்கு குழாயின் ஊடாகச் செல்லும் பாதைகளும் முட்டுகின்றது போன்ற மாயத் தோற்றம். ''இதோ தெரிகிற பாதை வழியே 37 கி.மீ நடந்து போனால், இங்கிலாந்தின் டோவர் நகரத்தை அடைவீர்கள்'' என்கிறார்.

இனிமேல்,. பிரித்தானியா ஒரு தீவு என்ற நிலை இல்லை. ஆங்கிலத் தீவார் என்ற தாழ்வு உணர்ச்சியும் விலகலாம். 1802 இல், நெப்போலியன் பிரான்ஸின் சர்வாதிகாரியாகும் சமயத்தில் உதித்த எண்ணம் - இங்கிலாந்தை ஒரு நிலக்கீழ்க் குழாய் மூலம் இணைப்பது இன்று நிஜமாகியுள்ளது. உருக்குக் கொங்கிறீற் உற்பத்திப் பெருக்கம் கனவை நனவாக்கியுள்ளது. அடுத்த மார்ச் மாதம், இருவழிப் புகையிரதப் பாதையின் வழியே சாமான் புகையிரதங்கள் ஓடத் தொடங்கும். ஏப்பிரல் மாதம் பயணிகள் சேவையும் ஆரம்பமாகும். 1994 வைகாசி ஆறாம் திகதி அத்திவாரம் வெட்டிய ஆறாம் ஆண்டு முதலில் நிச்சயிக்கப்பட்ட திகதிக்கு ஒருவருடம் கழித்து, இங்கிலாந்து அரசி 2 ஆம் எலிசபெத்தும், பிரான்ஸின் ஜனாதிபதி ஃபிரான்ஷோமித்தெரான்னும் ஒரு சிறு வாகனத்தில் அச் சுரங்கப் பாதையூடாக இணைந்து பயணம் செய்வதன், மூலம், உத்தியோகபூர்வமான திறப்பு விழாவை நிகழ்த்துவர். மாபெரும் அதிசய பொறியியற் சாதனை எனப் போற்றப்படும் இக்கருமத்தை அவர்களது இருநாட்டு அரசாங்கங்களும் செய்து முடிக்க மனச்சம்மதம் அளித்தன. ஆனால், அதற்குரிய நிதிவழங்க மறுத்தன.



ஆங்கிலக் கால்வாயின் அடியில் நாளொன்றுக்கு 20 சுற்றுப் பயணத்தை அடுத்த வசந்த காலத்தில் மேற்கொள்ள இருக்கும் மின்சார ரயில்

ஐரோப்பியச் சுரங்க வழி நிறுவனப் பெருந் தலைவர் அந்த்ரே பேணாட் வற்புறுத்திக் கூறுகிறார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

## ஐரோப்பா

செயற்றிட்டம் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டதென்றாலும், இன்னும் சில தடைகள் உள்ளன. முதலாவது பிரச்சினை பணம். 1994–96 வருமான எதிர்ப்புக் குறைத்து மதிக்கப்படும் நிலை; உபகரணங்கள் வருவதில் தாமதம், செலவு எல்லை மீறல் போன்ற காரணங்களால், கம்பனியின் மொத்தச் செலவு மதிப்பீடு 100 பில்லியன் பிராங்குகள் (17.2 பில்லியன் டொலர்). 1998 அளவில் நிலைமை சீர்திருத்தலாம். இது, முதன்முதலில் திட்டமிடப்பட்ட செலவினத்தின் இரட்டிப்பு மடங்கு; இப்போது கிடைக்குமளவிலும் 10 பில்லியன் பிராங்கு 1.7 பில்லியன் டொலர்) மேலதிகமாக வேண்டும்.

ஐரோப்பியச் சுரங்கவழி நிறுவனத் தலைவர் ஸேர் அலஸ்ரெயிர் மோட்டன் கூறுகிறார்: கவலைப்பட இடமில்லை. வேலைத் திட்டத்தின் பூயந்திரிக சிவில் பொறியியல் திறனை ஒத்ததே, அதன் நிதி சேகரிக்கும் பொறியியற்றிறனும். அந்நிறுவனம் இப்பற்றாக்குறையை ஈடுசெய்யத் தனது 220 உறுப்பினர் கொண்ட வங்கிக் கூட்டிணைப்பின் மூலம் மூலதனஞ் சேகரிக்க ஏற்பாடு செய்யும். 1994 இன் தொடக்கத்தில் பங்குகள் வெளியிடப்படும். சுரங்க வழி முற்றுப் பெற்றுள்ளது. எனவே, அதன் திட்டத்தைச் சரித்து வீழுத்த எவரும் சிந்தியார். பங்கு விற்பனை வெற்றிகரமாக நிறைவேறும் ''வங்கிகள் இக்கட்டத்தில் நிதியளிக்கத் தயங்கா. அவைகளுக்கு வேறு வழி இல்லை'' என்கிறார் பாரிஸ் பங்குத் தரகு நிறுவனமான ஃபெர்ரியின் பிரமுகர் பற்றிக் ஜொஸஃம்.

சென்ற ஜுலை மாதம், சுரங்கவழி முற்றுப் பெறுவதில் இருந்த இறுதிப் பெரும் தடை நீக்கப்பட்டது. கட்டமைப்பு வேலைகளைச் செய்த போக்குவரவு நிறுவனத்திற்கும், ஐரோப்பிய சுரங்க வழி என்ற நிறுவனத்துக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (பிந்தியதே, போக்குவரவை எதிர்காலத்தில் நிர்வகிக்கும்). போக்குவரவு நிறுவனம் திட்ட மாற்றங்கள் காரணமாக ஏற்பட்ட மேலதிகச் செலவான 8பில்லியன் பிராங்க் (1.4 பில்லியன் டொலர்) தொகையைத் தரவேண்டுமென வற்புறுத்தியது. ஐரோப்பியச் சுரங்க வழிக் கம்பனி பின்நின்ற போது, அமைப்புக் கம்பனி வேலையைத் தாமதப்படுத்தியது, இரு கம்பனிகளின் பூசலிற் சுரங்க வழி முற்றுப் பெறுதல் பணயம் வைக்கப்பட்டது.

''அது ஒரு யுத்தம்; மனஉறுதிகளிடையே போராட்டம்'' என வருணிக்கிறார். ஐ. சு. வ. செய்தி இயச்குனர் கிறிஸ்தியன் அந்தோனி. போ. வ. கம்பனி தனது உப ஒப்பந்தகாரர்களைத் திறம்பட நிருவகிக்காத படியால்தான் மேலதிகச் செலவு ஏற்பட்டது. ஆனால், கட்டட அமைப்புக் கம்பனி இயக்குனர் பியர் பரிஸோவின் விளக்கம் இதற்கு எதிரானது. ''நாங்கள் ஒப்பந்தம் செய்த வேலைக்கும், இன்று முற்றுப்பெற்றுள்ள வேலைக்குமிடையில் வெகுவான மாற்றம் உள்ளது. ஒரு சாதாரண குடும்பக் கார் அமைக்கத் தொடங்கினோம்; அது ஒரு றோஸ் ஸ்றோய்ஸ் ஆடம்பரக்கார் ஆகிவிட்டது.

புதிய ஒப்பந்தப்படி, 1993 டிசம்பர் 10 ஆந் திகதி கட்டிய நிறுவனம் ஐ. போ, வ நிறுவனத்திடம் சுரங்க வழியைக் கையளிக்க வேண்டும். அப்போதுதான் புகையிரத வெள்ளோட்டங்களை நிகழ்த்திப் பாதையைப் பரீட்சித்துத் திறப்புவிழாவுக்கு ஆயத்தமாக்கலாம். ஐ சு. வ. நிறுவனம் கட்டிமுடித்த கம்பனிக்கு 2.35 பில்லியன் பிராங்கு (405 மில்லியன் டொலர்) கொடுத்துவிடும்படி பணிக்கப்பட்டது. இது மேலதிகச் செலவை ஈடுசெய்யும், ஒப்பந்தக்கார நிறுவனம் உண்மையில் பெற வேண்டிய தொகை நடுவர் தீர்ப்புக்கு விடப்படும், பணம் மீதியிருந்தால் , சு. வ. போக்குவரவுப் பொறுப்பாளர்க்கு 1995- க்குக் கொடுக்கப்படும்.

எனினும் இவ்வெற்றிகரச் சமாதான ஒப்பந்தம், வேறு சில பிரச்சனைகளைத் தீர்க்காமல் விட்டது. கனடியக் கம்பனியான பொம்பாடியர், இருவழிப் பாதையால் ஓடும் புகையிரதங்களைக் கட்டும் வேலைபடம் வரைவு மாற்றங்களால் ஏற்பட்ட மேலதிகச் செலவான 3.4 பில்லியன் பிராங்கை (586 மில்லியன் டொலர்) தரும்படி வற்புறுத்துகிறது. அந்தஉப ஒப்பந்தவேலைபற்றிய ஆவணங்கள், 2,800 பக்கங்களை நிறைத்துள்ளன. அவற்றைக் கட்டமைப்பு வேலை நிறுவனம் ஆராய்ந்து கொண்டிருக்கும் வேளையில், பொம்பாடியர் கம்பனி உரியகாலத்திற் பயணிகள் போக்குவரவு தொடங்கும் வேலையைப் பின்போடப் பண்ணும் நோக்கத்தில், புகையிரத இயந்திரங்களைக் கையளிக்க மறுக்கலாம் என்று எச்சரிக்கை செய்துள்ளது. ஐ. சு. வ நிறுவனம் பிரித்தானிய ரயில், பிரான்சின் புகைவண்டிப் போக்குவரவு அமைப்பான எஸ். என். வி. எஃப் ஆகிய இரு அமைப்புக்களிடமிருந்தும் பலகோடி டொலர் நட்டஈடு கேட்கின்றது. காரணம், தொடக்கத்தில்இவ்விருஅரசுடைமைக் கம்பனிகளும் சுரங்க வழியின் பயன்பாட்டில் 50 வீதத்தை ஒப்பந்த அடிப்படையில் எடுத்துக் கொள்ளச் சம்மதித்திருந்தன; பின்னர் அவ்வீதத்துக்கு வெகு குறைவான அளவையே பயன்படுத்த இப்போதைக்கு ஏற்பாடு செய்கின்றன. இருபக்கத்திலும், போதிய போக்குவரவுச் சாதனங்கள் கட்டி முடிக்கக் காலதாமதம் ஆகின்றன. என்று சாட்டுச் சொல்கின்றன. ஐ.சு. வ. அதிகாரிகளுக்கு அதிக தலைவலியைக் கொடுப்பது பிரித்தானியாவின் முடமான நடையே. பேணாட் இதனை ''பேராபத்தான முடக்கு வாதம்'' எனக் குறிப்பிடுகிறார். ஃபோகஸ்ரோனிலிருந்து லண்டன் வரை அதிவேக இரும்புப் பாதை இணைப்பைக் கட்டி முடிக்க அந்நாடு தயங்குகிறது. பெரும்பாலான (நிதிப்) பகுப்பாய்வாளர் இச்சுரங்க வழியின், எதிர்காலம் குறித்து, சுமாரான நம்பிக்கை தெரிவித்துள்ளனர். 2002 ஆம் ஆண்டுவரை, இலாபப் பங்கீடு வழங்க முடியாது என்றே கருதப்படுகிறது. ஆங்கிலக் கால்வாயில் வண்டிகளையும், ஆட்களையும் தாங்கிச் செல்லும் போக்குவரத்தை நடத்துவோர் கடுமையாகப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடுவர். ''சுரங்க வழி நிச்சயமாகப் பணம் சம்பாதிக்கும் காமதேனு ஆகும் என்று பூரணமாக நம்புகிறேன்'' என்கிறார், பாரிஸில் ஐ. சு. வ. கம்பனிப் பங்குதாரர்களின் சங்கத் தலைவரான கிறிஸ்தியன் கம்பியர். 1976 லிருந்து, சராசரி 5 வீதம் ஆண்டுதோறும் ஆங்கிலக் கால்வாய்ப் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

அதில், கால்வாய்ப் போக்குவரத்திடமிருந்து எவ்வளவைச் சு. வழி பிடுங்கிக் கொள்ளும் என்பதிலேயே வெற்றி தங்கியுள்ளது. ஐ. சு. வ. நிர்வாகிகள் 1997 அளவில் பயணிகள் தொகையில் 50 சத வீதமும், பொருள்கள் ஏற்றுமதியில் 30 சத வீதமும் தம் கைக்குக் கிட்டும் என நம்புகின்றனர். இது மிதமான கணிப்பே; இன்னும் அதிகம் எதிர்பார்க்க இடமுண்டு என்கிறார், பிரெஞ்சுத் தரகு நிறுவனமான எக்ஸானேயின் பிரபலஸ்தர் ஒருவர். ''இலண்டனிலிருந்து, பாரிசுக்கு எவ்விதத் தடங்கலும் இன்றி 3 மணி நேரத்திற் போவது, கப்பல், விமானப் போக்குவரத்திலும் இப் பாதைக்குப் பெருமை சேர்ப்பதாகும்.'' ஆனால், கப்பற் போக்குவரத்து அதிகாரிகள் கால்வாயைக் கடப்போரைப் பொறுத்த வரையில் நேரம் ஒரு பிரச்சனை அல்ல என்கின்றனர். ''எமது பயணம் ஓய்வு, விளையாட்டுக்கள், மதுச் சாலைகள், தீர்வையற்ற கடை போன்றவற்றை வழங்குகிறது'' என்கிறார் கடற் பயணக் கம்பனிகள் ஐந்தில் ஒன்றின் தலைவர். (எ. என்ற. இடத்திலிருந்து பீக்கு) காரில் இருந்த படி பிரயாணம் செய்ய விரும்புகிறவர்கள் மட்டுமே ரயிற் பாதையை விரும்புவர்.) அவர் கருத்துப்படி, சு. வழிப் பயணத்தின் பங்குப் பொருள்கள் 25 சத வீதமும், பயணிகள் 40 சத வீதமும், மட்டுமே. சு. வ. போட்டியால் சில கப்பல் கம்பனிகள் முடப்படலாம்; ஆனால், சில தொடர்ந்து சேவையாற்றும்.

சு. வழியைப் பயன்படுத்துவோர் விதம் விதமான சேவைகளைப் பெறலாம். பிரெஞ்சு நகரான கலேயிலிருந்து, இங்கிலாந்துக் கரையிலுள்ள ஃபோக்ஸ்ரோனுக்குச் சில விசேட ரயில்கள் பயணிகளின் கார், பஸ்களைத் தாங்கிச் செல்லும். சில பார லொறிகளை ஏற்றிப் போகும். இச்சேவையில் உள்ள விசேட அமைப்புள்ள ரயில்கள் 35 நிமிடத்தில் போகும். ஒரு நாட்டுப் பிரதான வீதியிலிருந்து மற்றொரு பிரதான வீதிக்கு வர ஒரு மணி நேரமே செல்லும். கப்பல் மார்க்கத்தில் $2\frac{1}{2}$ மணி நேரம் செல்லும்.

விசேட ரயில் சேவை பாரிஸ், இலண்டன் போக்குவரவை 3 மணியில் முடிக்கும். சாதாரணமாக ரயில், கப்பற் சேவையில் 7 மணியும், விமான நிலையம் செல்லல், பறத்தல் இரண்டும் சேர்ந்து 3 மணி நேரமும் செல்லும். இதைவிட, வழமையான பிரித்தானிய ரயில், பிரெஞ்சு ரயில் சேவைகள் 6 மணி ஓட்டமுள்ள ரயில்களை விடும். பிரித்தானிய பெல்ஜியம் ரயில் சேவைகள் இணைந்து, இலண்டன் – பிரஸ்ஸெல்ஸ் நகரங்களுக்கிடையே 3.15 மணியில் ஓடும் விசேட ரயில்களை விடும். கட்டணம் கப்பற் சேவையுடன் போட்டியிடும் வகையிலும், விமானப் பயணச் சீட்டிலும் மிக மலிவாயும் அமையும்.

இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் ஒத்துழைப்புக்கு இச் சுரங்க வழி நல்ல உதாரணம் எனினும், இதன் இலாபத்திற் பெருமளவு இவற்றுக்குக் கிடைக்காது. ''கால்வாயைத் தாண்டுவோரிற் பெரும்பாலானவர்கள் ஐரோப்பாவில் விடுமுறையைக் கழிப்பதற்குச் செல்பவர்களே. தொடர்ந்தும் பிரிட்டன் ஆட்களை அனுப்பிக்கொண்டிருக்கலாம்; இவ்வழியைப் பயன்படுத்தலாம். இலாபம் பிரான்சுக்கே அதிகம் கிடைக்கும். ஏனெனில் சு. வ. கம்பனிப் பங்கு பிரான்சுக்கு 4, பிரிட்டனுக்கு 1 என்ற விகிதத்தில் உள்ளது. சுரங்க வழியை உபயோகிப்பதற்குப் பிரித்தானியர் அதிக பணத்தைப் பிரெஞ்சுக்காரருக்குக் கொடுப்பர்.

பாரிசுக்கு அண்மையில், பிரசித்திபெற்ற உருக்கு ஈஃபெல் கோபுரத்துக்கு அருகே பலகையால் அமைந்த கந்தோரில் அமர்ந்திருக்கும் பேணாட், பிரான்சின் அதி உயர் விருது பெற்ற மனிகர். 71 வயதான முன்னைநாள் பெற்றோலியக் கம்பனி நிர்வாகியான அவர், இதனை ஒரு வெறும் வியாபார வீரச் செயலாக நினைக்கவில்லை. ஐரோப்பிய ஐக்கியத்தின் புற வெளிப்பாடே இச் சுரங்க வழியென, அழகான ஆங்கில உச்சரிப்புடன் பேசும் அவர், ''ஐரோப்பியச் சமுகம், பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்த போர்களையும், நச்சுப் பகையையும் இல்லாமற் செய்யவே தொடங்கப்பட்டது. இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளுக்குப் பின், கடந்த காலப்போர்களைப் பற்றி ஒரு சிறிதும் நினைக்காத சந்ததி ஒன்று தோன்றலாம். அதற்காகவே, நாம் கொங்றீகிற் உறுதியுள்ள இணைப்புக்களை ஏற்படுத்த முனைகிறோம். அதில் ஒன்றே இச் சுரங்க வழி'' என்று இலட்சியக் கனவு தொனிக்கப் பேசுகிறார்.

நெப்போலியனால் திட்டமிடப்பட்டதும், பல தலைமுறை ஆங்கிலேயர் அவ்வழியே ஐரோப்பியப் படைகள் தம் தாயக மண்ணில் நுழைந்து விடும் என்று அஞ்சியதுமான அப்பாதை, இன்று முற்றுப்பெறும் நிலைக்கு வந்து விட்டது. வரலாற்றின் முரண் நகைச்சுவை போலும் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

# பிரித்தானியாவில் சகல பெயர்ப் பலகைகளிலும் "மெல்லப்போ" என வாசிக்கிறோம்

லண்டனிலிருந்து

— பரி. ஹில்லென்பிறான்ட் —

அடுத்த ஜூன் மாதம், "யூரோஸ்ரார்" கடுகதிப் புகையிரதம் இலண்டனிலிருந்து பாரிஸுக்கு 3 மணிநேரப் பயணத்தை மேற்கொண்டு, ஆங்கிலக் கால்வாய்க்குக் கீழுள்ள சுரங்கப் பாதை வழியே ஓடும். அது புறப்படும் மத்திய இலண்டன் வோட்டர்லூ சர்வதேசப் புகையிரத நிலையம், 200 மில்லியன் டொலர் செலவில் இந் நூற்றாண்டின் புத்தம் புதிதாக அமைக்கப்பட்ட ஒரேயொரு நிலையமாகும். பயணிகள், 18 இணைப்பு வண்டிகள் கொண்ட "யூரோஸ்ரார்" புகையிரதங்களில் ஏறும்போது, 400 மீற்றர் நீளமான கண்ணாடிக் கூரையின் கீழ், 5 மேடைகளில் நின்று ஏறுவர். வந்து சேரும் மண்டபங்கள், தங்கி நிற்கும் அறைகள், உணவுச்சாலைகள், பயணச் சீட்டுவாங்கும் யன்னல்கள் எல்லாம் ஒரு சர்வதேச விமான நிலையத்தை நினைவூட்டும். இது 21 ஆம் நூற்றாண்டுக்குரிய புகையிரத நிலையம். அதிவேக, அதிதொழில் நுட்பப் பிரயாணத்தின் சின்னமாக இது திகழ்கிறது.

ஆனால், வோட்டர்லூ சர்வதேசப் புகையிரத நிலையம், பிரித்தானியச் சுரங்க வழிக்கு ஊடாகப் போகும்பெருந்தொகையானபோக்குவரவையும், முன்னேற்றமான போக்குவரவுத் தொழில் நுட்பத்தையும் கருத்திற் கொண்டு, ஏற்ற அடிக்கட்டமைப்பு ஒன்றை நிர்மாணிக்கத் தவறி விட்டதை மறைக்கும் ஒரு முகப்புக் கோபுரம் போலத் தொனிக்கிறது.



மின்சார ரயில் ஓடும் சுரங்கப் பாதையில் சைக்கிள், கார் ஆகியனவும் செல்லக் கூடிய வசதியிருப்பதை காணலாம்

இங்கிருந்து புறப்படும் புகைவண்டிகள், கால்வாய்க்கரை மட்டும் காலம் தாழ்த்தியே ஓடும். கென்ற் மாவட்டக் கிராமப்புறத்தினூடாக மணிக்கு 140 கி. மீ. வேகத்தில் ஓடி, சுரங்க வழியைக் கடந்த பின்னரே, பிரான்ஸ் நாட்டின் நவீன பாதைவழியே பாரிசை நோக்கி 300 கி. மீ. வேகத்தில் ஓடும் புகையிரத இயந்திரங்கள் 16,000 குதிரை வலு உள்ளவை. அவற்றின் முழுத் திறனும் அப்போதுதான் வெளிப்படும்.

பிரெஞ்சுக் காரர், 334 கி. மீ. நவீன பாதையைக் கால்வாயிலிருந்து பாரிஸ் வரை திறந்து விட்டனர். ஆனால், பிரித்தானியரோ, அந்த வழியை இரும்புப்பாதை அமைப்பது என்ற வேண்டா விவாதத்தில் ஐந்து ஆண்டுகளைச் செலவிட்டுள்ளனர். நான்கு திட்டங்கள் போட்டுத் தள்ளி வைத்தனர். பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க, ஐந்தாவது விரிவான திட்டம் பெருஞ் செலவிற் தயாரிக்கப்படுகிறது. அதனைப் பாராளுமன்றம் விவாதித்து முடிவு செய்யும். அத் திட்டம் நிறைவேற யார் பணம் கொடுப்பார் என்று தெரியாது. எப்படியிருந்தாலும், 2001-க்கு முன் அது முற்றுப் பெற இயலாது.

முக்கிய தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான ஜோன். பிரேஸ்கொற் "எமக்கு அதிவிரைவுப் புகையிரத இணைப்பு இல்லாமை வருத்தத்துக்குரியதே. பிரெஞ்சுக்காரர் பலவாறு பணம் சேகரித்துப் புகையிரத அமைப்பை நவீனமயமாக்கியமையால், அவர்களது புகையிரதங்கள் நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும், வேகத்திற்கும் உகந்த போக்குவரவைச் சமாளிக்கின்றன. நாம் மணிக்கு 65 கி. மீ ஆமை வேகத்திற் தவழ்கிறோம்" என்று கவலைப்படுகின்றார்.

புதிய பாதையமைத்தால், இலண்டன் - பாரிஸ் பயணத்தில் 30 நிமிடம் மட்டுமே மிச்சம் பிடிக்கலாம். ஆனால், விடயம் வேகம் மட்டுமல்ல, நவீனமயமாக்கல் பெருகி வரும் போக்குவரவைத் துரிதப்படுத்தும். ஏற்கனவே அதிக ஓட்டம் காரணமாகத் தடுமாறும் இலண்டனுக்குத் தென்கிழக்கேயுள்ள பாதையிற் பொருள்களும், பயணிகளும் 'புனலின் வழியே ஊற்றுவதுபோல' மெல்ல மெல்லவே நகரும். பிரித்தானியர் பழைய இரும்புப் பாதையைத் தரமுயர்த்த, ஒரு மில்லியன் டொலர் செலவிட்டுள்ளனர். ஆனால், இது சின்னஞ்சிறு வேலையே; 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவில் பெருகிவரும் பயணிகள், சாமான்கள் ஏற்றுமதி, இறக்குமதி இரவு பகல் முழுவதும் நடைபெறும். அதனால், பாதைக்கு அண்மையில் குடியிருப்போருக்கு வசதிக் குறைவும், கரைச்சலும் உண்டாகும். நவீனமயப்படுத்திவிட்டால், முக்கிய போக்குவரத்துக் குறித்த சில மணி நேரங்களிலேயே நடைபெறும்'' என்கிறார், ஐ. சு. கூ. தவிசாளர் அலஸ்தெயர் மோட்டன்.

பிரெஞ்சுக்காரர் தம்பக்கத்து அடிக்கட்டமைப்பை அழகுறச் செய்துவிடமுடியுமானால், ஏன் பிரித்தானியர் செய்யக் கூடாது? இதற்குப் பாதி விடை அரசியல் இலட்சியங்களுடன் பிணைந்துள்ளது. சுரங்க செய் திட்டம் ஆரம்பித்தபோது பிரதமர் மாகிறட் தச்சர் அது தனியார் துறையின் தீவிர முயற்சியின் கனியாயிருக்கும் என்றார்.

1987 இல் கால்வாய்ச் சுரங்கச் சட்டத்தின் 42 ஆம் பிரிவு, அரசாங்கம் இதில் முதலிடுவதைத் தடுக்கிறது. கென்ற் பகுதியின் பழைமைபேண் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அன்ட்றூ றோவே கூறுகிறார்:- ''இப்படியான செய்திட்டம பொது சனப் (அரச) பணம் இன்றித் தனியாரால் நிறைவேற்ற முடியாது. ஆகவே, நாம் அரசுடைமை முதலீட்டுக்குப் பாடிப் பாடிப் பணம் கறக்க வேண்டும். ஆக்க ரீதியான கணக்கீடுவழி, இயன்ற பணத்தை ஒதுக்க வேண்டும். பயணிகளுக்கு நன்மை அதிகம் என்று காரணம் காட்ட வேண்டும்.

ஆக்க ரீதியாகக் கணக்கீடு செய்யக் காலம் செல்லும்; நம் வளவுக்குள் வீதி அமைக்கிறார்களா என்று சத்தமிடும் கோஷ்டியின் ஏச்சுக்களைச் சமாளிக்க வேண்டும். சில நகர சபைகளும் புதிய தொழில் முயற்சிகள் பெருகும் என்ற காரணத்தால், புதிய பாதையமைப்புச் சுரங்க ரயில் நிலையங்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால், வீட்டுச் சொந்தக்காரர் குழு பலம் வாய்ந்த எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. அதனால் காலம் கழிகிறது. அதே பா. உறுப்பினர் கூறுகிறார்:- ''இந்த நாட்டின் சாபக்கேடு, திட்டங்களை ஏற்றுக்கொள்ளப் பெருமளவு காலத்தை வீணாக்குகிறது.''

பிரான்சில் வேகமும், மனப்போக்கும் வேறானவை. ஸேர் அலஸ்ரெயர் கூறுகிறார்:- ''பிரெஞ்சுப் பண்பாட்டில் விளக்க முடியாத ஒரு சிறப்பு அம்சம், பாரிய திட்டங்கள் எமது பேரப்பிள்ளைகளுக்கு வளமான வாழ்வு அளிக்கும் என்ற நம்பிக்கையாகும். தெருவிற் போகும் சாதாரண மனிதன் கூட, தொலைபேசி, அதிவேகப் புகையிரதம் ஆகியவற்றில் முதலீடு செய்வதால், எல்லாம் நன்மையாகின்றன என நம்புகிறான். பிரித்தானியாவில் இதற்கு மாறான போக்கே உள்ளது. பெருந்திட்டங்கள் சுமைகளாக அழுத்துவன; பணம் வீணாகிறது; இயற்கை நிலத்தோற்றம் சப்பி விழுங்கப்படுகின்றது; இப்படியான பயப்பாடுகளே இங்கு நிலவுகின்றன.''

சுரங்கவழி, காலங்காலமாக வளர்ந்த பிரிட்டனின் தனிப்போக்கைத் 'தீவுப் பகுதி'யை விழுங்கப்போகிறது. இதுவும், சுரங்கவழிக்கு உதவியான வேலைத் திட்டத்தை நிறைவேற்றத் தடையாயுள்ளது. ''இப்பொழுது சிலர் நினைக்கிறார்கள்; இதற்கூடாக நெப்போலியன் வந்து புகுந்துவிடப் போகிறான் என்று. ஐரோப்பாவுடன் இணைவது பிழை என்ற அடிப்படை எண்ணம், இன்னும் இந் நாட்டில் நிலவுகிறது. இந்நாட்டவரின் பழைய சிந்தனைப் போக்கைத் திருத்தவே முடியாது'' என்று சலித்துக் கொள்கிறார் பிறெஸ்கொற்.

## மம்மிகள் அருந்திய பியர்

பிரிட்டிஷ் தொல்பொருளாளர் ஒருவராலும். ஸ்கொட்லாந்து பியர் வடிசாலை ஒன்றாலும் நாம் இப்பொழுது முற்கால எகிப்திய பேரோ மன்னர்கள் அருந்திய வகையான பியர்களை அருந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எகிப்தியர்கள் எக்காலத்திலும் பியர்ப் பிரியர்களாகவே இருந்து வந்துள்ளனர். அது மருந்தாகவும், விருந்தாகவும் அருந்தப் பட்டு வந்துள்ளது. எகிப்தில் மண்ணுள் புதையுண்டு பல நூறு ஆண்டுகள் கிடந்த பின்பு அகழ்வின் போது கண்டு பிடிக்கப்பட்ட டெல் அல் அமர்னா நகரில் சுவர்ச் சித்திர எழுத்துக்களை ஆராய்ந்து அவற்றின் பொருளை அறிய முயன்ற கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு அறிவியலாளர்கள் பண்டைய எகிப்தியர்களின் பியர் வடித்தல் சம்பந்தமான இரண்டு சமையற் குறிப்புக்களையும், செய்முறைகளையும், சுவர்ச் சித்திர எழுத்துக்களையும் வாசித்து உணர்ந்து அறிந்து கொண்டு உள்ளனர். உரொட்டியை மூலப்பொருளாகக் கொண்டு தேன், மலர்கள் போன்றவற்றால் உருசி ஏற்றிய பியர் வகைகளைப் பண்டைய எகிப்தியர்கள் செய்து உள்ளனர். ஸ்கொட்லாந்து பியர் வடிசாலை ஒன்று இந்த வருடம் அந்த முறையையும், மூலப் பொருட்களையும் கொண்டு பியர் வடிக்க எண்ணியுள்ளது. அது சுவையும், பலமும் கொண்டதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

## உக்கிறேன்:

## ஒரு மதக்குழு கூண்டோடு தற்கொலை செய்யப்போவதாக அச்சுறுத்துகின்றது.

# கிறிஸ்ற்ரோசின் கடைசி ஆசை

எழுதியது; கீவிலிருந்து
றொபேட் சீலியுடன்
ரோனி எமெசன்

சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுபட்ட பின், உக்கிறேன் நாட்டில் உண்டான இருளில் தாமாகவே வெளிப்படுத்திய இரட்சகர்களில் மரியா தேவி கிறிஸ்ற்ரோஸ் முதலானவர் அல்ல: ஆனால் மிகவும் பயமுறுத்துபவராக உள்ளார். கீவின் வணக்கத்துக்குரிய ஆசனக்கோவில் சென்ற் சோஃபியாவிற்கு முன்னால், தனது மதக்குழுவின் 150,000 பேர் தமது சடப்பொருளாலான உடலில் இருந்து வெளியேறுபவர்கள் என, பெரிய வெள்ளைச் சகோதரத்துவத்தின் இலட்சியத் தலைவியான கிறிஸ்ற்ரோஸ் பல மாதங்களாக எச்சரிக்கிறார். இவர்கள் எல்லோரும் கூண்டோடு தற்கொலை செய்யப் போகிறார்கள் என்பதே, இதன் கருத்து என அரசு அதிகாரிகள் நம்புகிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்னர், பல்லாயிரக்கணக்கான வெள்ளைச் சகோதரர்கள் கீவின் மீது படை எடுத்தார்கள். சில பேர் சைபீரியா போன்ற தூர இடங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். நகர அதிகாரிகள், அவர்களில் 700 பேரைச் சிறையில் தள்ளி, அவர்களின் பாதுகாப்புக்கே அவ்வாறு செய்ததாகக் கூறினார்கள். தம்மை விடுதலை செய்யக்கோரி, இவர்களில் 200 பேர் வரை உண்ணா விரதம் இருந்தார்கள். இறுதியாக 60 சகோதரத்துவ அங்கத்தவர்கள் சென்ற் சோஃபியா கோவிலுக்குள் புகுந்து உருவங்களுக்கும், சுவர் ஓவியங்களுக்கும் தீயணை கருவிகளால் நுரை விசிறினார்கள். பொறுத்தது போதும் என்ற நிலையில், மதக்குழுவை வழி நடத்துபவர் எனக்கருதப்படும் தேவியின் கணவர் யூரி கிரிவனோகோவ்வும், தேவியும், மற்றும் உள்ளே தாக்குதலில் ஈடுபட்டவர்களும் சென்ற வாரம் கைது செய்யப்பட்டனர். இரட்சகர், குழப்பம் விளைவித்த காரணத்திற்காகச் சிறையில் பூரண உயிருடன் இருக்கும் பொழுது, எதிர் கூறப்பட்ட சிலுவையில் தேவி இறப்பு நாள் சந்தடியின்றி வந்து போனது.



சிலுவையில் அறைதல் இல்லை;
அருள் சகோதரன் கிறிஸ்ரொஸ்

பல பேர் ஒன்று சேர்ந்து, தற்கொலை செய்யத் திட்டமொன்று வகுக்கப்பட்டதா? உக்கிறேனில் மக்கள் பதற்றமாகத்தான் இருக்கிறார்கள். மாதமொன்றுக்கு 80 சதவீதமாக இருக்கும் பணவீக்கம் உயர்ந்து கொண்டே செல்கின்றது. அத்துடன் பொருளாதாரம் சுருங்குகின்றது. நாட்டின் கிழக்குப் பகுதி ருஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளை வைக்க விரும்புவதனால், பிரதேச முரண்பாடுகள் உள்நாட்டுக் குழப்பத்துக்கு வழிவகுக்கும் எனக் கருதப்படுகின்றது. உக்கிறேனின் குடியேற்றவாத முன்னாள் தலைமை நாடான ருஷ்யாவின் தூண்டுதலிலே, வெள்ளைச் சகோதரர்கள் இயங்குகிறார்கள் என்றும் கீவில் பேசப்படுகின்றது. இவர்களின் வேதம், உக்கிறேனின் ஜனாதிபதி லியோனிட்கிறாவ்சுக்கைச் சாத்தானின் சிஷ்யனாக வர்ணிக்கிறது.

ருஷ்யாவிலிருந்து இக்குழு அங்கத்தவர்கள் உக்கிறேனுக்குள் வருவதைத் தடுக்க வேண்டும் என ருஷ்யாவிடம் உத்தியோக பூர்வமாக வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. சோவியத் இராணுவத்தில் உளரீதியான யுத்தமுறைத் திட்டங்களிற் செயலாற்றும்போது, யூரி கிரிவனோகோவ் மக்களைத் தூண்டிச் செயற்படவைக்கும் தனது திறனைக் கற்றார் என, உக்கிறேனின் உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு அமைச்சு அதிகாரிகள் சென்ற வாரம் மறைமுகமாகக் கூறினர். கீவில் அமைந்த சிபெற்றிக்ஸ் கல் நிறுவனத்தில் (சிக்கலான இலத்திரனியல் கணிக்கும் கருவிகளையும்) மனித நரம்புத் தொகுதியையும் ஒப்பீட்டு அடிப்படையில் கற்று, மூளை செயற்படும் தன்மையை அறிதல், ஒருவரைமயக்கித் தன்வசப்படுத்தும் கலையையும், மனத்தின் செயற்பாட்டை மாற்றி அமைக்கும் மருந்துகளைப் பற்றியும் மூன்று வருடங்களாக யூரி கிரிவனோகோவ் ஆராய்ச்சி செய்தார் என அமைச்சின் பேச்சாளர் ஒயெக் மசென்கோ கூறினார். இதை அந்நிறுவனம் மறுத்தது. ''அவர்கள் மறுப்பார்கள்; அவரின் ஆய்வுகூடம் இரகசியமானது மொஸ்கோவில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் அது இருந்தது'' என்று மசென்கோ கூறுகிறார்.

1990 ஆம் ஆண்டு இச் சகோதரத்துவம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு சக்திவாய்ந்த வசியத்தை கிரிவனோகோவ் பரப்பியிருக்கிறார். மதக்குழுவின் அங்கத்தவர்கள், அவர்கள் கூறும் 150,000 எண்ணிக்கையிலும் மிகக்குறைவாகவே உள்ளவர்கள். புதிதாகச் சேரும் போது, சடங்கு ஒன்றிற் பங்கு பற்றி 'ஜோர்தான் நதியின் நீர்' எனப்படும் ஒரு கஷாயத்தைப் பருகுகிறார்கள். இது பசியின்மையையும், அமைதியில்லாப் பதற்றத்தையும், கூறியதைக் கேட்டுச் செயற்படக்கூடிய தன்மையையும் அவர்களுக்கு ஏற்படுத்துகின்றது என அறியப்படுகின்றது.

வெளியார் எவரும் இவர்களுடன் நெருங்கிக் கதைக்க முயன்றால், கற்சிலை போன்று விநோதமாகவும் பேசுகிறார்கள். மரினா ரிஸ்விகள் என்ற பெயருடைய, முன்னாள் தொழிற்சாலைச் செய்திப் பத்திரிகை நிருபரான தனது மனைவியை, அவளே இரட்சகர் என்ற மனோநிலையை அவர் மீது ஏற்படுத்தினார் எனக் கீவில் உள்ள அதிகாரிகள் கூறுகின்றனர். அவளின் உயிர்மீட்புத்தினம் என விளம்பரப்படுத்திய நவம்பர் 14 ஆம் திகதி, நடமாடும் பிணத்தின் ஓய்வு நாள் என கீவ் மக்கள் மத்தியிற் பரவியது.

மோல்டோவாவில் இருந்து மொஸ்கோ வரைக்கும், விளம்பரப் படங்களில் வெண்ணிற அங்கியுடனும், தலைப்பாகையுடனும் காட்சியளிக்கும் றஸ்விகான், தானே மரியா தேவி கிறிஸ்ற்ரோஸ் என உறுதியாக நம்புகிறாள். இம்மாத முற்பகுதியில் கீவின் பழைமைவாத ஆண்டகையான மெற்றோபொலிற்றஸ் ஃபிலறெற், தேவியைக் கிறிஸ்துவின் எதிரி என இழிவுபடுத்தி வர்ணித்தார். புதிய ஏற்பாட்டின் கடைசி வெளிப்பாடு அண்மையில் உள்ளது எனத் தேவி கூறுவதை, இக்கண்டனம் ஆதரிக்கும் எனக் கருதப்பட்டதால், மதப்பீடத்தினால் இக்கூற்று வாபஸ் பெறப்பட்டது. இதே வேளையில், மதக்குழுவிற் சேர்ந்த பிள்ளைகளை மீட்டெடுத்து, அவர்களைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதற்கு 'மீட்பு' எனப்படும் குழு ஒன்றைப் பெற்றோர் ஏற்படுத்தினர். சகோதரத்துவத்துக்குப் பணம் சேர்ப்பதற்காகத் தமது உடைமைகளை விற்று வறுமையில் உழலுமாறு, தன்னைப் பின்பற்றுவோரைக் கட்டாயப்படுத்துவதாகவும் கிரிவனோகோவ் மீது குற்றம் சுமத்தினார்கள்.

## பகிரங்க அவமதிப்பு

பணம் பறிப்பு, மற்றும் தனது குழுவினரின் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவித்தது போன்ற குற்றச்சாட்டுகளின் பேரிற் கைது செய்யப்பட்டுப் பத்திரிகையாளர் முன் தோன்றிய பொழுது, கிரிவனோகோவ் பயங்கரமானவராகத் தோன்றவில்லை. தலைமயிர் சடையாகவும், உடை அழுக்குப்படிந்ததாகவும் இருந்தது. கைது செய்யப்படும் பொழுது, தலையில் ஏற்பட்ட காயத்தினால் இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. தனது மனைவி எல்லாம் வல்லவள் என்று திடமாகக் கூறிக்கொண்டிருந்தார்.

'உயிருள்ள தெய்வங்கள்' மீது குழுவினர் வைத்திருக்கும் நம்பிக்கையை அழிக்கும் நோக்குடனேயே, இப்பகிரங்க அவமதிப்பு நாடகத்தை உள்நாட்டு அமைச்சு மேடை ஏற்றியிருக்கலாம். சாத்தானின் வலையில் தான் வீழ்ந்திருப்பதாகவும், தானே கிறிஸ்துநாதரின் இரண்டாவது வருகை எனப் பைத்தியம் பிடித்தவர் போற் தேவி கத்திக் கொண்டிருப்பதாகவும் உள்ள வீடியோ நாடாவையும், இதே நோக்குடன் அமைச்சு வெளியிட்டது.

கொம்யூனிசத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்ட ஆன்மீக வெற்றிடத்தில், இவ்வகையான மதக் குழுக்களினால் இளம் சந்ததியினர் கவரப்படுகின்றனர். சென்ற வாரம் கீவ் புறநகர்ப் பகுதியில் அமைந்த பாழடைந்த குழந்தைகள் இல்லமொன்றிற் கைது செய்யப்பட்ட ஓர் இடத்தின் வெள்ளைச் சகோதரர்கள், தமது இரட்சகர் வருவதை எதிர்பார்த்து நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். தமது மதக் குழுவின் தோத்திரப் பாடல்களை மூன்று பிள்ளைகள் பாடினார்கள். வாடி வதங்கிய 19 வயதுக்குட்பட்ட இரு இளைஞர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஒருவர் கதிர் வீசியொன்றைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, தலையை முழங்கால்களுக்கு இடையில் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார். காவற்றுறையினர் ஒருவரால், மூன்று குழந்தைகள் கொண்ட குழுவிற்குத் தேவி கைது செய்யப்பட்டுவிட்டார் என்று கூறப்பட்டபொழுது, ஒரு குழந்தை முகத்தைச் சுழித்தது இன்னொன்று மேற்சட்டையினுள் முகத்தைப் புதைத்து அழுதது. ஏஞ்சல் என அழைக்கப்படும், கறுப்புத் தலைமயிருடைய 10 வயதாய குழந்தை நீண்ட நேரம் அமைதியாக இருந்த பின்னர், ''நான் மரியா தேவி கிறிஸ்ற்ரோசை விரும்புகிறேன். அவள் சாதாரணப் பெண்ணல்ல; அவள் எனது தாய். அவள்.....கடவுளே'' என்று கூறியது.

*நியூஸ் வீக், நவம்பர் 22, 1993.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருஷ்யா :-

# விளாடிமீர் சிறினோவ்ஸ்கி உருவில், ருஷ்யத் தேசியவாதம் மீண்டும் உதயம்

ருஷ்யா வல்லரசு நிலையில் இருந்து வீழ்ச்சியடைந்தாலும், அங்கு தேசியப்பற்றும், மீண்டும் ருஷ்யா உன்னத நிலையை அடையவேண்டும் என்ற ஆர்வமும் தணியவில்லை என்பதை, அண்மையில் நடந்த தேர்தல்கள் காட்டுகின்றன. ஒருவருக்கு ஒருவாக்கு என்ற அடிப்படையில் மேற்குலகில், நடக்கும் தேர்தல் முறை, ருஷ்யா தனது சரித்திரத்தில் காணாத ஒன்று. இன்றைய ருஷ்யாவைக் கட்டியெழுப்பிய பெருமை பேரரசன் பீற்றரையே சாரும்.

இவனுடைய ஒரே குறி, ருஷ்யாவை முதற்றர வல்லரசு ஆக்குவதும், ஆப்கானிஸ்தானை அடக்கி இந்தியச் சமுத்திரத்தில் காலூன்றுவதுமாகும். ஆட்சிமுறையும், சித்தாந்தமும் 1917 ஆம் ஆண்டு நடந்த பொதுவுடைமைப் புரட்சியுடன் மாறினாலும், பீற்றரின் கனவுகள் கோபச்சேவ் வரை கலையாமல் இருந்துள்ளன. மொங்கோலியாவில் இருந்து இமாலயப் பிரதேசம் வரை, ருஷ்ய மன்னர்கள் ஆண்ட நாடுகளை விடுதலை செய்யாமல், லெனின் போன்றவர்கள் ஆண்டார்கள் என்பது மறைக்க முடியாத சரித்திர உண்மை. ஒரு நூற்றாண்டு காலத்தின் பின், இமாலயத்திற்கு வடக்கே உள்ள நாடுகளும், 'பால்றிக் கடலோர நாடுகளும் சுதந்திரம் பெற்றுள்ளன என்பது அண்மைக் கால வரலாறு.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் என்று விட்டுக்கொடுக்க மனமில்லாமல், ருஷ்யத் தேசியவாதம் விளாடிமீர் சிறினோவ்ஸ்கி ( VLADIMIR ZHIRINOVSKY ) என்பவரின் லிபரல் ஜனநாயகக் கட்சிமூலம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. சென்ற வருடம் டிசெம்பர் மாதம் இறுதிவாரத்தில் புதிய ருஷ்யப் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபைக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. கீழ்ச்சபையின் பெயர் (DUMA) இந்தத் தேர்தலில் அதிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாவிட்டாலும், அமோகவெற்றி ஈட்டியதால் மேற்கூறிய சிறினோவ்ஸ்கியும், அவருடைய கட்சியும் உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளனர். இந்தக் கட்சியின் பெயர், அதன் கொள்கைகளுக்கு எதிரானவை; அதன் தலைவரின் இலட்சியங்கள் அப்படிப்பட்டவை. 450 அங்கத்தவர்கள் கொண்ட மேற்படி கீழ்ச்சபையில் சிறினோவ்ஸ்கியின் கட்சி பெற்றது 80 இடங்கள் மாத்திரமே. ஆனால் இவர் தேர்தற் பிரச்சாரக் கூட்டங்களிலும், வானொலி, காட்சி வானொலி போன்றவற்றிலும் உமிழ்ந்த சுடு சொற்கள் அண்மையில் ருஷ்யாவிலிருந்து பிரிந்த நாடுகள் மத்தியிலும் மேற்குலக நாடுகளின் கொள்கை வகுப்போர் மத்தியிலும் அதிர்ச்சியைக் கிளப்பியுள்ளன. காரணங்களைப் பிறிதோரிடத்தில் ஆராய்வோம்.



விளாடிமீர் சிறினோவ்ஸ்கி

முதலாவது உலகயுத்தத்தில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டதும், அந்த நாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டதும் நாமறிந்ததொன்று, இதன்பின், வைமார் அரசியற் சாசனத்தின்படி, ஜேர்மனியில் ஒரு மேற்குலகப்பாணி ஜனநாயக ஆட்சி நிறுவப்பட்டது. அந்த நேரத்தில், ஜேர்மனியில் பயங்கரப் பணவீக்கமும், உலகிற் செல்லாக் காசாகி விட்டோம் என்ற விரக்தி நிலையும் நிலவியது. சிறியதொரு கட்சியுடன் ஆட்சி மன்றத்தில் நுழைந்த அடொல்ப்ஹிற்லர் (ADOLF HITLER) நாட்டைக் கைப்பற்றி, இரண்டாம் உலக யுக்தத்தையும் தொடக்கி, உலகிற் பேரழிவை உண்டாக்கினார் என்பது வரலாறு. சரித்திரத்திற் புதியன ஒன்றும் இல்லை; பழையன மீண்டும் வருகின்றன என்பது முதுமொழி. சிறினோவ்ஸ்கியின் பேச்சுக்கள் ஹிற்லரின் எதிரொலி போல் இருக்கின்றன. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறினோவ்ஸ்கியின் பார்வையில் உலகம்

★ முழங்காற் படியிட்டு நிற்கும் ருஷ்யாவை, நான் நிமிர்ந்து நிற்கச் செய்வேன்

★ எங்களுக்குத் தேவையானதெல்லாம் மூன்று நாடுகளே: ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி இஸ்லாம் பரவுதலில் இருந்தும், சர்வதேசப் பயங்கர வாதத்தில் இருந்தும் உலகினைக் காப்பாற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயலை ருஷ்யா நிறைவேற்றும்.

ருஷ்யா தொலைந்ததுஎன இறுமாந்திருந்தோர் நடுங்குகின்றனர். ருஷ்யாவின் பிடியில் இருந்து தப்பி விட்டோம் என்று நினைத்தவர்கள் தடுமாறுகின்றார்கள். இன்று ருஷ்யாவில் வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், விரக்தி மனப்பான்மை யாவும் நிலவுகின்றன. தக்க தருணத்தில் சிறினோவ்ஸ்கியும் தோன்றிவிட்டார். இரண்டாம் உலகப் போரிலே அழிவைச் சந்தித்த நாடுகளும், குறிப்பாக யூத இனமும் கலங்கித் துடிப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை.

இனி சிறினோவ்ஸ்கி பேசிய பேச்சுக்களையும், கொள்கை விளக்கங்களையும் கவனிப்போம். கேட்போருக்குத் தக்கவாறு பேசுவதில் இவர் ஹிற்லரின் வாரிசு என்று சொல்லவேண்டும். வாய் வல்லமையும், மதிநுட்பமும் இவரிடம் நிறைய உண்டு. கற்றோர் மத்தியில் அடக்கமாகப் பேசும் இவர் தெருவிற் பொதுமக்கள் மத்தியில் வெகு அட்டகாசமாகப் பேசும் நிலைக்குச் சென்று விடுவார். ருஷ்யாவில் அந்நியரின் ஆதிக்கம் கூடிவிட்டது; இவர்களை வெளியேற்று; மீண்டும்; ருஷ்ய சாம்பிராஜ்யத்தைக் கொண்டுவா என்பது, இவருடைய மிகவும் புகழ்வாய்ந்த பல்லவி. 1867 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு விற்கப்பட்ட அலாஸ்கா (Alaska) மாகாணத்தை ருஷ்யாவுடன் மீண்டும் இணைக்க வேண்டும். போலந்து நாட்டைக் (Poland) கைப்பற்ற வேண்டும். பின்லாந்து (Finland) நாட்டுக்கும் இதைச் செய்யவேண்டும். தெற்கு ருஷ்யாவில் அண்மையில் தனிநாடு அந்தஸ்துப் பெற்ற நாடுகள் யாவற்றையும் மீண்டும் ருஷ்யாவுடன் ஒன்றுசேர்க்க வேண்டும். பால்ரிக் (Baltic) கடலோரம் உள்ள மூன்று ருஷ்யக் கொலனிகள் லற்வியா (Latvia) எஸ்தோனியா ( Estonia ) லிதுவேனியா (Lithunia) ஆகியவற்றை மீண்டும் மொஸ்கோவின் கீழ்க் கொண்டுவர வேண்டும்; ஜப்பானை அணுக்குண்டு போட்டு நிர்மூலமாக்கவேண்டும். ஜேர்மனி மீதும் தாக்குதல் நடத்தவேண்டும். என்பன இவரது கொள்கை. இவர் ஓர் அரசியற் கோமாளியென ஒதுக்க முடியாமல் இவர் தாக்கப் போவதாகக் கூறும் நாடுகளும், திருப்பி எடுக்கப் போவதாகக் கூறும் நாடுகளும், தங்கள் இறைமையைக் காப்பது எப்படி? என்று சிந்தித்த வண்ணம் உள்ளன. 6 மில்லியன் உயிர்களைப் பலி கொடுத்த யூதர்கள் இவர் பேச்சைக் கேட்டுக் கொலைகாரன் ஹிற்லர் உயிர்த்தெழுந்துவிட்டான் என்று கிலியடைந்துள்ளனர். இவருடைய இன்னுஞ் சில புண்படுத்தும் மொழிகளைக் கேளுங்கள்: வெள்ளை இனத்தவர் உலகிற் சிறுபான்மையினராகி விட்டனரே. இதைச் சும்மா விடக்கூடாது. வெள்ளையரைக் காக்க வேண்டும்; இஸ்லாமியர்களையும், ஆசியா நாட்டவர்களையும் இதற்காக நசுக்கவேண்டும். மஞ்சள் நிறத்தவர்களால் ஆபத்து; வெள்ளையனே விழித்து எழு! 450 மில்லியன் கொண்ட ருஷ்ய இனத்தை 2 மில்லியன் ருஷ்ய யூதர்கள் ஆளுகின்றார்கள்; இதை நிறுத்தவேண்டும் எமது நாட்டில் உள்ள சிறுபான்மையினரை, ஜேர்மனியில் யூதர்கள், அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA
... BRANCH LIBRARY



விற் சிவப்பு இந்தியர்கள் போல் ஒழிக்கவேண்டும். மேலும் நான் பதவிக்கு வந்து 2 மாத காலத்தில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு வருவேன். தேவையேற்படின், 100,000 மக்களைக் கொல்லவும் தயங்க மாட்டேன். இவர்களின் மரணத்தால் மிகுதி 350,000 மக்கள் நிம்மதி அடைவார்கள். இப்படிப் பேசியும், ''மைன் காம்ப்'' என்ற நூல் மூலம் தனது கருத்துக்களைக் ஹிற்லர் பரப்பியபோதும், சிரித்த வண்ணம் இருந்த உலகம், அவர் அதிகாரத்துக்கு வந்து செயற்படத் தொடங்கியவுடன் சிந்திய கண்ணீர் கொஞ்சநஞ்சம் அல்ல. அதனால் தான் சிறினோவ்ஸ்கி கூர்ந்து கவனிக்கப்படுகின்றார்.

ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் அவர்களுடைய நிலைப்பாடு என்ன? அவருடைய பதவியைக் கைப்பற்றுவதுதான், தமது நோக்கம் என்று சிறினோவ்ஸ்கி மறைவின்றிக் கூறிவிட்டார். மண்டியிட்ட நிலையில் உள்ள ருஷ்யாவைத் தூக்கி விட என்னால் மட்டுமே இயலும் என்கிறார் சிறினோவ்ஸ்கி. யெல்சின் எடுக்கும் பதில் நடவடிக்கை என்ன? இந்த வாசகத்தை சிறினோவ்ஸ்கி தேர்தற் பிரச்சாரம் முழுவதிலும் பயன்படுத்தி வந்துள்ளார். ஆனால் யெல்சின் இதை முறியடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. யெல்சின் விட்ட இமாலயத் தவறு என்னவென்றால் அவர் தேர்தற் பிரச்சாரக் காலத்தில் மக்கள் மத்தியில் ருஷ்யாவின் எதிர்காலம் பற்றி விளக்கிக் கூறத் தவறியமைதான். தான் ஒரு ஜனாதிபதி; பாராளுமன்றக் கட்சி அரசியலில் தான் பங்குபற்றக் கூடாது என்பது அவருடைய நிலைப்பாடு, மோசமடைந்துள்ள ருஷ்யப்பொருளாதாரத்தை அவர் உடனடியாக ஒன்றும் செய்ய முடியாதுதான் என்றாலும், முற்போக்குக்கட்சிகளுக்குத் தனது ஆதரவைக் கொடுத்துச் சிறினோவ்ஸ்கி போன்றோர் முன்னுக்கு வராமற் தடுத்திருக்கலாம். முற்போக்குக்கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையில்லை. அவை ஒன்றையொன்று மோத, பழைமை வாதக்கட்சிகள் வெற்றியடைந்துள்ளன. செலுத்தப்பட்டவாக்குகளில் 23 வீதத்தை சிறினோவ்ஸ்கியின் கட்சி பெற்றுள்ளது. அதிர்ச்சியூட்டும் விடயம் என்றாலும், யெல்சின் இந்தத் தேர்தலல் மாபெருந் தோல்வி அடையவில்லையென்று ஆறுதலடையலாம். பாராளுமன்ற அங்கத்தவர்களில் 35 வீதமானோர் முற்போக்கு வாதிகள் யெல்சின் அனுதாபிகள் எனலாம். வாக்காளப் பெருமக்களில் 58சதவீதமானோர் யெல்சின் கொள்கைகளுக்கு ஆதரவு நல்கியுள்ளனர். பாராளுமன்றத்தைத் தனது இராணுவத்தைக் கொண்டு தாக்கிப் பணியவைத்த யெல்சின், (உலக உலா-டிசம்பர் 1993 இதழ் பக்கம்-31) இம்முறை பேரம் பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். 1996 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் போது சிறினோவ்ஸ்கியைத் தனது பதவிக்கு எதிரியாகச் சந்திக்க வேண்டிய கஷ்டமும் யெல்சினுக்கு உண்டு. ஜூன் 1991 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் யெல்சின் முதலாவதாகவும், சிறினோவ்ஸ்கி மூன்றாவதாகவும் வந்துள்ளனர். அடுத்த தேர்தலின் முடிவை நினைத்துத் தான் யாவரும் மிரளுகின்றனர். வேகமான பொருளாதார நடவடிக்கைகளையும், சமுதாயத் திருத்தங்களையும் யெல்சின் கொண்டுவந்து மக்கள் ஆதரவைப் பெறவேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால், சிறினோவ்ஸ்கியோ ஒரு ஸ்திரமான பொருளாதாரக் கொள்கையையோ, சமுதாய நலமுள்ள திட்டத்தையோ இதுவரை வெளியிடவில்லை. அவர் சொற்சிலம்பம் ஆடி மக்களைக் கவர்ந்த வண்ணம் உள்ளார் என்பதுதான் உண்மை. எதிர்காலத்தில் யெல்சினும், சிறினோவ்ஸ்கியும் நேரடி மோதலில் இறங்க இதுவரை காலமும் நடுநிலையையும், அரசியற் கலவாமையையும் தனது கொள்கையாகக் கொண்ட ருஷ்ய இராணுவம் என்ன செய்யும் என்று இப்போது சொல்ல முடியவில்லை. ருஷ்ய உள்நாட்டு விவகாரங்களில் மேற்குலக நாடுகளின்-குறிப்பாக அமெரிக்காவின் தலையீடு கூடுதலாக இருக்குமென்று நாம் ஹேஷ்யம் கூறலாம். இத் தலையீடு எதிர்மாறான விளைவையும் ஏற்படுத்தலாம். ''ஜீ 7'' எனப்படும் ஜப்பான் உள்ளிட்ட பொருளாதார மேம்பாடுடைய ஏழு நாடுகள் ருஷ்யாவுக்குப் பெரும் பொருளாதார உதவிகளைத் தொடர்ந்தும் வழங்குவது உறுதி. இது தகுந்த பலனளிக்குமா? என்று இப்போது சொல்ல முடியாது.

## ருஷ்யப் பாராளுமன்றத்தில் அரசியல் கட்சிகளின் நிலை.

பதின்மூன்று அரசியற் கட்சிகள் போட்டியிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் எட்டு மாத்திரம் பலம் வாய்ந்தவை என்று கணக்கிடப்படுகின்றது. சிறினோவ்ஸ்கியின் லிபரல் ஜனநாயகக் கட்சி உட்பட, ஒரு கட்சியாவது அறுதிப் பெரும்பான்மை இடத்தைப் பிடிக்கவில்லை. பாராளுமன்றத்திற்கு வந்துள்ள கட்சிகளை முற்போக்குக் கட்சிகள் பிற்போக்குக் கட்சிகள் என்று, அவர்கள் கொள்கைகளை வைத்துக் கணிப்பீடு செய்யலாம். இந்த ரீதியில் அவர்கள் பாராளுமன்றத்தில் ஒன்றுகூடும் வாய்ப்புண்டு. 450 அங்கத்தவர்கள் கொண்ட கீழ்ச் சபைக்கு வாக்காளப் பெருமக்களால் 225 அங்கத்தவர்களும், மிகுதி 225 பேர்களும் ருஷ்யத் தேர்தற் சட்டத்தின்படியும், தமது கட்சிகளினாலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]



# சிறினோவ்ஸ்கியின் வாழ்க்கையும் ருஷ்யாவும்

ஜூன் 1991 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தல்வரை, இவரை யாரென்று ஒருவருக்கும் தெரியாது. இதிற் போட்டியிட்டு, நாடளாவிய கவனிப்பைப் பெற்றுள்ளார். இவருடைய தந்தை ஒரு யூதர் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. இதை மறுத்துள்ளதோடு, தனது யூத எதிர்ப்புக் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளார். ''சிறினோவ்ஸ்கியின் கழுகு'' ''சிறினோவ்ஸ்கியின் உண்மைகள்'' என்று, இரு பத்திரிகைகளை இவர் நடத்துகிறார். ''தெற்கு நோக்கி இறுதி ஊடுருவல்'' (LAST THRUST TO THE SOUTH) என்ற சுயசரித நூலை இவர் வெளியிட்டுள்ளார். இதில்தான், கசக்கஸ்தான் மாநிலத்திற் பிறந்ததாகவும், இளமைக் காலத்திற் பல இன்னல்களை அனுபவித்ததாகவும், அவை தனது அரசியல் வாழ்வில்உந்துசக்தியாக அமைந்தன வென்றும் தெரிவிக்கின்றார். இவர் ஒரு கோமாளியல்ல; மிகவும் சக்தி வாய்ந்த அரசியல்வாதி என்பதற்கு இந்த நூல்சாட்சி. தனது சிறு வயது வறுமையை, ருஷ்யாவின் தற்போதைய இழிநிலையுடன் ஒப்பிட்டுப் பெரும் அரசியல் இலாபம் சம்பாதித்துள்ளார். இதுவரை காலமும் அரசியல் மேடை இல்லாது தவித்தவருக்கு, ருஷ்யப் பாராளுமன்றம் நல்லதோர் அரங்கமாக அமைந்துள்ளது.

இவர் தனது பதினெட்டாவது வயதில் மொஸ்கோ மாநகருக்கு வந்துள்ளார். அங்கு இவர் முதலில் துருக்கி மொழியையும், பின்பு ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். அதன் பின்னர் மொழிபெயர்ப்பாளராகத் துருக்கியிற் கடமையாற்றினார். 1989 ஆம் ஆண்டளவில் மீண்டும் மொஸ்கோவிற்கு வந்துவிட்டார். கேஜீபி உளவுத்துறையுடன் இவருக்கு நெருங்கிய தொடர்புண்டு என்பது பலரின் கணிப்பு.

ஆனால், இவர் அதை மறுக்கின்றார். இவர் ஒரு 'வழக்கறிஞர்' ஆனால், இத் தொழிலில் இவர் பிரபலமடையவில்லை. இவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள், இவரே தயாரித்தவையாகத் தென்படுகின்றன. ஏனென்றால், 1991ஆம் ஆண்டிற்கு முன் இவரைப்பற்றி அறிந்தவர்கள் மிகக்குறைவு. இவருக்கு எப்போது திருமணம் நடந்த தென்பது தெரியவில்லை. ஆனால் மனைவியுடனும், ஒரு மகனுடனும் இவர் குடும்பம் நடத்துகின்றார். இப்போது மிகவும் உயர்வான சுகபோக வாழ்வு நடத்தினாலும், தான் ஏழைகளிலொருவன்; அவர்களின் பங்காளன் என்று மேடைகளிற் தவறாது குறிப்பிட்டு வருகின்றார். சுருங்கக் கூறினால், அரசியல் வாதிகளுக்குரிய சகல இலட்சணங்களும் இவரிடம் அமைந்துள்ளன எனலாம்.

## கட்சிகளின் நிலை பின்வருமாறு:-

ருஷ்யாவில் நடக்கும் அரசியல் மாற்றங்களுக்கு எதிரான கட்சிகள்;

அதாவது பிற்போக்குக் கட்சிகள் :-

| | | |
|---|---|---|
| லிபரல் ஜனநாயகக் கட்சி | :- | 78 உறுப்பினர்கள் |
| பொதுவுடைமைக் கட்சி | :- | 64 '' |
| விவசாயிகள் கட்சி | :- | 55 '' |
| | | 197 |

இவர்கள், பாராளுமன்றத்தில் ஒன்றாகச் செயற்படுவார்கள் என்பது, அரசியல் அவதானிகளின் கணிப்பு.

முற்போக்குக் கட்சிகளின் நிலை:- இவர்கள் அரசியல் மாற்றங்களைப் பெரிதும் விரும்புகின்றனர்.

| | |
|---|---|
| ருஷ்யாவின் தெரிவு (RUSSIA'S CHOICE) | 94 |
| யவ்லின்ஸ்கி கூட்டுக் கட்சிகள் | 28 |
| ருஷ்ய ஒற்றுமைக் கட்சிகள் | 22 |
| ஜனநாயக மாற்ற இயக்கம் | 08 |
| | 152 |

வேறு உதிரிக் கட்சிகளின் நிலை

| | |
|---|---|
| சுயேச்சைகள் | 27 |
| ருஷ்யப் பெண்கள் கட்சி | 24 |
| ஜனநாயகக்கட்சி | 18 |
| சமூகக்கட்சி | 18 |
| தீர்மானம் இல்லாதோர் கட்சி | 08 |
| சுய கௌரவக்கட்சி | 03 |
| ருஷ்ய எதிர்காலக் கட்சி | 03 |
| | 101 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு.

# பொறிக்குள் அகப்பட்டுள்ள கொக்கேயின் உற்பத்தியாளர்

எழுதியவர்
சஜுஃட்டாவிலிருந்து
— லோரா லோப்பெஸ் —

றியோ ஹுஃவல்லகா நதியின் கரைக்கு அப்பால் மிகத் தூரத்தில், சேற்றில் அமைந்துள்ள தமது குடியேற்றத்தை சஜுஃட்டா (சனத்தொகை 4,900) மக்கள் நட்பின் பட்டினம் என்றழைக்க விரும்புகிறார்கள். ஆனால், சென்ற மாதம் ஒரு சனிக்கிழமை இவர்களின் அமைதி குலைந்தது. கட்டுமான வேலைத் தொழிலாளி என்று தன்னை அறிமுகப்படுத்திய புதிதாக வந்த ஒருவனுடன், உள்ளூர்வாசி ஒருவருக்கு மது பருகிய பின் விவாதம் ஒன்று ஏற்பட்டது. கட்டுமானப் பணியைப் பற்றி அதிகம் தெரியாத இவனைப் பற்றி, ஊர் மக்களுக்கு முன்னரே சந்தேகம் இருந்தது. கொக்கா இலைப் பசை போன்ற சுத்திகரிக்காத கொக்கேயின் ஆக மாற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன், இவன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகள் செய்ததை அறிந்திருந்தார்கள். அன்று இவனின் நடத்தை அச்சுறுத்தலாக இருந்ததினால், மக்கள் பாதுகாப்பு ரோந்துப் படையை அழைத்தார்கள். அவர்கள் வருமுன், சனக்கூட்டத்தினுள் கிறனேட் ஒன்றை எறிந்து விட்டு ஓடி விட்டான். நால்வர் கொல்லப்பட்டனர்.

பல நாட்களுக்குப் பின், சிவந்த மண்ணால் மூடப்பெற்ற புதைகுழிகளுக்கு அருகாமையில் அப்பட்டினத்தின் மக்கள் கூடி, இக்கடைசியாக நடந்த தாக்குதலைப் பலமாகக் கண்டித்து, எதிர்ப்பதாகச் சபதம் எடுத்தார்கள். வருடமொன்றிற்கு 40,000 கிலோ கிராம் கொக்கேயினை, கீழ் ஹுஃவல்லகா பள்ளத்தாக்கிலிருந்து கொலம்பியாவுக்கு ஏற்றுமதி செய்யும் கொலம்பியா நாட்டவனும், ''எல் மினிஸ்ற்றோ'' என அழைக்கப் படுபவனும், போதை வர்த்தக ஜாம்பவானும் ஆகிய வால்டோ வார்காஸ் என்பவனின் கட்டளையின் பேரிலே இத்தாக்குதல் நடைபெற்றது என மக்கள் நம்புகிறார்கள். அவனுக்குச் சவால் விடும் செய்தியொன்றைப் பட்டினத்தின் தலைவர்கள் அவனுக்கு அனுப்பினார்கள். சுகாதார ஊழியரும், சுயபாதுகாப்பு ரோந்துப் படையின் நிறுவுநருமான றேயெஸ் சௌறின் ஷப்பியானா, ''போதைப் பொருள் கொண்டு செல்லப்படும் பாதைகளை அமைப்பவர்கள் சஜுஃட்டா மக்களை அடக்க முடியாது'' என்று கூறுகிறார். ஆனால் இவ்வீரமுள்ள சொற்கள் உண்மையை மறைக்கின்றன. அமெரிக்கா தலைமை தாங்கிய, அதிக செலவை ஏற்படுத்திய பத்து வருடப் போதைப்பொருளுக்கு எதிராகப் பெரு நாட்டில் நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டத்தின் பின்னரும், உலகின் 60 விதம் பதனிடப்படாத கொக்கா இலையைப் பெரு நாடு உற்பத்தி செய்கின்றது. 1980 ஆம் ஆண்டு 10.000 ஹெக்ரறிலிருந்து இன்று 129,100 ஹெக்ரயருக்குப் பயிர் செய்யப்படும் பரப்பு உயர்ந்துவிட்டது. வருடமொன்றுக்குப் பதனிடப்படாத பசையின் ஏற்றுமதி 2 பில்லியன் டொலரிலும் கூடிவிட்டது.

**போதைப் பொருளுக்கு எதிரான திட்டங்களிற் பல மில்லியன் பணம் செலவழித்தும், போதை வர்த்தகத்தின் பொருளாதாரம் இன்னும் பலமாகவேயுள்ளது.**

எம். ஆர். ரி ஏ, மற்றும் ''ஷைனிங் பாத்'' ஆகிய இடது சாரி கெரில்லாக்களின் ஊடுருவலை அண்மைக் காலங்களில் சஜுஃட்டா தடுத்துவிட்டது. ஆனால், வேறு இடங்களில் இலை நோயும், தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரமாகியபோதும், புதிய இடங்களைத் தேடி 1989 ஆம் ஆண்டு போதை வர்த்தகர்கள் முழுப்பலத்துடன் இங்கே வந்தபோது, அவர்களைத் தடுக்க முடியாமற் போய்விட்டது. சட்டத்திற்குக் கீழ்படியாமையும், வாழ்க்கைச் செலவின் உயர்ச்சியும், போதைப் பொருள் வர்த்தகத்திற்குப் பின்னே வருவதனால், கொக்கா இலை உற்பத்தியாளர்கள் இத் தொழிலிலிருந்து விலக விரும்புகிறார்கள். ஆனால், வேறு பயிர்ச் செய்கைக்கு அரசாங்க உதவி அரிதாக இருப்பதனால், பட்டினி தவிர வேறு வழி இல்லை. இதற்கு எதிர்மாறாக. எல் மினிஸ்ற்றோ போன்ற போதைப் பொருள் ஜாம்பவான்கள் உத்தரவாதமுள்ள சந்தையை ஏற்படுத்தி, பொருள்களைப் பெறத் தரகர்களை அனுப்பி, பொது வேலைத்திட்டங்களுக்கு முன்னரே பேசித் தீர்மானிக்கப்பட்ட சதவீதப் பங்களிப்பை வழங்குகிறார்கள்.

இதன் பெறுபேறு:— கீழ் மற்றும் மத்திய ஹுஃவல்லகா பள்ளத்தாக்கிலும், ஏன்? சமூகத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் சஜூட்டானிலும், 200,000 விவசாயிகளிற் குறைந்தது 90 வீதம் ஆனோர் கொக்கா இலை உற்பத்தி செய்கிறார்கள். குடிசைக் கைத்தொழிலாகவும், போதைப் பொருள் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள், பதனிடப்படாத இலையின் விலை சென்ற காலங்களிலும் பார்க்க மிகக் குறைந்த விலையான கிலோவிற்கு 3 டொலருக்குக் குறைந்ததினால், அநேக உற்பத்தியாளர்கள் மண்ணெண்ணெயும், சல்பூரிக்கமிலமும் மணம் வீசும் தற்காலிகத் தொழிற் கூடங்களில் இலையைப் பதனிடப்படாத பசையாக மாற்றுகிறார்கள். 100 கிலோகிராம் கொக்கா இலையிலிருந்து பெறப்படும் ஒரு கிலோ பசையின் விலை 100 டொலருக்கும் 500 டொலருக்கும் இடையில் உள்ளது. ''கொக்கா இப்பொழுது விவசாயம் மட்டுமல்ல; அது கைத்தொழிலாகவும் மாறிவிட்டது'' என லீமாவிலுள்ள வளர்ச்சிப் படிப்பும், முன்னெடுத்தலும் மையத்தின் ஆராய்ச்சியாளர் றாவுல் கொன்சாலேஸ் கூறுகிறார்.

''அன்டீஸ் மலையின் கிழக்குப் பக்கச் சரிவுகளில் அமைந்துள்ள 200 இரகசிய விமானம் இறங்கு பாதைகளிலிருந்து, கொக்காப் பசை வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வாறு கொண்டு செல்லப்படும் இடைப்பிரதேசத்தில், எல்லைப்பட்டினமான பல்மப்பம்பா அமைந்துள்ளது. இங்கே ஆயுதந் தாங்கிய பட்டின வாசிகள் கொக்கா உற்பத்தி செய்வதையும், வியாபாரம் செய்வதையும் ஒத்துக் கொள்கிறார்கள். வெளி நாட்டவர்கள் எம்மை குற்றவாளிகளாகக் கருதுகிறார்கள். ஆனால், நாங்கள் தான் பாதிக்கப்படுகிறோம். கொக்கா பயிர்ச் செய்கையை நிறுத்த விரும்புகிறோம். ஆனால், எமக்கு மாற்றீடாக வேறு பயிர்களும், கைத்தொழிலும் தேவை. நாம் இதைத் தனித்துச் செய்ய முடியாது'' என, அப்பிரதேசத்தின் சுயபாதுகாப்பு ரோந்துப்படையின் உப தலைவர் ஜோர்ஜ் செக்கே கூறுகிறார். வளர்ச்சிப் பணிகள் தாராளமாக உள்ளன. ஆனால் லீமாவிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் போதிய பணம் கிடைப்பதில்லை.

கொக்கேயின் வர்த்தகத்தை நிறுத்த முடியாததற்கு வேறு காரணமும் உண்டு. தினமும் விமானமூலம் நடைபெறும் கடத்தலை நிறுத்துவதாகக் கூறிக்கொண்டு, பல்மப்பம்பா எல்லையில் பெருவிய இராணுவம் ஒரு தற்காலிகத் தளத்தை அமைத்தது. அடையாளமிடப்படாத விமானங்களில் பதனிடப்படாத பசைப்பந்துகளை இராணுவம் ஏற்றுவதை, உள்ளூர் வாசிகள் கண்டதாகக் கூறுகிறார்கள். இவ்வர்த்தகத்தில் இராணுவமும் கூடிய பங்கைப் பெற விரும்புவதாக மக்கள் சந்தேகிக்கிறார்கள். இராணுவம் சட்ட நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாகவும், பணமாகவே பெருந்தொகைப் பணத்தை இராணுவ அதிகாரிகள் வங்கிகளில் இடுவதாகவும், அப்பிரதேச அதிகாரிகள் சிலர் குற்றம் சுமத்தியுள்ளார்கள். ''போதை வர்த்தகத்தைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு, இராணுவம் முன்னர் பணம் பெற்றது. இப்பொழுது தாமாகவே போதைப் பொருளைப் பதனிடுகிறார்கள்'' என, மதிப்புக்குரிய பெருவிய நாட்டுப் பாதுகாப்பு ஆய்வாளர் கூறுகிறார். நிறுவன ரீதியாக இராணுவம் போதை வர்த்தகத்தில் ஈடுபடவில்லை என, ஹூவல்லகா முன்னணியின் அவசர வலயத்தின் படைத்தளபதி பிறிகேடியர் ஜெனரல் எடுபாடோ பெலிடோ கூறுகிறார்.

எம். ஆர், ரி. ஏ. மற்றும் ''ஷைனிங் பாத்'' ஆகிய இரு கெரில்லா இயக்கங்களைப் பாதுகாப்புப் படையினர் சென்ற வருடம் அடக்கியதால், போதை யுத்தத்திற்காகக் கூடுதலான துருப்புக்களையும் மூலவளங்களையும் ஜனாதிபதி அல்பேட்டோ ஃபியூஜிமோரி உபயோகிக்கக்கூடியதாகவிருந்தது. என்னும் வருடமொன்றிற்கு நாட்டிற்கு வெளியே அனுப்பப்படும் 650 தொன் என மதிக்கப்படும் கொக்கேயின் பசையில், 1993 ஆம் ஆண்டு ஆறு தொன் மட்டுமே பாதுகாப்பு அதிகாரிகளாற் கைப்பற்றப்பட்டது. சான்ரா லூசியாவில் அமைந்துள்ள போதைப் பொருளுக்கு எதிரான தளத்திலிருந்து, சென்ற வருடக் கடைசியில் அமெரிக்காவும் விலகும் பொழுது, பிரச்சினை மேலும் மோசமடையலாம். அதேவேளையில் விடாக்கண்டங்களான போதைப் பொருள் வியாபாரிகள், மூன்று வருடங்களுக்கு முன் கொக்கா பயிர்ச்செய்கையாளருக்குப் பொப்பி விதைகளை விநியோகம் செய்து, எதிர்கால அறுவடையில் ஒரு புதிய பயிர் ஹெரோயின் கிடைக்குமா? என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

டைம், நவம்பர் 8, 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியா கற்பிக்கும் பாடங்கள்

அண்மையிலே சோமாலியாவின் தலைநகரான மொகடிசுவின் தெருக்களில் குழப்பக் காரர்களின் கும்பல் ஒன்று, உற்சாகக் குரல் எழுப்பிய வண்ணம் ஐ. நா. வைச் சேர்ந்த அமைரிக்கப் படைவீரன் ஒருவனின் பிணத்தை இழுத்துச் சென்றது. இந்தச் செயலானது ஐ. நா. வின் அமைதிப்பணியின் பிணிவாய்ப்பட்ட படிமம் என்றே கொள்ளலாம். நம்பிக்கையைப் புதுப்பிக்கும் நடவடிக்கைக்கு என்ன நேர்ந்து விட்டது என்று உலகமே இதனைக் கண்டு அதிசயித்தது. அமைதி காத்தல் என்ற குறிக்கோளையும், சட்டத்தைப் புனருத்தாரணம் செய்தலாகிய தீர்மானத்தினையும், நாட்டின் பசியைப் விரட்டுதலாகிய விருப்பத்தையும் கொண்டது இந்த அமைதிக்குழு. ஆனால், தனித்த ஒரு படைத்தலைவனைப் பிடிப்பது என்னும் ஆழவேரோடி நின்ற அமெரிக்கக் கருத்தே, ஆக்கபூர்வமான தலையீட்டின் முழுச் செயற்பாடுகளுக்கும் முட்டுக்கட்டையானதா? இதிலும் கூடிய முக்கியத்துவம் யாதெனில், பன்முகம் கொண்ட அமைதி காக்கும் குழுக்களுக்குப் புத்தெழுச்சி பெறும் இன்றைய உலக நியதியோடு ஒத்துப்போக முடியாத குழப்பம் நேர்ந்து விட்டதா என்பதே.

**ஐ. நா. அமைதிக் குழுக்கள் தெளிவான இலக்குகளையும், காலவரையறையையும் கொண்டனவாய் அமைய வேண்டும்.**

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

பிரதேசக் குழப்பங்களாகிய நெருப்புக்குள் நெய்யிட்டு வளர்க்கும் செயலினை வல்லாதிக்கச் சக்திகள் மேற்கொள்ளாதவரை முரண்பாடுகள் தடுத்து நிறுத்தக் கூடியவையே என்பதுதான் பனிப்போரைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நம்பிக்கையாகும். பன்முகப்பட்ட செயற்பாடுகளின் அடித்தளத்தில் சிறுபோர்களையும், முரண்பாடுகளையும் எளிதாகவும், விரைவாகவும் முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று உலகில் நம்பிக்கை உருவாகி வருகின்றது. ஆனால் இச் செயற்பாடுகள் சில வேளைகளில் கட்டுப்படுத்தும் வலிமையுடைய வல்லாதிக்க சக்திகளின் தலையீடு இடம் பெறாதபோது குழப்பங்களாய் விசுவரூபம் எடுக்கும் நிலையும் உருவாகலாம். பொஸ்னியாவிற் பொதுவான ஒரு சமாதான நிலைப்பாடு ஏற்படுவதை ஐ. நா. ஏற்காததும், ஹெய்ற்றியில் ஆபத்தான சூழ்நிலை ஒன்றுக்குள் அது தன்னை நுழைத்துக் கொண்டதும், சென்ற நோக்கம் நிறைவேறு முன்னரே அங்கோலாவிலுள்ள வாபஸ் பெற்றதுமாகிய செயல்கள் அமைதி காத்தலுக்குக் குறுக்கே நின்று வரும் மற்றைய பிரச்சினைகள் எனலாம்.

ஆனால், சோமாலியாவின் அமைதி காக்கச்சென்ற குழு இத்தகைய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கவில்லை. உள்நாட்டில் நிலவிய உட்பகைகள் நாட்டாட்சிக்குக் குந்தகம் விளைத்தன. வயல்கள் விளைச்சலின்றித் தரிசுபட்ட நிலை. மழையும் பொய்த்து விட்டது. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடந்த டிசம்பரில் 28,000 படையினரை அனுப்பிவைக்கு முன்பே, சோமாலியர் பட்டினியால் செத்துக்கொண்டிருந்தார்கள். சர்வதேச மாநாடுகள் நடத்திப் போரில் ஈடுபட்டிருந்த குழுக்களிடையே சமாதான உடன்பாட்டை ஏற்படுத்தவோ, நீண்ட கால நடவடிக்கைக்கான திட்டம் வகுக்கவோ கால அவகாசம் போதியதாய் இருக்கவில்லை. இவ்வாறான சூழலில் நம்பிக்கைப் புனர்நிர்மாண நடவடிக்கை சோமாலியாவில் குறிப்பிடத்தக்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியையே அளித்தது. சோமாலியாவிற் சட்ட ஒழுங்கின் வெளித் தோற்றத்தை உருவாக்கியதோடு, சோமாலியரின் பசிப்பிணியைப் போக்கவும் ஐ.நா. வால் முடிந்தது.

ஆனால், மொகடிசுவில் நிகழ்ந்தது வேறு கதை. அங்கு குருதி பெருக்கும் சண்டைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழுக்களின் ஆயுதங்கள் தொடக்கத்திலேயே களையப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது நிகழவில்லை. சோமாலியருக்கு உணவு வழங்கிப் பசிப்பிணி போக்கிய சந்தர்ப்பத்தில் ஐ. நா. படைகளின் புகழ் உச்சக் கட்டத்தில் இருந்ததைப் பயன்படுத்தி ஆயுதக் களைவை மேற்கொண்டிருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் ஜூன் 24இல்பாகிஸ்தானிய அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம். இவ்வாறான படுகொலைக் காட்டுமிராண்டித்தனம் தண்டனைக்குரியதே என்பதில் ஐயம் இல்லை. துரதிர்ஷ்டவசமாக, தண்டனைக்குரியோரைக் கண்டு பிடித்து ஒறுப்பதை விடுத்து ஐ. நா. படைத்தலைமை கொலைகளுக்குப் பின்னணியிலிருந்த குழுத் தலைவரான திரு. முகமது அயிடிட்டைப் பிடிப்பதிலேயே தன் கவனம் முழுவதையும் செலுத்தியது. இந்தப் பயன்விளையாச் செய்கையால் மொகடிசுக் குடி மக்களில் இருந்து ஐ. நா. படை அந்நியப்பட்டுச் செல்வாக்கிழக்க நேர்ந்தது. ஓர் இரவிலேயே ஐ. நா அமைதிப்படையினர் கொடியவர்களாயும், கொலையாளிகளாயும் தம்மை இனங்காட்டிவிட்டனர்.

ஆனால், இதற்கு முற்றிலும் மாறானவையாக, கம்போடியாவில் மேற்கொள்ளப்பட்ட அமைதி நடவடிக்கைகள் அமைந்தன. பிரதான இலக்குகள் எந்தச் சூழ்நிலையிலும் விலகிச் செல்லவில்லை. ஒழுக்க நியதியும் பேணப்பட்டது. கெரில்லாப் படையினரின் வன்செயல்கள், தேர்தலை நடத்த அவர்கள் ஏற்படுத்திய தடைகள் என்பவற்றைப் பெரிதாகப் பொருட்படுத்தி நடவடிக்கையில் இறங்கவில்லை. ஐ. நா. படையினர், தொண்டர் என்போர் பயங்கரவாதிகளால் தெரிந்தெடுக்கப்பட்டுக் கொலைக்குள்ளான போதும் ஐ. நா. படை அமைதி காத்தது. அமைதி காத்தலில் இவ்வாறான மரணங்கள் தவிர்க்கவியலாதவை, இயல்பானவை என்றே கருதப்பட்டன. கம்போடிய, சோமாலியப் படை வீரர்களும் படைப்பயிற்சி பெற்றிருந்தனர். சாவிழப்புக்களுக்குத் தயாரில்லாத படையினரைப் படையிலே சேர்ப்பதில்லை என்பது முதலும் முடிவுமாகக் கைக்கொள்ளப் பட்ட நிலையில், படையினர் மரண அச்சமின்றிச் செயற்பட்டார்கள்.

சோமாலியாவின் அமைதி நடவடிக்கைகள் எவையாயினும் அவை யதார்த்த பூர்வமானவையாகவும், காலவரையறைக்குட்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். புஷ்ஷின் குறுகிய கால நடவடிக்கை, கிளின்ரனால் மார்ச் 31 வரை நீடிக்கப் பட்டுள்ளது. அமைதி குலைவுற்றுக் கிடக்கும் ஒரு நாட்டில் மீளவும் அரசியற் சகஜ நிலை உருவாக்கப் பட வேண்டுமானால் நீண்டதொரு உரிமைக் கட்டளையும், மூலவளங்களும் வேண்டப்படும். அந்த அளவிற்கு ஐ . நா . தயாராக இல்லாவிடில் விரைவிற் பெறக்கூடிய தீர்வு ஒன்றோடு இதுவரை பெற்ற நடவடிக்கைகள் பன்முகப்பட்ட சிக்கல்களைப் புதிதாக உருவாக்கி மிகப் பெரிய அளவு மரணத் தொகையினை அதிகரிப்பதாகவே முடியும்.

---

பசுமை இயந்திரங்கள்

## கவர்ச்சிபோக மின்சாரம் வருகிறது

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்மோட்டார்க்கண்காட்சியின் 30-வது காட்சி அண்மையில் நடைபெற்றது. சென்ற ஆண்டுகளில் போன்ற எழிலான ஆடம்பரமான வாகனங்கள் அதிகமாக இருக்கவில்லை. சூழற் பாதுகாப்பே அதிகம் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது. இருந்தும் சூழலை மாசு படுத்தாதவையும், சிக்கலான குடும்பப் பாவனைக்கான வண்டிகளும் அத்தனை கவர்ச்சி பெறவில்லை. அவற்றைப் பார்க்க 10 வீத வருகையாளர்கள் தான் வந்தனர். அந்தக் காட்சியில் மின்சார மோட்டார்க் கார்களே அதிகம் கவர்ச்சிபெற்றன. 1998 ஆம் ஆண்டில் கார் உற்பத்தி நிறுவனங்கள் தமது தயாரிப்பில் 2 வீதமானவற்றைப் புகைக்காத வண்டிகளாக உற்பத்தி செய்யவேண்டும் என்று கலிபோர்ணியாவில் இயற்றப்பட்டுள்ள சட்டம் ஒன்றிற்கு அமைவாக நடக்க கார் உற்பத்தி நிறுவனங்கள் இப்பொழுதே ஆயத்தங்கள் செய்கின்றன. இந்த ஆண்டு சுசுகி மோட்டார் கோப்பரேசன் தான் சென்ற ஆண்டு செலவு செய்ததிலும் அரைவாசியே கண்காட்சிக்குச் செலவு செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை அரசாள்கிறது

நான்கு வருடங்களுக்கு முன்னர் தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி கிளாக் தனது பதவியை ஏற்றுக் கொண்ட சிறிது காலத்தில் இரு உத்தர வாதங்களை அளித்தார். கறுப்பு இன மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையும், வெள்ளை இனத்தவர்களுக்கு அவர்களைப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றும் உத்தரவாதமும், வெள்ளையர்களுக்கு ரத்து அதிகாரமும் அவரது உள்ளக்கிடக்கையாக இருந்தது. அதே வேளை அவரது உதவியாட்கள் உலகம் முழுவதும் சிறுபான்மையினருக்கு விசேட உரிமைகள் வழங்கும் சட்ட அமைப்புக்களைத் தேடினர். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதும் நெல்சன் மண்டேலாவினது செல்வாக்குக் குன்றிவிடும் எனக் கிளாக் உத்தேசித்தார். ஆனால் தனது திட்டங்களை நலிவடையக் கறுப்புப் பண மக்களது பூரண ஆதரவுடன் மண்டேலா கறுப்பின் பெரும்பான்மை ஆட்சி பலவீனப் படுத்தப்படாத நிலையில் உறுதியாக நின்றார்.

சிறிது சிறிதாக டி கிளாக்கினுடைய அதிகாரப் பங்கீட்டுத் திட்டங்கள் தவிடு பொடியாகின. சென்ற வாரம் எதைத் தவிர்க்க நினைத்தாரோ அதற்குக் கறுப்பினப் பெரும்பான்மை அரசுக்குச் சம்மதமளித்தார். 2 வருட காலப் பேச்சுவார்த்தையின் பின்னர் டி கிளாக்கும், மண்டேலாவும், வேறு 17 அரசியற் தலைவர்களும் அடுத்து வரும் ஜனாதிபதிக்கு முழு அரச அதிகாரங்களையும் வழங்கும் புதிய சட்ட அமைப்பை ஏற்றுக் கொண்டனர். இது அநேகமாக மண்டேலாவாகத்தானிருக்கும். பிரதம நிர்வாகி என்ற ரீதியில் அவர் தனது 2 துணை ஜனாதிபதிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும். ஆனால் அவர்களை அலட்சியம் செய்யவும் பிரதம நிர்வாகியினால் முடியும். இது 3 ஜனாதிபதிகளதும் இசைவு என்ற டி கிளாக்கினது திட்டத்திலிருந்து மிக வேறுபட்டது. பல கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மந்திரிசபையொன்று கொள்கை பற்றிய இறுதித் தீர்மானங்களை மூன்றில் இரண்டு, அல்லது நாலில் மூன்று பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்ற டி கிளாக்கினது திட்டமும் அவரால் கைவிடப்பட்டது, ஆனால் அதற்குப் பதிலாகக் கறுப்பினத்தவர் பெரும் பான்மையாகவுள்ள மந்திரிசபை ஏனையோரது இசைவைப் பெற வேண்டுமாயினும் அது சாதாரண பெரும்பான்மையுடன் செயற்பட முடியும். ஆனால் அந்த உடன்படிக்கையின் முக்கிய விடயம் யாதெனில், வெள்ளையினத்தவருடன் அதிகாரப்பங்கீடு இன்மையை ஈடு செய்ய அவர்களுக்குச் சட்டபூர்வமான முறைசாரா உத்தரவாதங்களைக் கொடுக்க ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அளித்த ஒப்புதலாகும். இறுதியில் ஆபிரிக்க தேசியக் காங்கிரசைக் கட்டுப்படுத்த வெள்ளை இனத்தவருக்கு ரத்து அதிகாரம் அவசியமில்லை என்பதை மண்டேலா டி கிளாக்கிற்கு நம்பகமாக அறிய வைத்தார்.

## மிகப் பெரிய வெற்றி

அரசில் விசேஷ அந்தஸ்தை வெள்ளையருக்குக் கொடுக்க மண்டேலா மறுத்த போதிலும், ஒரு ஜனநாயக அரசைக் கட்டியெழுப்ப அவர்களது உதவி வேண்டும் என்பதை அவர் அறிவார். அடுத்த அரசாங்கத்திற்கு வர்த்தகம், நிர்வாகம், பாதுகாப்புச் சேவை ஆகியவற்றில் பெரும் பங்கு வகிக்கும் வெள்ளை இனத்தவரது பகைமை ஏற்பட்டால் அது அராஜகமாகும் என்பதும் உறுதியாகும். உலகம் முழுவதும் இந்தப் புதிய சட்ட அமைப்பிற்காக மண்டேலாவைப் புகழ்கிறது. மண்டேலா சொல்கிறார்: ''நாம் ஒரு சகாப்தத்தின் முடிவை அண்மித்து விட்டோம். இதுவரை வாக்குரிமை மறுக்கப்பட்ட பல இலட்சக் கணக்கானவர்கள் வாக்களிக்கப் போகிறார்கள். ஏன், எனது குறுகிய வாழ்க்கையில் நானும் முதன்முறையாக வாக்களிக்கப் போகிறேன்.'' வெள்ளையின மக்களின் எதிர்ப் புரட்சியொன்றிலிருந்து புதிய சட்ட அமைப்பைக் காப்பாற்ற அவர்

### தென் ஆபிரிக்கா

**புதிய சட்ட அமைப்பில் மண்டேலாவும் ஆபிரிக்க தேசியக் கொங்கிரசும் அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும், வெள்ளை இனத்தவர் பெருமளவு உத்தரவாதங்களையும் பெற்றுள்ளனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்கிறார். விற்வாற்றேஸ்ன்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் நிபுணர் ரொம் லொட்ச் சொல்வதாவது: ''அரசியல் நிர்வாகம் பொருளாதாரத்தோடு அகன் தொடர்பு அன்றாடச் செயற்பாடுகள் சம்பந்தமாக இன்னும் தொடர்ந்து செய்யப்படவேண்டியவை பலவுள.''

தமது இல்லங்களிலிருந்து வெள்ளையினத்தவராற் துரத்தப்பட்ட கறுப்பின மக்கள் ஒரு விசேட அரசாங்க சபையொன்றிற்கு முறையிட்டு நஷ்டஈடு பெற புதிய உரிமைகள் மசோதா ஒன்று வழி வகுக்கிறது. மேலும் சித்திரவதைகளைத் தடை செய்வதும் தடுக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகளைப் பேணுவதும், சுதந்திரமாக எவரும் தென் ஆபிரிக்கா எங்காகிலும் தனக்கு விரும்பிய இடத்திலும் வசிக்கும் உரிமையும் உரிமைகள் மசோதாவினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வுரிமைகள் மசோதா நிலச் சொந்தக்காரர்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் அவர்களது சொத்துக்கள் நட்டஈடு வழங்கப்படாமல் கவரப்படமாட்டா எனவும் உத்தரவாதம் அளிக்கிறது. தேசிய செல்வத்தில் பெரும்பாலானது வெள்ளை இனத்தவர்களிடமேயுள்ளது. மேலும் பட்டின சபைகளில் இவ்வளவு குறைந்த தொகையினராக இருந்தாலும் வெள்ளை இன மக்களுக்குக் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுள்ள இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. உத்தியோகபூர்வமற்ற முறையில் நாட்டின் பாதுகாப்புப்படைப் பொலிஸ் பகுதி, நிர்வாக சேவை ஒரு குறிப்பிடத்தக்க காலத்திற்கு வெள்ளையரின் வசமேயிருக்குமெனவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இது தேசிய காங்கிரசினால் நாட்டின் உறுதிப்பாடான ஸ்திரத் தன்மைக்கு வழங்கப்பட்ட உரிமையாகும். பணிப்பாளர் யூ ஜீன் நியாற்றி சொல்கிறார்: ''எதையும் செய்வதற்கு இந்




## புதிய தென்னாபிரிக்காவின் அரசியற் புவியியல்

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், ஆட்சியமைப்பதற்காக 9 மாகாணங்களில் குறைந்தபட்சம் 6 மாகாணங்களையாவது கைப்பற்றி புதிய அரசியற் சாசனத்தை வரையும். இணைந்த கட்சிகள் 2 மாகாணங்களைக் கைப்பற்றலாம். ஆனால் தேசியக் கட்சியால் ஒரேயொரு மாகாணத்தை மட்டுமே கைப்பற்ற முடியும்.

### 1. வட மேற்கு

பிரதானமாகப் பிளாட்னம், தங்கச் சுரங்கங்கள் உள்ள இடம். இங்குள்ள வெள்ளையர்களும், கறுப்பர்களும் போபுதற்சுவானா என்னும் தாயகத்தை விரும்புபவர்கள்.

### 2. வட கேப்

இங்கு ஆபிரிக்க இனத்தவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். அத்துடன் கலோறெட்ஸ் (Coloreds) எனப்படும் கலப்பு இனத்தவரும் வாழ்கின்றனர். ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸிற்கும், தேசியக் கட்சிக்கும் சம அளவிலான ஆதரவு உள்ள இடம்.

### 3. மேற்கு கேப்

கலோறெட்ஸ் (Coloreds) இன மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரேயொரு மாநிலம். இங்கு ஆ. தே. காங்கிரஸ் வெல்லக்கூடிய சாத்தியம் அதிகமுள்ளது.

### 4. கிழக்கு கேப்

நீண்ட காலமாக ஆ. தே. காங்கிரஸின் பலம் வாய்ந்த கோட்டையாகத் திகழ்வது. நாட்டின் மிக வறுமையான பகுதியும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒரேஞ் சுதந்திரக் குடியரசு

இங்கு தான் நாட்டினுடைய மிகப் பெரிய தங்கவயல்கள் உள்ளன. அத்துடன் பெருமளவிலான பண்ணைச் செய்கையும் இங்கு இடம்பெறுகின்றது. இது பெட்ரொக் ஆபிரிக்காவின் மாநிலமாகும்.

6. ஹவாசூலூ/நேட்டால்

இன் காத்தா சுதந்திரக் கட்சியின் தலைவர் புத்தலகேசியினுடைய தாயகம். இங்கு இந்தியர்களும், ஆங்கிலம் பேசும் வெள்ளையர்களும் வாழ்கின்றனர்.

7. கிழக்கு ரான்ஸ்வால்

இது பெருமளவில் பண்ணைச் செய்கை நடைபெறும் இடம். இங்குள்ள வெள்ளையர்கள் 'அப்பதையிட்' எனும் இன ஒடுக்கு முறையை ஆதரிப்பவர்கள்.

8. வடக்கு ரான்ஸ்வால்

பண்ணைச் செய்கை அதிகமாகவுள்ள மாநிலம், டி கிளார்க்கினுடைய அரசியற் சீர்திருத்தத்தை ஆதரிக்கும் ஒரேயொரு மாநிலம்.

9. PWV பிரதேசம் (பிறிற்றோறியா. விற்வற்றேர்ஸ் ரான்ஸ். வால்றையாங்கிள்)

நாட்டினுடைய அரசியற் பொருளாதார மையம். கடந்த காலத்தில் கறுப்பர்கள் மீதான வன்முறையை வெளிப்படுத்திய இடம்.

மக்களின் தெரிவு

கடந்த செப்ரெம்பர் மாதம் நாடு முழுவதும் ஒரு கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. அதன் முடிவுகள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் | — | 58 வீதம் |
| தேசியக் கட்சி | — | 13 ,, |
| சுதந்திரக் கூட்டணி | — | 11.5 ,, |
| ஜனநாயகக்கட்சி | — | 2.4 ,, |
| பான் ஆபிரிக்கக் காங்கிரஸ் | — | 2 2 ,, |
| கொம்யூனிஸ்ட் கட்சி | — | 0.6 ,, |
| அசானியன் மக்கள் இயக்கம் | — | 0.6 ,, |

தச் சாராரின் ஒத்துழைப்பு அவசியமாகும். இத்தகைய உத்தரவாதங்கள் சட்ட அமைப்பில் இருப்பதிலும் பார்க்க வெள்ளையர்களுக்கு அதிகம் வழங்கப்பட்டிருக்கிறது எனப் பொருள்படும்.'' நெல்சன் மண்டேலா பேச்சுவார்த்தையிலீடுபட்ட தலைவர்களுக்குத் தேசிய காங்கிரஸ் தனித்து ஆள்வது என்ற திட்டம் கொண்டிருக்கவில்லை என்பதைச் சூசகமாகத் தெரியப்படுத்தியுள்ளார். உதாரணமாக நிதி மந்திரி, ஒரு வெள்ளைஇனத்தவர். மண்டேலாவின் கீழ் அதே பதவியை வகிப்பார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. அதிக அளவிலான வெள்ளையின தென் ஆபிரிக்கர்கள் புகிய விடுதலை இயக்கம் ஆள்வதற்கு ஆயத்த நிலையிலுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். நாட்டின் சுரங்கக் கம்பனிகளையும், வங்கிகளையும், ஏகபோக உரிமை படைத்த தொழில் ஸ்தாபனங்களையும் முற்று முழுதாகத் தேசிய மயமாக்குவது என்ற நிலை மலையேறிவிட்டது.

கறுப்பின அதிகாரிகள், வெள்ளையினத்தவரின் பல்வேறு திறமைகளும் நாட்டிற்கு அவசியமானவை என உறுதியளிக்கின்றனர். பொருளாதாரக் கொள்கையில் கறுப்பின மக்களின் பொருளாதார வளர்ச்சியுடன் சமநிலைப் படுத்த வேண்டும். அது கறுப்பின மக்களின் கல்வி, வைத்திய, வீட்டு வசதி சம்பந்தமான நலனைப் பாதிப்பதாயிருந்தாலும் நாட்டின் சுபிட்சமே, மேலாக மதிப்பிடப் படுகிறது. தனது அரசியலில் வெள்ளையினத்தவர் பங்கு பற்ற அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசினாலும் அண்மையில் தனது அரசில் தானும், டி கிளாக்கும், வெள்ளையின தீவிரவாத தலைவர் கொன்ஸ் விஜெரலும் சேருவர் என்று மண்டேலா கூறியுள்ளார். இன்னும் சிலர் டி கிளாக்கினால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி முறை, கறுப்பின பெரும் பான்மைக்குத் தடையாக அமையும் என்றும், மாகாணங்கள் தமது சொந்த சட்ட அமைப்புக்களை வரையும் என்றும் மத்திய அரசாங்கம் பிரதான அம்சங்களான வரி போன்றவற்றைக் கவனிக்குமெனவும் வாதிப்பர். பேச்சுவார்த்தையில் பங்கு பற்றியவர்கள் மத்திய அரசுக்கும், மாகாணங்களுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி அதிக அக்கறை செலுத்தவில்லை. எவ்வளவு உறுதியுடன் மாகாண அரசுகள் மத்திய அரசிடமிருந்து அதிகாரங்களைக் கவர முயற்சிக்கின்றன என்பதிலே யாவும் தங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறது. நேற்றால் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானி மேர்வின் புறொஸ்ற் சொல்கிறார்; ''ஆரம்பத்திலிருந்தே மாகாணங்கள் வலுவுள்ள அரசுகளைக் கொண்டதாயிருந்தால், கூடிய சமஷ்டி அந்தஸ்துள்ள அரசமைப்பொன்றைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டியிருக்கும். ஆனால் தேசிய காங்கிரஸ் விரும்பியது ஒற்றை ஆட்சி முறையே, அது அதனைப் பெற்றுக் கொண்டது.'' இறைமை பற்றிய சந்தேகங்கள், மத்திய அரசுக்குச் சாதகமாகவே அமையும். ஐக்கிய அமெரிக்க சட்ட அமைப்பு போலல்லாது தென் ஆபிரிக்க சட்ட அமைப்பில் மாகாண அரசுகளுக்கென வரையறைவாகச் சொல்லப்படாத அதிகாரங்கள் யாவும் மத்திய அரசுக்கேயுரியதாகக் கருதப்படும். எப்படியாயினும் அநேகமான மாகாண சபைகள் கறுப்பின அங்கத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும். சூலு ஆபிரிக்காளர் தேசியவாதிகளுக்கு இச்சட்ட அமைப்பு பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது. அவை பெரிய அளவிலான சுதந்திரம் பெற்ற பாதுகாப்பு வலயங்களை எதிர்பார்த்தன. ''எதிர்ப்பின் ஆரம்ப நாள் இன்றாகும்'' என்கிறார் தீவிரவாதத் தலைவர் றெறேன் யூஜின் பிளான்சே. கறுப்பின மக்களும் சட்ட அமைப்பை எதிர்பார்க்கின்றனர். சூலு இனத் தலைவர் மாங்கோசுது புத்தலேசி சென்ற ஜூலையில் பேச்சுவார்த்தையிலிருந்து வெளி நடப்புச் செய்தார். இவர் மிகத் தீவிரமான எதிர்ப்புக்கு உறுதி பூண்டுள்ளார். குவா சூலுவில் சுய பாதுகாப்பிற்கு வேண்டிய, இராணுவப் பயிற்சி அளிக்குமாறு அதிகாரம் வழங்கியுள்ளார். குவாசூலு அவரது கோட்டையாகும். ''மண்டேலாவும் டிகிளாக்கும் செய்தவை வரலாற்றில் அர்த்தமற்றவையாக்கப்படும்'' என்கிறார். அவர் பலகட்சிகள் மகாநாட்டிலிருந்து 4 மாதங்களுக்கு முன்னர் வெளிநடப்புச் செய்த பின்னர் புத்தலேசி, கறுப்பின, வெள்ளையின வலதுசாரிக் கட்சிகளை உள்ளடக்கிய சுதந்திர இயக்கம் ஒன்றைக் கட்டியுள்ளார். இச் சுதந்திர இயக்கம் புதிய சட்ட அமைப்பை ஏற்க மறுப்பதுடன் அடுத்த ஏப்ரலில் நடைபெறவுள்ள தேர்தலையும் பகிஷ்கரிப்பதென உறுதியளித்துள்ளது. வரவிருக்கும் செயற்பாடுகள் இவ்வியக்கம் எவ்வளவு தூரம் தமது எதிர்ப்பை நிலைநாட்டும் என்பதை நிரூபிக்கும். இதன் செயற்பாடுகள் பகிஷ்கரிப்பு என்ற விடயத்தில் சிதைவுறும் என சில அவதானிகள் கூறுகின்றனர். பெருந்தொகையான வெள்ளையர்களைப் புத்தலேசி தன்பக்கம் இழுத்துக் கொண்டிருக்கிறார். தனது கோட்டையாகிய நேற்றால் மாகாணத்தில், சூலு இனத்தவரின் ஆதரவை அவர் பெற்றுக்கொள்ளலாம். அவர் தேசிய மட்டத்தில் 10 சதவீதவாக்குகளையும், நேற்றால் மாகாண ஆட்சியையும் பெறக் கூடும். இன்காதா சட்ட அமைப்பை எதிர்த்தாலும், தேர்தலில் பங்குபற்றியே தீரும் இச் சுதந்திர இயக்கத்தைச் சேர்ந்த ஏனைய குழுக்கள் இதனால் அடையப் போகும் இலாபம் பெரிதல்ல என நம்புகின்றனர். 5 சதவீதமான வாக்குகளே தமக்குக் கிடைக்கும் என அவை நம்புகின்றன. இப்போதைக்கு அறிய முடியாதது யாதெனில், தீவிரவாதிகள், பயங்கரவாதத்தின் மூலம் தேர்தலைக் குழப்புவார்களோ என்பது தான். பலத்தைப் பிரயோகித்துத் தேர்தலை வெற்றிகரமாக நடத்துவது தேவைப்படுகிறது. அது தேசிய காங்கிரசுக்கும், தற்போதைய அரசுக்கும் இடையிலான தொடர்பின் அளவுகோலாக அமையும். துருப்புக்களை அனுப்புவது டிகிளாக்கினுடைய தீர்மானம் மாத்திரமன்று; ஜனநாயகத்தில் உள்நாட்டு யுத்தம் என்பதற்கு இடமில்லை. சென்ற வாரம் புதிய சட்ட அமைப்பிற்குக் கைச்சாத்திட்டபின் மண்டேலா கூறியதாவது: ''இவ் ஒப்பந்தம் தனக்கு இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிமையளிக்கிறது. இதன் பிரகாரம் இன்றுள்ள அரசுக்குச் சமாந்தரமாகப் பல கட்சி நிர்வாகக் கவுன்சில் ஒன்று செயற்பட்டுப் படைகளை உபயோகிப்பதை மேற்பார்வை செய்யும். டிகிளாக்கினுடைய தேசிய கட்சியும், தேசிய காங்கிரசும் வன்முறைகள் புதிய தேசம் அமைக்கப்படுதலைச் சிதைத்து விடும் என அஞ்சுகின்றன. சரியான பாதையில் புதிய அரசமைப்புச் செயற்படுமானால் அது எதிர்காலத்தை ஒளிமயமாக்கும்.''

*நியூஸ்வீக், நவம்பர் 29, 1993*

---

# யுத்தம் தவிர்க்க முடியாதது

36 வயதுள்ள ஈற்றன் மாக்ஸ், வேலையற்ற தொழில் நுட்பவியலாளர் தென் ஆபிரிக்காவின் நாட்டுப்புறத்தைச் சேர்ந்தவர். அரசியற்றுறையில் எவ்வித அனுபவமுமற்றவர். புதிதாக உருவாக்கப்பட்டு, அண்மையிற் கைச்சாத்திடப்பட்ட சட்ட அமைப்பை வெகுவாக எதிர்த்தார் மாக்ஸ். கடந்த மேமாதத்தில் வெள்ளையின தீவிரவாத இயக்கத்தில் இணைந்தார். இப்போது வேலையெதுவும் கிடைக்காத நிலையில், ஆபிரிக்க காங்கிரஸ் அதிகாரத்திற்கு வரும் நிலையில், வன்முறைக்கு ஆயத்தமானார் மாக்ஸ், ''யுத்தமொன்று வருகிறது. தேசிய காங்கிரஸ் எமது நிலங்களைக் கவருமானால் பிரச்சினையொன்று உள்ளது'' என்கிறார். 1990 ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பொழுது வலதுசாரி வெள்ளையினத்தவர் தமது தனிநாட்டுக் கோரிக்கை கவனத்திற் கொள்ளப்படாவிடின் ஆயுதமேந்தும் நிலை பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் டிகிளாக்கும், மண்டேலாவும். தயாரித்த அரசியலமைப்பில் அத்தகைய ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. இறுதித் தீர்மானங்கள் பூர்த்தியாகும் தறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் இவ் வியக்கத்தின் தலைவர் கொன்ரன்ட் கிஜியோன் தென் ஆபிரிக்கா உள்நாட்டுப் போர் ஒன்றின் நுழைவாயிலுள்ளதாக மீண்டும் எச்சரித்தார். இத்தகைய பழைய நிலையை விரும்பும் இயக்கத்திற்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்பதல்ல; ஆனால் கடந்த 18 மாதங்களாகப் பிரிவினைவாதம் முன்னைநாள் பாதுகாப்புப் படைத் தளபதி வில்யோனின் தலைமையில் வலுப்பெற்று வருகிறது. அண்மையில் நடத்தப்பட்ட கணிப்பொன்றில் இவரது தலைமையிலான பிரிவினை வாதிகள் டிகிளாக்கினுடைய வெள்ளையினத்தவரின் தேசியக் கட்சியை விடச் செல்வாக்கில் முந்தி நிற்பதாகத் தெரிகிறது. 60 வயது நிறைந்த இந்த முன்னை நாள் இராணுவத் தளபதி, ஆபிரிக்காளர் இயக்கத்தில் கணிசமான அளவு செல்வாக்குப் பெற்று வருகிறார். பல அவதானிகள் இவர் தொடர்ந்து தனது செல்வாக்கை இயக்கத்தில் நிலைநாட்ட முடியுமா என ஐயுறுகின்றனர். அயர்லாந்தில் நடைபெறுவது போன்ற பயங்கரவாதத்தை பல நூற்றுக்கணக்கான வெள்ளையினத்தவர் கட்டவிழ்த்து விடலாம் என்று டிகிளாக்கின் உதவியாளர் ஒருவர் அஞ்சுகிறார். இராணுவம் தகவற்றுறையினூடாக ஆயுதப்புரட்சியொன்று நடைபெறக்கூடிய நிலையுள்ளதா? என்பதை ஆராய்கிறது. விஜியோனும், புத்தலேசியும் மற்றும் விடுதலை இயக்கத் தலைவர்களும் கடந்த வாரம் அரச தரப்புடன் ஆலோசனை நடத்தினர். இந்த ஐந்து விடுதலை இயக்கங்களும் புதிய அரச அமைப்பை ஏற்பர் என்றும், அடுத்து வரும் ஏப்ரல் நடைபெறவிருக்கும் தேர்தலிற் பங்கு பற்றுவர் எனவும் நம்பப்பட்டது. ஆனால் விடுதலை இயக்கங்கள் மாகாண சபைகளுக்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் எனக் கோரியதனால் பேச்சுவார்த்தை முறிந்தது.

போராட்டம் ஆரம்பித்தால், விஜியோன் தான் ஓர் அளவிற்கு பொறுப்பாளியாவார். தென் ஆபிரிக்க இராணுவத்தினாற் பயிற்சி அளிக்கப்பட்டதும், பொலிஸ் படைக்கு உதவியாக உள்ளதுமான படைப்பிரிவுடன் இணையுமாறு விஜியோன் அண்மையில் தனது ஆதரவாளர்களைப் பணித்துள்ளார். பல ஆயிரக்கணக்கான வெள்ளை இன விவசாயிகள் இவ்வழைப்பிற்கு இணங்கினர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சியும், வேறு ஆயுதப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. ஈற்றன் மாக்ஸ், சென்ற 14 ஆண்டுகளாக இத்தகைய படைப்பிரிவொன்றைச் சார்ந்துள்ளார். தேவை ஏற்படின் உபயோகிக்க தனது ஆட்களுக்குத் துப்பாக்கிகளை வழங்கி மாக்ஸ் தயார் நிலையிலுள்ளார்.

''இந் நாட்டில் சில சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன, வலது சாரிக்கட்சிகள் கூட்டாகச் சேர்கின்றன; எனது சமயத்திற்கும், கலாசாரத்திற்கும், பாஷைக்குமாக நான் போர் புரிவேன்'' என்கிறார் மாக்ஸ். தென்ஆபிரிக்க அரசை உடைக்க மாக்ஸ் போன்றவர்களால் இயலாது. ஆனால் அவர்கள் முயற்சிக்கமாட்டார்கள் என எண்ணுவது பேதைமை.

நியூஸ்வீக், நவம்பர் 29, 1993

அங்கோலா:

## தென் ஆபிரிக்காவிடம் வாடகைக்குப் பெற்ற துப்பாக்கிகள்

அங்கோலா அரசிற்கு விரைவில் தான் யுனிற்றாக் கிளர்ச்சியாளர்களுடன் நடத்தும் யுத்தத்தில் புதிய ஒரு தோழமையாகத் தென் ஆபிரிக்கப் படையினர் உதவலாம். அங்கோலா யுத்தத் தந்திரோபாயங்களிலும் ஆயுதப் பிரயோகத்திலும் நிபுணத்துவம் கொண்ட 500 தென் ஆபிரிக்கப் போர் வீரர்களைச் சேவைக்கு அமர்த்தித் தரும்படி கேட்டுள்ளது. இதன்படி தென்னாபிரிக்க இராணுவத்தில் முன்பு கப்டன் தரத்தில் இருந்த ஈபன் பார்லோவைச் சேவைக்கு அமர்த்தியுள்ளது என்று இது பற்றிய விடயம் அறிந்த தென் ஆபிரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பார்லோவும் அவருடைய படையினைச் சேர்ந்தவர்கள் பலரும் அங்கோலா யுத்தத்தில் ஈடுபட்ட அநுபவம் உள்ளவர்கள். அவர்கள் முன்பு யுனிற்றாக் கிளர்ச்சியாளர்களுக்குச் சார்பாக இடதுசாரி அரசாங்கத்தை அங்கோலாவில் வீழ்த்தப் போரிட்டனர்.

இப்படியாக அவர்கள் மாறி நின்று செயற்படக் காரணம் என்ன? எல்லாம் நல்ல வருவாய் தான். தற்சமயம் அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒப்பந்தம் 40 மில்லியன் அமெரிக்க டொலர் அளவு பெறுமதி வாய்ந்ததாகும். மாதம் ஒன்றுக்கு 2,500 முதல் 10,000 வரையான அமெரிக்க டொலர் சம்பளத்தில் தென்னாபிரிக்கப் பாதுகாப்புப் படையில் உயர் பயிற்சி பெற்ற பல படை வீரர்களைப் பார்லோ திரட்டியுள்ளார்.

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானால் தொடர முடியுமா?

## உயர் தொழில் நுட்பம்:

**கைத்தொழில் கொள்கையும், நெஞ்சுரமும் ஒன்றிணைந்து ஜப்பானிய மின்னியல் நிறுவனங்களை 80 களில் உலக முதன்மையாளர்களாக்கிய அவையே 90 களில் தோல்விக்கு வழிகாட்டுகின்றன.**

1988 இல் சியோல் ஒலிம்பிக் போட்டிகளின் போது அவை தோற்றமளிக்க ஆரம்பமாகிற புகையிரத நிலையங்கள், விளையாட்டுத் தளங்கள், அஞ்சல் நிலையங்கள் என்பவற்றிலெல்லாம் அவை காட்சிக்கு வைக்கப்பட்டன. தட்டையான எதிர்காலத்தையே காட்டும் தொலைக்காட்சித் திரைகள், ஜப்பானின் அடுத்த தொழில் நுட்ப சாதனை என்று கூறத்தக்க சுறுசுறுப்பே-வாழ்க்கை எனும் தோற்றத்தைக் காட்டின. ''உயர் விவரணத் தொலைக்காட்சிகள்'' என்று அவை அழைக்கப்பட்டன. காட்சிப்பொருள்கள் வெகு தொலைவிலில்லாத எதிர்காலத்தின் தோற்றங்களாக இருந்தன. அடுத்து வரும் பத்து ஆண்டுகளில் அனைத்தையுமே அவர்கள் முன் கொட்டிக் குவிக்கப்போகும் ஜப்பானின் மின்னியல் கைத்தொழிலின் உலக முதன்மைத்துவத்தின் படைப்புக்கான இயந்திரங்களை வாங்குவதற்கு ஜப்பானிய மக்களைத் தூண்டும் வசீகரக் காட்சிகளே அவையாகும்.

இன்று அதாவது ஆறு ஆண்டுக்ளின் பின்னர் ''உயர் விவரணத் தொலைக்காட்சிகள்'' -எச் டீ வீ- தனிமையானவையல்லாத, குறிப்பிடத்தக்க உதாரணங்களாகியுள்ளன. எதற்கு? எதிர்த்து நிற்க முடியாத ஜப்பானிய முதன்மைத்துவத்துக்கல்லாமல் பல திறப்பட்ட உயர் தொழில் நுட்பக் கைத்தொழில்களின் பின்னடைவுக்கு அவை எடுத்துக்காட்டாகி விட்டன. 1990களில் உயர் மட்டப் பொருளாதாரத்தைக் கொண்டு செல்லும் பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் இந்தப் பின்னடைவுக்குள் அடங்குவார்கள். கணனிகள், நுண் முறை இயந்திரங்கள், மிருதுவான பாண்டங்கள், தொலைத்தொடர்பு என்பனவெல்லாம் இதனுள்ளடங்கும். இந்த



அநேகமான ஜப்பானிய தொழில் நுட்ப நிறுவனங்கள் முதன் முறையாக வெளியிலிருந்து உள்ளே பார்ப்பனவாகவேயுள்ளன. எவ்வாறு உள்ளே செல்லப்போகிறார்களென்பது தெளிவாக இல்லை.

நான்கு பொருள்களும் செய்திப் பெருவீதிகள் என அழைக்கப்படும். அந்த மின்னியல் மார்க்கத்தில், களியூட்டும் வர்த்தகத்தோடிணைந்து, முன்னேறிய உலகத்தின் உயர் தொழில்நுட்பச் சந்தையில் பாரிய நம்பிக்கையான பல் திறன் பட்டகைத் தொழில்களைக் காணமுடியும். 1995 ஆம் ஆண்டு அளவில் அதன் பெறுமதி, 25,00கோடி டொலர் அளவில் இருக்கும். இது 1990 ஆம் ஆண்டினதிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகமானது. தற்போதைய ஜப்பானிய நுகர்வோர் மின்னியற் கைத்தொழிலிலும் பார்க்க மூன்று மடங்கு பெரியது.

ஜப்பான் தற்பெருமையடையும் அதன் வீழ்ச்சியடையும் கைத்தொழில் அபிவிருத்தி முறைக்கு எச் டீ வீ தக்க சான்றாகும். நடைமுறையிலுள்ள தொழில் நுட்பத் திறனில் அதிகரித்த அபிவிருத்தி செய்வதில் அது வியப்பூட்டுவதாயுள்ளது. அதே வேளை, தொழில் நுட்பத் திறனில் ஒரு சந்ததி பின்னடைந்துள்ள நிலையில் அதைக் கடந்து எட்டிப் பாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுவையின் மகாராசன்!

ஈழத்தின் இனிய வளங்கள் கொண்டு,
உங்கள் நாவின் இன்பத்திற்கு,
எமது தரமான தயாரிப்புக்கள்.
நவீன உணவு பதனிடல் தொழில் நுட்பத்துடனும்,
கவனத்துடனும் தயாரிக்கின்றோம்.

★ மென் பானங்கள் ★ கோடியல்
★ ஜாம் ★ சுவைக்கூட்டு
★ ஊறுகாய் ★ சொக்லற்

மற்றும் இனிப்பு வகைகள்! அடே! வாயூறுது
யாழ். குடாநாடெங்கும் கிடைக்கும்.

*"ரேஸ்ட்லைன் தயாரிப்பு"*
**என்று கேட்டு வாங்குங்கள்!**

## ரேஸ்ட்லைன் தொழிலகம்

(தனியார்) வரையறுக்கப்பட்டது

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்:

---

*நீங்களும் பட்டதாரியாக விரும்புகிறீர்களா?*
*யாழ் மாவட்டத்தின் முன்னணி*
*விரிவுரையாளர்களை ஒருங்கிணைத்து*
*வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கான*
*(பேராதனை, யாழ் பல்கலைக் கழகம்)*
*விரிவுரைகள் நடைபெறுகின்றன.*

**A/L, O/L Spoken English**

வகுப்புகளும் நடைபெறுகின்றன

**உங்களையும் பட்டதாரியாக்கும்**
**தனித்துவமான நிறுவனம்**

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, ★ யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்தில் தரத்திலும் சுவையிலும்
தன்னிகரில்லாத நல்லெண்ணெய்
உற்பத்தியாளர்கள்

பரிமளா ஸ்ரோர்ஸ்

ஒருமுறை வாங்கிப் பாருங்கள்
சுவை புரியும்

**VSP** நல்லெண்ணெயின்
ஏகவிநியோகஸ்தரும் இவர்களே!!

# பரிமளா ஸ்ரோர்ஸ்

*26A, மானிப்பாய் வீதி, ★ யாழ்ப்பாணம்.*

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்புவரை
சகல நூல்களுக்கும் மற்றும் உங்களுக்குத்
தேவையான உயர் கல்விக்கான
நூல்கள், நாவல்கள் சஞ்சிகைகள்,
இலக்கிய நூல்கள் ஆகியவற்றை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

# பூபாலசிங்கம் புத்தகசாலை

4, ஆஸ்பத்திரி வீதி,
255, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவேண்டிய முறையில் வியப்புக் குறைந்தே காணப்படுகிறது. இன்றைய நிலையில் எச்டீரீவி தொடர்பான ஜப்பானின் தன்மை– விருத்தாந்தம்– ''காலங் கடந்த தொழில் நுட்பத்தையே'' பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறுகிறார். டோக்கியோவின் கிடர்பிபொடி நிறுவனத்தின் தொழில் நுட்பப்பகுப்பாய்வாளரான பீற்றர் வுல்வ் டோக்கியோவின் எச் டீ ரீ வி முயற்சிகளை மேற்பார்வை செய்யும் ஏறத்தாழ (அரச) பொதுத் தொலைக்காட்சித் தொடர் நிறுவனமான என் எச் கே யின் சிரேஷ்ட பொறியியலாளர் ரெற்சுவோ காவமோட்டோ, அதிகம் குறைத்து மதிப்பிடாது போயினும், ''எம்மைவிட அமெரிக்கா ஒரு படி முன்னேறியுள்ளது'' என்று ஒப்புக் கொள்கிறார்.

கடந்த பத்தாண்டின் தொடக்க காலத்தில் ஜப்பானின் தொழில் நுட்பக் குடியேற்ற நாடாகவந்து விடுவோமோ என்ற அமெரிக்காவின் அச்சம் கலைந்து, இப்போது அந்த நாட்டினதும், ஓரளவிற்கு ஐரோப்பிய நிறுவனங்களும் உலகின் ஒளிமயமான உயர் தொழில் நுட்பச் சந்தைகளை விமர்சனத்துக்குரிய வகையில் கையகப்படுத்தியுள்ளன. எதிர்பாராத விதமாக ஜப்பான் துரத்திப் பிடிக்கும் தனது பழைய பாத்திரத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. எண்மயத்தொழில் நுட்பம் தொலைக்காட்சி புள்ளிவிபரம், மூலவிடயம் என்பனவற்றை ஒன்றிணைக்கும் தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப் பட்டபின்னர், அதன் அதிவேக முன்னேற்றம், ஜப்பானைப் பின்னடையச் செய்துள்ளதோடு, அந்த நாட்டின் உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்கு இரண்டாவது இடத்திலேயே இருக்க வேண்டியுள்ளன. பின்னால் ஓடிக் கொண்டிருக்கக் கூடாத நேரம் இது. புதிய கைத்தொழில்களை உருவாக்குவதற்குத் தேவையான பாரிய முதலீடுகளைச் செய்வதற்கு இரண்டாவது உலகப் போரின் பின் முதல் முறையாக ஜப்பானில் நிலவும் பண முடை தடையாகவுள்ளது. நாடு முழுவதும் ஒளிமயக் கம்பிகளைக் கொண்டு இணைப்பதற்கு அடுத்த 20 ஆண்டுகளுக்கு ஏறத்தாழ 37,000 கோடி டொலர் (37 றில்லியன் யென்) தேவைப்படும் எனக் கணக்கிடப்படுகிறது. ''அமெரிக்காவில் போன்று செய்தித் தொடர்ப் பெருவீதி (இன்பமேஷன் ஹைவே) உருவாக்கும் பணியைத் துரிதப்படுத்துமாறு அரசைக் கோரிவருகிறேன்; அவர்கள் கவனிப்பதாயில்லை'' என்று கவலை தெரிவிக்கிறார் என். ஈ. சி. யின் தலைவரான ரடாஹிரோ செக்கிமோட்டோ.

என்ன நடந்தது? ஒரு காலத்தில் எவராலுமே வெற்றிகொள்ள முடியாதெனக் கருதப்படுமளவிற்குப் புதிய தொழில் நுட்பங்களில் முன்னணி வகித்த ஜப்பான் எப்படிப் போட்டியாளர்களுக்கு இத்துறையில் இடமளித்தது? திரும்பவும் தன் திடத்தைத் தக்கவைத்துக் கொள்ள ஜப்பானிய நிறுவனங்கள் எவ்வாறு தொடங்கப்போகின்றன? 1980–களில், அதிகாரத்திலுள்ளவர்களை ஒருபுறம் விட்டு, ஜப்பானிய நிறுவனங்கள் முன்னைய அமெரிக்க நிறுவனங்களைப் போல அப்போதுள்ள வெற்றியும், முதனிலையும் அசைக்க முடியாதவை என்ற புதினத்தாள்களின் போற்றுதலை அப்படியே நம்பி வாழ்ந்து விட்டனர் என்பதே இதற்கு விடையாகும். அமெரிக்காவில் போலவே அவர்களின் வெற்றி ஒரு திருப்தி நிலையையே ஏற்படுத்தி விட்டது. ''வேறு யார் யாரோ செய்த வேலைகளைத் திரும்பச் செய்து கொண்டிருந்ததில் சுகவாசிகளாக இருந்து விட்டோம்'' என்கிறார் மிற்சுபிசி மின்னியல் என்னும் நிறுவனத்தின் பிரதம மூலோபாயத் திட்டமிடலாளராகவுமுள்ள, அதன் நிர்வாக உபதலைவரான சுயோஷி ஹிராட்டா.

## பாரிய தவறு

கணனிகளைப் பொறுத்தமட்டில் ஐ பீ எம் மை மாதிரியாக வைத்தே வடிவமைத்துக் கொண்டனர். (ஒரே பெரிய விதி விலக்கு ரொஷிபா மட்டுமே) ஐ பீ எம் மை முந்தி விட்டால் தாமே முதற்தரமானவர்கள் என மந்தைகளைப்போன்று நினைத்தனர். இதனால் நடந்தது, ஐ பீ எம் விட்ட மாபெரும் தவறையே ஜப்பானிய கணனி உற்பத்தியாளர்களும் செய்தனர். பிரதான கட்டமைப்பிலிருந்து மேசையின் மேலுள்ள கணனி என்ற கடலளவு மாற்றத்தை அவர்கள் தவற விட்டுவிட்டனர். ஐ பீ எம் மில் அடித்தளம் விழ்ந்த போது அது பியூஜிற்சு, ஹித்தாச்சி அல்லது என் ஈ சி என்பவற்றுள் இது நல்ல செய்தியாக இருக்கவில்லை. எதிரிடை விளைவே ஏற்பட்டது. அப்பிள், கொம்பக் ஹியூபெற், பக்காட் போன்ற சக்திமிக்க நிறுவனங்களுக்கு இவற்றால், ஐ பீ எம் போலவே, ஈடுகொடுக்க முடியவில்லை. ஜப்பானிய அரசோ சிக்கல்களை அதிகரித்தது. சர்வதேச வர்த்தக, கைத்தொழில் அமைச்சின் நீண்டகால ஐந்தாவது சந்ததி ஆர் + டீ கருத்திட்டம் குறிப்பாக ஐ பீ எம் மையே இலக்குவைத்ததால் இந்தக் கைத்தொழிற்றுறையின் பிரதான கட்டமைப்பு முக்கியத்துவத்தையே அதிகரிக்கச் செய்தது. இதனால் தற்சுழற்சிச் சிலிக்கோன் பள்ளத்தாக்கின் நிறுவனங்களின் திறமைக்குச் சமமான நிறுவனங்கள் ஜப்பானில் இல்லாது போயின.

கைத்தொழிற் கொள்கையில் ஏற்பட்ட இந்தத்தோல்வி பல துறைகளுக்கு ஊறு செய்து விட்டது. வளர்ந்துவரும் கணனி– உலோகக் கைத் தொழிலில் சுய கணனிகள்– ஜப்பானிய நிறுவனங்கள் முடக்க நிலையை எய்திவிட்டன. டேற்றா குவெஸ்ற் என்ற சந்தைப்படுத்தலில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனத்தின்படி சுய கணனிகள் உற்பத்தி 3,700 கோடி டொலரையும் பிரதான கட்டமைப்பு வர்த்தகம் 2,600 கோடி டொலரையும் தம்மகத்தே கொண்டுள்ளன. இலாபமளிக்கத்தக்க மிருதுப் பொருள்கள் விடயத்தில் பிரதான கட்டமைப்பின் தனித்துவமான தகுதியுடைய முறைகளோடு ஜப்பானிய நிறுவனங்கள் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளன. உலகின் ஏனைய நாடுகளனைத்தும் ''திறந்த முறை'' களை நாடிப் போகின்றன. இவை சுய கணனிகளை ஒரே வலைப் பின்னலுக்குள் கொண்டு வருகின்றன. ஜப்பானின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்றரச் சுய கணனிஉற்பத்தி நிறுவனமான என். ஈ. சீ இப்போதுதான் தகுதியுடைய முறைமையைக் கைவிட்டுச் சுய கணனிகள் உற்பத்தியில் ஆர்வம் காட்டித் ''திறந்த முறை'' க்களத்துள் இறங்கியுள்ளது. உலோகக் கணனிக் கைத்தொழில், மிருதுக் கணனித்துறைகளில் பின் தங்கிவிட்ட ஜப்பானிய நிறுவனங்கள் பல்துறை உற்பத்திப் பொருள்களை நாடி நிற்கும். புதிய தோற்றப்பாடு கொண்ட பாரிய சந்தைத் தேவைகளை, அதுவும் சுய கணனிகளை அடிப்படையாகக் கொண்ட தேவைகளை நிறைவேற்ற இயலாத நிலையிலுள்ளன. அமெரிக்க கணனி உற்பத்தியாளர்களோ வென்றால் சந்தைப்படுத்துவதில் துரிதமாகவும், வெற்றியளிக்கும் பொருள்களைத் தருவதில் முன்னணியிலும், ஜப்பானிய நிறுவனங்களைப் போலவே உற்பத்தியைப் பெருக்குவதிலும் மிக்க நாட்டமுள்ளவர்களாகவுள்ளனர். நிர்வாக ஆலோசனை வழங்கும் நிறுவனமான மக்கின்சே அன்ட் கொம்பனி மின்னியல் தொடர்பான உலகளாவிய போட்டிகள் பற்றிய தனது சமீபத்திய பகுப்பாய்வில் இதனைத் தெரிவித்துள்ளது. போட்டியாளர்களைப் புறம் தள்ளிவிடும் உற்பத்தித் திறனிலான பாரிய ஜப்பானிய நிறுவனங்களின் நம்பிக்கைக்கு இது ஒரு நிதானமான முடிவாகும்.

கணனிகள் உற்பத்தியில் மட்டுமல்லாது வேறு உயர் தொழில் நுட்பத்துறைகளிலும் அமெரிக்கா திரும்பவும் தலை தூக்கியிருப்பது அவர்தம் தேர்ச்சி நிலையாற் கிடைத்த இலாபமாகும்.உற்பத்தி விலைகளைக் குறைப்பதென்பது ஜப்பானிய நிறுவனங்களை விட அமெரிக்கர்களுக்கு இலகுவாகும். ஆட்குறைப்புச் செய்வதும், இலாபமற்ற தொழில்களை விற்றுவிடுவதும் சமுகரீதியில் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். ''அமெரிக்கக் கைத்தொழிலுக்கு இப்போது கிடைத்துள்ள நீதியான சூழ் நிலையும்'' இதற்கு ஒரு காரணமாகும். டேற்றாகுவெஸ்றின் டோக்கியோ இயக்குநரான ஜூறிச்சி சாயெக்கியின் கருத்து இதுவாகும். செய்தி உயர் மட்டப் பெருவீதி தொடர்பான ஓட்டப் பந்தயம் அதிகரிக்க, அதிகரிக்க அமெரிக்க சிப் உற்பத்தியாளர்களும், மிருதுவான பொருள் செய்வோரும், தொலைத் தொடர்பு நிறுவனங்களும், கணனி உற்பத்தியாளர்களும், கடலடித்நந்திக்கப்பி நிறுவனங்களும், எதிர்காலத் தொழில் நுட்பத் தொலைநோக்கில் நியாயமான பங்கேற்கின்றனர். போட்டியாளர்களாகவோ, அல்லது நேச நிறுவனங்களாகவோ, அல்லது இரண்டுமாகவோ, அவ்வளவு பேரும் ஒரேவகையான தொழில் நுட்பக் கயிற்று வளையத்துக்குள்ளேயே இருக்கிறார்கள். புதிய சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதில் இந்த நிலைப்பாடு அவர்களுக்கு உதவுகிறது. ''அவர்களது பலமான போட்டியிடும் நிலைக்கு இது மேலும் பலம் சேர்க்கிறது. துரதிர்ஷ்ட வசமாக ஜப்பானிய நிறுவனங்கள் இந்த வகையிலான வட்டத்திற்கு வெளியே நின்று பார்க்கிறார்கள். எவ்வாறு உள்ளே செல்லப் போகிறார்கள் என்பதை இருந்து தான் பார்க்க வேண்டும்'' என்கிறார் சாயேக்கி.

## தர்க்க ரீதியான நடவடிக்கை:

நாட்டின் இயக்கவியல் தொழில் நுட்ப அபிவிருத்தியை முடமாக்கி விட்டதால் எச்.டீ.ரீ.வீ தொடர்பான நிகழ்வுகள் கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்த்த திருப்பங்களை ஏற்படுத்தி ஒன்றுக்கொன்று என்ற துறையில் சிக்கல்களை அதிகரிக்கவே செய்துள்ளன. 1980 களில் ஜப்பானிய நுகர்வோர் மின்னியல் நிறுவனங்களுக்கு எச்.டீ.ரீ. வீயே தக்க முன்னேற்ற வழியாக இருந்தது. அதுவே தமது கைத்தொழிலின் அடுத்தகட்ட அபிவிருத்திக்கான மார்க்கமாகவும் காணப்பட்டது. 1970களின் இறுதியிலும், 1980 களிலும் நிறத்தொலைக்காட்சி திரை நாடாக்கள் உற்பத்தி. ஜப்பானிய நுகர்வோர் மின்னியற் கைத்தொழிலில் ஓர் உச்ச நிலைக்கு வழி செய்திருந்தது. எச் டீ ரீ வீ இந்தத் துறைக்குப் பெரிதும், புது மெருகுமான வளர்ச்சிக்குக் கோடிகாட்டியது. முன்னணி மின்னியற் நிறுவனங்களோடிணைந்து செயலாற்றிய என் எச் கே பொறியியலாளர்கள் எச்டீரீவீ ஒலிபரப்பு முறையிலான ஒன்றை உருவாக்க முனைந்தார்கள். இது செய்மதிகளிலிருந்து வரும் சமிக்ஞைகளைப் பெற்றுத் திரும்ப ஒளிபரப்புவதன் மூலம் நல்ல தோற்றத்தை அளிப்பதற்கான வழியாகும். எச்.டீ.ரீ.வீ இதிற்புகழடைந்ததாகும். அந்தக் காலம் முழுவதும் ''நாங்கள் ஓர் இயக்கவியல் ஒளிபரப்பு முறைபற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தோம்'' என்கிறார் என் எச் கேயின் கவமோட்டோ. இயக்கவியல் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கு மிகவும் பலம் வாய்ந்த தடைகள் இருக்கும் என்பதே, அப்போதைய மரபுவழி நம்பிக்கையாக இருந்தது. தடைகள் போதுமான அளவு கடினமானதாகவே இருக்கும் என நம்பப்பட்டதால் என் எச் கேயும் டோக்கியோவின் தபால், தந்திப் போக்குவரத்து அமைச்சும் மரபுவழி மாற்று முறையிலேயே எச் டீ ரீ வீ முயற்சிகள் குவிகின்றன என நம்பியிருந்தன.

1990 ஜூனில் திருப்பமேற்பட்டது. அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக அறிந்த போது தானும் தனது சகாக்களும் மிகவும் ஆச்சரியமடைந்ததாக கவமோட்டோ ஒப்புக் கொள்ளுகிறார். கடலடி தொலைக்காட்சி உபகரணங்களை உற்பத்தி செய்யும் அமெரிக்க நிறுவனமான ஜெனரல் இன்ஸ்ற்றுமென்ற், இயக்கவியல் முறை மூலம் தொலைக்காட்சிச் சமிக்ஞைகளை ஒளிபரப்புவதற்கு வழி கண்டு கொண்டுள்ளது. இவ்வாறான அபிவிருத்திக்கு ''இன்னமும் அதிக காலம்'' இருப்பதாகவே என் எச் கே எண்ணியிருந்தது. வெற்றிக் களிப்பில் மூழ்கியிருந்த ஜப்பானின் எச் டீ ரீ வீப் பொறியியலாளர்களின் மனநிலை இல்லாதொழிந்தது. ஓர் ஆண்டின் பின்னர் எந்த எச் டீ ரீ வீ த்தரத்தை உலகின் மிகப் பெரிய தொலைக்காட்சிச் சந்தை உபயோகிக்கும் என்பது பற்றி அமெரிக்காவில் ஒலிபரப்புக் கைத்தொழிலை நெறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும், சமஷ்டித் தொடர்புகள் ஆணைக்குழு பரிசோதனைகளை ஆரம்பித்தது. என்.எச்.கே இதில் பங்கு கொண்ட போதும் ஜப்பானின் மாற்றுமுறை தெரிவு செய்யப்படாதென்பது தெரியவந்தது.

இயக்கவியல் தரங்களை உபயோகப்படுத்துவதன் மூலம் அமெரிக்கா தனது தொழில் நுட்பப் பலத்தை நாடிச் செல்கிறது. இயக்வியல் புள்ளி விபரங்களைக் கையாள்வதன் மூலம் கேட்கும் சாதனம் அல்லது புள்ளி விபரம் அல்லது மூலவாக்கியம் எதுவாயினும், ஓர் எச்.டீ.ரீ.வீ, மற்சுஷீட்டா அல்லது சோனி தயாரித்து விற்பனைக்கு ரோக்கியோவில் வைத்திருக்கும் 5,000 டொலர்கள் பெறுமதியான பெட்டிகளிலும் பார்க்க அதிசிறந்த வகையில் பெற்றுச் கொள்ளும் சக்தி வாய்ந்தவையாகும். பதிலாக "ஒன்றுக்கொன்று துணையாகச் செயற்படும் வீட்டுச் செய்திச் சாதனங்கள்" நூலிழைப்பார்வையோடு இணைக்கப்பட்டு மைக்ரோ சொவ்ற் அப்பின் ஜெனரல் இன்ஸ்ட்றுமென்ற், இன்னும் ஒன்றிணைந்த சிறு சிறுபள்ளத்தாக்கு நிறுவனங்கள் உருவாக்கும் கடினமற்ற பொருள்களால் இயக்கப்படக் கூடியவையாகும். இந்தப் பல்துறைக் கைத்தொழிலைத் தெளிவாக்கும் செயல் உத்தரவாதத்துக்குட்படாததாகும். ஆனால் இவ்விடயம் ஜப்பானிலும் பார்க்க அமெரிக்காவில் விரைவில் நடக்கக் கூடியதாகும்.

இயக்கவியல் தொழில் நுட்பத்திற்கு மாற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்வதில் ஜப்பான் காட்டும் மெத்தனம் அந்த நாட்டின் மின்னியற் கைத்தொழிலை வேறெதனையும் விட அதிகமாகப் பாதிக்கின்றதெனலாம். இந்தக் கைத்தொழிலின் ஒரே நம்பிக்கை எச். டீ. ரீ. வீ யல்ல என்பதும் பல தொடர்பு சாதனமேயாகும் என்பதும் புரியப்பட்டுள்ளது. இதுவே நிறத் தொலைக்காட்சி, தொலைக்காட்சி நாடா, ஒலிப்பதிவுச் சாதனங்கள், நெருக்கமான தகட்டு ஒலி பரப்பிகள், என்பனவற்றுக்கான பாரிய சந்தை வாய்ப்புக்கு ஈடு கொடுக்கக் கூடியதாகும். இதன் தேவையை அதிகரித்த அளவு பயனாக்குவதற்கு நூலிழை வலைப் பின்னல் திட்ட அமைப்பும், இயக்கவியல் அழுத்தத் தொழில் நுட்பமும் தேவையாகும். இந்தத் துறைகளில் அமெரிக்காவிடமுள்ள அளவு ஜப்பானிடம் எதுவுமே இல்லை. நாட்டை, நூலிழைத் தொடர்பு மூலம் பிணைப்பதற்கு 2015 ஆம் ஆண்டு வரையில் ஆகலாம் என்கிறது. தபால் தந்தித் தொடர்புத் திணைக்களம் இந்த அழுத்தவகைச் சாதனங்களை உருவாக்கும் நிறுவனங்களில் 12 அமெரிக்காவிலுண்டு. ஜப்பானில் 2 மட்டுமே உண்டு.

## சலுகை இல்லை

மின்னியல் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்தும் போட்டியில் தம்மிடம் எதுவுமே இல்லை என்பதை என்.ஈ.சியின் செக்கிமோட்டோ உட்பட ரோக்கியோவிலுள்ள பலரும் ஏற்றுக் கொள்வர்.

பலதுறைகளில் ஜப்பான் முன் கூட்டியே திறமை பெற்றுள்ளதும் உண்மை. பல்துறைச் சகாப்தத்தையும் செய்தித் தொடர்புப் பெருந்தெருக்கள் விடயத்தையும் பதிப்பிக்கும் பணிகளில் ஜப்பான் அமெரிக்காவுக்குப் பலவற்றை விநியோகிக்கிறது. அவற்றுள் ஒன்று எல்.சீ.டீயும், தட்டைத் திரைக்காட்சியுமாகும். உலகச் சந்தையில் 40 வீதப் பங்கு ஷாப் நிறுவனத்துக்குரியது. அப்படியான இன்னொன்று உயர் தொழில் நுட்பப் பீங்கான் துறையாகும். அரை மின் கடத்தற் பீங்கான் துறையில் மூன்றில் இரண்டு பங்கு உலக சந்தையில் கியோ சேராவுக்குரியதாகும். மெதுவான பக்கத்தில் தொலைக்காட்சி விளையாட்டுக்கள் ஜப்பானின் நிபுணத்துவத்திற்குட்பட்டதாகும். ஜப்பானிய நிறுவனங்களிரண்டு இவற்றைத் தம் உடைமையாகக் கொண்டுள்ளன. இதற்குச் சவால்களுமுண்டு. சோனி, மற்சுஷீட்டா, ரொஷிபா போன்ற நிறுவனங்கள் ஹொலிவூட்டில் இருந்து பெறும் திருட்டுக்களும் காலவோட்டத்தில் வெற்றிவாகை சூடக் கூடியன.

ஜப்பானிய நிறுவனங்களுக்குச் சிறிது காலமுண்டு. அமெரிக்காவிற் கூட செய்தித் தொடர்ப் பெருந்தெரு விடயம் முழுமை பெற 10 ஆண்டுகளாவது பிடிக்கும். ஜப்பானுக்கு இப்போ இருப்பது பின்னால் வந்து பிடிக்கும் வேலைதான். சில ஆண்டுகளுக்கு முன் எவரும் இதை நம்பியிருக்கமாட்டார்கள். ஆகவே வெற்றிக்களிப்பில் மூழ்கி வெளிநாட்டு நிறுவனங்களும் ஜப்பானின் தவறைத் திரும்பச் செய்யக் கூடாது. உலகத்தின் கணனித் தொலைத்தொடர்புக் கைத்தொழில்கள் ஒரு புதிய யுகத்துள் பிரவேசித்துள்ளன. நிறுவனங்கள் அனைத்தும் தப்பிப்பிழைத்து நிற்குமா என்பது சந்தேகம். விடயங்கள் மாறுவது சகஜம்; சில வேளைகளில் அடியோடு மாற்றமடைவதுமுண்டு. அவ்வேளைகளில் வழமையை விட்டுப் புதுமையைப் புகுத்தும் நிறுவனங்களுக்குத் தப்பிப்பிழைக்கும் சந்தர்ப்பம் அதிகமாகும். பழையனவற்றைக் கழித்துப் புதியன புகுத்தும் விடயத்தில் ஜப்பான் பலவீனமுள்ளதாகவே இருந்து வருகிறது.

எழுதியவர்

— பில் பவல் —

நியூஸ்வீக், டிசம்பர் 13, 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்க திறனுடன் இருக்கும் நிர்வாகி

# வேலைப்பளு அதிகரித்து விட்டது போலத் தோன்றினால்

கிறிஸ்ரியன் லியாற்
மார்க் டபிள்யூ ஸ்ரோலர்

**உங்கள் வேலையை நீங்கள் வெறுக்கிறீர்களா? திரி எரிந்து முடியும் தறுவாயில் இருப்பது போன்று - உடல் உணர்வு, மனக்களைப்பு மேலிட்டுள்ளதா? உங்களுக்கு ஒரு நற்செய்தி.**



செயல் நோக்கம் முற்றி வரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவரும், ஒளி மிக்க புத்திக்கூர்மையுடையவருமான சிலர் வாழ்நாள் முழுவதும் திருப்தியளிக்கும் என்ற எண்ணத்துடன் ஒரு வேலையைக் கையேற்கின்றனர். ஆனால் சில ஆண்டுகள் கழிந்த பின் வேலைப் பளு தாங்க முடியாதது போன்ற உணர்ச்சிக்கு ஆளாகின்றனர் என்றால் அவர்களுக்கு என்ன நடந்து விட்டது? இவ்வாறு உச்ச நிலையிற் கருமம் ஆற்றும் சிறப்புடையவர்களே 'திரியெரிதல்' போல இறுதிக் கட்டத்துக்கு வந்து களைப்பு உணர்ச்சிவசப் படுகிறார்கள்.

இவ்வாறு, எரிந்த உணர்வு, மனக்கிளர்ச்சி, உளக் களைப்பு ஆகியன அழுத்தவிசையுடையனவும், உணர்வு ரீதியாகக் கடும் இளைப்பை உண்டாக்குவனவுமான வேலைத்தாக்கம் நீண்டகாலம் அனுபவிக்கப் படும்போது நிகழ்கின்றன, அத்துடன் தனிப்பட்ட முறையிற் பணியாற்றும்போது மிக உயர்ந்த எதிர்பார்ப்புக்களைமுன்வைப்பதும் காரணமாகும். வேலை தனக்குரிய கருத்தற்றதாகி, அழுத்த விசையையும், பயனையும் சீர்தூக்கிப் பார்க்குப்போது வேலையின் அழுத்தம் மிக அதிகமாயும், பயன் மிகக் குறைவாயும் தொனிக்கும்போது இவ்வுணர்வு மிகுகின்றது.

இது பற்றிய அறிமுறை விற்பன்னர்கள் எல்லா வேலைகளிலும் மூன்று நிலைகள் உண்டு என வாதாடுகின்றனர். அதற்கு அவர்கள் தந்துள்ள பெயர், ''கல்-செய்-கற்பி''என்பதாகும். வேலைவட்டம் முதல்நிலையில் ஒருவன் தன்வேலையைச் செய்யக் கற்கிறான். அவ் வேலைக்குரிய திறன்கள், நுட்பங்கள், அரும்பணிகள், வேலைக்குரிய நெளிவு சுழிவுகள் (அரசியற் தந்திரம்) ஆகியவற்றைப் படிக்கிறான். இக் காலப் பகுதி மிகவும் வெற்றிகரமானது. இக் காலத்துப் பிறக்கும் அழுத்தத்தை அவன் சமாளித்து வெற்றி பெறுதற்குக் காரணம், புதிய வேலை அவனுக்கு ஒரு சவாலாயும், புத்தூக்கம் அளிப்பதாயும் உள்ளதாகையால் என்க. தனது ஸ்தானத்தில் தான் அசைக்கமுடியாது உரமாக நிற்கக் கூடியதாயும், அதன் பயன்கள் அதிகமாக இருப்பதாலும், அவன் தக்க பெறுபேறுகளை அடைந்ததாகப் பரம திருப்தியுறுகிறான். இந்த நிலையில் நிற்கும் காலத்தின் அளவு அவன் செய்யும் வேலையின் சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் மிகுந்த தன்மையையும், அவனது அறிவையும் கற்க, ஆதரிக்க உரிய மூலங்களையும் பொறுத்துள்ளது.

இதன் பிறகு அவன் ''செய்'' என்ற இரண்டாம் நிலைக்குச் செல்கிறான். தினந்தோறும் அவன் அதைச் செய்து கொண்டே இருக்கிறான். அவ்வேலையை நன்றாகச் செய்கிறோம் என்ற திருப்தி அவனைத் தாங்கி நிற்கிறது. அவ்வேலையின் இலாபம் (விளைவு) போதியதாயிருந்தால் அழுத்தமும், மனமுறிவும் சகிக்கக்கூடிய மட்டத்தில் தொடர்ந்து வைக்கப்பட்டால் ஒரு மனிதன் இந்த நிலையில் நீண்டகாலம் இருக்கலாம்.

காலகதியில் அவன் தனது வேலை பற்றிய சகல நுட்பங்களையும் கற்று விட்டால் அவனது அறிவையும், திறன்களையும் பிறருக்குக் காட்டிக் கொடுக்கவேண்டி ஏற்படுகிறது. அவர்கள் பொறுப்புக்களை நன்றாகச் செய்ய இவன் வேறொரு துறையிற் பிரவேசித்து 'கல்–செய்-கற்பி' என்ற வட்டத்தில் இலகுவாக வளைந்து வருகிறான். புதிய உற்சாகமும், விளைவுகளும் புதிய துறையிற் கிடைக்கின்றன.

அவன் புதிய விடயங்களைக் கற்கக் கூடிய வகையில் புதிய எல்லையுட் பிரவேசிக்காது தடுக்கப்பட்டால், அல்லது அழுத்தமும், மனமுறிவும் மிக உயர்ந்த அளவில் நிகழுமானால் அவனது உத்தியோக வாழ்வில் 'எரிந்துபோய் விட்ட' உணர்ச்சி நுழையப் பார்க்கும்.

சில சமயம் இவ்வுணர்ச்சியின் குறிகளைப் பிழையாக விளங்க வேண்டி வரலாம்; அல்லது கவனிக்காமல் விடலாம்; அல்லது வேறு வாழ்க்கை மாற்றங்களால் உண்டாகியது எனக் கருதலாம். ஆனால் நுட்பமாக ஆராய்ந்தால் ''எரிந்து முடிந்த உணர்வுக்கு'' மூன்று பக்கங்கள் இருப்பது தெரியும்.

## உடல்ரீதியான இழைப்பு:

இதிற் களைப்பு, வயிற்றுப் றுப் பிரட்டல், தசை நார்களின் விசை அடங்கிய உணர்வு, உண்ணல், உறங்கற் பழக்கங்களில் மாற்றம், பொதுவான சக்தியில்லா உணர்வு, பெரும்பாலானவர்கள் ஏதோ சொல்ல முடியாத ஒரு பொதுவான வியாதி உணர்வு காரணமின்றிக் காணப்படுவதை முதலில் அவதானிப்பர். சில சமயம் அவர்கள் சொல்வார்கள்: ''எனக்கு என்னவென்று தெரியவில்லை. மதிய உணவுக்கிடையில் அல்லது, பிற்பகல் பாதியிலேயே களைத்து விடுகிறேன்.''

உணர்ச்சி முழுவதும் வெறுமையுற்ற நிலை. இது வெளிப்படுமாறு: மன முறிவுற்றதாக உணர்தல், நம்பிக்கை முழுவதும் இழந்து பொறியில் அகப்பட்டு உதவியேதும் அற்று இருப்பதாக நினைத்தல். மனம் கடும் அழுத்தத்துக்குக் கட்டுப்பட்டுச் சோக உணர்வு மிகுதல், வேலையைக் குறித்து அக்கறையற்ற மனப்பாங்கு மடிமை. இவ்வுணர்வு பீடித்த ஒருவன் தனது ''ஆத்மா உள்ளே இறந்துகொண்டிருப்பதாக'' உணர்கிறேன் என்பான். எந்த ஒரு குறித்த காரணமும் இன்றி எரிச்சல் உணர்வு எழுகிறது; கோபம் வருகிறது என்று அறிவிப்பான். இதில் அச்சுறுத்தும் அம்சம் என்னவென்றால், இதற்கு முந்திய சுற்றுவட்டத்தில் (முதற்கட்டத்தில்) தனது வேலையில் எவை, எவை அதி முக்கியமானவை என்று கருதினானோ அவைகளை அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

## மனக் களைப்பு:

இந்த நோயாற் பாதிக்கப்பட்டவர்கள் தம்மைத்தாமே வெறுப்பர்; தம் செயல்களிற் திருப்தியற்ற உணர்வு எய்துவர்; தமது வேலையை வெறுப்பர்; பொதுவாக வாழ்க்கையைப் பற்றி அதிருப்திப்படுவர். தம்திறமை குறித்து ஐயங் கொள்வர்; பிறரை விடவும் தாழ்ந்த அளவு திறமையை வெளிப்படுத்துவோராகத் தம்மைத் தாமே கணித்துக் கொள்வர். ஆனால், இவை ஒன்றும் அவரில் காணப்படாதகுறைகளாம். காலம் செல்ல மனக்களைப்புக் காரணமாக அவர்கள் வாடிக்கைக்காரர், கட்சிக்காரர், தொழிலில் தோழர்கள் ஆகியோரைக் காணும் போது கூட, அச்சந்திப்பை அறைகூவல் என்றோ, அரிய சந்தர்ப்பம் என்றோ கருதாமற் 'கரைச்சல்' கொடுப்பார்கள். பிரச்சனையை உண்டாக்குபவர்கள் என்று மதிப்பார்கள். அவர்கள் தமக்கு எம் மாத்திரம் மகிழ்ச்சி தந்தவேலை இப்பொழுது 'ஊசிப்போன' பண்டமாகிவிட்டதாகத் தோன்றுவதால், தம்மிடத்தில் ஏதோ பிரமாதமான தவறுதல் ஏற்பட்டு விட்டது என நம்புவார்கள். பின்னர் அவர்கள் மனக்களைப்புக்கு மேலாகத் தற்குற்றம் சுமத்தல் என்ற தீங்கையும் சுமந்து கொள்கிறார்கள்.

'எரிந்து முடிந்த' உணர்வு பற்றி இரண்டு விடயங்களை விளங்கிக் கொள்வது அவசியம். முதலாவது, அந்த நோய்க்கு ஆளாகியவனுள்ளே அதற்குரிய மூலகாரணம் இல்லவே இல்லை. இதற்கு முதலாவது மா பெரும் காரணம், செயற்பாட்டுக்கு உகந்ததாயிராத சூழல் வேலைத்தலத்தில் இருக்கிறது என்பதே. அது தாங்க முடியாத, என்றும் மாறாத அழுத்த மட்டத்தில் நின்று கொள்கிறது; காலா காலமாகத் தொடர்ந்து நிற்கிறது. மனமுறிவும் பளுவும் மாறாதிருக்கின்றன. அவற்றையெல்லாம் சகித்துக் கொள்ளக்கூடிய அளவு பயனோ, பரிசுகளோ அறுவடைசெய்யக் கூடியதாயில்லை. ஆகவே, பலர் அப்பளுவைத் தாங்கிக் கொள்ளச் சித்தமாயிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது, 'கல்–செய்–கற்பி' வட்டக் கொள்கையை நாம் அங்கீகரித்தால், அதில் தோன்றாது உள்ளேயிருக்கும் தொடர்கருத்து, இந்த 'எரிந்து போன' உணர்வு எமது உத்தியோகக் காலத்திற் பல முறை தோன்றலாம் என்பதாகும். ஒவ்வொரு புதிய வேலையை எம்மிடம் ஒப்புவிக்கும் போது, அந்தச் சவாலை ஏற்றுச் சிறப்பாகக் கருமமாற்றிய பின்னரும் இது நிகழும்.

எரிந்து முடிந்த உணர்வை வெல்ல வேண்டுமானால், இரு முனைகளிற் போர்தொடுக்க வேண்டும். முதலில், வேலைச் சூழலைக் கூர்ந்து கவனியுங்கள். இடைவிடாத வேலைப்பளு, மீட்சியற்ற (ஒரே முடிவுள்ள) பணியைத் திரும்பத் திரும்பச் செய்தல், கடுமையான 'சிவப்பு நாடா' (அநாவசியக் கடும் விதிகள் குறுக்கிடுவதால், வேலை தாமதப்படுதல்.) 'கடதாசி' வேலை கூடி, காரியம் செய்தல் தடைப்படுதல், வேலைத்தலத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையே தொடர்பாடல் குறைதல், மீள் விடை சேகரிக்கப்படாமை, சிறந்த பணிக்குத் தகுந்த பரிசு பெறாமை, தகுந்த ஆதரவு அமைப்பு ஊன்றுகோலாக உதவாமை போன்ற குறைபாடுகள், எரிந்து முடிந்த உணர்வு எழக் காரணமாகின்றன.

இரண்டாவது, எமது வேலை–உத்தியோகக் காலத்திற் பல முறை 'கல்—செய்—கற்பி' வட்டத்தினூடாகப் போய் வருவோமானால், நாம் இவ்வாறான உளச் சுகாதாரக்கேடான (மனத்திருப்தியற்ற) வேலைச்சூழலை எதிர்த்து நின்று சமாளிக்கக்கூடியவாறு, கேந்திர நுட்பம் வாய்ந்த மாற்றங்களைச் செய்து கொண்டே போவது நன்மை பயக்கும்.

வேல்ட் எக்சிகியூற்றிவ் டைஜஸ்ட், நவம்பர், 1993
(World Executive Digest)

# ஆ.....ஹா...!

## ஜகார்த்தாவில் ஆறுதல் எடுக்க ஒரு புதிய வழி

ஜகார்த்தாவில் உள்ள ஸநாடு ஸ்பா என்னும் உடல் பிடித்துவிடும் கூடம், தன்னை ஆசியாவிலேயே மிகவும் ஆடம்பரமானது எனப் புகழ்ந்து கொள்கிறது. நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் அங்கு உடல் ஆறுதல் பெற்றுச் செல்கின்றனர். இந்தோனேஷியத் தொழிற்றுறைச் சமூகம், களியாட்டக் கழக வாழ்வைக் கண்டுபிடித்துள்ளது. அத்தகைய கிளப்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. என்டியோஸ் கிளப் என்ற கழகத்தின் இலட்சியம், "வங்கியாளர்களையும், தொழிற்றுறை உரிமையாளர்களையும், கொள்கை வகுப்போரையும், திட்டமிடுவோரையும், ஒரு புத்திசாதுர்யமான சூழ் நிலையில் ஒன்றுசேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டது" என்று பெருந்தொழில் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் கூறினார். அமைச்சரவை உறுப்பினர்களும், அதன் கௌரவ உறுப்பினர்களாக உள்ளனர். ஆனால், விரும்பிய எல்லோரும் அதிற்சேர முடியாது. அத்தகைய பல களியாட்டக் கழகங்களில், அநேகமானவற்றில் ஒருவர் சேர்வதற்கு, ஏனையோர் சிபாரிசு செய்யவேண்டும். அப்படி இல்லாமல் எல்லோரையும் கண்டபடி சேரவிட்டால் அவற்றின் மவுசு குறைந்து விடுமாம். என்டியோஸ் கிளப்பில், ஒரு வர்த்தக நிறுவனம் தனது அதிகாரிகள் 21 பேருக்கு, வாழ்நாள் முழுமைக்குமான உறுப்புரிமையை 60,000 அமெரிக்க டொலருக்குக் கொள்வனவு செய்ய முடியும். மெர்க் கண்டைல் கிளப் என்ற கழகத்தில், ஒரு சீவிய கால உறுப்புரிமை 5,000 அமெரிக்க டொலராகும். போட்டி அதிகம் என்றாலும், அந்தக் கிளப்புகள் எல்லாம் இலாபமாக இயங்குகின்றன. பொருளாதாரச் செழுமை, மேலும் பல தொழிற்றுறைச் சந்தர்ப்பங்களுக்கு இடம் கொடுப்பதுடன், "களைத்த உடல்களுக்கு" மேலும் ஆறுதலும் கொடுக்கிறதாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவின் துருவ டைனோசர்கள்

ஆக்கம்:
பற்றீஷியா விக்கேஸ் றிச்,
தோமஸ் ஹொவிற் றிச்

சுமார் 10 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், அவுஸ்திரேலியா அன்ராக்டிக் காவையொட்டி அமைந்திருந்தது. அதன் தென்கிழக்கு மூலை – இன்றைய விக்ரோறியா மாநிலம், விநோதமான தாவர, மற்றும் விலங்குச் சாகியங்களைக் கொண்டு விளங்கியது. உலகின் பிற பகுதிகளிலெல்லாம் டைனோசர் விலங்கினம் செத்தொழிந்த பின்னும் கூட, இந்த அவுஸ்திரேலியப் பிரதேசத்தில் மட்டும், ஒரு விசித்திரமான சூழலில். அவை தப்பிப் பிழைத்திருந்தன,

'உலகளாவிய உறைபனி, இந்த வகை உயிரினங்களைக் கொன்றுவிட்டது' என்ற, அநேகமான தொல்பொருளியலாளர் கருத்து உண்மை எனின், அந்த விலங்கினத்தின் அவுஸ்திரேலியப் பிரதிநிதிகளே மிக நீண்ட நாள் நிலைத்திருந்தன எனலாம்.

ஏற்கனவே எல்லைகளைத் தொட்டுக் கிடந்த ஒரு 'கால நிலைக்கு, அவை தம்மை இசைவாக்கம் செய்து கொண்டது தான் இதற்குக் காரணமா? அவ்வாறாயின், பிற கண்டங்களில் வாழ்ந்தவை தம்மைத் தயார்ப்படுததிக் கொள்ளவில்லையா?

பத்துக்கோடி வருடங்களுக்கு முற்பட்ட, தென்கிழக்கு அவுஸ்திரேலியாவின் தாவரப் படிவுகள் பற்றிச் சுமார்ஒரு நூற்றாண்டுக்கும்



லியேலினசோறா அலோசோறஸ் முற்றாபுறாசோறஸ்

*அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த டைனோசர்கள், கிறிற்றேஷியஸ் காலத்தின் ஆரம்பப் பகுதியில், தென்கிழக்கு விக்ரோறியாவிற் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்தன. அக்காலத்தில் விக்ரோறியாப் பகுதி ஆட்டிக் வட்டத்தினுள் இருந்தது. இந்த ஓவியம் விக்ரோறியாவில் தமது சுவடுகளை விட்டுச் சென்ற ஆறு டைனோசர் இனங்களுடன் ஏழாவதாக, வடக்குப்புறம் மிகத்தொலைவிலுள்ள குயின்ஸ்லாந்தில் மட்டும் தனது சுவடுகளை விட்டுச்சென்ற இக்குவானடன் கூட்டத்தைச் சேர்ந்த முற்றாபுறாசோறஸ் என்ற டைனோசரையும் சித்திரிக்கிறது.*

## அவற்றின் சிறப்பான இராக்காலக் கட்புலனும், சூடான குருதியும் ஒரு வினாவை எழுப்புகின்றன.

## 'கிறிற்றேஷியஸ்' யுகத்தின் முடிவில் நிலவிய 'உறைபனி' நிலைமைகளில், அவை பிழைத்திருக்க முடியுமா?

மேலாக ஆராயப்பட்ட போதிலும், அண்மைக்காலம் வரை 'அற்றை' விலங்கிராச்சியம் விளக்கமற்ற தொன்றாகவே இருந்து வந்தது. 1900 ஆம் ஆண்டளவிற் புவியியலாளர் ''வில்லியம் ஹமில்ற்றன் ஃபேகியூசன்'' ஒரு வகை மீனின் பல், மற்றும் 'கானிவரஸ்'டைனோசர் ஒன்றினது 'நகம்' என்பவற்றைக் கண்டெடுத்தார். இக்கண்டுபிடிப்பு, பிற்கால ஆய்வுகளில் ஒரு தாக்கத்தைஏற்படுத்திற்று. அடுத்து வந்த 70ஆண்டுகளில் இது போன்ற வேறெதுவும் கண்டறியப்படாத நிலையில், 'இவை' விக்ரோறியா நூதனசாலையின் பெட்டகமொன்றிற் கவனிப்பாரற்றுக் கிடந்தன. பின்பு 1978 இல், 'மொனாஷ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்கள் இருவர் ஃபேகியூசனின் அதே ஆய்வுவலயத்திற்கு அணித்தாக, முதலாவது டைனோசர் என்புப் புதையலின் மாதிரியொன்றை, மணல் மற்றும் களிமண் படிவுகளினடியிலிருந்து மீட்டனர். மெல்பேணில் இருந்து 1½ மணிப் பயணத் தூரத்திற் கண்டெடுக்கப்பட்ட இவ்வென்பு மாதிரிகள், ஏனைய கரையோரப் பகுதிகளையும் குடையும்படி ஆய்வாளரைத் தூண்டின. ''1980 இல், 'ஒட்வே தொடர் நிலத்தில்' நமக்குத் தட்டுப்பட்ட சிறப்பானதொரு ' திறவுகோல் ' பின்பு எங்கள் ஆலோசனையின் பேரில், விக்ரோறியா மாநில அரசு அப்பகுதியை '' டைனோசர் சிறுகுடா'' என்று பெயரிட வைத்தது. அப்பிரதேசத்திலே புவியியல் ஆய்வு நிறுவனங்கள், தொண்டர், மற்றும் அகழ்வுக் கருவி - தயாரிப்பாளர்கள் உதவியோடு, அடுத்து வந்த ஆண்டுகளில் தலா மூன்று மாதங்களை, மட்படிவுகளைக் குடைவதிலும், தகர்ப்பதிலும் செலவிட்டோம்.'' என்கிறார் ஓர் ஆய்வாளர்.

டைனோசர் சிறுகுடாவும், இது போன்ற பிற பிரதேசங்களும், கொந்தளிப்பான பருவ கால வெள்ளப் பெருக்கினால், குறிப்பிட்ட இவ் விலங்கு, மற்றும் தாவரச் சாகியங்கள் அடித்துச் செல்லப்பட்ட போது உருவாகியிருக்கலாம். ஒன்று திரட்டப்பட்ட என்பு எச்சங்கள், விக்ரோறியாக் கரையை ஒட்டியுள்ள ஆழங்குறைந்த கால்வாய்கள், நீரோடைகளின் படுக்கைகளிற் படிந்திருக்கலாம். ஆதியில் அன்ராக்டிக்காவும், அவுஸ்திரேலியாவும் வெவ்வேறாகப் பிளவுற்றபோது உருவான பள்ளத்தாக்கு போன்ற பகுதியே விக்ரோறியாவின் கரை. ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள். வேறெங்கும் நிகழ்வதைக் காட்டிலும் இங்கே தான், வெகு இலகுவாக இத்தகைய விலங்குப் படிவுகளை வெளிப்படுத்துகின்றன. இது போன்ற இரண்டே இரண்டு தொல்லியல் வலயங்களே உள்நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன. ஒன்று புராதன ஏரியொன்றின் அடியிற் காணப்பட்ட படிவுகள்; இதனால், இந்தப் பகுதியின் 'மாதிரிகள்' மிகவும் அசாதாரணமான முறையிற் பேணப்பட்டிருந்தன.

தென்கிழக்கு அவுஸ்திரேலியாவின் டைனோசர்-சரிதை, ஓர் 'ஐயாயிரம்' தனித்தனி என்புகள், மற்றும் இரு பகுதி — என்புக்கூடுகள் முதலிய வற்றிலிருந்தே அறியப்பட்டுள்ளது. இவற்றிலும் ' சில நூறு ' என்புகளே குறிப்பிட்டதொரு டைனோசர் இனத்திற்கு, அல்லது, வகைக்கு உரியதெனலாம். எண்ணிக்கை சிறிதாயினும், ஆராய்ச்சியில் ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்த இவை போதும். இவ்வாராய்ச்சியை விளங்கிக் கொள்வதில், வெப்பநிலையினை மதிப்பீடு செய்வது முக்கியமானது. இதற்கென 'இரண்டு' செயன்முறைகள் கையாலப்பட்டுள்ளன. ஒன்று, பழங்காலப் பாறைகளுக்கிடையே பொதிந்திருந்த 'ஒட்சிசன்—18,' மற்றும் 'ஒட்சிசன்—16' இதற்கிடையேயான விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இதன் மூலம், சராசரி வருடாந்த வெப்பநிலை 0 பாகை தொடக்கம் 8 பாகை செல்ஷியஸ் எனக் காணப்பட்டது. இந்த வெப்பநிலை வீச்சம், இன்று ஹட்சன் விரிகுடா, சஸ்கற்சீவன் மினியப் பொலிஸ், மற்றும் ரொறன் ரோவில் நிலவுகிறது.

வெப்பக் கணிப்பீட்டின் இரண்டாவது முறை, புராதனத் தாவரங்களின் உட்கட்டமைப்பிலிருந்து பெறப்பட்டது. இதில் வருடாந்தச் சராசரி வெப்பநிலை 10 பாகை செல்ஷியஸ் என்றறியப்பட்டது. இந்த ஆய்வுகள், துருவத்தை அண்டிக்கிடந்த அன்றைய அவுஸ்திரேலிய பசிய ஊசியிலைத் தாவரங்கள், ஜின்கோஸ், ஃபேபெண்ஸ் தாவரங்கள், சைக்காட்ஸ் மற்றும் குதிரைவால் போன்றவற்றுக்கு உகந்ததாயிருந்ததை வெளிப்படுத்திற்று. ஆனால் ஒருசில அங்கியோஸ் பேம்கள் அல்லது, பூக்குந் தாவரங்களே அந்த யுகத்திற் பிழைத்திருந்ததாய், சிதறிக் கிடந்த மகரந்த மணிகள் மூலம் அடையாளங் காணப்பட்டன. இந்தக் கால கட்டத்தின் போதே, பூக்குந் தாவரங்கள் புதிய பகுதிகளுக்குப் பரவத் தொடங்கின. அநேகமாக இப்பரம்பலின் ஆரம்பம், பள்ளத்தாக்கில் அன்று நிலவிய பலவீனமான சுற்றாடல் நிலைமைகளை, தாவரங்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டதால் ஏற்பட்டிருக்கலாம்.

எல்லாக்காலமும் விலங்குத் தீவனத்தை வழங்கும் ஊசியிலைத் தாவரங்கள், குளிர், மற்றும் வரட்சிக்கான இசைவாக்க அம்சங்களாகத் தடித்த புறத்தோலையும், பிற கட்டமைப்புக்களையும் கொண்டிருந்தன. குறித்த பருவத்தில் இலையுதிர்க்கும் தாவரங்கள், அன்றைய காலநிலை பற்றி பிறிதொரு 'துப்பை' அளிக்கின்றன; ஒரு சந்தர்ப்பத்தில் அவை தம் 'மொத்த' இலைகளையும் கொட்டியிருக்க வேண்டும். இத்தகைய பேருதிர்வு; குளிர் அல்லது இருளினால் தூண்டப்பட்டிருக்கலாம். வரட்சி, எவ்வாறாயினும் ஒரு நிலையான காரணியாயிருக்கவில்லை. படிவுகள் பற்றிய பதிவுகளும், ஃபேபென்ஸ், பிறையோ பைற்ஸின் சிதைவுகளும், குளிர்காலந் தவிர்ந்த பிற பருவங்களும், ஈரப்பதன் மிகுந்ததாயிருந்தன என்பதையே வலியுறுத்துகின்றன.

கணிக்கப்பட்ட உயர்ந்த சராசரி வெப்பநிலை (10 பாகை C) சரியெனின், அன்றைய அவுஸ்திரேலியா உஷ்ணமாயும், தொடர்ச்சியான இருள் கவிந்ததாயும் இருந்தது. இன்றைய நவீன யுகத்தில், அதற்கொப்பான ஓர் உதாரணம் காட்ட முடியாது. பனிக்கால இரவுகள், பூமியின் வடக்குத்தெற்கான இடப்பெயர்ச்சிக்கு ஏற்ப, 6 வாரத்திலிருந்து 4½ மாதங்கள் வரை நீடித்தது. இதனால், குறைந்த பட்ச வெப்பநிலையானது சராசரி வெப்பநிலையை விட மிகவும் குறைந்திருக்கலாம். விளைவாக, படிவுகளாய் இற்றைவரை பேணப்பட்ட அநேகமான முள்ளந்தண்டு விலங்குகள், தமக்குரிய வெப்ப நிலை எல்லைகளுக்கு மிகவும் கிட்டியதொரு சூழலில் வாழ்ந்திருக்க வேண்டும். இந்நிலையில், நீர் வெப்பம் 10 பாகை C யிலும் குளிர்ந்து விட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் சிலவகை மீன்கள் (லங்ஃபிஷ்) சுவாசிக்க முடியாமற் போய்விட்டது.

மாறாக, கணிப்பீடு செய்யப்பட்ட குறைவான - அக்கால-வெப்பநிலை (0 பாகை – 8 பாகை சி) சரியெனின், அன்றைய உயிரினச் சாகியம் எவ்வாறு தொழிற்பட்டிருக்க முடியும்? என ஊகிப்பது, விஞ்ஞானத்திற்கு விடுக்கப்பட்ட ஓர் அசாதாரணச்சவால். சராசரி வருடாந்த வெப்ப நிலைபற்றிய தமது முன்னைய மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்காக, பலவிதத்திலும் சீர் செய்யப்பட்ட குழுவொன்று தாவரவகை, பூகோள இரசாயனம் மற்றும் பிற ஆதாரங்களை அலசுகிறது. இன்றைய விலங்கு இராச்சியத்திலிருந்து, அன்றையவை பெரிதும் வேறுபட்டவை; ஆயினும், அவற்றின் 'இசைவாக்கம்' வியக்கத்தக்கது. பிற பகுதிகளில், தமது குடும்பத்தினர் அழிவை நெருங்கிய பின்பும், அவை பிழைத்திருந்தன.

இத்தகைய காலந்தப்பியவை, அல்லது, 'மிச்ச சொச்சங்கள்' தான் இன்றைய ஈருடக அங்கிகள் மற்றும் ஊர்வனவின் மூதாதையரான நத்தையுருவிலான, ஈருடகப் பிராணிகள் (அம்பீபியன்ஸ்), பெரும்பாலான தொல்லியலாளர்கள், மேற்கூறப்பட்ட வகை அங்கிகள் ஜுராசிக் யுகத்தில் – சுமார் 160 கோடி ஆண்டுகளுக்கு முன் ஒழிந்து போய் விட்டதாய்க் கருதினர், ஆயினும் கடந்த 15 வருடங்களில் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 3 தாடை என்புகள், விக்ரோறியப் படிவுகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன; அவை கிறிற்றேஷியஸ் யுகத்தின் ஆரம்பக் கட்டத்திற்குரியவை. கண்டு பிடிக்கப்பட்ட மூன்றில், 'இரண்டு' அவற்றிற் காணப்படும் பற்களின் உள்வளைவு காரணமாக, காலக் கணிப்பைச் சரியென உறுதிப்படுத்துகின்றன. இந்த இனத்தைச் சார்ந்த, குறைந்தது ஒரு பெரிய பிராணியாவது, 115 கோடி வருடங்களுக்கு முன் துருவ அவுஸ்திரேலியாவில் வாழ்ந்திருக்க வேண்டும்..... அப்போது, உலகின் இதர பகுதிகளில் இவ்வினம் அழிந்து போய்ப் பல இலட்சம் ஆண்டுகள் கழிந்து விட்டன!....

இவை எவ்வாறு பிழைத்தன? ..... குளிரான காலநிலை, இவ்விலங்குகள் - குறைவான இசைவாக்கம் கொண்ட - முதலைகளோடு போட்டியிடுவதைத் தவிர்த்திருக்கலாமென்று சந்தேகிக்கிறோம். ஆரம்பக் கட்ட கிறிற்றேஷியஸ் யுகத்தின் கடைசி '50 இலட்சம் ஆண்டுகளில், காலநிலை உஷ்ணமடையும் வரை இந்த நிலை நீடித்திருக்கவேண்டும். இவ்விவாதத்தின் அடிப்படை பின்வரும் கூற்றிற் பொதிந்திருக்கிறது...... ''சமகால முதலைகள், இன்று 10 பாகை சி இற்கும் கூடிய தன்மை கொண்ட நீரில் வாழும் அதே வேளை, சில வகை நரிகளும், சலமன்டேஸ்களும் உறைபனி நீரில் ஓடியாடித்திரிகின்றன.''

காலங்கடந்தும் நிலைத்திருந்த இன்னொருவர், எமக்குப் பரிச்சயமான 'அலோசறஸ்' ஏனைய பகுதிகளில் 'இதன்' உயரம் 5 மீற்றர் வரை இருந்தபோது, அவுஸ்திரேலியா அலோசறஸ் 2 மீற்றர்—ஒரு மனிதனிலுங் குறைவான உயரம் வரையே வளர்ந்திருந்தது. இதுவரை கண்டறியப்பட்ட அலோசறஸ்களுள், இச்சித்திரக் குள்ளனே மிகவும் பின்னையவன். வேறு சில குளிர்ப்பிரதேசங்களிலும் இப்பிராணி நீடித்திருந்ததா? என்பது இன்னும் தெளிவற்றே இருக்கிறது. இவ்இளைய டைனோசர் பற்றிய கண்டுபிடிப்புக்கள், (ஆனால், இதுவரை முட்டைக்கோதுகளெதுவும் கிட்டவில்லை.) இவை துருவத்தின் அவ்வப்போதைய விருந்தாளிகள் அல்ல; வருடத்தின் பெரும்பகுதியை அங்கேயே கழித்தன என்பதை உறுதிசெய்கின்றன. சூரிய வெளிச்சம் கிடைக்கும் காலங்களில், அப்பகுதியை இவை ஒரு 'சிறார் பள்ளி' யாகப் பயன்படுத்தியுள்ளன.

அலோசறஸ்கள் போல், அநேகமான அவுஸ்திரேலிய டைனோசர்கள்தம் வம்சத்தின் கடைசிப் பேர்வழிகளாயிருக்கவில்லை; சில முதல்வர்களாயுமிருந்திருக்கலாம். இனங்காணப்பட்டவற்றுள் குறைந்த பட்சம் 'இரண்டு', அநேகமாக நான்கு டைனோசர் குடும்பங்கள் அவற்றின் வகையில் மிகப் பழையனவாக, அல்லது, மிகப்பழையவற்றுள் ஒன்றாக இருந்தன. உதாரணத்திற்கு:- அளவிலும், தோற்றத்திலும் ஒரு தீக்கோழியை ஒத்த 'ஒனித்தோமிமோசர்கள்' கானிவரஸ் குடும்ப டைனோசர்களின் மிகமூத்த உறுப்பினர்களாவர். கிழக்கு–ஆபிரிக்காவின் ஜுராசிக் இனம்மட்டுமே, இதனிலும் மூத்ததுஎனச்சொல்லலாம். நீண்ட, நளினமான பின்னவயவம், அவுஸ்திரேலியா டைனோசர்களுக்கு அவற்றின் உலக சகபாடிகளை விட மிகுந்த வேகத்தைக் கொடுத்து, தம் முன்னோடிகளிடம் இருந்து அவை தப்பிக் கொள்ள உதவிற்று.

இரண்டு மிகச் சிறிய என்புப் படிவுகள் இன்னும் அடையாளங் காணப்படாது உள்ளன. இவற்றுள் ஒன்று, முட்டையுண்ணும் 'ஒவிறப்ரோசரின்' சாயலைக் கொண்டிருக்கிறது இவை, இன்று வரை வட அமெரிக்கா, மற்றும் ஆசியாவின்– ஆரம்ப கிறிற்றேஷியஸ் யுகத்திற்குரிய–பாறைகளைக் கொண்டே அநுமானிக்கப்படுகின்றன, ஒவிறப்ரோசர்களும், ஒனித்தோமிமோசர்கள் போன்று – கொண்ட்வானா, பெருங்கண்டத்திலிருந்தே உருவாகியிருக்க வேண்டும். கொம்புகளைக் கொண்ட பிறிதொரு வகை டைனோசர் நியோசெரற்றோப்சியன்ஸ், அண்மையில் அடையாளங் காணப்பட்டிருக்கிறது. வெறுமனே இருபின்னவயவங்களைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதால், இந்த 'இனங்காணல்' நிச்சயமற்றதொன்றாகவே உள்ளது. ஆனால் இந்த வகை டைனோசர்களைக் கிட்டத்தட்ட ஓர் ஆட்டின் அளவுள்ள 'லெப்ரோசெரற்றோப்ஸ்' உடன் ஒப்பிடுவது புத்திசாலித்தனமானதல்ல. ஆர்ஜன்ரீனாவிலிருந்து கிடைக்கப்பெற்ற சில எலும்புகள் தவிர்ந்த ஏனைய எல்லா 'நியோசெரற்றோப்சியன்' பற்றிய பதிவுகளும் வடவரைக் கோளத்திலிருந்தே பெறப்பட்டன. இந்த டைனோசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம், தென் பகுதிப் பெருங் கண்டத்திலிருந்தும், உருவாகியிருக் கலாம்.

ஆரம்பக் கிறிற்றேஷியஸ் யுகத்தின் அவுஸ்திரேலிய டைனோசர்கள், தேவையான உருமாற்றங்களோடு பிற பகுதிகளுக்கும் பரவின. இவ்வாறு பரவியவற்றுள், மிகவும் வெற்றிகரமானவை 'ஹிப்சிலோபோடொன்ரிட்' வகை டைனோசர்களே. இவற்றுள் அநேகமானவை ஒரு கோழிக்குஞ்சிலும் சிறியவை; இரு பெரிய பின்னங்கால்களையும், சிறிய, ஆனால் நன்கு அமையப்பெற்ற கைகளையும், நீண்ட வாலையும் கொண்டு, வேகத்திற்கென்றே உருவான விலங்குகள். தாவர உண்ணிகளான இவை, உருவ அமைப்பிலும், சுற்றாடலிற் புழங்கும் விதத்திலும் சிறிய கங்காருகளை ஒத்தவை,

'ஹிப்ஸிலோபோடொன்ரிடே' குடும்ப டைனோசர்கள், ஜுராசிக் யுகத்தின் நடுப்பகுதியிலிருந்து, கிறிற்றேஷியசின் இறுதிக்கட்டம் வரை உலகெங்கும் பரவலாகக் காணப்பட்டன. ஆனால், இதன் முக்கியத்துவத்தின் 'உச்சக்கட்டம்' விக்ரோறியப் படிவுகளிலேயே தென்படுகிறது. இன்றைய டைனோசர் எச்ச சொச்சங்களிற் பெரும்பாலானவை இக்குடும்பத்தைச் சார்ந்தவை என்பதோடு, ஒருவரின் ஆராய்ச்சி அலகிற்கேற்ப, இவை நான்கிலிருந்து ஐந்து தலைமுறைகளையும், ஐந்திலிருந்து ஆறு இனங்களையும் கொண்டிருந்தன. வேறு சில டைனோசர் செறிந்த பிராந்தியங்கள் ஒருபோதும், ஒரேநேரத்தில் மூன்றுக்கு மேற்பட்ட இனங்களைக் கொண்டிருக்கவில்லை. துருவ அவுஸ்திரேலியாவின் பக்கம் 'இவற்றின்' கவனந்திரும்புவதில், அங்கிருந்த சில காரணிகள் பெரிதும் உதவின எனலாம். மிகவும் சிறப்பாகப் பேணப்பட்ட மூளைக்கவசம் (தலையோடு) ஒன்று லியலினாசாறா அமிக்காகிறாபிக்காவினுடையது. இவ்வினத்தின் குறிப்பானதொரு சூட்சுமமான இசைவாக்கத்தை வெளிப்படுத்துகிறது.



ப்ரெறோசோர் அற்லஸ்கோப்கோ சோறஸ் — அன்கைலோசோர் ஒனித்தோமிமோசோர்

துருவப் பகுதியில் பெரிய இனடைனோசர்களின் உயிர்ச் சுவடுகள் அரிதாகக் காணப்படுவதற்கு, அவை அங்கு அரிதாகக் காணப்பட்டமையோ, அல்லது, சிறிய இனடைனோசர்களின் உயிர்ச் சுவடுகள் மட்டும் இயற்கையால் பாதுகாக்கப்பட்டமையோ காரணமாக இருக்கலாம்.

இந்த வகை டைனோசரின் உடல் அளவிற்கு, மிகவும் அசாதாரணமாகக் காணப்படும் இப் பெரிய மூளையில் உள்ள பார்வைப் புலத்தோடு தொடர்பான அடையாளங்கள் ஹிப்ஸிலோபோடொன்ரிட் குடும்பத்திற் கண்டறியப்பட்டவற்றுள் மிகவும் பெரியவை எனத் தாராளமாய்க் கூறலாம்,

இப்படி விருத்தியடைந்த 'பார்வைப் புலத்தை' ஒருவர் எவ்வாறு விளக்க முடியும்? இத் தன்மையானது, அவ்விலங்குகளின் இராக் காலக் கட்புலனைத் தூண்டியதால் நீண்ட, இருண்ட பனிமாதங்களில் அவை சிறந்த முறையிற் தீவனம் திரட்டிக்கொள்ள உதவிற்று என்பதே எமது மையக் கருத்தாகும். அன்று உணவுப் பற்றாக்குறை அதனைக் கண்டுணரக்கூடிய விலங்குகளுக்கு இருந்திருக்காது. செடிகொடிகள், ஊசியிலைத் தாவரங்கள் மற்றும் பருவகால இலையுதிரிகள் மண்டிக் கிடந்ததால் கானிவரஸ் டைனோசர்களால் வேட்டையாடப்பட்டன.

இந்தக் குழுவைச் சார்ந்த விலங்குகள் ஏன் பிரதானமாகத் துருவப் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டன? என்பதையும், மேல் வந்த மையக் கருத்து விளக்குகிறது. உலகெங்கிலும் வாழ்ந்த 'ஹிப்ஸிலோ போடொன்ரிட்ஸ்' க்கள் பெரிய கண்களையும், கூரிய பார்வையையும் கொண்டிருந்தன. அத் தன்மையே அவை துருவ அவுஸ்திரேலியாவிற் காலூன்ற ஏதுவாயிற்று. பாதுகாக்கப்பட்ட இச் சூழலில் அவை தம்மை நிலைப்படுத்திக் கொண்டபோது தமக்குள்ளேயே போட்டியிட்டன. விளைவாக, இன்று அவ் விலங்குப் படிவுகளிற் காணப்படும் தலைமுறை மற்றும் சாதிக்குரிய வேறுபாடுகள் தோன்றின. ஆனாலும், அநேகமாக எல்லாமே அதீதப் பார்வைப் புலனைக் கொண்டிருந்தன. இந்தப் பிராணிகள் இரவிலே இரைதேடியிருப்பின், நிச்சயமாக இவை பனியுறையும் அல்லது அதற்குக் கிட்டிய வெப்பநிலையிற் சுறுசுறுப்பாய் இயங்கியிருக்க வேண்டும். இத் தன்மையானது, இன்றைய 'ஊர்வனவின்' குளிர் தாக்குப் பிடிக்கும் இயல்பைக் காட்டிலும் மிகவும் உயர்வானது. 5 பாகை சி இலும் சூரிய தரிசனம் கிடைக்கும் பட்சத்திற் துருதுருக்கக்கூடிய நியூஸிலாந்தின் ''ருவற்ராறா'' (ஸ்பெனோடொன் பங்ரேற்றஸ்) கூட துச்சமே. ஒரு மாறா உடல் வெப்பநிலையைப் பேணிக்கொண்டும், மாரிகாலப் பறவைகள் போல் அடிக்கடி தின்றுகொண்டும் இருப்பதால் மட்டுமே லியலினாசாறா பிழைத்திருக்க முடியும்.

பூரணமற்ற பகுதித் துண்டங்களாய்க் காணப்படும்-ப்ரெறோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஸ், பறக்கும் ஊர்வன அங்கிலோ சஸ், மற்றும் மிகுந்த ஆயுதபாணிகளான டைனோசர்கள் என்பனவற்றின் எச்சங்கள், அவ்விலங்குகளின் வாழ்க்கைமுறை பற்றி ஒரு மாணவனுக்குக் கூறப்போவது சொற்பமே. 'லெஸியோசஸ்' போன்றவற்றிடமிருந்து பெறப்பட்டாலும் கூட, ஒரு கைநிறைந்த 'பற்களில்' இருந்து ஏராளம் தகவல்கள் திரட்டப்படலாம். நீண்ட கழுத்தையுடைய இந்த ஊரும் பிராணிகள்–லெஸியோசஸ் -பொதுவாகக் கடலில் வாழ்ந்தாலும் இங்கே அவுஸ்திரேலியாவுக்கும், அன்ராக்டிக்காவுக்கு மிடைப்பட்ட புராதனப் பள்ளத்தாக்கின் நன்னீரில் நீந்தித் திரிந்தன. இதனால் 'இவை' நன்னீரில் வாழும் சில ஸெற்றாஸியன்ஸ்களில் ஒன்றான – கங்கஸ் ஆற்றின் – டொல்பின்களை ஞாபகப்படுத்துகின்றன.

இராட்சத உருபடைத்த ''ஸோறோபொட்ஸ்'' மட்டும் அவுஸ்திரேலியாவின் இப் பகுதியிற் காணப்படவில்லை. 'ப்றொன்ரோஸரஸ்' எனும் பெயரிற் பிரசித்தமடைந்த 'அப்பரோஸொரஸ்', இதே காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவின் வடக்கில் வாழ்ந்தது. ஆயினும் தெற்கில் அல்லது, வட தென்னரைக் கோளங்களில் இற்றைவரை இனங் காணப்பட்ட கிறிற்றேஷியஸ் யுகத்துக்குரிய 9 துருவ டைனோசர் வலயங்களெதிலும் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுவரை கண்டறியப்பட்ட ஒரேயொரு துருவ சோறோபோட், வடகிழக்கு அவுஸ்திரேலியாவிற் கிடைக்கப்பெற்ற மிகப் பழைய ஆரம்ப ஜூராசிக் யுக-றோற்ரோசறஸ் இனமே.

இந்த வகையிலான பெரிய டைனோசர்கள் அவுஸ்திரேலியாவின் கிழ்ப்புற வட, தென் கோட்டுப் பகுதிக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை யதார்த்தமானதாகவோ, அல்லது ஒரு செயற்கை மாதிரியாகவோ கூட இருக்கலாம். இந்த விடயத்தையிட்டு நாம் மிகவும் கவலைப்படுகிறோம். ஏனெனில் மழை நீர் முட்டிய ஆறுகளிலிருந்து உடைப்பெடுத்த வெள்ளம் பெரிய என்புகளை விட்டுவிட்டு, சிறிய மற்றும் நடுத்தர என்புகளை அடித்துச் சென்று ஓரிடத்திற் குவித்திருக்கலாம். 5 தொடக்கம் 10 மீற்றர் அகலமும், 20 இல் இருந்து 30 செ. மீ. ஆழமுங் கொண்ட வெள்ளை நீர்க் கால்வாய்களிற் சிறிய பல என்பு மாதிரிகள் நிறைந்திருக்கும்போது, ஒரு 'ஸொறோபோட்டி'னது பெரிய உடல் அதன் இடத்திலே தரித்திருக்கவே வாய்ப்புக்கள் அதிகம்.

இப்போதும் கூட நாம் சந்தேகிக்கிறோம்; இத்தகையதொரு துருவச் சூழல் உடலமைப்பைச் சிறுப்பிக்கவல்ல மறைமுகக் காரணிகளைக் கொண்டிருக்கலாம். எந்தவொரு ஹிப்ஸிலோபோடொன்ரிட்ஸ் தானும் மனித உயரத்தைத் தாண்டவில்லை என்பதும், அநேகமானவை அவனது முழங்கால் உயரத்திற்கே இருந்தனவென்பதும் இங்கு நினைவு கூரப்படவேண்டும். குள்ளமான 'அலோசறஸ்' கள் எமது வட அமெரிக்கச் சேகரிப்பின் போது பரிசீலிக்கப்பட்ட மிகச் சிறிய பிராணிகளுக்கு ஒப்பானவை. ஒனித்தோ மிமோசர்களும், குள்ளமும் அதேயளவிற்கு அவலட்சணமுமானவை. புறோற்ரோ செறற்ரோப்ஸிட் மற்றும் அங்கிலோசர்கள் கூட ஓர் ஆட்டைவிடப் பெரியவையல்ல. கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு தனி நகத் துண்டம் அதற்குரிய விலங்கின் நீளம் சுமார் 8 மீற்றர் இருக்கலாமென எண்ணத் தூண்டுவதோடு, இங்கிலாந்தின் 'பறியோனிக்ஸ்' இனது சாயலையும் கொண்டிருக்கிறது.

19 ஆம் நூற்றாண்டில் பேக்மனும், அலனும் உருவாக்கிய விலங்கின ஆய்வு அளவு கோலினின்றும், இப் புதிய அநுமானங்கள் முரண்படுகின்றன. அவ்விருவரின் விதிப்படி சராசரிச் சூழல் வெப்பநிலை குறைந்து செல்லும் போது அங்குள்ள குறிப்பிட்டதொரு சந்ததியைச் சேர்ந்த விலங்குகள் உருவிற் பெருக்கவும், வலுவடையவும் எத்தனிக்கும். கனடாவின் மலைச் சிங்கங்களை மத்திய அமெரிக்காவின் மலைச் சிங்கங்களுடனும், உப ஆர்க்டிக், மற்றும் அயனமண்டல மனிதச் சமூகங்களோடும் ஒப்பிடும்போது மேற்கூறிய 'போக்கு' உதாரணங் காட்டி விளக்கப்படுகிறது.

மக்கள் வாழும் பிரதேசத்தின் அளவு, அவர்களின் உடல் அளவுகளைத் தீர்மானிக்கும் பிற காரணிகளிற் பிரதானமானது. தீவுகளிற் காணப்பட்ட தனித்தனி விலங்குகள், பெருநிலத்தில் வாழ்ந்த தமது சகபாடிகளை விடச் சிறியனவாயிருந்தன. உதாரணத்திற்கு, புராதன மத்தியதரைக் கடல், தீவுகளிற் காணப்பட்ட குள்ள யானைகளையும், சைபீரியாவின் வட கரைத் தீவுகளில் அண்மையில் மீட்கப்பட்ட 4000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த படிவுகளிற் பெறப்பட்ட குள்ள யானைகளையும் குறிப்பிடலாம். மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலப் பரப்பில் விலங்கினங்கள் பிழைத்திருப்பதற்கும், தமது எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கும், பரம்பரையலகு மாற்றங்களை எதிர் கொண்டாக வேண்டும். தெரிவு செய்யப்பட்ட இந்நிப்பந்தத்தைச் சமாளிக்கும் ஓர் இசைவாக்கமாகக் 'குள்ளத் தன்மை' ஏற்பட்டிருக்கலாம். இத்தாக்கம், தீபகற்பங்களிலும் அவதானிக்கப்பட்டது. புராதன அவுஸ்திரேலியா, 'கொண்ட்வானா' என்ற பெருங் கண்டத்தின் தீபகற்பமே.

அத்தீபகற்பத்திலிருந்த டைனோசர்கள், உண்மையில் பூமியின் முடிவிற் சிக்கிக் கொண்டன. அவற்றின் வடக்கு நோக்கிய நேரடிப் பாதை, ஒரு பெரும் உள்நாட்டு நீர்ப்பரப்பாற் தடுக்கப்பட்டது. இதைத் தாண்ட அவற்றுக்கிருந்த ஒரே வழி, பல நூறு கிலோ மீற்றர்கள் மேற்கே பயணித்து, பின் வடக்கே திரும்புவது தான். அத்தனை அலுப்பின் பின், அவை அனுபவிக்கப் போவதெல்லாம் பனிக்காலத் தினத்துக்கு, அதிகபட்சம் ஒரு மணிநேர சூரிய தரிசனம். அத்தகைய சிறிய விலங்குகட்கு இப்படி இடம் பெயர்வதிற் பெரிய ஆதாயமேதும் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு தொல்லியற் சான்றுகளை ஈட்டித்தந்த பிறிதொரு துருவப்பகுதி, அலஸ்காவின்வடக்குச்சரிவுகள். இங்கேஅவுஸ் திரேலியாவிலிருந்ததைக் காட்டிலும் வலுக்குறைந்த தடைகள் டைனோசர்களை வழிமறித்தன. தெளிவானதொரு, வடக்குத் தெற்கான ஒடுங்கிய மார்க்கம் இருந்ததால், அலஸ்காவின் டைனோசர்கள் இலகுவாய் இடம்பெயர முடிந்தது. இந்த டைனோசர் பெரியனவாக, குறைந்த பட்சம் ஒரு கறிபோ, காண்டாமிருகம், மற்றும் இடம் பெயரும் இன்றைய விலங்குகளுக்கு ஈடானவையாக இருந்தனவென்பது முக்கியமானது.

இவ்வளவு சிறப்பாக இருளுக்கும், குளிருக்கும் இசைவாக்கமடைந்த விலங்குகள் எப்படி இறந்தொழிந்தன? என்று ஒருவர் வினவ நிச்சயம் இடமுண்டு, கிறிற்றேஷியஸ் யுகத்தின் முடிவிற்கும், படிமுறைவளர்ச்சியின் மூன்றாம் கட்டத்திற்குமிடையேயான கால விளிம்பில் நிகழ்ந்த அசாதாரணமான, அசுரத்தனமான சம்பவம் உறைபனி ஒன்று, மேற்கூறிய அழிவுக்குக் காரணமாயிருந்திருக்கலாம். அந்த வன்முறை நிகழ்வு, அநேகமாகப் பூமியானது ஒரு வால் நட்சத்திரம், அல்லது வேறொரு கோளுடன் மோதியதால், அல்லது தொடர்ச்சியான எரிமலைக் குமுறல்களால், பூமி மீது தூசுக் கம்பளம் ஒன்று போர்த்தப்பட்டு, சூரிய ஒளி முற்றிலுமாய் நிரோதிக்கப்பட்டு உருவாகியிருக்கலாம். விளைவாக, பெரும்பான்மையான விலங்குகள் விறைத்து, அல்லது பட்டினி கிடந்து மடிந்திருக்கலாம். அந்த மாதிரியானதொரு 'செயற்கைக் குளிர்' நீண்ட காலம்—நிச்சயமாக ஒரு சில மாதங்களுக்கும் மேலாக—நிலவியிராவிடின், டைனோசர்கள் கொல்லப்பட வாய்ப்பிருந்திருக்காது என நாம் ஐயப்படுகிறோம். இல்லையென்றால், குறைந்தது ஒன்றிரண்டு துருவ டைனோசர்களாவது அக்குளிரை வெற்றி கொண்டிருக்கும். கிறிற்றேஷியஸ் யுகத்தின் இறுதியில், இத்தகையதொரு சம்பவத்திற்கு முன்னதாகவே, வேறு சில நிலைகளால் தென் கிழக்கு அவுஸ்திரேலியாவின் டைனோசறஸ் ஆதிக்கம் அழிந்திருக்க, நிச்சயமான வாய்ப்புக்களுண்டு.

''ஆதர் கொனன் டொய்ல்'' தென்னமெரிக்காவின் சிறு நிலப் பரப்பொன்றில், டைனோசர்கள் தொடர்ந்து—காலங் கடந்தும்—ஆட்சி செலுத்தி வந்ததாய்க் கனவு கண்டார். ''சைபீரியக் கரையினை ஒட்டிய தீவுகளில், குள்ள யானைகள் சரித்திரகாலத்தின் ஆரம்பம் வரை பிழைத்திருந்தன'' என்பதாக. இவ்வாண்டின் (1993) தொடக்கத்திற் பெறப்பட்ட தகவல்கள், மேற்கூறியது போன்ற ஊகங்களுக்கு உத்வேகம் அளிக்கின்றன. டைனோசர்கள், தாம்—காலங் கடந்ததும்—வாழ்ந்து களித்தது மான சொர்க்க பூமி போன்ற பகுதிகளைக் கண்டறிந்திருப்பின், அஃது 'கொண்ட்வானா' பெருங் கண்டத்தின்—தென் கிழக்கு அவுஸ்திரேலியாவையும் உள்ளடக்கிய—துருவப் பகுதியே என நாம் கருதுகிறோம்!

சயன்ரிஃபிக் அமெரிக்கன்,
ஜூலை, 1993

---

## பேரு நாட்டில் மீண்டும் பியூஜிமோரி

*பேருவிய மக்கள் தமது நாட்டுத் தலைவரை மீண்டும் பதவியில் அமர்த்துவது பற்றி என்ன நினைக்கிறார்கள்? சுருங்கக்கூறின், அற்ப பெரும்பான்மையுடன் அவரை மீண்டும் பதவியில் விட்டு வைத்துள்ளார்கள். காரணம் ஜனாதிபதி எல் பேட்டோ பியூஜிமோரி 19 மாதங்களுக்கு முன் தமது நாட்டு அரசியல் யாப்பை நிறுத்தி வைத்தது தான். அவர் நினைத்தார் தமது புதிய சாசனத்துக்கும், தமக்கும் பெரும்பான்மை ஆதரவு நல்கி மீண்டும் அசைக்க முடியாதவாறு பதவியில் அமர்த்துவார்கள் என்று. ஆனால் மக்கள் நினைப்போ வேறாயிற்று. அவர் தொழிலாளருக்கு வாழ்நாள் முழுவதும் வேலை நிச்சயம் என்று யாப்பு ரீதியாக வாக்குப்பண்ணியதைக் கைவிட்டார். உயர்கல்லூரிப் படிப்பு எல்லாருக்கும் இலவசமாகும் என்ற வாக்கையும் கைவிடக் கருதினார். பயங்கரவாதிகளுக்கு மரணதண்டனை கொடுக்கப்போவதாகச் சொன்னார். ''1995 இல் மீண்டும் தேர்தலுக்கு நிற்க மாட்டேன்'' என்று அளித்த வாக்குறுதியையும் விலக்கினார். தேர்தல் அதிகாரிகள் இறுதிக்கணக்கு விபரம் இவ்வாரம் வரையில் வெளியிடுவார்கள். ஆனால் வாக்காளரில் சுமார் 53 சத வீதத்தினரே அவருக்கு அரும்பொட்டு பெரும்பான்மையை அளித்துள்ளனர். இதிலிருந்து பெரும்பாலான பேருவிய மக்கள் அவரது தலைமையை ஏற்கிறார்கள் எனினும் அவர் ஆசைப்படும் பூரண பெரும்பான்மை அவருக்கு மறுக்கப்பட்டுள்ளது என்பது தேர்தல் மூலம் தெரியவருகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கப்பட்ட கிழக்கு பேர்லினின் புதையல்கள்

**'ஹெலனிசம்' எனப்படும் இரேக்க நாகரிகக் கலைகளும், கட்டடத் தொழில் நுட்பமும்; ஒரு காலத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 'பெர்காமொன்' தொல் பொருளகம், மீண்டும் பெருமை பெறுகிறது.**

பேலினின் மிகவும் பிரமாண்டமான பெர்காமொன் தொல்பொருளகத்தின் பிரதான மண்டபத்துக்குள் நுழையும் ஒருவர், கண்ணுக்கினியவற்றை எதிர்கொள்ளத்தவற மாட்டார். தூய்மை நிறைந்த நீளமான வெள்ளைப்படிக்கற்கள், கிரேக்கத் தூண்களாற் காக்கப்பட்டிருக்கும் பீடத்துக்கு நம்மை இட்டுச் செல்லும். அந்த அநுபவம் அபரிமிதமானது. தொன்மைமிக்க நாகரிகத்தின் மிகப்பெரிய அமைப்பு அங்கே நிற்பது போன்ற உணர்வு, அதைக் காணும் போது ஏற்படுகிறது. ஒரு தொல்பொருட் காட்சியகத்திற்குள் அழகும், பெருமையும் ஒருங்கிணைந்து கண்கவர் காட்சியாக மிளிர்கிறது.

இந்தத் தொல்பொருளகத்தின் பெயர், பெர்காமொன்னில் அமைந்துள்ள பாரிய பீடத்திலிருந்து பெறப்பட்டதாகும். மேற்குத் துருக்கியில் கி. மு. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் ஹெலனிசக்குடியேற்றக்காரர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் ஆசியா மைனர் எனப்படும், ஆசியாவின் மிகப் பாரிய பிரதேசத்தை ஆண்டார்கள். மிகத்துணிகரம் நிறைந்த ஒரு புதைபொருட் சதிமுயற்சி மூலம், ஜேர்மானியப் பொறியியலாளர் கால்ஹியூமன் பளிங்குக் கற்களாலான பீடத்தையும், ஏனைய பொருள்களையும், 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதி



யில், கப்பல் மூலம் ஜேர்மனிக்குக் கொண்டு வந்து விட்டார். தொல்பொருளியலாளர்களும், தொழில் நுட்பவியலாளர்களும் சேர்ந்து, அவற்றை மீளுருப் பெறச் செய்து, பீடத்தையும் மீளமைத்து விட்டனர். இன்று, அந்தத் தொன்மை நிறைந்த அருங்காட்சியகத்திற்குள் செல்லும் எவரும், புராதன பெர்காமொனில் நிற்பதாகவே உணர்வர்.

ஒவ்வோர் அறையிலும், திகைப்பூட்டும் சிறப்புமிக்க ஆலயங்கள், கதவுகள் என்பவற்றின் மீளமைப்புக்கள் இருக்கின்ற போதும், இரண்டாவது உலகப் போரின் பின்னான காலத்தில், இந்த இடம் கொம்யூனிச அணிநாடு தவிர்ந்த ஏனையோருக்கு மறக்கப்பட்ட பொக்கிஷமாகவே இருந்து வந்தது.

1961 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டுவரையில் தடுத்துக் கொண்டிருந்த பேலின் சுவர், கிழக்கு மேற்கு பேலினை மட்டுமல்ல, அந்த நகரத்தின் முன்னொருகாலத்தைய புகழ் வாய்ந்த புதைபொருட் சேமிப்புக்களையும் தடுத்திருந்தது. பேலினின் அருங்காட்சியகங்களுள் மிகவும் புகழ் வாய்ந்த இந்தப் பெர்காமொனை, மேற்குலகவாசிகள் சென்று பார்க்கும் வாய்ப்பு இருந்தும், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அதனால், லண்டனில் அமைந்துள்ள பிரித்தானிய அருங்காட்சியகத்தோடும், பாரிசிலுள்ள லூவர் அருங்காட்சியகத்தோடும் போட்டியிடக்கூடிய தன்மையை அது இழந்து விட்டது.

பெர்காமொன் தனிமைப்படுத்தப்பட்டதற்கான கதைகள், சில வேளைகளில் நம்பவே முடியாதவையாகும். ஹங்கேரியிலும், பல்கேரியாவிலும், புகழ்மிக்க அழிவுச் சின்னங்களையெல்லாம் தொடர் ஆய்வுக்குட்படுத்திய மக்ஸ் குன்ஜீ என்ற தொல்பொருளியலாளர், 1982 ஆம் ஆண்டில் இந்த அருங்காட்சியகத்தின் புகழ்வாய்ந்த பண்டைக்காலப் பொருள்களின் இயக்குநராகப் பணியேற்றார். கிழக்கு பேலினிலுள்ள அன்ரடென் லின்டன் பெருந்தெருவுக்கப்பால் அமைந்துள்ள பழைய, புதிய, போடே அருங்காட்சியகங்களைக் கொண்ட அருங்காட்சியகத்தீவில், பெர்காமொன் முதலிடம் வகிக்கி

PUBLIC LIBRARY, JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இங்கிருந்து சில மைல் தொலை வில், சார்லொட்டன் பேக் மாளிகை யில் கிரேக்க, உரோமச் சிற்பக்கலை யின் நிபுணத்துவங்களைக் கொண்ட சிறிய, ஆனால், மனத்தைக் கவரும் நிறுவனமாக ஓர் அருங் காட்சியகம் இருக்கிறது. அப்படி யிருந்தும், பேலின் சுவர் இடிக்கப் படும் வரை, குன்ஜீ இந்தப் புகழ் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு ஒரு முறை தான் போயிருக்கி றார். "ஒரு படிப்பகத்தில் ஆய்வினை மேற்கொள்ளுவதற்காக, ஐந்து நாள்களுக்கு மட்டும் மேற்கு பேலின் சென்று வர அனுமதி பெற்றேன். அந்தச் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, கிளஸ்ஸிக் கல் மியூசியத்துக்கு அவசரமாகச் சென்று பார்த்துத் திரும்பினேன்" என்கிறார் அவர்.

1989 இல் பேலின் சுவர் தகர்க்கப்பட்டதோடு, இந்தத் தனிமைப்படுத்தலும் அகன்று, ஒரு முடிவு ஏற்பட்டது. கிழக்கிற்கும், மேற்கிற்குமான தடையற்ற போக்கு வரவு ஆரம்பிக்கப் பட்டதுமே, ஆர்வத்தோடு அங்கு வரும் புதிய பார்வையாளர்களுக்கு, அங்கேயுள்ள அனைத்துப் புதை பொருள், கலைச் சேமிப்புக்களை யெல்லாம் கண்டுகளிக்கும் சந்தர்ப் பம் ஏற்பட்டுள்ளது. இப்போது ஒவ்வொரு காலையிலும், உல்லாசப் பிரயாணிகளின் வாகனங்கள், புகைக்கரியால் இருளடைந்து தேய்ந்து போகும் நிலையிலும், கம்பீர நிலையிற் காட்சிதரும் நவச்சிறப்புடன் கூடிய இந்த அருங்காட்சியகத்தின் முன்னால் வரிசையாக நிற்பதைப்பார்க்கலாம். பேர்காமொன் பீடம் உட்பட, அங்குள்ள பல தொன்மை வாய்ந்த புதைபொருள் அதிசயங்களை மீண்டும் கண்டு பிடிக்கவும், களிக்கவும் உலகம் தயாராகி விட்டது.

மேற்குலக ஒட்டோமன் சாம்பிராஜ்யத்தின் பிரதம பொறியி யலாளராக, பேர்காமொனில் தலைமைச் செயலகம் இயங்க, கால்ஹியூமன் என்பவர் 1868 இல் நியமிக்கப்பட்ட போதே இதன் கதை ஆரம்பமாகிற்று. தொல் பொருள்களை விரும்பிச் சேர்ப் பதிற் பொழுது போக்கும் அவர், இந்தப் பீடத்தின் கட்டுமானப் பலகையொன்றைக் கண்டுள்ளார். கிறிஸ்துவுக்குப் பின் 8 ஆம் நூற்றாண்டிற் கட்டப்பட்ட கொன்ஸ்ரன்ரினோப்பின் வரலாற் றுக் காலத்தைய சுவர்களாற் சூழப்பட்டு, இந்தப் பீடத்தின் பகுதி இருப்பதை அவர் காண முடிந்தது. இதை பைசன்னான் சுவர் எனக்கூறுவர். "சுவருக்குப் பக்கத்தில் நான் வெடிக்கச் செய்த போது, ஒவ்வொரு கற்களாக வெளியே எடுத்தேன். கழுத்தும், மோவாயும் தென்பட்டன; அதைத் தொடர்ந்து கன்னம் அகப்பட்டது; கண்களையும் கண்டபோது, "அது ஓர் இறந்த மனிதன்" என்று சத்தம் போட்டேன். மிக அழகும், உண்மைப் பொலிவும் நிறைந்த அந்தச் சிலையில், மரணத்தின் சாயல் தென்பட்டது" என்று, இந்தப் பணியைத் தொடர்ந்து எழுதினார் ஹியூமன். நீலவெள்ளை நிறம் கொண்ட இரண்டு தொகுதிப் பளிங்குச் சிலைகளை அகற்றியபின், "இது ஆண்களின் சண்டை பற்றிய வரலாற்றுப் பெருமை கொண்ட சிற்பங்கள்" என்பதையும், 'இவை ஒரு முக்கிய கட்டடத் தொகுதியின் பகுதிகள்" என்பதை யும் ஹியூமன் புரிந்து கொண்டார்.

இவற்றுள் சில பளிங்குப் பாளங்களை அவர் பேலின் அருங் காட்சியகங்களுக்கு அனுப்பிவைத்த போது, அவற்றின் முக்கியத் துவத்தை அங்குள்ளோர் புரிந்து கொள்ளவில்லை. 1877 ஆம் ஆண் டில், அலெக்சாண்டர் கொன்சே என்பவர் சிற்பங்களின் இயக்குந ராக நியமிக்கப்பட்டபோது தான், அது உணரப்பட்டது. உரோம வரலாற்றாசிரியர் லூசியஸ் அம்பீலியஸ் வருணித்த, எப்போ தோ, அழிந்துபோன பலிபீடத்தின் சிதைவுகளே, ஹியூமன் அனுப்பி வைத்த பாளங்கள் என்று ஆய்வா ளர்கள் கொன்சேக்கு அறிவுறுத்தி னர். பொருளுதவியும், ஆதரவும் வழங்க உறுதியளித்து, ஹியூமனை அகழ்வுப் பணியைத் தொடருமாறு கேட்டுக் கொண்டார். கொன்சே ஹியூமனும், 14 பணியாளர்களும் அகழ்வை மேற்கொண்ட போது, அந்தப் புதையலின் வேறு பாளங் கள் பைசன்ரைன் சுவர்களுக்குள் அகப்பட்டிருப்பதையும், பலிபீடத் தின் அத்திவாரத்தையும் கண்டனர். அதுவும், சுவர்களுக் கடியிலேயே காணப்பட்டது. "கலைச்செல்வத்தின் ஒரு சகாப்தத்தையே கண்டுள்ளோம். எமது கைகளுக்கிடையில், தொன் மையால் அழிவுறாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகின் மிகப் பெரும் சாதனை இருக்கிறது" என்றார் ஹியூமன்.

ஓர் ஆண்டின் பின்னர், இந்த அகழ்வுப் பணியில் கொன்சேயும் இணைந்து கொண்டார். 18 மாதப் பணியினைத் தொடர்ந்து, ஹியூம னும், கொன்சேயும் 97 பளிங்குப் பாளங்களையும், பிரதான அமைப் பின் 2,000 துண்டுகளையும் எடுக்க முடிந்தது. அதனோடு கூடவே ஒரு சிறு அமைப்பின் 36 பாளங்க ளும், 100 துண்டுகளும், பல திறப் பட்ட சிலைகளும், சிற்பக்கலை எச் சங்களும் கிடைத்தன. இவைக ளெல்லாவற்றையும் கிண்டி எடுத்து 20 மைல் தொலைவிலுள்ள கட லுக்கு எருமைமாட்டு வண்டி மூலம் எடுத்துச் சென்று, இந்தப் புதையல் களை 462 பெட்டிகளிலடைத்து, ஜேர்மன் தோணிகளிலேற்றி அனுப் பினார்கள். துருக்கியின் சுங்கக் கட் டுப்பாட்டைக் கடப்பது, ஹியூம னுக்கு இலகுவாகவே இருந்தது. ஜேர்மனியர்களிடமிருந்து 20,000 மார்க்கைப் பெற்றுக் கொண்ட ஒட்டோமன் அரசு, அவற்றை வெளியே கொண்டு செல்ல அனு மதி வழங்கியது.

அகழ்வுப் பணிகள் பலிபீடத் தோடு நின்று விடவில்லை. நகரத் தின் எஞ்சிய பகுதியையும் கிண்டி எடுப்பதற்காகக் கட்டடக்கலை நிபு ணர்களையும், புதைபொருளாய் வாளர்களையும் ஹியூமனுக்கு உதவி யாக, கொன்சே பேர்காமொ னுக்கு அனுப்பிவைத்தார். தொன் மையான கிரேக்க உலகிற்குள் பிந் திப் புகுந்த பேர்காமொன், கி. மு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நூற்றாண்டிலே அத்தாலிட்ஸ் என்ற கிரேக்க இனத்தவரைக் குடியேற்றிய இடமாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே மறைந்துபோன, புகழ் வாய்ந்த ஏதன்ஸ் நகரவாசிகளின் இயற்கையான வாரிசுகள், தாமே என்று கருதியவர்கள் அத்தாலிட்ஸ்கள். ஏத்தீனியர்களின் பாரம்பரியத்துக்கமைய, பெர்காமொன் மேட்டில் ஓர் அரச மாளிகை, 200,000 காகிதச் சுருளாலான நூல்களைக் கொண்ட நூலகம், டயோனிசஸ் தெய்வத்திற்கோர் ஆலயம், ஏத்தெனாப் பெண்வழிபாட்டுக்கான ஒதுக்கிடம், ஒரு கோட்டை, ஒரு நீதி பரிபாலன மண்டபம், கலா மண்டபம் என்பவை இங்கே அமைக்கப்பட்டிருந்தன. இவற்றோடு கூட, அற்புதமான பீடமும் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முந்திய நூற்றாண்டில் ''கோல்ஸ்'' எனவும் அழைக்கப்பட்ட கலேசியன்களை, அத்தாலிட்ஸ்கள் போரில் வெற்றிகொண்ட நினைவுச் சின்னமாகவே, இந்தப் பீடம் கி. மு. 184 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது.

அத்தாலிட்ஸ்கள் தமது வெற்றியின் அடையாளமாக, கிரேக்கர்களுக்கு ''சிகன்ரோ மாச்சி'' எனத் தெரிந்த பூமியின் படு பயங்கர இராட்சதர்களுக்கும், ஒலிம்பசின் தெய்வங்களுக்குமிடையிலான புராணகாலப் போரை எடுத்துக்காட்டும் இதிகாச நாடகக் காட்சிகளை அங்கே சிற்பங்களாக வடித்திருந்தனர். இந்தக் கட்டுக்கதையின்படி, சிங்கத்தோல் போர்த்திய, கொல்லுந் தன்மை கொண்ட மனித உருவம் ஒன்றைப் படையணியில் சேர்த்துக் கொள்ளாவிட்டால், கடவுளர் போரில் வெற்றிகொண்டிருக்க முடியாது. இந்தப் பூமியிலே, மிகவும் பலம் வாய்ந்த மனிதனான ''ஹேர்க்குயூலிஸ்'' கடவுளைக் காப்பதற்காக, பயங்கர மிருகங்களின் தலைகளோடும், பாம்பு போன்ற கால்களோடும், சிறகுகளோடும் பயங்கரத் தோற்றமளித்த இராட்சதர்களை அழிக்கவென 'சீயஸ்' என்ற தெய்வத்திற்குப் பக்கத்திலேயே நின்று போரிட்டதாக இதிகாசக் கதைகள் கூறுகின்றன. மிகவும் விபரமான முறையிற் சிலைகளாக வடிக்கப்பட்டுள்ள தெய்வீக மனிதர்களின் தீவிரப்போராட்டம், ஏறத்தாழ 400 அடி பளிங்குக் கற்களாலான இந்த அமைப்பு பீடத்தைச் சுற்றியுள்ளது. பிரித்தானியத் தொல்பொருளாய்வாளரான றோஜர் லீங் இதைப்பற்றி வர்ணிக்கும் போது, ''தொழில் நுட்ப அருஞ் சாதனைக் கண்ணோட்டத்தில், கிரேக்கர்களின் அதியுயர் சிற்பத்திறனுக்கு இந்த அமைப்பு ஓர் எடுத்துக்காட்டாகும்'' என்கிறார்.

நிலத்துக்கடியிலான குழியிலும், பின்னர் விமான எதிர்ப்புக் கோபுரம் ஒன்றிலும் புதைத்து வைத்தனர். நேசநாடுகளின் குண்டு வீச்சில் அருங்காட்சியகக் கட்டடமும், பீடமும் பலமாகச் சேதமடைந்தன, பின்னர், சோவியப்படைகள் 1945 இல் பேலினைக் கைப்பற்றியபோது, பாளங்கள் மறைத்து வைத்திருந்த இடத்தைக் கண்டு பிடித்து அவற்றை எடுத்துச் சென்றனர். 1958 இல் அவை மீண்டும் பெர்காமொன்னுக்குத் திருப்பிக் கையளிக்கப்பட்டது. கிழக்கு ஜேர்மானியர் மீளவும் பீடத்தைக் கட்டியதோடு, அருங்காட்சியகத்தையும் திறந்து விட்டனர்.



பளிங்குப் பாளங்களைப் பழைய அருங்காட்சியகத்திலும், பின்னர் புதியதிலும் காட்சிக்கு வைத்த பின்பு, பெர்காமொன் பீடத்தைப் பிரதான மையமாகக் கொண்ட பாரிய அளவிலான புதைபொருள், சிற்பக்கலைகளைக் கொண்ட அருங்காட்சியகத்தை அமைப்பதென ஜேர்மானியர் தீர்மானித்தனர். முதலாவது உலகப்போர், தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறை, இடையறாத விமர்சகர்களின் கண்டனங்களென்பன ஒன்றிணைந்து இப் பணியைத் தாமதமாக்கின. 1930 ஆம் ஆண்டு வரை, பெர்காமொன் அருங்காட்சியகம் பொது மக்களின் பார்வைக்குத் திறந்து விடப்படவில்லை.

1939 இல் இரண்டாவது உலகப்போர் வலுத்த போது, ஜேர்மனியர் மீண்டும் அதனை மூடிவிட்டனர். இரண்டு ஆண்டுகளின் பின்னர், அந்தப் பாளங்களை முதலில்

பீடத்தின் மூன்றிலொரு பங்கான மேற்குப் பகுதி மட்டுமே கட்டப்பட்டிருக்கிறது என்பதை, பெர்காமொன்னின் பிரதான மண்டபத்துக்குள்ளே போகும் ஒருவர் கண்டுகொள்ள அதிக நேரம் செல்லாது. தொடக்கக் காலத்தில் பளிங்காலான பத்திகள், கட்டட முடிகள், படிகள் சிலவே எஞ்சியுள்ளன என்பதை அறிந்து கொள்ள, இன்னும் சிறிது அதிக நேரம் பிடிக்கும். ஒரு காலத்தில் பீடக் கட்டடத்தைச் சிற்ப வேலைப்பாடுகள் அலங்கரித்தன. ஆனால், முழுக்கட்டடமும் மீளமைப்புச் செய்யப்படாத காரணத்தால், பளிங்குப்பாளங்கள் பல இப்போது பீடத்துக்குப் பக்கத்திலுள்ள அருங்காட்சியகச் சுவர்களிலே பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

PUBLIC LIBRARY, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடைய பெயர் ஒரு புறம் இருக்க, அருங்காட்சியகம் மாபெரும் பீடத்தையும், சிற்பங்களையும் விட மேலும் பலவற்றைக் கொண்டதாகும். தொன்மை மிக்க பெர்காமொன்னைப் பார்த்துப் பரவசமடையும் ஒருவர், வேறு பாரிய அறைகளுக்குள்ளே போய், மீளமைக்கப்பட்ட பலவற்றைக் கண்ணுறலாம். கி. மு. 6ஆம் நூற்றாண்டில், 2 ஆவது ''நெபுக்காட்னேசார்'' என்ற மன்னனின் ஆட்சிக் காலத்தில் இருந்த ஊர்வலப் பாதையையும், தொன்மைமிக்க பாபிலோனியாவின் கதவையும் இவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடலாம். 1899 இல் ஆரம்பித்து, முதலாவது உலகப் போர் வரையிலான காலப்பகுதியில், பாக்தாத் நகரின் ஓரிடத்தில் இந்த நீல, தங்க நிறக் கற்கள் கிண்டி எடுக்கப்பட்டன.

ரோமானிய அறையிற் சிறிது அதிக நேரம் செலவிட விளையும் ஒருவருக்கு மேலும் விசேட முக்கியத்துவங்களும் காத்திருக்கும். அங்கே மேற்குத் துருக்கியின் தொன்மை மிக்க நகரமான மிலேற்ரசில் கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டு 1100 ஆம் ஆண்டிற் பூகம்பமொன்றினால் அழிவுற்ற ரோமானியச் சந்தைக் கதவு ஒன்று காணப்படும். இது இரண்டடுக்குப் பத்தி கொண்டது; நன்கு அலங்கரிக்கப்பட்டது. அதன் தொடக்க உயரமான 45 அடியில் மீளமைப்புச் செய்யப்பட்டுள்ளது. எகிப்திய அருங்காட்சியகங்களின் இயக்குநரும், அந்தத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவருமான டியெற்றிச் வில்டுங்கின் வார்த்தையிற் கூறுவதானால், இது ஜேர்மனியின் மிகப் பெரிய புதைபொருள் கட்டடக் கலைப் பரிசாகும்.

இரண்டு ஜேர்மனிகளும், இரண்டு பேலின்களும் இணைந்த போது அருங்காட்சியகங்களும் இணைந்துவிடும் என்பதை அவற்றின் மேற்பார்வையாளர்கள் அறிந்திருந்தனர். பல ஆண்டுகளாக, மேற்கு பேலின் மேற்பார்வையாளர்கள் இரகசியமாகச் சுவர் தாண்டி, கிழக்கு பேலின் மேற்பார்வையாளர்களை அவர்களின் வீடுகளிலே சந்தித்து வந்திருக்கின்றனர். ''அருங்காட்சியகங்கள் மீளவும், இணையவேண்டும் என்ற விருப்பம் எமது மனத்திற் பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது.'' அருங்காட்சியாகப் பணியிலிருந்து இப்போது விலகியுள்ள வில்டுங், குன்ஜீ என்போர் இவ்வாறு கூறியுள்ளனர். ''இறுதியாக அது நடைபெற்றபோது, நாம் அதற்குத் தயாராக இருக்கவில்லை'' என்கிறார்கள் அவர்கள். ஒரு பொது ஒழுங்கு பற்றி, மேற்பார்வையாளர்கள் கருத்தொருமித்திருந்தனர். புதைபொருள் சேகரிப்புக்கள் அனைத்தும் அருங்காட்சியகத்தில் வைக்கப்படவேண்டும் என்பதிலும், பெர்காமொன் மையஅகமாக இருக்கும் என்பதிலும் இணக்கமிருந்தது. இரண்டாவது உலகப் போரின் போது சின்னபின்னப் படுத்தப்பட்ட 138 வயதுடைய தீவின் புதிய அருங்காட்சியகம், எப்போது பணியாளர்களாற் கட்டி முடிக்கப்படும் என்பதைப் பொறுத்தே, இந்தக் கருத்திட்டத்தின் பூர்த்திக்கான காலக்கெடு அமையும். இடைப்பட்ட காலத்தில் பேலின் சுவருக்குப் பின்னால் 30 ஆண்டுகள் வரையில் மறைந்திருந்த அற்புதங்களை ஒவ்வொருவரும் அநுபவிக்கலாம்.

ரீடேர்ஸ் டைஜஸ்ட்,
நவம்பர், 1993

வியட்நாம்

## ஊழல் தடுப்பில் தோல்வி

ஊழல்களையும், கள்ளக்கடத்தலையும் தடுத்து நிறுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தோல்வி கண்டு உள்ளன என்று வியட்நாமிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கூறியுள்ளார். சென்ற ஆண்டின் முதல் 10 மாத காலத்திற்குள் 918 ஊழல் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. இது 1992 இல் கண்டு பிடிக்கப்பட்ட தொகையிலும் இரு மடங்காகும். அதனால் அந்த நாட்டுக்கு 26 மில்லியன் அமெரிக்க டொலர் பொதுப்பண இழப்பு ஏற்பட்டுள்ளது. 754- இலஞ்சக் குற்றச் சாட்டுகளுக்காக, 2,224 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபடமற்ற இளம் பெண்களின் பேரழுகை!

**விலை மகளிராக விற்கப்பட்ட சீனப் பெண்களின் சிறுமை!!**

எழுதுவது:
பாங்கொக்கிலிருந்து
— கிம் கோயி —

சீன தேசத்தின் தென் மேற்குப் பகுதியில் யூனான் மாகாணம் அமைந்துள்ளது. இங்குள்ள அமைதியான கிராமங்களிலிருந்து அழகிய இளம் பெண்கள் பலர் 'வேலை வாய்ப்புத் தரப்படுகிறது என ஆசை காட்டப்பட்டு, தாய் லாந்து தேசத்தின் விபச்சார விடுதி களுக்குக் கபடத்தனமாகக் கடத்திச் செல்லப் பட்டு விற்கப்படுகின்றனர். சீனதேசப் பொலிசாரின் கணிப்பின்படி, 5,000 - க்கும் மேற்பட்ட கிராமப்புற அழகிகள் ஆசைகாட்டப்பட்டு, பர்மாவின் மலைப் பிரதேசத்தைக் கடந்து விபச்சாரத்திற்காக 1989 இல் அழைத்துச் செல் லப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இத்தகைய பெண்களுக்கு என்ன நடக்கிறது? 17 வயதுடைய தாய் இனத்தைச் சேர்ந்த இ. சாங் என்ற அழகிய இளம்பெண் இவ்வாறு கூறுகிறார்:-

''இரண்டு வருடங்களுக்கு முன்னர் நானும், எனது இரு சிநேகிதிகளும் எங்கள் கிராமத்தி லிருந்து மாவட்டச் சந்தைக்குப் பொருள்களை விற்றுத் தேவையான பொருள்களைக் கொள் வனவு செய்வதற்காக வந்தோம். நாம் மூவரும் சந்தையில் நின்றிருந்த போது, பர்மிய எல்லைப்புற சான் பிரதேசத்தைச்சேர்ந்த ''புத்தகுரு'' ஒருவர் எம்மிடம் வந்தார். ''என்னோடு பர்மிய எல்லைப் புறத்திற்கு வந்தீர்களானால், தாய் லாந்திலிருந்து கடத்தப்பட்டு வரும் நல்ல துணிகளையும், மற்றும் பொருள்களையும் மலிவாகப் பெற் றுக் கொள்ளலாம்!'' என்று கூறி னார்.

கள்ளங்கபடமற்ற அப்பெண்கள் மூவரும் புத்த குருவைத் தொடர்ந்து சென்றனர். நடந்தது என்ன? இரண்டு வருடங்களின் பின்னர், விபச்சார விடுதியிலிருந்தும், அவ் விடுதிகளின் சொந்தக்காரர்களிட மிருந்தும், அவர்கள் அதிர்ஷ்டவசமா கக் காப்பாற்றப்பட்டனர்.

இசாங், சீனாவில் தனது குடும் பத்தினருடன் சேருவதற்கு முன்பு, பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு தெரிவித் துள்ளார்:- ''எங்களது இச்செய லைப் பற்றி நீங்கள் ஆச்சரியமடை யலாம். ஓர் அந்நியனின் ஏமாற்று மொழிகளைக் கேட்டு இப்படிச் செல்லலாமா? என்று ஆத்திரப்பட லாம். ஆனால், உண்மை வேறா னது! நாம் எமது கிராமங்களில் இத்தகைய பொய்களையும், ஏமாற் றுதல்களையும் ஒருபோதுமே அறிந் திருக்கவில்லை. இவ்வாறுள்ளன என்று கேள்விப்பட்டதுங் கூட இல்லை. அதுவும், அப்பொழுது எனக்கு 15 வயது தான். இந்த உலகின் மோசடிகளை நான் அறிந் திருக்கவில்லை!''



விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட அப்பாவிப் பெண்களைக் கைது செய்யும் தாய்லாந்துப் பொலிஸார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசாங் தொடர்ந்து கூறினார்:- அந்தப் 'புத்த குரு' எங்களை எல்லைப் புறமான முவாங்யாங் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கேயுள்ள ஒரு வீட்டில் 'நாங்கள் இரு இரவுகளைக் கழித்தோம். பின்னர், அப்புத்தகுரு அங்கு வந்த இரு மனிதர்களிடம், எம்மைத் தாய்லாந்திலுள்ள மாசேய் என்னுமிடத்திற்குக் கொண்டு செல்ல ஒப்படைத்தார். நாங்கள் மிகவும் பயந்திருந்தோம். அந்த மனிதர்கள் எம்மைப் பயப்படவேண்டாமென்றும், தாய்லாந்தில் எமக்கு நல்ல தொழில்கள் வழங்கப்படுமென்றும், எங்கள் வீடுகளுக்கு பணம் அனுப்பி வைக்கத்தக்கதாக இருக்கும் என்றும் கூறினார். மாசேயில் நாங்கள் ஐந்து இரவுகளைக் கழித்தோம். அப்பொழுது அங்கு வந்த ஒரு மனிதன், ''எங்களுக்கு வேலை வழங்கப்போவதாக'' எம்மை அழைத்து வந்தவர்களிடம் கூறினான். நான் பயந்து அலறினேன். அந்த மனிதன் எம்மைக் கடத்தி வந்தவர்களுக்கு 45,000 'பாட்' (1,786 டொலர்கள்) பணம் கொடுத்தான். எங்களுக்கு முறையே 15,000 'பாட்' பணம் வழங்கப்பட்டது. எம்மைக் கடத்தி வந்தவர்கள், ''எம்மைப் பயப்படவேண்டாமென்றும், இந்தப் பணம் எங்களது வேலைக்காகத் தரப்பட்டதென்றும், அத்துடன் மேலும் 10,000 'பாட்' பணம் சீனாவில் எமது பெற்றோருக்கு வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர். அன்றியும் ஒரு வருடத்தின் பின்னர் தாங்கள் வந்து, எம்மை வீடுகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தனர்.

பின்னர், அந்தத் தாய்லாந்துக்காரர் அப்பெண்களை ஒரு வானில் ஏற்றி, பாங்கொக் நகரத்திற்குக் கிழக்கில், 100 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அழகு கொழிக்கும் கடற்கரைப் பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றார். அப்பிரதேசம் விபச்சாரத்திற்கும், பாலியல் லீலைகளுக்கும் மிகப் பிரசித்தமான இடமாகும். 'அங்குள்ள விடுதிகளில் தங்கிய நாங்கள், ஒவ்வோர் இரவும், பகலும் ஆண்களுடனேயே படுத்திருந்தோம்'' என்று விபரித்த இசாங், ''எட்டு மாதங்களின் பின்னர், ஒரு மோட்டோர் சைக்கிள் ராக்ஸி டிரைவரின் உதவியுடன் நான் தப்பித்து மே சேய்க்குச் சென்றேன்'' என்கிறார். பர்மாவின் ரேசிலேக் பட்டினத்தை நான் வந்தடைந்தும், வயது முதிர்ந்த பெண்ணொருத்தியால் மீண்டும் ஏமாற்றப்பட்டேன். அவள் என்னை 30,000 'பாட்' பணம் பெற்றுக்கொண்டு. மலேசியாவின் எல்லைப் புறநகரான பீரோங்கின் விபச்சார விடுதிக்கு விற்றுவிட்டாள்.

பத்து மாதங்கள் கழிந்தன; தாய்வானைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் அவ்விடுதிக்கு வந்து என்னைச் சந்தித்தார். அவரிடம் என் கதையைக் கூறினேன். அவர் எனக்கு உதவிசெய்து, சீனாவுக்குச் செல்ல வழி சமைப்பதாகக் கூறினார். அவர் என்னை அவ்விடுதியில் வைத்து மீட்பதற்காக, 60,000 'பாட்' பணத்தை அவ்விடுதிச் சொந்தக்காரருக்குக் கொடுத்து என்னை மீட்டார்.

அவர் என்னை அழைத்துச் சென்று பாங்கொக் நகரிலுள்ள சீனத் தூதுவராலயத்தில் ஒப்படைத்தார். அங்கிருந்து நான், ''சிறுவர்கள் உரிமைகள் பாதுகாப்பு நிலையத்துக்கு'' அனுப்பிவைக்கப்பட்டேன். அங்கும் பத்து மாதங்கள் கழிந்தன. நான் சீனாவிற்குச் செல்வதற்கான பத்திரங்கள் தூதுவராலயத்தால் வழங்கப்பட்டன. தாயகத்தின் குன்மிங் மாவட்டத்திற்கு விமானப் பயணம் செய்தேன்.

அப்பயணத்தில் எனது சிநேகிதி ஒருவரையும் சந்தித்தேன். அவர் பெயர் சுய்காம். அவள் பட்டயாவிலிருந்து வந்திருந்தாள். உயர்ந்த தோற்றமும், அழகிய சருமமும் பெற்ற அவள், பணம் படைத்த ஒரு கிழவனின் ஆதரவால் விபச்சார விடுதியில் இருந்து மீட்கப்பட்டு, பாங்கொக் நகரில் அவனது ஆசை நாயகியாக வாழ்ந்தவள். பின்னர் அவள் வேறொரு பெண்ணுடன் 'தாய்ராத்' என்னும் தாய்லாந்து நாட்டுப் பத்திரிகை அலுவலகத்தில் வேலை செய்ய, அவனால் அனுப்பப்பட்டாள். அவள், அங்கேவாயிற் காவலாளியாக வேலை செய்தாள். மூன்றாவது பெண் அதிர்ஷ்டசாலி. அவள் மற்றொரு தாய்வான்காரரின் உதவியினால் மேசேய் சென்று, பின்னர் தனது தாயகம் போய்ச் சேர்ந்தாள்.

கடத்தப்படும் பெண்களிற் பெரும்பாலானோர் ''தாய்' அல்லது 'அகா' இனத்தைச் சேர்ந்த எல்லைப்புறப் பிரதேசங்களில் வசிப்பவர்கள். இந்த 'அகா' இனத்தினர் சீனாவில் 'ஹனி' (தேன்) என்று அழைக்கப்படுகின்றனர்.

அண்மையில், பெரிய அளவிலான ஒரு தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்ட போது, 100 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுமிடத்து, கடுந்தண்டனை வழங்கப்படுமென கிஸ் இவாங் பன்னா தாய் சுயாட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் தலைவர் யாங் சொங் மிங் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சீனாவுக்குப் பெரிய அளவில் உதவி தேவைப்படுகிறது. யாங் கூறுகிறார்:- ''குறிப்பாக எயிட்ஸ் நோயின் பயங்கரம் எதிர் நோக்குகிறது. சிலரில் இந்நோய்க்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாம் எதிர்பார்க்கிறோம். அத்தகைய நிறுவனமொன்றும் சீனாவில் இல்லை. அத்துடன், இத்தகைய பாதிப்புக்களுக்குள்ளான பெண்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசகர்களின் உதவியும் வேண்டியுள்ளது!' என்று

1992 ஜூலையில், குன் மிங் பிரதேசப் பொலிஸ் தலைவர் தலைமையிலான சீனத் தூதுக்குழு ஒன்று, பொலிஸ் உதவித் தலைவர் யாங் உட்பட, பாங்கொக் நகரத்துக்கு வருகை தந்தது. அக்குழு, ''சிறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல உரிமைகள் பாதுகாக்கும் சங்கத்தினால்'' காப்பாற்றப்பட்டிருந்த மேலும் ஆறு பெண்களை மீட்டது.

இன்று வரை, 36 பெண்களே சீனாவுக்குத் திரும்பியுள்ளனர். சியாங் றாய் விபச்சார விடுதி ஒன்றில், ஒரு பெண் 1991 ஒகஸ்ட் மாதம் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளாள். சிறுவர் நலன் பாதுகாக்கும் நிலையம் ''உண்மையான குற்றவாளிகள் ஒரு போதுமே தண்டிக்கப்படவில்லை'' எனக் குறைப் படுகிறது.

மற்றும் நான்கு பெண்கள் 18 வயதுடைய இளம் பெண்ணான கிஸ்வொங் பன்னா, நகர உதவி மேயருடைய மகள் உட்பட – சிறுவர் உரிமைகள் பாதுகாக்கும் நிலையத்தின் பாதுகாப்பில், தமது வீடுகளுக்குச் செல்லும் நாளை எதிர் பார்த்திருக்கின்றனர்.

இவர்கள் ஓரளவு அதிர்ஷ்டசாலிகளாவர். விபச்சார விடுதிகள் பெரும்பாலும் பொலிஸ் திணைக்களத்தின் முகப்பிலும், பொலிஸ் நிலையங்களின் முகப்பிலேயுமே இயங்கி வருகின்றன. ஆனால், இந் நிலையங்களின் 'இருட்டுப் பார்வைகளில்' இந்தக் குரூர விடுதிகள் தென்படுவதில்லை'' என்கிறார் டாக்டர் சுடிகுல் என்னும், தாய்லாந்து நாட்டின் பெண்கள், சிறுவர்கள் நலன்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க ஆலோசகர்!

''சில பெண்கள் விபச்சார விடுதிகளிலிருந்து மீட்கப்பட்டு, குடிவரவு குடியகல்வுத் தூதராலயங்களுக்கு அனுப்பப்பட்ட பின்பும், விலை மாதர்களாக மீண்டும் விற்கப்படுகின்றனர்'' என்று ஒரு பத்திரிகை குறிப்பிடுகிறது.

இசாவ், இரண்டு வருடங்கள் கழித்துத் தமது சொந்த வீடு திரும்புவது குறித்து மிகுந்த மகிழ்ச்சியும், உளக்கிளர்ச்சியுமுள்ளவராகக் காணப்பட்டார். ''எனக்குக் கடந்த சில இரவுகளாகத் தூக்கமே வருவதில்லை. வீட்டிற்குச் செல்வதை யிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். நான், இனி ஒருபோதும் இந்தப் பக்கமே வரமாட்டேன். ஆனால், எனக்குள்ள ஒரேயொரு கவலை எனது அப்பா என்னைக் கண்டதும் என்ன சொல்வாரோ? என்பது தான்!'' இவ்வாறு தெரிவித்தார் இசாங்!

(F)வார் ஈஸ்ரேன் எக்கொனமிக் றிவியூ,
செப்ரெம்பர் 9, 1993.

---

# மொணாலிசாவும் தாக்கப்பட்டவரா?

மொணாலிசாவின் மோகனப் புன்னகை பல விவாதங்களுக்கு மூல காரணமாய் இருந்து வந்துள்ளது. அவள் சிரிப்பது புன்சிரிப்பா அல்லது வேதனைச் சிரிப்பா? மொணாலிசாவும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கக்கூடும். அமெரிக்காவின் மேரிலண்டைச் சேர்ந்த பல் வைத்தியரும், சித்திர விற்பன்னருமான பொர்கோவஸ்கியின் கூற்றுப்படி அவருடைய உடல்தோற்றம் அவள் பல பற்களை இழந்தவளாகக் காட்டுகிறதாம். டாவின்சி வரைந்த சித்திரத்தை பெருப்பித்துப் பார்த்த படத்தில் அவளுடைய வாயைச் சுற்றி தழும்பு இழையங்கள் இருப்பதாகத் தெரிகிறதாம். ''அவள் புன்னகை பூக்கவே இல்லை. அவளுடைய முகம் வெளிப்படுத்துவது முன் பற்களை இழந்தவர்கள் கொண்டிருக்கும் முகபாவனை தான்'' என்று அவர் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவீதி

**தொழில் நுட்பம்: தகவல் தொடர்புப் பெருஞ்சாலை, எம்மை வந்து சேரப் பலகாலமெடுக்கும். தகவல் தொடர்புப் பொறியியலாளர் கூறுவது போல, இன்று அல்லது நாளை நடவாது.**

இலையுதிர் காலத்தில் மொய்க்கும் தத்துவெட்டிகளைப் போல, 1,50,000 வரையிலான தொழில்நுட்ப வல்லுநர்கள் லாஸ் வேகாஸ் நகரத்திற்கு வருகை தருகிறார்கள். (Comdex) 'கம்டெக்ஸ்' எனப்படும் கொம்பியூட்டர்த் தொழிற்றுறை வர்த்தகக் காட்சியைப் பார்வையிடுவதற்காக அவர்கள் வருகை தந்துள்ளனர். இரசனையாளர்கள், இவ்வர்த்தகக் காட்சியை ''விலங்குக் காட்சிச் சாலை'' என வர்ணிக்கின்றனர். நகரத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ''சுலாட்'' (Slot) இயந்திரங்கள், நியோன் ஒளிவீச்சுக்கள் என்பனவற்றையும் பொருட்படுத்தாது, உணவு விடுதிகளிலும், பொருட்காட்சி மண்டபங்களிலும் அவர்கள் நிறைந்து, '' மேடையின் குறுக்காக நிறுவப்படும் இயந்திரங்கள்,'' உண்மையாகவே மகிழ்ச்சி தரவல்ல சாதனங்கள் பற்றி அதிகளவிலே பரபரப்பாகப் பேசிக் கொள்கின்றனர். இவ்வருடத்தின் அதிமகிழ்ச்சிக்குரிய சமாச்சாரமாக விளங்குவது, '' Information High way'' எனப்படும் சாதனமாகும். இவற்றையெல்லாம் நீங்கள் நம்புவதாயிருப்பின், எமது வீடுகளிலும் அலுவலகங்களிலும் தொலைபேசி, தொலைக்காட்சிச் சாதனம், கணனி என்பன ஒருமித்துச் செயற்படவல்லதொரு சாதன அமைப்பு உருவாகுவது உறுதி. எவரும், எவ்விடத்திலிருந்தும், ஒருவரோடொருவர் இலத்திரனியல் முறையிலான தொடர்பை (E. Mailing) ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு விரைவிற் கிட்டும். வீட்டில் ஆசனத்தில் அமர்ந்தவாறே, கடையிற் பொருள்களை வாங்குதல், பொருள்களை, விற்றல் கூட்டிணைந்த வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபடல், திரைப் படக் காட்சிகளுக்கு ஒழுங்கு செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.



('' Information High way'') என்ற சாதனம் பாவனைக்கு வரவுள்ளது. நாம் வேலை செய்யும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்திப் பொழுதுபோக்கவும், விடயங்களை அறிந்துகொள்ளவும் உதவுகிறது. இச்சாதனம் விரைவிற் பாவனைக்கு வருமா? கூறுவதற்கில்லை. தொழில்நுட்ப ரீதியிலான பல இடர்ப்பாடுகள் முன்னுள்ளன. பிரபல்யமாகப் பேசப்படும் இத்தகைய தகவற் பொழுதுபோக்குச் சேவைகள், வீடுகளை வந்தடைவதற்குப் பத்து வருடங்களாவது ஆகும் என உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். இருப்பினும், மக்கள் அதனை விரும்புவார்கள் என்பதை உறுதிபடக் கூறமுடியாது.

தொழில்நுட்ப வளர்ச்சி தரும் புளகாங்கிதத்தை விளங்கிக் கொள்ளல் சுலபமான தொன்றாகும். எதிர்கால நலன்களை விரைவிலே கிட்டச் செய்யும் முக்கியமானதொரு தொழில் நுட்பக் கண்டுபிடிப்பின்றி, நாளெதுவும் கழிவதென்பது அரிதாகி விட்டது. ஐக்கிய அமெரிக்காவில், பெல் அற்லான்ரிக் என்பவர் சக்தி வாய்ந்த தொலைத் தொடர்புத் துறையை ஆரம்பித்துள்ளார். தொலைபேசியுடன் கம்பியிணைப்பை (Cable) ஏற்படுத்துவதன் மூலம், ஒரு புதிய அலைத் தொடர்பூடக முறையை உருவாக்கியுள்ளார்.

கிழக்கு ஐரோப்பாவிற் கொம்யூனிசத்தின் வீழ்ச்சியைப் பற்றி செய்தி வெளியிட்டது போல, இத் தொழில் நுட்பப் புரட்சிபற்றிச் செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் ஆவேசமாக அறிவித்துள்ளன. விளையவிருக்கும் புதிய நன்மைகளைப்பற்றி அறிந்து ஆச்சரியப்பட்டுள்ள தொழில் நுட்பச் சாதனை பற்றிய தகவல்களைத் தரும் செய்தியாளர்கள் எரிச்சலூட்டும் கேள்விகளை அதிகளவிற் கேட்க முனையவில்லை. ''இவையனைத்தும் எதிர்காலத்தில் நடக்கத்தான் போகின்றனவா? என்பது பற்றியே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அவ்வாறில்லை'' என்று கூறுகிறார், நியூயோர்க்கைச் சேர்ந்த தொழில் நுட்பப் பங்காளிகளில் ஒருவரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிச்சாட் ஷாஃப்பர் என்பவர். Big Bandwidth எனத் தொழில் நுட்பவியலாளர்களால் அழைக்கப்படும் இலத்திரனியற் பெரு வீதியை அமைப்பதற்குப் பல வருடங்கள் எடுக்கும். அத்தகைய அமைப்பொன்று இங்கு ஏற்பட்டவுடன் தகவல்துறை சார்ந்த பொருளாதாரத்தில் இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியம். ஆனால், இது நிறைவேறுவதற்குப் பாரிய முதலீடு அவசியமாகும். Fiber Optic Cable—Switching உபகரணம் தொடக்கம், தகவல் நுகர்வோரால் டயல் செய்யப்படும் இலக்க வடிவங்களை விளங்கிக் கொள்வதற்குத் தேவைப்படும் TV top சமிக்ஞை மாற்றுச் சாதனம் (decoders) வரை கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டியிருக்கும். பெரு நகரங்கள், இப் புதிய சேவைகளை முதலிற் பெற்றுக்கொள்ளும். சிறிய நகரங்களும், கிராமங்களும் புறக்கணிக்கப்படக் கூடும். எவ்வளவு காலத்திற்கு? முன்னைய 'புரட்சிகள்' பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். 30 வருடங்களுக்கு முன்னரே கேபிள் தொலைக்காட்சிச் சாதனங்கள் அரைப் பங்கு அமெரிக்கக் குடும்பங்களுக்குக் கிடைத்துவிட்டன. வானொலிப் பெட்டிகளுக்கு 11 வருடங்களும் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு 20 வருடங்களும் எடுத்தன. "500 (Channel) அலை வரிசைத் தொலைக்காட்சிச் சாதனம் இங்கு குறிப்பிடப்பட்ட சாதனங்களை விட அதிகளவு விரைவில் வருவதற்கில்லை" என்கிறார் ஷாஃப்பர்.

மேலும் கடுமையான அடிப்படைப் பிரச்சினையொன்று உள்ளது. இங்கு விபரிக்கப்பட்ட இலத்திரனியற் பெருவீதி அமைக்கப்பட்டவுடன் அவ்வீதியில் வாகனங்களைச் செலுத்தப்போவது யார்? ஒரு தொலைக்காட்சிச் சாதனமும், தொலைக் கணனிச் சாதனமும் ஒருங்கிணைந்த கருவியொன்றைப் பயன்படுத்தும் சராசரி நுகர்வோர் ஒருவரைப் பற்றிச் சிலிக்கன் பள்ளத்தாக்கு (Silicon Valley) எனப்படும் முன்னணி நிறுவனத்தின் முதலீட்டாளர் டொன் வலன்ரைன் கொண்டுள்ள கருத்து பிரமிக்கத்தக்கது. "உங்களுக்கு ஒரு (Pizza) (ஓர் இத்தாலிய உணவு) தேவைப்பட்டால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தொலைபேசியை எடுத்துப் பேச வேண்டியது தான். உங்களது சொந்தத் தொடர்பு சாதனத்திற் (Codes) பிரயோகம் செய்து (Pizza) விற்பனை நிலையத்துடன் தொடர்பு கொள்ளவேண்டியதில்லை" என அவர் கூறுகிறார்.

கலிபோர்னிய ஆய்வு நிறுவனமொன்றான (S.R.I. International) 2,000 அமெரிக்கக் குடும்பங்களில் முன்னெப்போதுமில்லாத அளவிற் பெரியதோர் ஆய்வைச் சமீபத்தில் நடாத்தியது. அதன் முடிவுகள் வருமாறு: அடுத்து வரும் ஐந்து வருட காலத்தில் இச் சாதனத்தால் வழங்கப்படும் சேவைகளில் மிகவும் பிரசித்தி பெறும் திரைப்படங்கள் பத்து வாடிக்கையாளர்களில் ஒன்றுக்கும் குறைந்த எண்ணிக்கை என்ற அளவில் தான் மக்களைக் கவரும். நூற்றாண்டு முடிவடைவதன் முன் இல்லங்களுக்கான செய்தித் தகவல் இணைப்புகளுக்கான சந்தை வாய்ப்புக்கள் கிட்டமாட்டா; மேலதிக வெளிநாட்டு வழங்கல்களான வீடியோ மாநாட்டு நிகழ்ச்சி உயர்ரக எண் தொலைக்காட்சிச் சாதனம் தகவல் வங்கிக்கான (உதாரணமாக கொங்கிரஸ் நூலகம்) கல்விப் பயிற்சி நிகழ்ச்சிகள் போன்றன நுகர்வோருக்கு எட்டாதுள்ளன.

தொழில் நுட்பப் பிரச்சனைகளும், இச்சாதனங்களுக்கான கேள்வியைக் குறைக்கமுடியும். கொம்பியூட்டரைப் பயன்படுத்துவோர் விசேட தரத்தினர். தகவல்களை விழுங்கிவிடும் மூட்டைப் பூச்சிகள், வைரஸ் போன்றவற்றுக்கு அவர்கள் பரிச்சயப்பட்டு விட்டார்கள். இச்சாதனங்கள் உடைந்து போவதும், அவர்களுக்குப் பழக்கமான தொன்றாகிவிட்டது. இது தினமும் நடைபெறுகிறது. மிக அண்மையில், "(Internet)" எனப்படும் அதிகரித்தளவிற் பிரசித்திபெறும், உலகளாவிய பெருந்தெருத் தகவல் சேகரிக்கும் சாதனம் ஒன்று (Data High way) பாரிய போக்குவரத்து நெரிசலொன்றில் நொருங்கிவிட்டது.

கனவுலகம்:- இச்சாதனத்தை அமைப்பவர்கள், வெளிப்படையில் இக்கருத்துக்களை மறுக்கின்றனர். "எம்மாற் பணம் சம்பாதிக்க முடியவில்லை எனில், நாம் அதைத் தயாரிக்க மாட்டோம்" எனக் கூறுகின்றார், (Tele - Communications) சார்ந்த பொப் கொம்சன். "எவ்வகையான சேவைகளை வாங்குவதற்கு மக்கள் விரும்புவார்கள் என்பது, எவருக்கும் தெரியாது" என அவர் வாதாடுகின்றார். "ஆனால் சிலர் திரைப்படங்களை விரும்புவார்கள்; மற்றையோர், வீட்டிலிருந்தவாறே பொருள்கள் வாங்குவதை விரும்புவர். வியாபாரமொன்று நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு, அதுவே போதுமானது" என அவர் மேலுங் குறிப்பிடுகின்றார். T.C.I ஐப் பொறுத்தவரை, ஒரு பெரிய கேபிள் நிறுவனமாக இது விளங்குகிறது. இக்கம்பனி 1996 நடுக் காலகட்டத்தில், தனது வாடிக்கையாளர்களில் 80 சதவீதமானவர்களுக்கு இலத்திரனியற் பெருவீதித் தகவற் சேகரிப்புச் சாதனச் சேவையை வழங்கும். ஆனால், இச்சாதனத்தின் மூலம் பணம் சம்பாதிக்கத் தீர்மானித்திருக்கும் அநேக சிறு கம்பனிகளின் நிலைமை எவ்வாறிருக்கும்?

பாரம்பரிய உலோகக் கொம்பியூட்டர் பாகங்களுக்கான சந்தைகள் வேகமாக நிறைந்து கொண்டிருக்கின்றன. ஆடம்பரத் தனியாட் கணனி, சேவை நிலையங்கள் தொடக்கம், உயர்ரகக் கணனிப் பாகங்கள் வரையிலான விலைகள் வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றன. 500 அலைவரிசைகளை நிரப்புவதற்குத் தேவைப்படும் நிகழ்ச்சிகள், விடயங்கள் போன்ற

PUBLIC LIBRARY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புதிய தொடர்புச் சாதனங்களில்," இலாபகரமான முறையில் ஒரு ஸ்தாபனத்தைக் கண்டுபிடிக்கலாமெனச் சிறிய நிறுவனங்கள் எண்ணுகின்றன. இருக்கவேயிருக்கிறது "(Hype)" சாதனம். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப, சந்தைகள் நிலைக்க முடியுமா? தமது சுயவாக்குறுதியின் பேரில், அவர்களால் வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடியுமா? "பல ஏமாற்றங்கள் காத்திருக்கின்றன" இவ்வாறு கலிபோர்னியா ஏ. எஸ். ரி (A. S. T) ஆராய்ச்சி நிலையத்தின் ஹோவாட்எலியாஸ் என்பவர் எச்சரிக்கின்றார்.

எந்தவொரு புதிய கைத்தொழிற்சாலை தோன்றும் போதும், தவிர்க்கமுடியாதவாறு நடப்பது இதுவே தான்:- ஒரு கொம்பியூட்டர் கம்பனியால், பத்திரிகை நிருபர்களுக்குப் பணம் நிறைந்த காகிதஉறைகள் வழங்கப்பட்டன. அத்துடன், "எம்முடன் இணையுமாறு, தாங்கள் மிக மனமுவந்து வரவேற்கப்படுகின்றீர்கள்." "(Microsoft)" நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான வில்லியம் கேற்ஸ் கணனித் தயாரிப்பில் மற்றவரைக் காட்டிலும் அதிகளவிற் பணியாற்றியுள்ளார். "(Information High way) என்ற சாதனம், விரைவில் வெளிவரும் என்பதில் அவர் உறுதியாகவுள்ளார்.

நியூஸ்வீக், நவம்பர்29, 1993

தென் ஆபிரிக்கா

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பாகுபாடு செய்கிறதா?

அமெரிக்க வர்த்தக அமைச்சர் றொன் பிரவுண் தென் ஆபிரிக்காவில் அமெரிக்க முதலீடுகள் செய்வதற்கு எதிரான தடைகள் தற்சமயம் நீக்கப்பட்டிருக்கும் காரணத்தால் அங்கு அமெரிக்க முதலீடுகளைத் தூண்டும் தனது எத்தனிப்பின் ஒரு பகுதியாக அங்குள்ள கறுப்பு இன வர்த்தக சமுதாயத்தை இன ஒதுக்கலுக்குப் பின்பான பொருளாதாரத்தில் "முழுமையாக ஈடுபடும் படி" தூண்டியுள்ளார். இருந்தும் பல தென் ஆபிரிக்கத் தொழில் அதிபர்கள் ஏற்கனவே தாம் புறக்கணிக்கப்பட்டு உள்ளதாக உணர்கின்றனர். கறுப்பர் இனத்தாருக்கு உரிய ஒரு தென் ஆபிரிக்க நிறுவனம் அதற்கு ஆபிரிக்கத்தேசியக் கொங்கிரஸுடன் உள்ள தொடர்பு காரணமாகப் போட்டியில் நன்மை பெறுவதாக அவர்கள் சாடுகின்றனர். தீபீ முதலீட்டுக் கோர்ப்பரேசன் ஆ. தே. காங்கிரஸின் தலைவர் நெல்சன் மண்டேலாவையும் பிரதித்தலைவர் வோல்டர் சிஸ்லூவையும் அந்த நிறுவனத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக அட்டவணைப்படுத்தி உள்ளது. சிஸ்லூ மாபெரும் நூல் வெளியீட்டு நிறுவனமான மக்மிலனுடனும் டிஜிட்டல் சாதன உற்பத்திக் கோர்ப்பரேசனுடனும் பங்குடைமையாளராக ஆகியுள்ளார். அது பொருளாதாரத் தடை நீக்கப்படுவதற்கு முன்பு நிகழ்ந்து உள்ளது. தென் ஆபிரிக்காவின் முதலாவது கறுப்பர் இன அரசாங்கத்தை அடுத்த ஏப்ரலில் வரும் தேர்தலின் பின் நிச்சயமாக அமைக்கப் போகும் தென் ஆ. தே. கொங்கிரஸ் தீபீ யுடன் தமக்கு "நேரடிப் பணத் தொடர்புகள்" இல்லை என்று மறுத்திருப்பதுடன் அந்தக் குற்றச்சாட்டைப் பற்றி ஆராய்வதாகவும் வாக்களித்துள்ளது. தீ.பீ. நிறுவன அதிகாரிகளும் தாம் ஆ. தே. கொங்கிரசின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவில்லையென மறுக்கின்றனர். சென்ற ஒக்ரோபர் மாதத்தில் 75 பிரபலமான கறுப்பர் இன தென் ஆபிரிக்க வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆ. தே.கொங்கிரஸின் சிரேட்ட அதிகாரிகளிடம் தங்கள் குறைகளைக் கூறியுள்ளனர். அவர்கள் ஆ. தே. காங்கிரஸ் வெள்ளையர்களின் வர்த்தக நிறுவனங்களுக்கு ஆதரவு நல்குவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளனர். அத்தகைய வெள்ளையரின் வர்த்தக நிறுவனங்களே பொருளாதாரத்தில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. ஆ. தே. கொங்கிரஸின்செயலாளர் நாயகம் சிறில் ராமபொஹாசா ஆ. தே. கொங்கிரஸ் அந்தக் குறைபாடுகள் பற்றி மேலும் கவனம் செலுத்தி இருக்கலாம் என்று ஏற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றஞ் சுமத்தப்பட்ட வைரஸ் கண்டுபிடிப்பாளருக்கு இறுதியில் வெற்றி

எழுதியவர்
— கிறிஸ்றீன் கோ(ர்)மன் —

ஒன்பது வருடங்களுக்கு முன், கலாநிதி றொபேர்ட் கல்லோ Dr. Robert Gallo) விஞ்ஞானத்தின் பிரகாசமான நட்சத்திரங்களில் ஒருவராவார். ஐக்கிய அமெரிக்காவின் தேசியப் புற்றுநோய் மையத்தில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் இவர் ''எயிட்ஸ்'' நோய்க்கு வைரஸ் கிருமியொன்றே காரணம் எனக் கண்டு பிடித்தபோது நோபல் பரிசு கிடைக்குமளவுக்குப் புகழ் கிடைக்கலாம் என எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அடுத்த வருடமே, 1985 இல் இவரா? அல்லது, பிரான்ஸ் தேசத்து பாஸ்சர் நிலையத்தின் கலாநிதி லக் மொன்ராக்னியரா? (Dr. Luc Montagnier) கண்டு பிடித்தது என்ற சர்ச்சை ஏற்பட்டது. 1987 இல், இந்த வெற்றிக்கு உரிய புகழைச் சம அளவிற் பகிர்வதென இருவரும் உடன்பட்டனர். ஆயினும், அவரது கஷ்டங்கள் முடியவில்லை.

இரண்டு வருடங்களின் பின், சிக்காகோ ட்றிபியூன் (Tribune) பத்திரிகை மூலமும், மிச்சிகனின் கொங்கிரஸ் உறுப்பினர் ஜோன் டிங்கெல் அரச விசாரணை அவசியம் என கேட்டதன் மூலமும் இவருக்குச் சோதனை ஏற்பட்டது. அலன் அல்டா என்ற நடிகர் இவரைத் 'தன்னைத் தானே உயர்த்தும் பாம்பு' என்பதாக (''And the Band Played On'') என்ற எயிட்ஸ் பற்றிய வெற்றிப் படத்திற் சித்திரித்துக் காட்டியதால், இவர் மிகவும் தாழ்நிலையை அடைந்திருக்கலாம்.

ஆராய்ச்சியின் நேர்மைக்கான பணிமனை (Office of Research Integrity) இவர் நேர்மையற்றவரா? கலாநிதி மொன்ராக்னியருக்குப் போதிய அளவு புகழைக் கொடுக்கவில்லையா? என ஆராய்ந்த போது இவர் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார் ஆனால் கடந்த வாரம், போதிய சான்றுகள் இல்லை என வழக்குக் கைவிடப்பட்டபோது மகிழ்ச்சியடைந்தார். இது பற்றி ''டைம்'' பத்திரிகைக்குப் பேட்டியும் அளித்தார்.

**''எயிட்ஸ்'' நோய்க்குரிய எச். ஐ. வி வைரஸ் கிருமியைக் கண்டுபிடித்த, கூட்டுக்கண்டுபிடிப்பாளருக்கெதிரான தவறான வழி நடத்தல் முறைகள் முழுவதிலிருந்தும் அமெரிக்க அரசாங்கம் விலகிக் கொள்கிறது.**

இதற்குக் காரணம் யாதெனில், 1984 ஆம் ஆண்டு தாம் கண்டு பிடித்ததாக வெளியிட்ட வைரசும், 1983 இல் மொன்ராக்னியர் கண்டு பிடித்த வைரசும், கிட்டத்தட்ட ஒன்றே என 1985 இல் கண்டு பிடிக்கப்பட்டது. இரண்டு ஆராய்ச்சி நிலையங்களும் கூட்டாகச் செயற்பட்டதாலும், ஒருவருக்கொருவர் தமது ஆராய்ச்சிக்கான வைரஸ் வளர்க்கப்பட்ட சாடிகளை (Viral Cultures) பரிமாறிக் கொள்வதாலும், கல்லோ அதனைத் திருடியிருக்கலாம் எனக்கருதினர். தமதுவைரசும், மொன்ராக்னியர் கண்டுபிடித்த வைரசும் ஒன்றே எனவும், மொன்ராக்னியரே முதலிற் கண்டு பிடித்தவர் எனவும் ஒப்புக் கொண்டார். ஆயினும், நோயாளிகளின் குருதி மாதிரிகளிலிருந்து தாம், வைரசைப் பிரித்தெடுத்ததாகச் சாதித்தார்.

1991 ஆம் ஆண்டு கல்லோவும், மொன்ராக்னியரும் தமது குழுவினரை மீண்டும் ஆராயும்படி பணித்தபோது, உண்மை புலப்பட்டது. பிரான்சிலிருந்து தருவிக்கப்பட்ட வைரஸ் கிருமிகள், கல்லோ வைத்திருந்த குருதி மாதிரிகளுடன் தற்செயலாகக் கலந்து விட்டன. ஆயினும் கல்லோ, தமது ஆராய்ச்சியாளர்களின் திறன் குறைந்து விடவில்லை; ஏனெனில், அவர்கள் வேறு பல எச். ஐ. வி (H. I. V) வைரஸ் கிருமிகளைக் கண்டு பிடித்துள்ளனர் என்றார்.

என்றபோதும் O.R.I, கல்லோ முற்றிலும் நேர்மையானவர் எனக் கருதவில்லை. மொன்ராக்னியருக்குக் கிடைக்கவேண்டிய புகழை இவர் பெற்றுவிட்டார் எனவும், இவரது உதவியாளர்களில் ஒருவரான கலாநிதி மிகுலாஸ் பொபொவிக் என்பவர் பெறுபேறுகளிற் குளறுபடி செய்தார் என்றும், தமது அறிக்கையிற் குறிப்பிட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்பு தான், பொப்பொவிக் குற்றவாளி அல்லர்; செக்கோஸ்லாவாக்கியாவிற் பிறந்த இவர், ஆங்கில அறிவு போதாமையாற் சில தவறுகளைச் செய்துவிட்டாரென O.R.I. மீண்டும் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. ஆயினும், மாசுபட்ட பொப்போவிக் 3 வருடமாக ஒரு தொழிலையும் செய்ய முடியவில்லை. இறுதியாக, அவர் சுவீடன் சென்று விட்டார்.

O. R. I. தமது குற்றச்சாட்டுக்களைக் கைவிட்டு விட்டாலும், கடந்த ஒன்பது ஆண்டுகளிலும் கல்லோயாவுக்கு ஏற்பட்ட பழி முழுவதுமாக நீங்கவில்லை. இனி வரும் சரித்திரம், கல்லோயாவுக்கு நற்பெயரைக் கொடுக்கும் என நம்பலாம்.

டைம், நவம்பர் 23, 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கப் பல்பொருள் அங்காடிக்குச் சென்று பார்க்கும் போது, 'பீச்' பழ விற்பனைப் பகுதியில், வியாபாரிகள் மத்தியில் ஒரு தத்தளிப்பு மனோ நிலையை அவதானிக்க முடியும். கிருமி நாசினி பாவிக்காத பழத்திற்கு மதிப்பு அதிகமா? அல்லது, பாவித்துப் பெறப்பட்ட பழம் விற்பனை அதிகமா? என்ற தளம்பல் நிலையே அதுவாகும். சந்தையில் மக்கள் இரசாயனப் பாவனையற்ற உணவுப்பண்டங்களையே விரும்புகின்றனர். ஆனால் மறுபுறத்தில், சந்தையிற் காணப்படும் அப்பிள்பழம் ஒன்றிற் சிறு துவாரம் இருந்தாலும் கூட, அதை வாங்கமாட்டார்கள். அதே நேரம் விவசாயிகள் கிருமிநாசினி வகைக



நூதனமான கருத்துக்கள்: கவர்ச்சிப் பொறிகளும், வாசனையும் முட்டைப் பூச்சிகளை முட்டாளாக்கக் கூடியன.

கிளின்ரன் நிர்வாகத்தில் ஒரு செயற்பாடு ஆரம்பமாகின்றது. விவசாயத் திணைக்களமும், உணவு மருந்து நிருவாகமும், சுற்றுச் சூழற் பாதுகாப்பு முகவரும் சேர்ந்து கிருமிநாசினியின் பாதிப்புத் தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் செயற்படத் தொடங்கினர். ஏறத்தாழ 12 வருடங்கள் குடியரசுக் கட்சியினால் வெள்ளை மாளிகையில் இது தொடர்பான எந்தக் குரலும் எழுப்பப்படாது இருந்தது ஆச்சரியப்படக் கூடியது. கிளின்ரன் கிருமிநாசினிப் பாதுகாப்புத் தொடர்பாகப் புது நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்படும் என அறிவித்தார். அதன் படி குறைந்தது 75 வீதம் பண்ணைகளின்

**உணவு:**

**விவசாயிகள், கிருமிநாசினி பயன் படுத்தாத பழங்களையும், காய் கறிகளையும் தர விழைகிறார்கள்**

# 'பீச்' பழத்தைக் கொடுங்கள். நஞ்சை எடுத்துக் கொள்ளுங்கள்.

ளைப் பாவிக்காமல், எதனையும் உற்பத்தி செய்ய முடியாமற் போராடுகின்றனர்.

விஞ்ஞானிகளும், அரசியல்வாதிகளும் இப்போது மக்கள் விரும்பிய உற்பத்திகளை இரசாயனப் பாவனையில்லாது கொடுக்கிறார்கள். கடந்த ஜூன் மாதத்தில், (''நாஷனல் அக்கடமி ஒவ்சயன்ஸ்'') தேசிய விஞ்ஞானக் கழகம் ஓர் அறிக்கை விட்டது. அதில் குழந்தைகள், கிருமிநாசினிப் பாவனையால் உற்பத்தியாக்கப்பட்ட உணவுப் பண்டங்களைச் சாப்பிட்ட காரணத்தால், வயதானவர்களாகக் காட்சியளிக்கின்றனர் எனக் குறிப்பிட்டது. அவர்கள் உடலிற் காணப்படும் கலங்கள், காசினோஜெனிக் இரசாயனத் தாக்கத்திற்கு உட்படுகின்றது. இதன் பின்னர், சுற்றாடலில், பொருத்தமான, தீங்கில்லாத பூச்சிக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுகின்றார். அதோடு, பயங்கர ஆபத்தைத் தோற்றுவிக்கும் இரசாயனப் பொருள்கள், தடை அமுலாக்கம் பெறுகின்றது. ஆனாலும் இவ்வாறான பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தாமல், இலாபகரமான விவசாய உற்பத்திகளைச் செய்ய முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது உள்ளதும் மறுக்கப்பட முடியாத விடயம்.

கிளின், றொன் அன்டேர்சன் என்ற சகோதரர்கள் ஐந்து வருடங்களாக ஒரு புதிய செயற்பாட்டில் இறங்கியிருக்கின்றனர். ஐம்பத்து நான்கு வயதான கிளின், தான் ஒரு சூழலியலாளர் ஆகி, தனது அல்மன்ட் பண்ணை, முற்றிலும் சேதனப் பொருள்களின் உதவியுடன் வளர விரும்பினார். பலர், இது சாத்தியமற்றது என்று கூறினார்கள். றொன், கலிபோர்னியாவில் கில்மாரில் ஒச்சாட் உற்பத்தியை, மரபுரீதியான இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்திருந்தார். கலிபோர்னியாவின் அருகில் உள்ள பல்கலைக் கழக ஆய்வாளர்களால், இவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டனர். அங்கு இவர்கள் உற்பத்தியில் ஆய்வுகள் செய்யப்பட்டன. டேவிங், இதன் அடிப்படையில் யாருடைய விதைகள் தரமானவை என அளவிட்டார். கிளின், சேதன உதவியுடனும், றொன் சூழலின் உதவியுடனும் உற்பத்தி செய்கின்றனர், லொனி ஹென்றிக் என்பவர் இதனை ஆய்கின்றார். இரண்டு உற்பத்தியிலும், சிறிதளவு வேறுபாடுகள் தென்படுகின்றன. இரண்டு ஒச்சாட்டிலும் பூச்சிகளின் தாக்கத்திற்கு உட்பட்ட விதைகள் சமனாகவே இருக்கின்றன. கிளின், றொன் இருவரதும் முறைகளிலும். றொன்னின் இரசாயனப் பாவனையைக் கிளின் வென்றிருக்கின்றார். இதன் பின் றொன், முற்றிலும் இரசாயனப் பாவனையைத் தவிர்த்துக் கொண்டார்.

கிளினின் வெற்றிக்கு மூல காரணம் என்ன? வர்த்தக ரீதியாகப் பயிரிடும் பயிருக்குப் பாதுகாப்பு வழங்க, வேறு மறைப்புப் பயிர்களை அருகே வளர்ப்பது பயன் தரும். (Cover Crops) இந்த வகையில் மறைப்பினுள் பயிரிடப்படும் ஒச்சார், பூச்சிகளில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது. மேலும், பருவகால மாற்றத்தில் அதாவது, குறிப்பிட்ட பூச்சியின் தாக்குதற் காலத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரைச் செய்கை பண்ணாமல் வேறு பயிரை உற்பத்தி செய்யும்போதும், அக் குறிப்பிட்ட பூச்சியினம் தமக்கு உரிய தாக்குதல் பயிரின்மையால் உற்பத்திப் பயிர் தாக்குதலில் இருந்து தப்பிவிடும். இவ்வகைப் பயிரீட்டில் சிலவேளை மறைப்புப் பயிர் மேலதிக உற்பத்தியாகி விடும். இதனால் நிலப் பசளை விரயமாக்கப்படும். அதனை ஈடு செய்த பின்னரே மற்றைய போக உற்பத்தி செய்ய முடியும். 65 வயதான றென் இந்த முறைப் பயிர்ச்செய்கை மிகவும் பயன்தரக்கூடியது என்கிறார். இம் முறையைப் பிரயோகிப்பதால் மேலதிகச் செலவீனம் எதனையும் தான் செய்யவேண்டியதில்லை என மேலும் அவர் கூறுகிறார்.



‘‘றொடேல்’’ பண்ணைச் சுதந்திரமும், றோம் அப்பிள்களும்.

‘‘றொடேல்’’ கழக விஞ்ஞானிகள் கிழக்கு பென்சில்வேனியாவில் உள்ள தமது ஆய்வுக்குரிய நிலப் பகுதியில் 1986 இல் அப்பிள் கன்றுகளைப் பூச்சிகொல்லி பாவிக்காது உற்பத்தி செய்திருக்கின்றார்கள். ‘சராசரி’ அப்பிள் உற்பத்தியாளர் எட்டிலிருந்து பன்னிரண்டு வகையான இரசாயனங்களை வளரும் காலங்களிற் பாவிக்கின்றனர் என்று றெரி ஸ்கெட்ரினி கூறுகின்றார். இவர் அப்பிள் உற்பத்தித் திட்டத்தை மேற்பார்வை செய்பவர் ஆவார். அப்பிள் உற்பத்தியைப் பொறுத்தவரை சிரமமானது; ஏனெனில், பூச்சிகள் அதனை இலகுவில் தாக்கிவிடும். றொடேல் ஆய்வாளர்கள், பணிப்பாளர் கருத்துப்படி அப்பிளின் தோலைத் தாக்கும் நோயை அரைவாசிக் கிருமிநாசினி பாவிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்கின்றனர். பூச்சிகளில் இருந்து தாக்குப் பிடிக்கக்கூடிய இனங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. லிபேர்டி என்ற இனம் இவ்வாறு பூச்சிகளின் தாக்குதல்களுக்கு நின்று பிடிக்கக்கூடியது. இந்த இனம் அதிக விளைவையும், அதிக உருசியையும் கொண்ட இனமாகும். அண்மைக் காலங்களில் பங்கசுத் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் அப்பிள் இனத்தைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் ஆய்வாளர்கள் ஓரளவு வெற்றி கண்டு வருகின்றனர். றொடேல் ஆய்வாளர்கள் பூச்சித் தாக்குதலில் இருந்து அப்பிளைப் பாதுகாக்கப் புதிய அணுகுமுறைகளை அறிமுகம் செய்கின்றனர். இதில்ஒருமுறை பல போலி அப்பிள்களை மரத்தில் தூக்குவது ஆகும். இதன் மூலம் பூச்சிகளும், வண்டுகளும் போலியை உண்மையென நம்பி ஏமாறுகின்றன. தமது செயற்பாடு சரிவராது எனக் கண்டு வேறு இடத்திற்கு நகருகின்றன. இன்னுமொரு முறை யாதெனில், சிறிய கொள்கலன்களில் ஒரு விசேட இரசாயனக் கலவை தயாரிக்கப்பட்டு அப் பிரதேசத்தில் தூங்கவிடப்படுகின்றது. இது பெண் பூச்சியின் மணத்தைப் போன்ற ஒருவித வாசனையை அப் பிரதேசத்தில் பரவி விடுகின்றது. ஆனாலும் பூச்சி இனங்கள் பலவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இவை இந்த மணத்தினைக் கவனத்திற் கொள்ளாது இனப் பெருக்கம் செய்கின்றன. இவ்வாறான ஆய்வுகளின் பின்பு றொடேல் ஆய்வாளர்கள் அப்பிள் மரத்தை உற்பத்தி செய்யும்போது அதனை மறைக்க மறைப்புப் பயிர்களை அதனுடன் சேர்த்து உற்பத்தி செய்வதை இலாபகரமான முறை எனக் கூறுகின்றனர். இந்த முறையே, அல்மொன்ட் சகோதரர்கள் அறிமுகமாக்கிய முறையாகும். ஜன்கியின் கூற்றின்படி, ‘‘விவசாயிகள் மத்தியில் ஒருமன மாற்றத்தை நாம் உண்டுபண்ண வேண்டும்’’ என்கிறார். சில நேரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டு, லிபேர்ட்டி இனத்தையே விவசாயிகள் தெரிவு செய்கின்றனர். இதனால், காலப்போக்கில் அந்த இனமும் பயன் அற்றதாகிவிடும் வாய்ப்பும் உண்டு. அரச நிருவாகம், விவசாய இரசாயனங்களின் இறக்குமதியை நிறுத்துமாயின் றேடேலும், அன்டர்சனும் இலாபகரமான வழிவகைகளை விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்க முடியும் என்கிறார்கள்.

## புற்களையும், பூச்சிகளையும் அவர்கள் சாகடிப் பார்களேயானால்....

பூச்சிகொல்லிகள் எவ்வளவு ஆபத்தானவை என்று நீண்ட காலந் தொட்டே எல்லோரும் அறிவார்கள். இவ்வாறான இரசாயனப் பாவனை அதிகமாகும்போது, நரம்புத் தொகுதியையும், சுவாசப் பைகளையும் பாதிப்படையச் செய்வதுடன், குறைபாடுள்ள பிள்ளைகள் பிறப்பதற்கும் காரணமாகின்றது. ஆனால், புற்றுநோய்க்கான காரணம் கிருமிநாசினிப் பாவனை என்பதும், பின் உடலில் எப்பகுதியிலாவது கட்டி தோன்றுதல் என்ற வேறு பெயருடன் காரணப் படுத்தப்பட்டதும் பொருத்தமானதாக வில்லை. எவ்வாறாயினும், நோய்களுக்கான பொதுவான காரணங்கள் எந்த இரசாயனப் பாவனையால் வந்ததென்றோ, அல்லது சூரிய வெப்பத்தால் வந்ததென்றோ உறுதியுடன் கூறமுடியாது. வழமையாக இரசாயனப் பாவனை விவசாய உணவுப் பொருள்களைப் பாவித்த மக்களையும் இரசாயனப் பாவனையற்ற விவசாய உணவுப் பொருள்களைப் பாவித்த மக்களையும் ஒப்பிடமுடியும். இந்த வகையில் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்ட அண்மை அறிக்கைகள், இரண்டு வகையான புற்றுநோய்க்கு, இரசாயனப் பாவனை உணவுப் பொருள்களைப்பாவித்தவர்கள் உட்படுவதை வெளிப்படுத்துகின்றன. ஒன்று மார்புப்புற்றுநோய், மற்றையது குழந்தைகளைப் பாதிக்கும் மூளைப்புற்றுநோயாகும்.

ஜேம்ஸ் டேவிஸ் என்பவரும், அவருடைய நண்பர்களும் இது தொடர்பாக ஓர் ஆய்வினைச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் மிசூரி சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், 81 சுகதேகமுள்ள குழந்தைகளில் ஆய்வு நடத்தியபோது, இவர்களில் 45 குழந்தைகளுக்கு மூளைப்புற்றுநோய் பீடித்திருப்பது அவதானிக்கப்பட்டது. இவர்கள் எல்லோருடைய உணவு வகைகளும் ஆராயப்பட்டபின், ஆய்வாளர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது ஒரு வகையான புற்றுநோய் ஏற்படுவதற்கு, வீட்டிற் பாவிக்கும் பூச்சிகொல்லிகளே காரணம் என முடிவுக்கு வந்தனர். பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உணவு, பழக்கம், பொருளாதார நிலை ஆகியன நுணுக்கமாக ஆராயப்பட்டபின்பே, அவர்கள் இம்முடிவிற்கு வந்தனர். இந்தப் பாவனையிற் பூச்சியுருண்டை, தெள்ளுக்கொல்லி, தலைப் பேனைக் கொல்லப்பாவிக்கும் ''ஷம்பூ'' ஆகியனவும் அடங்கும். இந்த டேவிஸின் கருத்துப்படி குழந்தையின் மூளைப்புற்றுநோய் அதிகரிப்பதற்கான 500 வீதமான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனாலும், இந்தத் தரவு சேகரிப்புப் பூரணமானதாக இல்லை என்றும் கருதப்படுகின்றது. தொலைபேசிப் பேட்டி, பூச்சிகொல்லிப்பாவனை தொடர்பாகப் பூரண தகவல் போன்றன சரியானதா? என்பது வாதத்திற்குரியது. டேவிஸின் ஆய்வின் பேட்டியில், பெற்றோர் வழங்கிய மற்றுமொரு தகவல் காத்திரமாக விருந்தது. அதாவது, 60 வீதம் ஆனவர்கள் பூச்சிகொல்லியுடன் வழங்கப்படும் பாவனையாளர் பாதுகாப்பு அறிவுறுத்தற் சிட்டையை ஒழுங்காக வாசிப்பார்களாம். ஆனால், அரைவாசிப்பேரே அதைக் கவனமாக நடைமுறைப்படுத்துவது வழக்கம்.

மார்புப் புற்று நோய் கூட, பூச்சிகொல்லியினால் வரமுடியும். அமெரிக்கச் சுகாதாரத் திணைக்களத்தையும், மானியச் சேவையையும் சேர்ந்தவரான டிவாரா லீ டேவிஸ் என்பவரும், அவருடைய சகாக்களும் ஒரு தகவலை வெளியிட்டனர். அதாவது, சில பூச்சிகொல்லி மனிதனின் உடலிற் சிலவகையான அசாதாரண ஓமோன் சுரப்புக்களைத் தூண்டிவிடக்கூடியன. இதனால், மனித உடலிற் பாதிப்புக்கள் ஏற்பட ஏதுவாகின்றன. உதாரணமாக:- டீ.டீ.ரீ, என்டோசல்பன் என்பவற்றின் பாவனையைக் கூறமுடியும். என்டோசல்பன், எங்ரோஜினாக தொழிற்படும்போது, மார்புக் கலங்கள் வேகமாகப் பிரிபடத் தூண்டுகின்றது. இந்த நேரத்தில், உடலிற் சேகரிக்கப்பட்டிருக்கும் கிருமிநாசினிகள், இயற்கையான ஓமோன் சுரப்புக்களை அதிகரிக்கின்றன. பெண்களே இதன் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

தற்போது, மார்புப் புற்றுநோய் வந்தவர்களின் இரத்தம் ஆராயப்பட்டபோது, அதில் உயர்ரக டீ.டீ.ரீ காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால், பெண்களுக்குத் தேவையற்ற அல்லது, புற்றுநோயை உருவாக்கும் எஸ்ரோஜின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறான புற்றுநோய் ஏற்படுவதால், பிள்ளைகள் தாமதித்தே பிறக்கின்றன; அல்லது இல்லாமற் கூடப் போகின்றன. 30 வீதம் ஆனவர்கள் இந்நிலைக்கு ஆளாகின்றனர். மறுபுறத்தில், 10 அல்லது, 20 வீதம் இரு மார்புப் புற்றுநோய்க்குப் பூச்சிகொல்லி தான் காரணமாக இருந்தாலும், ஆயிரத்திற்கு மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றமுடியும் எனக் கருதப்படுகின்றது.

*நியூஸ்வீக் நவம்பர் 22, 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியுடனான ஒரு சந்திப்பு

சென்ற வியாழன் அன்று, விண்கலம் ''என்டேவர்'' வானத்தில் ஏவப்பட்டபோது, புளோரிடாவின் வானத்தில் ஓர் ஒளிப்பிளம்பு தோன்றியது. இக்காட்சியைக் கெனடி விண்வெளி நிலையம், அமெரிக்கத் தேசிய வானவியலாளர், விண்வெளி நிருவாக அதிகாரிகள் ஓர் எதிர்பார்ப்புடன் அவதானித்துக் கொண்டு இருக்கின்றனர். சீரற்ற கால நிலை காரணமாக, என்டேவர் விண்கலம் ஒரு நாள் பிந்தியே ஏவப்பட்டது. இச்செயற்பாட்டின் மிகக் கடினமான வேலை இன்னும் தொடங்கவில்லை. அண்டவெளியில் ஒரு கிழமைக்கு மேல் அந்தரத்தில் நடந்து, மனிதனாற் செய்யப்படவேண்டிய பயங்கரமான, அதே நேரம் மிகநுணுக்கமான வேலைகள் உள்ளன. இவ்வளவும், 480 கி. மீ. மேலே அண்டவெளியில் நடக்கவிருக்கின்றன. ஏழு அங்கத்துவப் பிரயாணிகளுடன் மேலே செல்லும் '' என்டேவர், '' அங்கு ஏலவே அனுப்பப்பட்டுப் பழுதாகியிருக்கும் ''ஹபிள்'' தொலைக் காட்சிக் கண்ணாடியைப் பழுது பார்த்துச் சீரமைப்பதில் ஈடுபடும். இதன் மூலம், வருங்கால விண்வெளி விஞ்ஞானத்தை உறுதிப்படுத்தும். அதுதவிர, ''நாசா'' ஏலவே இழந்த கீர்த்தியை மீளப்பெறவும், இப்பாரிய செயற்றிட்டம் பெரும் பங்காற்றும்.

சந்திரனிற் கால்வைத்த சாதனை போன்று, பலமடங்கு கஷ்டமான செயற்பாடே ஹபிள் தொலை நோக்கியைப் புதுப்பித்தல் ஆகும். இச்செயற்பாட்டைச் செய்து முடிப்பதற்கு, வானவியலாளர்கள் 5—6 மணித்தியாலங்கள், சிலவேளை 7 மணித்தியாலங்கள் விண்வெளியில் அந்தரத்தில் நடந்து வேலை செய்யவேண்டும். தொலை நோக்கியின் பிரதான கண்ணாடி திருத்தப்படவேண்டும்; அல்லது, மாற்றப்படவேண்டும். காலம் கடந்த புகைப்படக்கருவியை மாற்ற வேண்டும். இரண்டு சூரிய சக்திக் கலங்கள் அடங்கிய தொகுதி மாற்றப்படவேண்டும். மூன்று பிழைப்பட்ட இயக்க நிலை நிறுத்தக் கருவிகள் திருத்தப்பட வேண்டும். அவை தவிர, மேலும் பதினொரு கருவிகளும் திருத்தப்படவேண்டும்.

ஒருகிழமை பிரயாணம் செய்து, 10,780 கி. மீ. இடைவெளியைக் கடந்து, சனிகாலை என்டேவர் கலம் ஹபிளைப் பற்றிக் கொண்டது. ரிச்சாட் கூவே கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டு இருந்தார். தொலை நோக்கி இருந்த இடத்தில் இருந்து, 10 மீற்றர் தொலைவில் என்டேவர் கலம் இருந்தது. விண்வெளி ஆய்வாளரான குலோட் நிக்கோலீர் (CLAUDE NICOLLIER), 13 மீற்றர் நீளமான வேலை செய்யக்கூடிய 11.3 தொன் நிறையுடைய ''றோபோ'' க்கையை, கலத்தின் பொருள்கள் உள்ள பகுதிக்குப் (CARGOBAY) பதித்தார். அங்கு சில திருத்த வேலைகள் செய்யப்படும். '' ஹொஸ்ரன், என்டேவர் திரு. ஹபிள் தொலை நோக்கியவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டார்'' என்று, கூவே கட்டுப்பாட்டுக் குழுவில் அறிவித்தார். ''பார்க்க நன்றாக இருக்கின்றது '' என்றார் அவர். வானவியலாளர், மற்றொரு விடயத்தை அவதானித்தார்; ஒரு தொலைக்காட்டிக்கு, இரண்டு 12 மீற்றர் நீளமான சூரியக்கல அடுக்குகள் எதிர்பார்த்ததைவிடப் பழுதாகியிருந்தது. இவ்வார முற்பகுதியில், விண்வெளி ஆய்வாளர் இரண்டையும் மாற்றுவதற்குத் தீர்மானித்தார்.

**செய்மதியான 'ஹபிள்' தொலைநோக்கியைக் கொண்ட விண்கலம் விண்ணை நோக்கி ஏவப்பட்டதும்,தனது மரணப் போராட்டமான பணியை அது ஆரம்பிக்கும்.**

இவர்கள் 400 மணித்தியாலங்களுக்கு மேல், ''நாசா'' வில் விண்வெளி மாதிரியான செயற்கை அமைப்பில் நடந்து பழகிப் பயிற்சி பெற்றிருந்த போதும், வானவியலாளர் சிறு தவறு நடந்தாலுங்கூட, விண்வெளியில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாது என்பதனை உணர்ந்தார். சிறு உபகரணங்கள் தவறும் போது கூட, தொலைக்காட்டியின் முழுச் செயற்பாடும் பாதிக்கப்பட்டுவிடும். இதனால் முன்பு ஹபிளின் உதவியிற் செயற்பட்ட '' நாசா '' நிறுவனத்தினர், அதை விடக்குறைத்த பயனையே பெற முடியும். ஆனாலும் இந்தத் திருத்த வேலைக்கு 629 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேலைகள் செய்யப்படாது இருந்தாலும், ஹபிள் தொலைநோக்கி விரைவிற் செயலிழக்கும். அதன் பிரதான கண்ணாடியை '' நாசா '' நிறுவனத்தினர் நேர்த்தியாகப் பரிசீலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரது விட்டமை, அதன் பிழைக்குப் பிரதான காரணமாகும். அத்துடன் இந்தத் தொலைநோக்கிக்குரிய சக்தியை வழங்கும் சூரியகலத் தொகுதி கடும் வெப்பம் காரணமாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. இதனால், முழு விண்வெளிக்கலத்திற்குமுரிய வலுகிடைக்காமற் போய்விடும்.

இந்தச்சீரமைப்புச் செயற்பாடுமிகவும் புதுமையானதும், நுணுக்கமானதும் ஆகும். ஒரு தொலைபேசிக்கூடு அளவு கொண்ட 272 கிலோகிராம் நிறையுடையபூதக் கண்ணாடியைக் கொண்டுள்ள பகுதியாகக் காணப்படும் இதை 3 சென்ரிமீற்றர் அளவு இடைவெளிக்குள்ளால் பதனமாகப் பூட்ட வேண்டும். எல்லாச் செயற்பாடும் ஒன்றுடன் ஒன்று நுணுக்கமான தொடர்புடையன. 'ஹபிள்' தொலைக்காட்டி மிக வேகமாகவும், மதி நுட்பத்துடனும் சீர் அமைக்கப்பட வேண்டும். விண்வெளி நிபுணரான கத்ரின் தொறன் ரொன் என்பவர், கோள்களைப் படம்பிடிக்கும் புகைப்படக்கருவியைச் சரிசெய்ய அனுப்பப் பட்டார். அவர், 'நிலத்தில் இருக்கும் நீங்கள், அதை மீளச் சரிசெய்ய அதிக நேரம் பிடிக்கும் என்று கருதுவீர்களாயின், அது அவ்விடத்திற்குச் சரியாகவே அமைந்து விட்டது' என்கிறார்.

ஹபிள் விண்வெளிக்கலத்தின் திட்டத்தைப் பொறுத்தவரை, தற்போது ஒரு நாடு தாங்கமுடியாத அளவிற்குச் செலவினத் திட்டமாகவே காணப்படுகிறது. என்டேவர் திட்டத்திலுங் கூட அமெரிக்காவின் கிளின்ரன் நிருவாகம் திருப்திகரமாக இருக்க

## "ஹபிள்" வானிலைத் தொலைக்காட்டி இணைப்பு வேலைகள் அட்டவணை:-

**வியாழக்கிழமை டிசம்பர், 2**

**1 ஆம் நாள்:-**
*கெனடி முனையிலிருந்து விண்கலம் அனுப்பப்பட்டது.*

**2 ஆம் நாள்:-**
*பழுதடைந்த ஹபிள் தொலைக்காட்டியைத் தேடும் முயற்சி.*

**3 ஆம் நாள்:-**
*10 மீற்றர் இடை வெளியில் ஹபிள் கண்டுபிடிக்கப்பட்டது.*

**4 ஆம் நாள்:-**
*பழுதடைந்த மூன்று சுழற்பீடங்களில் இரண்டு மாற்றியமைக்கப்பட்டன A.*

**5 ஆம் நாள்:-**
*சூரிய ஒளியில் இயங்கும் மையக்கதவு மாற்றியமைக்கப்பட்டது. B.*

**6 ஆம் நாள்:-**
*கோள்களின் அமைப்பைத் துலக்கிக் காட்டும் புதிய ஒளிப்படக் கருவி பொருத்தப்பட்டது. C.*

**7 ஆம் நாள்:-**
*ஹபிள் தொலை நோக்கியின் முதல் ஆடியின் உடைந்து போன வில்லைகள் பொருத்தப்பட்டன. D. அத்துடன் கொம்பியூற்றர் கொப்றோசெஸ்ஸரும் E பொருத்தப்பட்டது.*

**8 ஆம் நாள்:-**
*இலத்திரனியற் கட்டுப்பாட்டுப் பகுதி மாற்றியமைக்கப்பட்டது.*

**9 ஆம் நாள்:-**
*திரும்பவும் அதன் பாதையில் விடப்பட்டது.*

**10 ஆம் நாள்:-**
*அவர்களுக்கு ஓய்வு நாள்.*

**11 ஆம் நாள்:-**
*பூமிக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகள்.*

**12 ஆம் நாள்:-**
*கெனடி விண்வெளி நிலையத்தில் திங்கட் கிழமை டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி திரும்பவும் காலடி வைத்தனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. பாரிய மாற்றங்களுக்கு இடம் உண்டு என, அது அறிவித்திருந்தது. வெள்ளைமாளிகைக் கருத்தைப் பொறுத்தவரை, இந்தச் செயற்பாடு ஒரு பல்தேசியச் செயற்பாடாக இருந்தால் நன்று எனக் கருதுகின்றது. உதாரணமாக, வெளியே போட்டியாளர் ருஷ்யாவைச் சேர்ப்பதில் அதிக ஆவல் கொண்டுள்ளது. அமெரிக்கா, யூறிககாறினை அழைக்கவுள்ளது. ஒன்று சேர்ந்து, ஆய்வுகளை மேற்கொள்ளும் திட்டத்திற்கு ருஷ்யாவும் ஒத்துழைக்கவுள்ளது. ருஷ்யா, அடுத்த காலங்களில் 60,000 வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி, 1 பில்லியன் டொலர்களை வருட வருமானமாகப் பெறத்திட்டமிடுகின்றது. அமெரிக்காவுடன், மற்றைய பங்காளர்களாக ஜப்பான், கனடா, இத்தாலி, மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகவர்களும் சேர்ந்துகொள்ளுவார்கள். இவைகளும் 2 பில்லியன் டொலர்களை மீதப்படுத்தவிருக்கின்றன. ஆய்வு நிலையத்தை நிறுவ, 29 பில்லியன் டொலர்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா முன்னர் திட்டமிட்டதைவிட, பலமடங்கு பெரிய நிறுவனம் ஒன்றை அமைக்கத் திட்டமிடுகிறது. ஆனாலும் ''நாசா'' நிலையத்தின் பின்னடைவுகள், இதை வெற்றிகரமாக்க உதவாது என்ற கருத்தும் நிலவுகின்றது. ஒரு பெரிய பின்னடைவின் பின், இந்தச் செயற்பாடுகள் நின்றுவிடும் என்பது கருத்தாகக் காணப்படுகின்றது. '' என்டேவர் வானவியலாளர்களை, ஆய்வு நிலையக்காப்பாளர்கள் பேட்டி காண்கின்றனர். ஹபிள் திருத்த வேலை தோல்வியில் முடிந்தால், நாசா நிலையத்தாரில் வைத்திருந்த நம்பிக்கையைக் கொங்கிரஸ் பூரணமாக இழந்துவிடும்.

# அதே நேரம் பூமியைப் பார்த்தால் .....

அமெரிக்கத் தேசிய வானவியலாளரும், விண்வெளி நிர்வாகத்தினரும் ''என்டேவர்'' அனுப்பப்பட்டதுடன் மன அமைதியாக இருந்தபோது புதுவகையான சிக்கல் ஒன்று உருவாகியிருக்கின்றது. சென்ற வியாழன் என்டேவர் இறுதி நேர எரிபொருள் நிரப்பு வேலையில் ஈடுபட்டிருந்த வேளை இரண்டு ஹொஸ்ரன் டி. வி. நிலையங்களும், என். பி. சியும் அதன் ஒளிபரப்பாளருமான றொம் புரோக்கோவும் ஓர் அறிக்கை விடுத்துள்ளனர். அதில் ''நாசா'' நிறுவனம் (எவ். பி. ஐ.) தேசியப் புலனாய்வுத்துறையினரின் இலக்குக்கு உட்பட்டிருக்கின்றது. இந்த நடவடிக்கைக்கு மின்னற் தாக்கு தல்எனப் பெயரிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது,

மற்றைய கிழமை விண்கலத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம் போன்ற அறிக்கைகளும் கலந்து வரத் தொடங்கின. அத்துடன் சிறுநீரகக் கல் அகற்றும் இயந்திரம் தொடர்பாகவும் செய்திகள் கதைகளாக வந்தன. பல கதைகள் ஒரு முகவரை மையமாக வைத்து அவரை ஒரு வியாபாரியாக உருவகித்து வெளியிடப்பட்டன. அந்த வியாபாரி காசுகளை ''நாசா'' நிறுவனத்திற்கு அள்ளி வீசுவதாகவும், 'லித்தோரிப்ரர்' இயந்திர உற்பத்தியை விரும்புவதாகவும் இருந்தது. லித்தோரிப்ரர் என்பது ஓர் இயந்திரம். சிறுநீரகக் கல்லினை அல்ரா சத்தத்தினாற் கரைக்க வல்லது. இந்த இயந்திரம் விண்வெளியில் அதிக பயன் தரவல்லது. (அங்கு சிறுநீரகக் கற்கள் இலகுவில் உருவாகிவிடும்.) இதன் தோற்றம் ஒரு பெட்டி போன்றது. அதன் உள்ளடக்கம் வயர்களாலும், வெளிச்சங்களாலும் ஆனது. இதைப் பற்றி ''நாசா'' நிறுவனத்தினர் நன்கு அறிந்திருக்கின்றனர். முகவர் நிறுவனங்களும், ஒப்பந்தக்காரரும் இந்தப் பெட்டியைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவர்கள் முன்னுரிமையைப் பெறுவதற்காக இலஞ்சம் வழங்கினார்கள். ஹொஸ்ரனின் 'குறோனிக்கிள்' ''நாசா'' வின் உயிர் விஞ்ஞானப் பகுதியின் ஒரு முகாமையாளர் ஜி. பி. தொழில் நுட்ப நிறுவனத்தின் ஓர் ஊழியர், மார்ரின் மாரிட்டா என்கிற உப ஒப்பந்தக்காரர் ஒருவர் ஆகியோர் இத் திட்டத்திற்கு உரியவர்கள் ஆவர். '' நாசா வயிற்றில் விழுந்த நல்ல உதை'' என்று மற்றும் ஒரு சம்பவத்தைக் குறை கூறும் லாறி பிறிசன் சொன்னார். இவர் '' நாசா '' நிறுவனத்தின் ஓர் ஒப்பந்தக்காரரான லொக்கீட்டின் முன்னைய பொறியியலாளரும் ஆவார்.

தேசியப் புலனாய்வுத்துறை (எப். பி. ஐ.) ஒரு குற்றத்தை மறைப்பதற்கான செயற்பாடுகள் பூர்வாங்கமாக ஆரம்பிக்கப்பட முன்பு அக்குற்றம் வெளிவந்துவிடுகின்றது. வெளிவராது இருந்திருக்குமாயின் நிரூபிப்பது கடினமாக விருந்திருக்கும். அமெரிக்காவின் நீதித் திணைக்கள அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில், ''சிறுநீரகக் கல்லைக் கரைக்கும் இயந்திர விவகாரம் மிகவும் சிறிய சமாச்சாரம். அதைவிடப் பெரிய ஊழல்கள் ''நாசாவில்'' உண்டு

PUBLIC LIBRARY, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர். ''இதைவிடப் பெரிய தில்லுமுல்லுகள் உண்டு. இதில் பெரிய டொலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று சட்டத்தை நிலைநிறுத்தும் ஒரு சாரார் கூறினர். மற்றும் ஒரு நிறுவனம் இது ''தேர்ட் வின்ட்ஐ'' விட மோசமான மோசடி என்றது. தேர்ட் வின்ட் என்பது பென்ரகனில் ஐந்து வருடங்களுக்கு முன் காணப்பட்ட மோசடியின் குறிப்பெயராகும். (III WIND) இதில் எட்டுக் கூட்டுத்தாபனங்கள் ஈடுபட்டன. அத்துடன் 63 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

''மின்னல்அடி'' ''நாசா''ஊழலை மறைப்பதற்கான நடவடிக்கை என்பதற்கில்லை. ஆனால் பென்ரகனைத் தாக்கிய அதே வைரசுவின் தாக்கத்திற்கு ''நாசா'' வும் உட்பட்டு விட்டது. இரண்டு மாதங்களுக்கு முன் விண்வெளி முகவர் அதிகாரி ஒருவரின் கருத்துப்படி ''தான் 400 இற்கு மேற்பட்ட புலனாய்வுகளை மேற்கொண்டதாகவும், ''நாசா'' நிறுவனம் ஏறக்குறைய 12 பில்லியன் டொலர்களுக்குக் கணக்கு வைக்கவில்லை'' எனவுஞ் சொல்லப்படுகின்றது.

நிறுவனத்துடன் தொடர்புடையவர்களுக்கு இது ஒன்றும் புதுமையானதாக இருக்காது. சிலர் இது புவியுடன் தொடர்பில்லாத நிறுவனம் என்பதனால் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிட முடியும் எனக் கருதினர். ஆனால் எல்லோரும் பதில் கூறித்தான் ஆகவேண்டும். விண்வெளி முகவர் இதனால் மேலும் தலை குனிய நேரிடும்.

*ரைம், டிசம்பர் 13, 1993*

---

# ஓர் உலகக் கலாச்சாரம்

1993 இல் அமெரிக்காவின் உளவியல், பாதிப்புக்கு உள்ளான போதும் அங்கே மீட்சி ஒளி தெரிகிறது. அந்த ஆண்டு டெக்சாஸில் வைகோ நகரில் இனக்குழு மரணங்களுடன் ஆரம்பித்து ஆண்டு முடிவில் லோங் ஐலன்டில் புகையிரதம் ஒன்றினுள் இரண்டு ஆசிய நாட்டவர் உட்பட ஐந்து அப்பாவிகள் சுட்டுக் கொல்லப்பட்டதில் முடிவடைந்தது. அதே போன்று பல பெரும் கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஆண்டு இறுதியில் அமெரிக்கா துப்பாக்கிக் கலாசாரத்தில் இருந்து விடுபடும் அறிகுறிகள் தென்படுகின்றன. சுடுகலன்கள் கட்டுப்பாடு மட்டுமல்லாமல் புதிதாக நல்லொழுக்கக் கட்டுப்பாடுகளும் மலர்கின்ற அறிகுறிகள் தென்படுகின்றன. புகையிரதத்தில் படுகொலைகள் நடந்த உடனே ஜனாதிபதி கிளின்ரன் நாட்டுக்கு ஆற்றிய உரையில், ''நாங்கள் வன்செயல்களை எதிர்த்து நற்செயல்கள் கொண்டு போராட வேண்டும்'' என்றார். ஆனால் யாருடையவை? அமெரிக்கர்களுடையவை. பசுபிக் சமுத்திரத்திற்கு அப்பால் உள்ள குடும்பம் சார்ந்த ஆசியக் கலாசாரத்தில், முதியோரைப் பேணல் மதிக்கப்படுகிறது. நல்லொழுக்கமும், கடின உழைப்பும் மதிக்கப்படுகின்றன. அமெரிக்காவில் நெடுங் காலத்திற்கு முன்பு மறக்கப்பட்ட அந்த நல்ல நிலைமைகளை ஒத்தவையாகவே ஆசியாவில் அவை இன்னும் உள்ளன. ஆசியர்கள் பிறர் பொறாமைப்படும்படியான தங்கள் நன்னெறிகளை மதிப்பீடு செய்துகொண்டு இருக்கையில், அமெரிக்கா இன்னும் நல்ல வசதி வாழ்க்கை நிலைகள் பற்றியும், அவற்றை அடைதல் பற்றியும் மட்டுமே கவலை கொண்டு முயன்று கொண்டு உள்ளது. அதற்கான தடைகளைத் தாண்டும் பாடப் படிப்பினைகளை மட்டுமே கவனத்திற் கொள்கிறது. ஆசியாவிற்குள் செய்மதி மூலம் தொலைக்காட்சிகளைக் காணும் வாய்ப்பு வந்து, மடொன்னா, டேர்மினேடர் போன்ற காட்சிகளும் மிகப் பிரபலம் பெற்ற தனித்த தாய்க் குடும்பம், மர்பி பிறவுன் போன்ற காட்சிப் படங்கள் நல்லதற்கோ தீயதற்கோ உட்புகுந்து விட்டன. அவை விரைவாக மில்லியன் கணக்கான ஆசியக் குடும்பங்கள் வீட்டிற்குள் இருந்து பொழுது போக்காகக் கண்டு களிக்கும் காட்சிகளாகி விட்டன. அந்தப் பிராந்தியத்தின் பணப் பெருக்கம் வளர வளர அதன் மக்களின் உவர்ப்பும் கலாசார மதிப்பும் மேலும், மேலும் அமெரிக்காவில் உதிக்கும் கலாசாரத்தை முன்னுதாரணமாகக் கொண்டு மாற்றம் அடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ அறிவின் அளவு உலக உலாவே! ★

அட்டைப் படமே அபாரமாயிருந்தது. உள்ளே ——— நவரத்தினக் கற்களைப் பதித்தது போல, நெஞ்சை அள்ளும் நவரஸங்கள்! அவற்றின் அழகும், அமைப்பும் வியக்கத்தக்கவை. படைப்புக்கள் அதாவது விஷயதானங்கள் அருமையானவை; புதுமையானவை; ஆழமானவை.

சந்தேகத்தின் பேரில், சஞ்சிகையைத் துருவித் துருவி ஆராய்ந்தேன். வெளியீடு:-இராசன் அச்சகம், அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் என்றிருந்தது. கண்கள் கண்டதை நெஞ்சம் நம்ப மறுத்தது. உண்மைதான்; அதிசயப் படக்கூடிய விஷயந்தான் இது! வெளியீட்டாளரின் முயற்சி பாராட்டுதலுக்குரியது. பலதரப்பட்ட வாசகர்களும் படித்துச் சுவைத்துப் பயன் பெறக் கூடியவாறு வெளிவரும் ''உலக உலா' வின் நிர்வாக ஆசிரியர், ஆசிரியர் குழு, மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்பு நோக்குநர்கள் அழகுற அச்சுப் பதிப்பிக்கும் அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அ. ஜீ. சுபோதனா,
இளவாலை.

★ ★ ★

நாம் வாழ்கின்ற காலம் மிகக் குறைந்த அளவே. அதற்குள்ளாகவே பலவித அரசியற், சமூகப், பொருளாதார, விஞ்ஞான நிகழ்ச்சிகளையும், புத்தம் புதுச் செய்திகளையும், நமது தாய்மொழியிலேயே. ஒரே சஞ்சிகையிலேயே, அதுவும் தமிழீழத்திலேயே பிரசுரித்துப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் வெளிவரும் ''உலக உலா'' என் போன்ற பல்லாயிரக்கணக்கான வாசகர்களுக்குக் கிடைத்த வரமே!

## நேசப்பூக்கள்

இத்தகைய நல்லதொரு புத்தகத்தைப் படிப்பதற்கு மிகுந்த அவாக் கொண்டிருக்கும் எனக்கு, இதுவரை முறையாக இப்புத்தகம் கிடைக்கவில்லை. எனவே, இப்புத்தகத்தை எவ்வாறு ஒழுங்காகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தயவு செய்து தெளிவாக அறியத் தரவும்.

தி.சிவானந்தன்,
அராலி தெற்கு,
மாதாங் கோயில்,
வட்டுக் கோட்டை.

★ ★ ★

விபத்தில் ஒரு மலர்
என் கையில் விழுந்தது!
விந்தை தான்; எனக்கோ
புரியவில்லை.
விடியுமுன் உலகை
வலம் வந்த உணர்வு!
அப்போது புரிந்தது,
என் அறிவின் அளவு!
உலக உலாவே!
உனக்கொரு பெயரைப்
பொருத்தமாகவே இட்டது யாரோ?!
உத்தமர் சேவை
நித்தமும் ஓங்கு!
அட்டைப் படத்தினில்
ஆயிரம் அர்த்தங்கள் அடக்குகின்றாய்!
செய்தி பலவற்றைப்
போர்க் காலச் சூழலிலும்
புதுப் பொலிவோடு
தனித் தமிழ் நடையிலே
தலை நிமிர்ந்து தருகின்றாய்!
உன் அறிவொளி
அணையாது ஒளிர,
எம் தமிழீழத்தில்
உன் பணி தொடர,
என்றும் என் இதய
இனிய நல் வாழ்த்துக்கள்!
ஏமாற்றி விடாதே;
திங்களில் ஒரு முறை
''உலக உலா'' வில் வலம் வரக்
காத்திருப்போரை.

மேரி மன்ரேசா பர்ணாந்து.
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலக உலா" வாசகர்களுக்கு ஓர் இனிய நற்செய்தி!

உலகெங்கும் நிகழும் அறிவியல் மாற்றங்களையும்,
உலகையே உலுப்பும் விஞ்ஞானப் புரட்சிகளையும்,
இன்னும் பல உயரிய படைப்புக்களையும்
தமிழீழத்தில் இருந்து கொண்டே
பார்க்க . . . படிக்க . . . வழிசமைக்கும்

"உலக உலா" வை நீங்கள் வாங்க விரும்புகிறீர்களா?

உங்கள் விருப்பத்தை
நிறைவேற்றத்
தொடர்பு கொள்ள வேண்டிய
முகவரி:-

"உலக உலா" செயலகம்
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
தமிழீழம்

---

உங்கள் விருப்பமே எங்கள் சேவை!

ஒருமுறை பழக்கம்! மறுமுறை வழக்கம்!!

கவினுறும் கலைப் படைப்புக்களா?
காலத்தால் அழியாத காவியமா?
மங்கள நிகழ்வுகளின் அழைப்பா?
எதுவானாலும்,
அச்சிலே பதித்துத் தருவது

இராசன் அச்சகம்

144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இலாபம்!!!** **இலாபம்!!**

மாணவர்களே! பழைய நூல்கள், பழைய
சஞ்சிகைகள் தேடும் ஆர்வலர்களே!

உங்களுக்கோர் மகிழ்ச்சிகரமான செய்தீ
கிடைத்தற்கரிய தமிழ், ஆங்கில பல்தரப்பட்ட
அறிவியல் நூல்கள், கடந்தகால வினாவிடைப்
புத்தகங்கள், நாவல்கள் இன்னும் பல அருமையான
சஞ்சிகைகளையும் மலிவு விலையில்
கொள்வனவு செய்ய
நாடுங்கள் . . . . .

## யாழ் பழைய புத்தகக் கடை

அது மட்டுமா?
உங்களிடம் உள்ள பழைய புத்தகங்களையும்
சஞ்சிகைகளையும் நிறைந்த விலையில்
கொள்வனவு செய்யவும் நாம்
தயாராக உள்ளோம்.

வாருங்கள் !!!

வாங்கவும் விற்கவும் நாட வேண்டிய
ஒரே இடம்

# யாழ் பழைய புத்தகக் கடை

(விவேகானந்தா அச்சகம் முன்பாக)

அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY, JAFFNA
CHUNDIKULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

"மக்கள் கடைகளில்"

உங்களின் தேவை,



எங்களின் சேவை!

"என்னென்ன இருக்கிறது" என்று கேட்கிறீர்களா?
என்ன இல்லை என்று கேளுங்களேன்!

உங்கள் வீட்டுத்தேவைக்கான சகல பொருட்களும் எம்மிடம் இருக்கிறது. அதுமட்டுமில்லை, உங்கள் சுயதொழில் முயற்சிக்கான கடன் வசதிகளையும் நாம் ஒழுங்கு செய்வோம்.

சரி, இனி உங்களுக்குத் தெரியும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய, நீங்கள் நாடவேண்டிய இடம்:

# மக்கள் கடைகள்

## வேலணை ப. நோ. கூ. சங்கம்.

எமது தற்காலிக முகவரி: கோணாந்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org